# ரசியப் பொருளாதாரம் பற்றிய ஒரு விமர்சனம்



மா சே துங்

SEELAN BOOKS
SIGNATURE
NORWAY

உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள் !

# ரசியப் பொருளாதாரம்
# பற்றிய
# ஒரு விமர்சனம்

மா சே துங்

# ரசியப் பொருளாதாரம் பற்றிய ஒரு விமர்சனம்

SEELAN BOOKS
SIGNATURE
NORWAY

**மா சே துங்**

கேடயம் வெளியீடு

Originaly published in Chinese
English Edition : 1977
By M. R. Press

முதற் தமிழ்ப் பதிப்பு :
ஜூலை 1989

வெளியீடு :
கேடயம்
த.பெ.எண் : 2480
21, ரயில்வே காலனி
2-வது தெரு, மேத்தா நகர்
சென்னை-600 029

அச்சிட்டோர் :
கிளாரா அச்சகம்
சென்னை-29

விலை : ரூ. 30-00

# தமிழ்ப் பதிப்பாளரின் குறிப்புரை

திரிபுவாதத்துக்கு எதிரான போராட்டத்தில் மற்றும் ஒரு ஆயுதமாக 'ரசியப் பொருளாதாரம் பற்றிய ஒரு விமர்சனம்' என்ற இந்நூலை வெளியிடுகிறோம். இந்நூல் 1977-ல் நியூயார்க் மற்றும் லண்டன் நகர்களில் இயங்கும் Monthly Review Press வெளியிட்ட 'A Critique of Soviet Economics' என்ற நூலின் தமிழ் மொழி பெயர்ப்பாகும். இது ஏறக்குறைய முப்பது ஆண்டுகளுக்கு முன்பு மாவோவால் எழுதப்பட்டது. '*மா-சே-துங் சிந்தனை நீடூழி வாழ்க*' என்ற தொகுப்பின் ஒரு பகுதியாக 1967-லும், 1969-லும் முதல் முறையாக சீனத்தில் சுற்றுக்கு விடப்பட்டது. அப்போது சீனத்தில் மாபெரும் பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சி நடை பெற்றுக் கொண்டிருந்தது.

இந்நூலில் மாவோ சோசலிச கட்டுமானம் பற்றிய பல்வேறு பிரச்சினைகள் குறித்து விவாதிக்கிறார். ரசிய அனுபவங்களை விமர்சன ரீதியில் அணுகி சீன சோசலிச கட்டுமானத்திற்கான பாதை பற்றி பேசுகிறார். ஸ்டாலின் தவறுகள் குறித்தும், ரசியப் பாதையின் தவறுகள் குறித்தும் விவாதிக்கிறார்.

இந்நூல் ரசியப்பாதையையும் ஸ்டாலினையும் விமர்சனத் திற்கு உள்ளாக்குவதன் மூலம் சீனத்திற்கான சோசலிசப் பாதை யைப் பற்றி பேசுகிறது என்பது மட்டுமல்ல அதைவிட முக்கியமாக கம்யூனிச உலகம் எதிர்கொண்ட பல்வேறு தத்துவார்த்தப் பிரச் சினைகளையும் விவாதிக்கிறது.

ஸ்டாலின் காலத்தில் பின்னுக்குத் தள்ளப்பட்டிருந்த மார்க்சிய உண்மைகளை இந்நூல் மேலுக்குக் கொண்டு வருவதுடன் சோசலிசத்திருந்து கம்யூனிசத்திற்கு மாறிச் செல்வதற்கான பாதை பற்றிய ஆழ்ந்த ஆய்வுகளையும் முன் வைக்கிறது.

ஆனால் இவை அனைத்தும் 'அரசியல் பொருளாதாரம்' என்ற ரசியப் பாடநூல் குறித்தும், 'ரசியாவில் சோசலிசத்தின் பொருளாதாரப் பிரச்சினைகள்' என்ற ஸ்டாலின் நூல் குறித்தும் மாவோ முன் வைத்த விமர்சனக் குறிப்புகளே. எனவே நமக்குப் பழகிப்போன மாவோவின் எளிய தொடர்ச்சியான கட்டுரை வடிவில் இந்நூல் அமையவில்லை. எனினும் விவாதத்திற்கு எடுத்துக் கொண்ட பொருள் பற்றிய ஆய்வில் மாவோ சிந்திக்கும் வேகத்தில் வாசகர்கள் பங்கு கொள்வதன் மூலம் அவருடைய கருத்தின் ஆழத்தைப் புரிந்து கொள்ள முடியும். இந்நூலுக்கு ஜேம்ஸ்பெக் அவர்கள் எழுதியிருக்கும் அறிமுகவுரை நூல் பொருளை அதன் பின்னணியுடன் தொகுப்பாகப் புரிந்து கொள்ள பெரிதும் உதவும்.

இந்நூலில் மாவோ முன்வைத்திருக்கும் பல்வேறு கருத்துக்களும் மாபெரும் விவாதத்தின் போதும், கலாச்சாரப் புரட்சி கால கட்டத்திலும் மேலும் மேலும் முழுமையும், வலிமையும், செழுமையும் பெற்றன.

திரிபுவாதத்துக்கு எதிராகப் போராடும் தமிழகக் கம்யூனிஸ்டுகளுக்கும், கம்யூனிசத்தைப் புரிந்து கொள்ள விரும்பும் தமிழ் வாசகர்களுக்கும் இந்நூல் பெரிதும் பயன்படும் என்பதில் சந்தேகம் இல்லை.

— பதிப்பாசிரியர்

## உள்ளடக்கம்


நூல் அறிமுகம் -ஜேம்ஸ் பெக்

ரசிய முன்மாதிரி — 3

விவசாயிகளின் இழப்பின் வாயிலாக ஆரம்ப சோசலிசக் குவியல் — 4

உற்பத்தி சக்திகள் பற்றிய கோட்பாடும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமும் — 9

கம்யூனிஸ்ட் கட்சி பற்றிய ஒரு கருத்தாக்கம் — 16

முன்னோக்கிய மாபெரும் பாய்ச்சல் — 21

ஸ்டாலினும் ரசியப் புரட்சியும் — 27

1977 ஆம் ஆண்டு ஆங்கிலப் பதிப்பில் (Monthly Review Press) இந்நூலின் மொழிபெயர்ப்பு ஆசிரியர்கள் கொடுத்துள்ள சில குறிப்புகள் — 30

# ரசியப் பொருளாதாரம் பற்றிய ஒரு விமர்சனம்

## மா-சே-துங்

அரசியல் பொருளாதாரம் என்ற ரசியப் பாடநூல் பற்றிய விமர்சனக் குறிப்புகள் 1961-1962

### பாகம் I அத்தியாயம் 20-23


1. முதலாளித்துவத்திலிருந்து சோசலிசத்திற்கு — 33
2. மாறுதல் கால கட்டம் — 34
3. பல்வேறு நாடுகளில் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் அனைத்தும் தழுவிய மற்றும் குறிப்பான தன்மைகள் — 39
4. ''சமாதான மாற்றம்'' என்ற பிரச்சினை — 40
5. ஜனநாயகப் புரட்சியிலிருந்து சோசலிசப் புரட்சிக்கு —பல்வேறு பிரச்சினைகள் — 41
6. வன்முறையும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமும் — 43
7. பாட்டாளி வர்க்க அரசின் வடிவங்கள் — 45
8. முதலாளித்துவ தொழில் மற்றும் வர்க்கத்தின் பண்பை மாற்றுவது — 46
9. நடுத்தர விவசாயிகள் — 47
10. தொழிலாளி — விவசாயி கூட்டணி — 50
11. அறிவு ஜீவிகளை மாற்றுவது — 51
12. தொழில் மயமாக்கலுக்கும் விவசாய கூட்டுடைமையாக்கலுக்கும் இடையே உள்ள உறவு — 53
13. யுத்தமும் புரட்சியும் — 53
14. பின் தங்கிய நாடுகளில் புரட்சி மிகவும் கடினமானதா? — 55
15. சோசலிச மாற்றத்திற்கு பெருவீதத் தொழில்கள் அடிப்படையானவையா? — 56

16. சோசலிசப் பாதையை மேற்கொள்வதன் சிறப்பு அம்சங்கள் பற்றிய லெனின் ஆய்வுகள் — 57

17. தொழில் மயமாக்கலின் விகிதம் ஒரு கடுமையான பிரச்சினை — 58

18. சிறிய, நடுத்தர மற்றும் பெருவீதத் தொழில் நிறுவனங்களை ஒருங்கிணைந்த முறையில் வளர்ப்பதன் மூலம் உயர்ந்தபட்ச தொழில் வளர்ச்சி விகிதத்தைச் சாதிப்பது —59

19. இருவகை சோசலிச உடைமை முறைகளுக்கிடையில் நீண்ட காலத்திற்கு சகவாழ்வு சாத்தியமா? — 59

20. விவசாயத்தில் சோசலிச மாற்றம் இயந்திர மயமாக்கலை மட்டுமே சார்ந்திருக்க முடியாது — 61

21. சொல்லிக் கொள்ளப்படுகின்ற முழுமையான உறுதிப்படுத்தல் — 62

22. யுத்தமும் சமாதானமும் — 67

23. ஒருமித்த கருத்துதான் சமுதாய வளர்ச்சியின் உந்து சக்தியா? — 69

24. சோசலிசத்தில் உழைப்பாளரின் உரிமைகள் — 69

25. கம்யூனிசத்திற்கு மாறுவது ஒரு புரட்சியா? — 71

26. ''சீனாவில் மிகக் கடுமையான வர்க்கப் போராட்ட முறைகளை மேற்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை'' என்ற வாதம் பற்றி — 72

27. சோசலிச நிர்மாணத்தின் காலக்கெடு — 74

28. தொழில் மயமாக்கலுக்கும் சோசலிச மாற்றத்திற்கும் இடையிலான உறவுகள் பற்றி மேலும் சில விவாதங்கள் — 75

பாகம் II அத்தியாயம் 24—29

29. சோசலிச உற்பத்தி உறவுகளுக்கும் உற்பத்தி சக்திகளுக்கும் இடையிலான முரண்பாடுகள் — 77

30. கூட்டுடைமை முறையிலிருந்து மக்களின் உடைமை முறைக்கு மாறுவது தவிர்க்க முடியாதது — 79
31. தனி நபர் சொத்து — 80
32. ஒரு சோசலிச சமுதாயத்தில் முரண்பாடுகளே வளர்ச்சியின் உந்து சக்தியாகும் — 82
33. அறிவின் இயக்கவியல் நிகழ்முறை — 84
34. சங்கங்களும் ஒருநபர் தலைமை முறையும் — 86
35. அடிப்படைக் கோட்பாடுகள் மற்றும் விதிகளிலிருந்து தொடங்குவது மார்க்சிய முறையல்ல — 86
36. முன்னேறிய அனுபவங்களை முயற்சியின்றியே பிரபலப்படுத்த முடியுமா? — 87
37. திட்டமிடுதல் — 88
38. உற்பத்தி சாதன உற்பத்தியின் வளர்ச்சிக்கு முன்னுரிமை; தொழில் மற்றும் விவசாயத்தை அக்கம் பக்கமாக வளர்ப்பது — 91
39. ''பங்கீடு தீர்மானகரமானது''— என்பதில் ஒரு தவறான கண்ணோட்டம் — 92
40. அரசியலை ஆணையில் வைப்பதும் பொருளாதய ஊக்கமும் — 94
41. சமநிலையும் சமனற்ற நிலையும் — 95
42. ''பொருளாயத ஊக்குவிப்புகள்'' — 99
43. சோசலிசத் தொழில் நிறுவனங்களில் தனிநபர்களுக்கு இடையிலான உறவுகள் — 104
44. விரைவுத் திட்டங்கள், முடுக்கிவிடப்பட்ட பணிகள் — 105
45. மதிப்பு விதியும் திட்டமிடுதலும் — 106
46. ஊதியங்களின் வடிவங்கள் — 109
47. விலையைப் பற்றி இரண்டு கேள்விகள் — 110

### பாகம் III அத்தியாயம் 30—34


48. வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுத் தொழில்களையும், பெரிய, நடுத்தர மற்றும் சிறிய தொழில்களையும் ஒருசேர வளர்ப்பது — 110

49. எது முதலில், டிராக்டர்களா அல்லது கூட்டுறவுகளா? — 113

50. இரண்டு குறிக்கோள்கள் : பெரியது மற்றும் பொது மக்களுக்கானது — 115

51. பொருளாயத நலன்களுக்கு கூடுதல் அழுத்தம் கொடுப்பதற்கான அடிப்படைக் காரணம் என்ன? — 116

52. முடிவாக மக்கள்தான் செயல்படவேண்டும் — 117

53. போக்குவரத்து மற்றும் வர்த்தகம் — 118

54. தொழிலையும் விவசாயத்தையும் ஒருசேர வளர்ப்பது — 119

55. சேமிப்புக்கான அளவுகோல் — 121


### பாகம் IV அத்தியாயம் 35-லிருந்து முடிவு வரை


56. கம்யூனிச அரசு — 123

57. கம்யூனிசத்திற்கான மாற்றம் — 123

58. கூட்டுடைமை முறையின் எதிர்கால வளர்ச்சி — 124

59. கிராமப் புறங்களுக்கும் நகர்ப் புறங்களுக்கும் இடையிலான வேறுபாட்டை ஒழிப்பது — 126

60. பல்வேறு சோசலிச நாடுகள் இணைந்த ஒரு பொருளாதார அமைப்பு முறையை உருவாக்குவது பற்றிய பிரச்சினை — 126

61. பல்வேறு சோசலிச நாடுகளின் வளர்ச்சியை சமன்படுத்த முடியுமா? — 129

62. இறுதியான பிரச்சினை அமைப்பு முறையைப் பற்றியதுதான் — 129

63. உலகிலுள்ள இரு பொருளாதார
அமைப்பு முறைகளுக்கிடையிலான உறவுகள் — 130

64. ஸ்டாலினைப் பற்றிய ஒரு விமர்சனம் — 130

65. அந்நூலின் பொதுவான கண்ணோட்டம் — 132

66. அரசியல் பொருளாதாரம் பற்றிய ஒரு பாடநூலை
எழுதுவது எப்படி? — 137

67. சாராம்சத்தை அடைவதற்கு தோற்றத்தை
எவ்வாறு ஆய்வு செய்வது — 140

68. தத்துவம் நம்மை எதிர்நோக்கியுள்ள அரசியல்
பணிகளுக்கு உதவுவதாக இருக்க வேண்டும் — 143

## இணைப்பு

1. சீனாவில் தொழில் மயமாக்குவதில் பிரச்சினைகள் — 146

2. சமுதாய அந்தஸ்தும் தனிநபர் செயல் திறனும் — 148

3. மக்கள் திரளைச் சார்ந்திருப்பது — 150

4. ரசியாவும் சீனாவும்: வளர்ச்சி நிகழ்முறையில்
ஒப்பு நோக்குவதற்கான சில அம்சங்கள் — 151

5. ஒரு பொதுவழியின் உருவாக்க நிகழ்முறையும்
உறுதிப்படுத்தலும் — 155

6. ஏகாதிபத்திய நாடுகளுக்கிடையிலான
முரண்பாடுகளும் இதர விசயங்களும் — 158

7. சீனாவின் தொழிற்புரட்சி மிகத் துரிதமானதாக
இருக்க முடியும் — 160

8. மக்கட் தொகை — 161

''ரசியாவில் சோசலிசத்தின் பொருளாதாரப் பிரச்சினைகள்'' என்ற நூலைப் பற்றிய விமர்சன உரை (நவம்பர் 1958) — 162

ரசியாவில் சோசலிசத்தின் பொருளாதாரப் பிரச்சினைகள் என்ற ஸ்டாலினுடைய நூல் மீதான விமர்சனக் குறிப்புகள் — 170

குறிப்புகள் — 189

# நூல் அறிமுகம்

—ஜேம்ஸ் பெக்

''சோவியத் பொருளாதாரம் பற்றிய ஒரு விமர்சனம்'' என்ற இந்நூல், மாபெரும் பாய்ச்சல் காலகட்டத்திலும், அதை அடுத்தும் தோழர் மாசேதுங் எழுதிய குறிப்புகளின் தொகுப்பாகும். இக் கால கட்டத்தில்தான் ரசியாவிடமிருந்தும் அதன் வளர்ச்சிமுறையிலிருந்தும் சீனப்புரட்சி தீர்மானகரமாக முறித்துக் கொள்ளத் தொடங்கியது. 'மாபெரும் பாய்ச்சல்' மூலம் சோசலிசத்திற்கு ஒரு தனி வகைப்பட்ட சீனப்பாதை தோன்றியது. ஆனால் இப்பாதை சீனாவின் சோசலிச வளர்ச்சிப் பாதை பற்றி பத்தாண்டுகளுக்கும் மேலாக நடைபெற்ற முரண்பட்ட விவாதங்களின் விளைவாகும். சீனக் கம்யூனிஸ்ட் கட்சியில் நடைபெற்ற அம்முரண்பட்ட விவாதங்கள் பலவற்றிற்கும் ரசிய அனுபவங்களை சீனாவின் சோசலிச கட்டுமானத்திற்குப் பிரயோகிப்பது பற்றிய பிரச்சினைதான் மையப் பொருளாக அமைந்திருந்தது.

சீனக் கம்யூனிஸ்டுகள் தங்கள் சமுதாயத்தைப் பகுப்பாய்வு செய்கையில், தங்கள் சொந்த நாட்டின் புரட்சிப்பாதை பற்றிய ஒரு பொதுவான தொலைநோக்கையும், செயல் முறைக்கான ஆலோசனைகளையும், புரட்சிகர உத்வேகத்தையும் பெறும் பொருட்டு ரசியப் புரட்சியைத் தொடர்ந்து ஆய்வுசெய்தனர். அவர்கள் சரியான மற்றும் தவறான படிப்பினைகளைப் பெறுவதற்கான முன் மாதிரியாகவே ரசியாவைக் கருதினர். எனவே மாபெரும் பாய்ச்சல் போன்ற சீனப்புரட்சியின் திருப்புமுனையான காலகட்டத்தில், மாவோ ரசிய அனுபவங்களை மீண்டும் ஆழ்ந்து ஆய்வு செய்ய முற்பட்டதில் வியப்பேதுமில்லை. இச்சமயம் அவர் 'அரசியல் பொருளாதாரம் ஒரு பாடநூல்' என்ற ரசிய நூலையும், ஸ்டாலின் எழுதிய 'ரசியாவில் சோசலிசத்தின் பொருளாதாரப் பிரச்சினைகள்' என்ற நூலையும் விமர்சனத்திற்கு உட்படுத்தியதன் மூலம் அந்த ஆய்வைச்

செய்தார். இருப்பினும் இந்த விமர்சனக் குறிப்புகளை எழுதுவ தற்கு முன்பாகவே ரசிய முறைகளைப் பின்பற்றும் முயற் சியை மாவோ கைவிட்டிருந்தார். 1950-ம் ஆண்டுகளின் தொடக்கத்திலிருந்தே அவரும் கட்சியின் மற்ற தலைவர்களும் ரசிய முறைகளை சீனாவிற்குப் பொருத்துவதற்கான முயற்சிகளை கைவிட்டு, அதற்கு மாறாக மிகப்பரந்த அளவிலான மாற்றுத் திட்டங்களை திடமாக முன்வைத்து வந்தனர்.

''சோவியத் பொருளாதாரம் பற்றிய ஒரு விமர்சனம்'' என்ற இந்நூல் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்த பல கோணங்களி லிருந்து படித்துப் பயன்பெற வேண்டிய நூல் ஆகும். இந்நூல் 1. சோவியத் முன்மாதிரி என்பது என்ன? அதிலிருந்து சீனம் எதைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதைப் பற்றிய மாவோவின் தீர்மானகரமான தொடக்கத் தொகுப்புரையாகவும்; 2. தங்கு தடையற்ற தொடர்ச்சியான புரட்சி என்ற கண்ணோட்டத்திலிருந்து மாபெரும் முன்னோக்கிய பாய்ச்சலை உறுதியாக ஆதரிப்பதாகவும் இருப்பதுடன்; 3. சோவியத் அரசியல் பொருளாதாரம் பற்றியும், ரசியப் புரட்சி அனுபவத்தின் கேந்திரமான பல அம்சங்கள் பற்றி யும், குறிப்பாக ஸ்டாலின் தலைமையின் கீழ் இருந்த ஆண்டுகள் பற்றியும் மிகக் கூர்மையான ஆய்வுகளையும் முன்வைக்கிறது.

இத்தொகுப்பில் ''அரசியல் பொருளாதாரம் ஒரு பாடநூல்'' என்ற ரசிய நூலைப் பற்றிய மாவோவின் விமர்சனமும், அந்த விமர்சனத்திற்கு அவரே எழுதிச் சேர்த்த பின்னிணைப்பும், ஸ்டாலி னுடைய நூலான ''ரசியாவில் சோசலிசத்தின் பொருளாதாரப் பிரச் சினைகள்'' என்ற நூல் பற்றி மாவோ ஆற்றிய உரையும், அந் நூல் பற்றிய விமசர்னமும் மொழிபெயர்க்கப்பட்டு இணைக்கப்பட் டுள்ளன. மாவோ, ஸ்டாலினுடைய 'பொருளாதாரப் பிரச்சினை களை' ரசிய அரசியல் பொருளாதாரப் பாடநூலுடன் சேர்த்து ஆய்வு செய்தது மிகவும் பொருத்தமானதே. ஏனெனில், ஸ்டாலி னுடைய நூல் கூட முதலில் நகல் அரசியல் பொருளாதாரப் பாட நூலுக்குத் தொடர்ச்சியான பல விமர்சனக் குறிப்புகளாக எழுதப் பட்டு பின்னரே அது முழுமைப் படுத்தப்பட்டு ஸ்டாலின் மறைவுக்குப் பின் வெளியிடப்பட்டது. இந்த ரசிய நூலின் பல்வேறு ரசிய மற்றும் சீனமொழிப் பதிப்புகள் 1950-ம் ஆண்டுகளின் மத்தியி லிருந்து சீனாவில் சுற்றுக்கு விடப்பட்டன. 1959-ல் நடைபெற்ற லூசான் மாநாட்டிற்குப் பிறகு கட்சி உறுப்பினர்கள் அனைவரும் இந்நூலின் மூன்றாவது பதிப்பை விமர்சன ரீதியில் படிக்கும்படி

மாவோ கோரினார். இப்பதிப்பின் அடிப்படையிலேயே அவர் தனது விமர்சனத்தை அமைத்துக்கொண்டார்.

## ரசிய முன்மாதிரி

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாறு முழுவதிலும், ரசியப் புரட்சியின் அனுபவங்களை எவ்வாறு கையாள்வது என்பது பற்றிய சர்ச்சையே சீனர்களால் வர்ணிக்கப்படும் ''இரு வழிப் போராட்டத்தின்'' மையமாக இருந்து வந்துள்ளது. 1921-ல் கட்சி தொடங்கப்பட்டதுமுதல் தொடர்ந்து கட்சியில் நடந்த போராட்டங்கள் அனைத்தும் புரட்சி பற்றிய பழமையான ரசியக் கண்ணோட்டத்தை ஆதரிக்கும் நபர்களுடன் ஏதாவது ஒரு விதத்தில் பிணைக்கப்பட்டிருந்தன. 1930-களில் லி-லி-சான், 1940-களில் வாங்-மிங், 1950-களில் காஓ-காங் மற்றும் பெங் டே-ஹை, 1960-களில் லியூ-சோ-சி ஆகிய அனைவரின் வீழ்ச்சியும் சோவியத் முன் மாதிரியின் தன்மை மற்றும் அதன் பயன்பாடு பற்றிய சர்ச்சை களுடன் இணைந்துள்ளன.

1949-வரை இந்த சர்ச்சைகள் அனைத்தும் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான புரட்சிகரப் போராட்டத்தில் மேற்கொள்ளப் பட வேண்டிய பொருத்தமான யுத்ததந்திரம், மக்கள் திரள் வழி யின் தன்மை, சீனத்தின் பருண்மையான நிலைமைகளுக்கேற்ப மார்க்சிய-லெனினியக் கோட்பாடுகளைப் பிரயோகிப்பதற்கான சரி யான வழிமுறை ஆகியவற்றை மையமாகக் கொண்டிருந்தன மாவோவும் அவரைப் பின்பற்றியவர்களும் குறிப்பாக யேனானில். (1937-45-ம் ஆண்டுகளில்) நடைமுறைப்படுத்திய முறைகளையும் புதிய மாற்றங்களையும் தயக்கத்துடனேயே ஸ்டாலின் ஏற்றுக் கொண்டிருந்தார். 1940-களில் விடுதலைக்கான வெற்றிகரமான போராட்டத்தைக்கூட அவர் எதிர்த்தார். ''ஸ்டாலினுடைய விருப் பத்திற்கு மாறாகச் செயல்பட்டதின் விளைவாக... சீனப்புரட்சி வெற்றி பெற்றது. நாங்கள் வாங்-மிங் முறைகளை—அல்லது வேறு வார்த்தைகளால் கூறுவதெனில் ஸ்டாலினுடைய முறைகளை— பின்பற்றி இருந்தால் சீனப்புரட்சி வெற்றி பெற்றிருக்காது''[1] என்று பின்னாட்களில் மாவோ குறிப்பிட்டார்.

இருப்பினும் விடுதலைக்குப் பிறகு சீனர்கள் சோசலிச வளர்ச் சிக்கு ஒரு முன்மாதிரியாக ரசியாவையே பார்த்தனர். 1949-ல் மாவோ, ''நமது சென்ற காலப்பணி 10,000மைல் நீண்ட பயணத் தில் ஒரு முதல் படி மட்டுமே'' என்றும் ''ஒரு நீண்ட நாடகத்தின்

சுருக்கமான முன்னுரை மட்டுமே''[2] என்றும் தன் சகதோழர்களை எச்சரித்தார். இந்த தொடக்க நாட்களில் கிராமப்புறத்துத் தேவைகளை அளவுக்கு அதிகமாக கனரகத் தொழிலின் தேவைகளுக்குக் கீழ்ப்படுத்தி, மேல்தட்டில் உள்ளவர்களால் திட்டமிடப்பட்டு அதிகார வர்க்கத்தால் நிறைவேற்றப்படும் பொருளாதார வளர்ச்சித் திட்டங்களைக் கொண்ட ரசியாவைத் தவிர சோசலிச வளர்ச்சிக்கு வேறு முன்மாதிரி எதுவும் இல்லை. சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களிடையே சோசலிச வளர்ச்சிப்பாதை குறித்து சர்ச்சைகள் இருந்தபோதிலும், அவர்கள் அனைவரின் இலட்சியமான தொழில்மயமாக்கலையும், கூட்டுறவு மயமாக்கலையும் சாதித்த சமுதாயமாக ரசியா விளங்கியது. மேலும், பல சீனத் தலைவர்களுக்கு, இரண்டாம் உலகப்போரில் பாசிசத்தை எதிர்த்து ரசியா பெற்ற வெற்றியானது அச் சமுதாயத்தின் வெற்றிக்கான நிரூபணமாக இருந்தது. மேலும் அமெரிக்க அரசின் பகைமை, அமெரிக்க பின்பலத்துடன் நடத்தப்பட்ட கடல்வழி முற்றுகை, அதன் கடற்பகுதிகள் மீது குண்டுவீச்சு, உலக அளவிலான பொருளாதாரத் தடைவிதிப்பு ஆகியன நடைபெற்று வந்த காலகட்டத்தில் சீனா இயற்கையாகவே தன் பாதுகாப்பு மற்றும் பொருளாதாரக் கொள்கைகளில் ரசியாவை சார்ந்திருந்தது.

இத் தொகுப்பில் மாவோ எழுதுகிறார்: ''விடுதலையின் தொடக்க காலத்தில் நாடு முழுவதற்குமான பொருளாதாரத்தை நிர்வகிக்கும் அனுபவம் எங்களுக்கு இல்லாமல் இருந்தது. எனவே முதல் அய்ந்தாண்டுத் திட்ட காலத்தில் ரசிய முறைகள், அவை எங்களுக்கு எந்த விதத்திலும் திருப்தியளிக்கவில்லை எனினும் அவற்றை அப்படியே பின்பற்றுவதைத் தவிர நாங்கள் வேறு ஒன்றும் செய்ய முடியவில்லை.''[3] வளர்ந்து வந்த இந்த அதிருப்தி ரசிய முன்மாதிரியின் மூன்று பிரதான அம்சங்களை மையமாகக் கொண்டிருந்தது. அவை: 1. விவசாயிகளுக்கு இழப்பு நேரும் வகையில் ஆரம்ப சோசலிசக்குவியல்.[4] 2. உற்பத்தி சக்திகள் மற்றும் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம் பற்றிய கேட்பாடு. 3. சீனாவில் கம்யூனிஸ்ட் கட்சி பற்றிய கருத்தாக்கம்.

## விவசாயிகளின் இழப்பின் வாயிலாக ஆரம்ப சோசலிசக் குவியல்

1950-ம் ஆண்டுகளின் தொடக்கத்தில் ''இன்றைய ரசியாவே எமது நாளை'' (the Soviet Union today is our tomorrow)

SEELAN BOOKS SIGNATURE NORWAY

என்ற சீன முழக்கம் ரசிய முறைகளை அப்படியே பொருத்த முயன்ற பல சீனர்களின் உணர்வுகளைப் படம் பிடிப்பதாக இருந்தது. கனரகத் தொழிலையே கிட்டத்தட்ட முழுமையாகச் சார்ந்திருப்பது, திட்டமிடுதலில் பெருமளவு மையப்படுத்துதல் மற்றும் அதிகாரவர்க்க முறைகளை கடைபிடிப்பது, மென்ரகத் தொழிலுக்கும் நுகர்வுப்பொருள் உற்பத்திக்கும் குறைவான முக்கியத்துவம் அளித்தல் ஆகியவையே சீனாவின் முதல் அய்ந்தாண்டுத் திட்டத்தின் குறிப்பிடத்தக்க அம்சங்களாகும். பெரும்பாலும் சேமிப்பின் மூலாதாரமாக விவசாயிகள் கருதப்பட்டனர். பீகிங்கில் மையப்படுத்தப்பட்ட பலம்வாய்ந்த பொருளாதார அமைச்சகங்கள் நிறுவப்பட்டன. அவர்கள் கடுமையான, படிப்படியான கட்டுப்பாட்டு முறைகளையும், ''தனி மனித நிர்வாகத்தையும்'' தொழிற்சாலைகளில் புகுத்தி அவற்றை வழிநடத்த பெரும் ஊதியம் பெறும் வல்லுனர்களை மட்டுமே சார்ந்திருந்தனர். உற்பத்திப்பணிகளை ஊக்குவிக்கவும், நிறுவனங்களின் செயல்பாடுகளை தொடர்ந்து கண்காணிக்கவும் பரவலாகப் பொருளாதார ஊக்குவிப்பு புகுத்தப்பட்டது.

இத்தகைய வளர்ச்சியை ரசியா தீவிரமாக ஊக்குவித்தது. 1949-க்குப் பிறகு சோசலிச உலகுடன் சீனா கொண்டிருந்த உறவு, இயற்கையாகவே எந்தத்துறையில் ஒத்துழைப்பு எளிதாகவும், அதிகப் பயனுடையதாகவும் இருந்ததோ, அத்துறைக்கு முன்னுரிமை அளிப்பதாக இருந்தது; கனரகத் தொழிற்சாலைகளும், ரசிய பாணியிலான அய்ந்தாண்டுத் திட்டங்களை நிர்வகிப்பதற்குத் தேவையான தொழில் வல்லுனர்களையும் தொழில் முறையாளர்களையும் (professionals) பயிற்றுவிப்பதற்கேற்ப கல்வி முறையும் வடிவமைக்கப்பட்டன. ஆயுதம் தாங்கிய படைகளில் தொழில்முறையாக்கல் (professionalism) பரவலாக்கப்பட்டது. உண்மையில், மக்கள் விடுதலைப்படையில் என்ன நடந்து கொண்டிருந்தனவோ அவை நாடு முழுவதும் நகர்ப்புறங்களில் நடைபெற்றுக் கொண்டிருந்தவற்றை உருவகப்படுத்திக் காட்டின. பிப்ரவரி 1955-ல் ''ராணுவ அதிகாரிகளுக்கான பணி ஒழுங்குமுறை விதிகள்'' நிறைவேற்றப்பட்ட பின் சீன ராணுவ அதிகாரிகள் நிரந்தர ராணுவத்தின் அனைத்துக் கூறுகளையும் பெற்றனர். பதவி முறைகள், பட்டங்கள், அதிகாரிகளுக்கும் சாதாரண படைவீரர்களுக்கும் இடையில் பெருமளவுக்கு வித்தியாசமான சம்பள விகிதங்கள் ஆகியவற்றை நடைமுறைப்படுத்தியதன் மூலம், பல ஆண்டுகளாக புரட்சிகர யுத்தத்தில் வார்த்தெடுக்கப்

பட்ட இயல்பான தன்மை, சமத்துவம், சனநாயகம் ஆகிய பண்புகளை விடுதலைப்படை கைவிட்டு விட்டது.

விடுதலைக்கு பிந்திய தொடக்க நாட்களிலேயே இந்த தீவிரமான ''ரசிய மயமாக்குதலுக்கான'' எதிர்ப்பு அடிஆழத்தில் மறைந்திருக்கவில்லை. யேனான் பகுதியிலிருந்தபோது நிலவிய சமத்துவ மரபுகளைக் கட்சி கைவிட்டு விட்டதைப் பற்றி அணிகளில் பலரும் மன அமைதியின்றி இருந்தனர். பீகிங்கில் அமைந்திருந்த அமைச்சரகங்களில் பொருளாதார அதிகாரம் ஒன்று குவிக்கப் படுவதையும், மிக அதிகமாக மையப்படுத்தப்பட்ட திட்டமிடும் அமைப்புகளை நிறுவியதையும் லியூ சோ-சி போன்ற முன்னணித் தலைவர்கள் உட்பட பலரும் எதிர்த்தனர்; இவையாவும் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் பாத்திரம், அதிகாரம் ஆகியவை பற்றிய தங்கள் கருத்துக்களை அச்சுறுத்துவதாக அவர்கள் கருதினர். அடுத்து வந்த ஆண்டுகளில் 1950-களின் மத்திக்குப் பிறகு சில அமைச்சரகங்களில் அதிகாரவர்க்கமுறை தளர்த்தப்பட்டு, திட்டமிடுதலில் மையப்படுத்துதல் குறைக்கப்பட்டபோது கட்சி தனது பாத்திரத்தை விரிவுபடுத்தியது. ஆலைகளை இயக்குவதில் ஒரு நபர் நிர்வாக முறைக்குப் பதிலாக கட்சியின் பங்கு அதிகரித்தது. மாபெரும் முன்னோக்கிய பாய்ச்சலின் கூடவே கட்சி கிராமப் புறங்களிலும் தனது பாத்திரத்தை பெருமளவு அதிகரித்தது.

எனவே, ரசிய முன்மாதிரியை அப்படியே பின்பற்றுவதில் உள்ள ஆபத்துக்களைப் பற்றி மாவோ எழுப்பத் தொடங்கிய சில விமர்சனங்களைக் கட்சியில் இருந்த பல தலைவர்கள் எதிர்க்கவில்லை. இருப்பினும் அவர்களுடைய விமர்சனங்கள் பிரச்சினையின் உயர்நிலையை தொடவில்லை என்று மாவோ கருதினார். 1950ம் ஆண்டுகளின் தொடக்கத்தில் ரசிய முன்மாதிரியை நடைமுறைப்படுத்தியதை ஆய்வு செய்த மாவோ கிராமப்புறங்களில் புரட்சிகரமான மாற்றங்களுக்கு இது முன்னிறுத்தக்கூடிய அபாயங்களைப் பற்றி எச்சரிக்கத் தொடங்கினார். நகர்ப்புறத்திற்கும் கிராமபுறத்திற்கும் இடையே வளர்ந்துவரும் இடைவெளி உடலுழைப்பில் ஈடுபட்டுள்ளவர்களை குறிப்பாக விவசாயிகளை தாழ்வாகக் கருதும் ஆழமாகப் பதிந்துள்ள பழக்கத்தை உறுதிப் படுத்துகிறது என்றும் இத்தகைய பழக்கம் அதிகார வர்க்க மற்றும் மேலுயர்வர்க்க தலைமை அளிக்கும் முறையை வளர்க்கிறது என்றும் வாதாடினார். கிராமப்புறங்களில் சமுதாயப் புரட்சியை பின்னுக்குத் தள்ளுவதன் மூலம் நகர்ப்புறங்களில்

ஆலைத் தொழில் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியை அதிகரிப்பது என்பது சீனாவை தொழில் மயமான சோசலிச சமுதாயமாக மாற்றுவதற்கு எந்த முரண்பாடுகளைக் தீர்க்க வேண்டுமோ அந்த முரண்பாடுகளை மேலும் சிக்கலாக்கும் என்று மாவோ அஞ்சினார்.

நகர்ப்புற மற்றும் நாட்டுப்புறப் பகுதிகளின் வளர்ச்சிகள் ஒன்றோடொன்று பிண்ணிப் பிணைந்துள்ளன என்று 1955 ஜுலையில் மாவோ வலியுறுத்தினார். அவர் கூறினார்: ''நாம் எக்காரணத்தைக் கொண்டும் தொழிலையும், விவசாயத்தையும், சோசலிச தொழில்மயமாக்கலையும், விவசாயத்தில் சோசலிச மாற்றத்தைக் கொண்டு வருவதையும் இருவேறுபட்ட தனித் தனியான விசயங்களாகக் கருதக்கூடாது என்பதோடு எக்காரணத்தைக் கொண்டும் ஒன்றிற்கு அழுத்தம் கொடுத்து மற்றதன் முக்கியத்துவத்தைக் குறைக்கக்கூடாது.''[5] ஆனால் 1956 ஏப்ரலுக்குப் பிறகு நிகழ்த்திய ''பத்துப் பெரும் உறவுகள் பற்றி'' என்ற தனது உரையில்தான் விவசாயிகளின் இழப்பின் அடிப்படையிலான ஆரம்பக் குவியலைச் சார்ந்திருக்கும் ரசிய முன் மாதிரியை அவர் நேரடியாக விமர்சித்தார்.

''விவசாயத்தையும், மென்ரகத் தொழிலையும் புறக்கணித்து விட்டு கனரகத் தொழிலுக்கு மட்டும் ஒரு தலைப்பட்சமான முக்கியத்துவம் அளிக்கும்''[6] ரசிய முறையை மாவோ கடுமையாக விமர்சித்தார். கனரகத் தொழிலுக்குத் தரப்படும் வரம்பற்ற முன்னுரிமையைக் குறைக்கக்கோரிய அதேசமயம் மென்ரகத் தொழிலிலும் விவசாயத்திலும் அதிக முதலீடு செய்வது, மக்களின் அன்றாடத் தேவைகளை நிறைவு செய்வதோடு கனரகத் தொழிலுக்கான ''மூலதனத்'' திரட்சியையும் துரிதப்படுத்தும் என்று வாதாடினார் மாவோ. இந்த ஆலோசனைகளை நடைமுறைப்படுத்த உள்ளூர் அதிகாரிகள் அதிக முன் முயற்சியை மேற்கொள்ளவேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். ''எல்லாவற்றையும் மைய அதிகாரிகள் தங்கள் கரங்களில் குவித்துக் கொண்டதன் மூலம் உள்ளூர் அதிகாரிகளுக்கு விலங்கிட்டு அவர்கள் சுயேச்சையாக செயல்படும் உரிமையை மறுத்ததற்காக''[7] ரசியாவை விமர்சனம் செய்த அவர் — நிர்வாகச் செலவுகள் குறைக்கப்பட வேண்டும் என்றும், தேசிய அதிகார வர்க்கத்தின் ஊழியர்கள் மூன்றில் இரண்டு பங்காக குறைக்கப்பட வேண்டும் என்றும் கோரினார். மேலும் பலம்வாய்ந்த மையத்தின் கீழ் ஒருங்கிணைந்த திட்டமிடுதலும் கட்டுப்பாடும் தொடர்ந்து அவசியமானது என்றும்

ஆனால் இது ஆதிக்கம் செலுத்தும் அமைச்சரவைகளால் நிர்வகிக்க படும் ரசிய பாணியிலான மையப்படுத்துதலாக இருக்கக்கூடாது என்றும் அவர் வலியுறுத்தினார்.

இவ்வாறு, மூலதனத்தை விவசாயிகளிடமிருந்து திரட்டும் ரசிய முறையையே மாவோ கேள்விக்குள்ளாக்கினார். ரசியர்கள் விவசாயிகளை கையாள்வதில் ''கடுமையான தவறிழைத்தனர்.'' அவர்கள் ''விவசாயிகளை மிகக் கடுமையாகக் கசக்கிப் பிழியும்'' நடவடிக்கைகளை மேற்கொண்டனர். மூலதனதைத் திரட்டும், அவர்களுடைய முறைகள் ''உற்பத்தி செய்வதற்கான விவசாயிகளின் உற்சாகத்தை மிகக் கடுமையாகப் பாதித்து விட்டது. நீங்கள், கோழி அதிகமாக முட்டையிட வேண்டும் என்று விரும்புகிறீர்கள் இருப்பினும் அதற்குத் தீனி போடுவதில்லை, நீங்கள், குதிரை வேகமாக ஓடவேண்டும் என்று விரும்புகிறீர்கள் இருப்பினும் அதை மேய விடுவதில்லை. இது எந்த வகைப்பட்ட தர்க்க நியதி?''[8] என்று அவர் கேட்டார்.

எக்காரணத்தைக் கொண்டும் விவசாயிகள் பாதிக்கப்படும் வளர்ச்சிப் பாதையை சீனா பின்பற்றாது என்று மாவோ கூறினார். அல்லது ஸ்டாலின் 1930களில் செய்தது போல் சீனா ஒரு போதும் கிராமப்புறங்களில் உள்ள உபரியை வற்றிப் போகும்படி உறிஞ்சி விடாது. ரசியப் பழமை வாதிகளும் முதலாளித்துவப் பொருளாதார நிபுணர்களும் அன்று குறிப்பிட்டதை மறுத்து ''கிராமப் புறங்களில் ஏற்கனவே உள்ள உபரியின் வாயிலாக மூலதனத்தை பெறமுடியாது'' என்றார் மாவோ. ஏனெனில், அங்கு மிக மிகக் குறைவான மூலதனமே உள்ளது. எனவே, கிராமப் புறங்களில் உள்ள உபரியை எடுத்துக் கொள்வதற்கு மாறாக சீனாவின் விவசாயம் மற்றும் தொழில் துறை ஆகிய இரண்டிலும் உள்ள உழைப்பாளர் சக்தியின் உற்பத்தித் திறனை கணிசமான அளவுக்கு ஒரு சேர அதிகரிக்க வேண்டும் என்று அவர் வாதாடினார். இவ்வாறு மட்டுமே ஒரு தொழில் மயமாக்கப்பட்ட சோசலிச சமுதாயம் உண்மையில் மலர முடியும். நகர்ப்புற மற்றும் கிராமப்புற நலன்களுக்கிடையிலான கூர்மையான மோதல்களினால் பிளவுபடுத்தப் படுவதற்கு மாறாக, தொழிலாளர்-விவசாயி கூட்டணி பலப் படுத்தப்படும். விவசாயிகளின் மீது கூடுதல் சுமை ஒன்றைத் திணிப்பதைத் தவிர்த்தால் அவர்களிடமிருந்து உபரியைப் பறிமுதல் செய்யும் ஒரு பலம் வாய்ந்த அடக்குமுறை அரசு யந்திரத்திற்கு அவசியம் இருக்காது.

மாவோ பின்னொருமுறை கூறினார்.

''பத்துப் பெரும் உறவுகள் பற்றி'' என்ற உரையுடன் நாங்கள் ''நிர்மானப் பணிகளுக்கு எங்களுடைய சொந்தப் பாதையை முன் வைக்கத் தொடங்கினோம்.''[9] ஒரு முன்னுரிமை பெற்ற துறையின் மூலமும் (கனரகத் தொழிலுக்குப் பிறகு மட்டுமே மற்ற துறைகள்) தனித்தனியான கட்டங்கள் மூலமும் (முதலில் பொருளாயத வளர்ச்சி அதன்பிறகு மட்டுமே சமுதாய உறவுகள் மற்றும் சித்தாந்தம்) வளர்ச்சி பெறவேண்டும் என்ற கருத்தை மாவோ முதன் முறையாகத் தெளிவாக நிராகரித்தார். யேனான் கால கட்டத்தில் பயன்படுத்தப்பட்ட முறைகளைப் போன்று, யாரையும் பின் தங்கவிடாமலும் பலருடைய உழைப்பினால் ஒருசிலர் பயனடைவதை அனுமதிக்காமலும் சமுதாய, அரசியல் மற்றும் பொருளாதார அய்க்கியத்திற்காக, தேசம் முழுவதும் பெரும் அர்ப்பணிப்புடன் ஈடுபடவேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். சீனாவிலிருந்த பல்வேறு முரண்பாடுகளைப் பற்றிய இந்த புதிய ஆழமான பகுப்பாய்வில், பல்வேறு பகுதிகளுக்கிடையிலும், பல்வேறு சமுதாயப் பிரிவுகள் மற்றும் குழுக்களுக்கிடையிலும், மையத்திற்கும் பிராந்தியங்களுக்குமிடையிலும், அரசியல் மற்றும் சமுதாய அரங்குகளுக்கிடையிலும் நிலவும் ஏற்றத்தாழ்வுகளால் ஏற்கனவே மிகக்கடுமையாகப் பிளவுபட்டுள்ள தேசத்தில் மேற் கொண்டும் புதிய பிளவுகளை உண்டாக்கும் எந்தத் திட்டத்தையும் மாவோ கடுமையாக எதிர்த்தார்.

## உற்பத்தி சக்திகள் பற்றிய கோட்பாடும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமும்

மூலதனத்தைத் திரட்டுவதில் ரசிய முன்மாதிரியை கண் மூடித்தனமாகப் பின்பற்றுவதில் உள்ள ஆபத்துக்களைச் சுட்டிக் காட்டிய மாவோ கூடவே, அந்த முன்மாதிரியுடன் நெருங்கிய தொடர்புடைய மற்றொரு அம்சமான உற்பத்தி சக்திகள் பற்றிய கோட்பாட்டையும் விமர்சித்தார். ரசியா, ஸ்டாலின் தலைமையில் இருந்த காலத்தில் உருவாக்கப்பட்ட இந்தக்கோட்பாடு, சாராம் சத்தில் உற்பத்தி சாதனங்களில் அரசுடமை மற்றும் உற்பத்தி சக்திகளின் துரிதமான வளர்ச்சி கம்யூனிசத்திற்கான சோசலிசப் பாதையைத் திறந்துவிடும் என்று வலியுறுத்தியது. இக்கோட்பாட் டின் படி பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பழைய ஆளும் வர்க்கங்

களை ஒடுக்கி, புதிய சமுதாய அமைப்பின் மீதான அவர்களுடைய தவிர்க்கவியலாத எதிர்ப்புரட்சித் தாக்குதல்களை முறியடிக்கும் அதே வேளையில் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியையும் வழிநடத்துகிறது.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் விவசாயிகளுக்கும்-தொழிலாளர்களுக்கும் உண்மையான சனநாயகத்தை அளிக்கிறது. தனிச்சொத்து மற்றும் வர்க்க சமுதாயத்தின் இதர வடிவங்கள் ஒழியும் போது எல்லாவிதச் சுரண்டலும் ஒழிந்துவிடும் என்று வாதிடப்படுகிறது. இதுபோன்ற புதிய நிலைமைகளில் சுரண்டல் சாத்தியமில்லை என்று வாதிடப்பட்டதால் படிநிலை அமைப்பு, கீழ்ப்படிதல், உழைப்புச் சக்திகளை ஒழுங்கு செய்வது ஆகியன நவீன முதலாளித்துவ முறைகளை ஒத்து இருந்தபோதிலும், அவையாவும் அறிவுப்பூர்வமான வேலைமுறைகளைப் பின்பற்றுவதாகவே கருதப்பட்டது.

பழைய முதலாளித்துவ மற்றும் நிலப்பிரபுத்துவ வர்க்கங்களின் அழிவுக்குப் பின் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சி மற்றும் மக்களின் வாழ்க்கைத்தரம் தொடர்ச்சியாக உயர்வதின் காரணமாக வர்க்கப் போராட்டத்தின் தீவிரத்தன்மை மங்கி இறுதியில் மறைந்துவிடும். முதலாளித்துவத்துடன் சர்வதேச ரீதியில் போராட்டம் இல்லையெனில் அரசு கூட ''உலர்ந்து உதிர்ந்து''விடும். வெளிநாட்டு எதிரிகளை எதிர்த்து போராடுவதற்கான ஒரு கருவியாக அரசு தொடர்ந்து இருந்தாலும் உள்நாட்டில் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியை மட்டுமே சார்ந்து கம்யூனிசத்திற்கு மாறிச் செல்வதற்குத் திட்டமிடமுடியும்.

சாராம்சத்தில், உற்பத்தி சக்திகள் பற்றிய மேற்கண்ட ஸ்டாலினிய கோட்பாடு முதலாளித்துவ உற்பத்திமுறை பற்றிய கருத்தை வெறும் உற்பத்திச் சாதனங்களின் தனியுடைமைமுறை என்ற கருத்து நிலைக்குத் தாழ்த்திவிட்டது. இதன் விளைவாக, அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றி உற்பத்திச் சாதனங்களைப் பொதுவுடைமையாக மாற்றிய பிறகு அரசியல், சித்தாந்தத் துறைகளில் முழுமையான சோசலிசப் புரட்சியை நடத்துவது பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை என்றும் மக்கள் இயக்கங்களும் மக்கள் திரளின் ஆக்கப்பூர்வமான பாத்திரமும் காலத்திற்கு ஒவ்வாதவை அராஜகமானவை என்றும் கருதப்படுகின்றன; தனிநபர்களின் உலகக் கண்ணோட்டத்தை மாற்றுவதற்கான போராட்டம் புறக்கணிக்கப்படுகிறது.

உற்பத்தி சக்திகள் பற்றிய இந்த கோட்பாட்டுக்கு எதிரான மாவோவின் கடுமையான கண்டனம், புரட்சிகர மாறுதலைப் பற்றி பல்லாண்டுக்கால கொரில்லா யுத்தத்தின்போது பெறப்பட்ட[10] படிப்பினைகளிலிருந்து உருவானது. யேனான் முன் மாதிரியின் தனித்தன்மை வாய்ந்த சிறப்புக்கூறுகள் பிரசித்திபெற்றவை. அவை: தற்சார்பு, அதிகாரத்தைப் பரவலாக்குவது, மேலுயர்வர்க்க பாங்கையும் அதிகாரவர்க்க முறையையும் எதிர்ப்பது, கூட்டுஇலட்சியங்களையும் ஒழுங்கையும் கடைப்பிடிப்பது, பொருள் வகையல்லாத ஊக்கம், சமுதாய மற்றும் பொருளாதார துறைகளின் அனைத்து நடவடிக்கைகளிலும் மக்கள் திரள் பங்கேற்பு ஆகியனவாகும். மேலும் வளர்ச்சி என்பது தெரிவு செய்யப்பட்ட குறிப்பிட்ட பகுதிக்கு மட்டும் என்றில்லாமல், முழுமையானதாகவும் அனைத்து துறைகளையும் உயர்த்துவதாகவும் திட்டமிடப்பட்டதாகும்.

புரட்சிகரமான நிலச்சீர்த்திருத்தத்திற்கான போராட்டத்தின் போது மக்கள் திரள் பாதை மற்றும் புதிய கூட்டுறவுச் செயல்முறைகளின் வளர்ச்சி ஆகியவற்றின்மூலம் விவசாயிகளின் அரசியல் உணர்வு உயர்த்தப்பட்டது என்று மாவோ வாதிட்டார். உற்பத்தி உறவுகளை மாற்றியமைத்ததன் மூலமாகவும், புதிய கருத்துக்களும் புதிய மனப்பான்மையும் வளருவதை ஊக்குவித்ததன் மூலமாகவும், கிராமப்புறங்களில் உற்பத்தித் திறன் அதிகரிக்கப்பட்டது. கட்சி கூட இப்போக்கின் ஒரு பகுதியே தவிர அதன் எஜமானன் அல்ல. ஏனெனில், இதன் உறுப்பினர்களும் விவசாயிகளைப் போலவே ஒரு தொடர்ச்சியான போக்கின் படிப்படியான மாற்றத்தின் மூலம் வார்த்தெடுக்கப்பட்டனர்.

கிராமப்புற வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் படிப்படியான மாற்றத்தின் மூலம் உற்பத்தி சக்திகளை வளர்ப்பது என்ற இந்த அனுபவத்தின் ஒரு தொடர்ச்சியாகத்தான் விடுதலைக்குப் பிந்திய ஆண்டுகளில் விரைவான கூட்டுடைமையாக்கலை மாவோ தீவிரமாக முன் வைத்தார். இவ்வாறு அவர், "முதலில் இயந்திரமயமாக்கல் பின்னர் கூட்டுறவு" என்ற கருத்தை விமர்சித்தார். அதற்கு மாறாக, விவசாயம் இயந்திரமயமாக்கப்படுவதற்கு முன்பாக கூட்டுடைமையை நிறைவு செய்யவேண்டும் என்றும்— செய்ய முடியும் என்று வாதாடினார். தொழில் நுட்பத்தில் ஏற்படும் மாற்றங்களைப் பின்பற்றியும் மேலும் மேலும் அதன் உதவியுடனும் கொண்டு வரப்படும் சமுதாய மாற்றம், உற்பத்தி சக்திகளைக்

கட்டவிழ்த்துவிடும் அதே சமயம் கிராமப்புறங்களில் துருவ முனைப் பாக்கலைக் குறைக்கும்.

ஆரம்பகாலக் குவிப்பு என்ற கோட்பாட்டைச் சார்ந்து நின்ற ரசிய முன்மாதிரியை ஏற்றுக்கொண்ட கட்சியின் பலமுன்னணித் தலைவர்கள், கிராமப்புறங்களில் புரட்சியை ஆழப்படுத்த வேண்டும் என்று 1950-களின் ஆரம்பத்தில் மாவோ விடுத்த அறை கூவலை எதிர்த்தனர். தேவையான அளவு விவசாயக் கருவிகளின் விநியோகமும் போதுமான அளவு இயந்திரமயமாக்கலும் இன்றி கூட்டுறவுமயமாக்கலுக்கு முயற்சி செய்வது ''கற்பனாவாத விவசாய சோசலிசம்'' என்று லியூசோசி விமர்சனம் செய்தார். இந்த சந்தேகங்கள் லியூசோசிக்கு மட்டும் ஏற்படவில்லை. கட்சியின் பல தலைவர்கள் ரசியாவில் நடந்தவற்றை மனதில் கொண்டு சீனாவில் கூட்டுடைமையாக்கலைத் தீவிரப் படுத்துவதினால் விவசாயிகளின் ஆதரவை இழக்கநேரிடும் என்றும், பொருளாதாரத் திட்டங்கள் சீர்குலைந்துவிடும் என்றும் அஞ்சினர். 1955 ஜூலையில் மாவோ குறிப்பிட்டார்:

''விவசாய கூட்டுறவுகள் சம்பந்தப்பட்ட இன்றைய நமது பணிகளை அவர்கள் கூறுவதுபோன்று விவேகமற்ற முறையில் செயல்படும் அதிவிரைவான நடவடிக்கைகள் என்று விமர்சனம் செய்வதற்கு போதிய அடிப்படைகள் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் வரலாற்றில் உள்ளதாக சில தோழர்கள் கருதுகின்றனர்... ஆனால், அந்தத் தோழர்கள் நத்தை வேகத்தில் ஊர்ந்து செல்லவேண்டும் என்ற தங்களது கருத்துக்கு ரசிய அனுபவங்களை ஒரு திரையாகப் பயன்படுத்திக் கொள்வதை எக்காரணத்தைக் கொண்டும் நாம் அனுமதிக்கக்கூடாது.''[11]

எனினும் இவ்விவாதம் வெறும் கூட்டுடமையாக்கலின் வேகம் பற்றியது மட்டுமல்ல என்பதையும் தன்னுடைய கொள்கைகளுக்கான எதிர்ப்பின் பிண்ணணியில் சமுதாய மாற்றத்திற்கு புரட்சிகரமான முறைகளையும் வர்க்கப்போராட்டத்தையும் தொடர்வதற்கான எதிர்ப்புதான் அடிப்படையாக இருக்கிறது என்பதையும் மாவோ உணர்ந்தார். சோசலிசத்திற்கு மாறும் காலகட்டம் ''முரண்பாடுகளும் போராட்டங்களும் நிறைந்தது. நமது இன்றைய புரட்சிகரப் போராட்டம் சென்ற காலத்திய ஆயுதம் தாங்கிய போராட்டத்தை விட மிகவும் கடுமையானது. முதலாளித்துவத்தையும், அனைத்து சுரண்டல் அமைப்புக்களையும் இறுதியாகக் குழி

தோண்டிப் புதைப்பதற்கான புரட்சி இது''[12] என்று 1953 ஜூனில் அவர் கட்சித் தலைவர்களை எச்சரித்தார்.

இருப்பினும், அது போன்ற புரட்சிகரப் போராட்டங்களுக்குத் தலைமை தாங்குவதில் தங்களுக்கு உள்ள திறமையைக் காட்டு வதற்கு மாறாக பெருவாரியான கட்சித் தலைவர்கள் கிராமப் புறங்களில் பெருந்திரளான மக்களின் எழுச்சியை விட பின்தங்கிய நிலையில் இருந்ததை மாவோ கண்டார். அவர் கூறினார்:

நமது தோழர்களில் சிலர் ''நீங்கள் வேகமாக போகிறீர்கள்'' என்று தொடர்ந்து முறையிட்டுக் கொண்டே பாதங்கள் சிறுத்த பெண்களைப் போல் தத்தித் தத்தி பின்தொடர்கின்றனர். அளவுக்கு மீறிய விமர்சனம், பொருத்தமற்ற முறையீடுகள், முடிவற்ற ஏக்கம், எண்ணிலடங்கா சமூகக் கட்டுப்பாடு — இவை தான் கிராமப்புறங்களில் சோசலிச இயக்கத்தை வழி நடத்து வதற்கான சரியான வழி என்று அவர்கள் கருதுகின்றனர்''.[13]

மக்கள் திரள் பாதையின் மீதான நம்பிக்கைப் பிரகடன மாகவும் புரட்சிகரமான போராட்டத்தின் தேவை கருதியும், கூட்டுடமையாக்கலுக்கான இயக்கத்தைத் தீவிரப்படுத்தவேண்டும் என்று மாவோ கருதினார். ஆனால், கட்சியின் பல தலைவர் கள் அதுபோன்ற முறைகள் இனிமேல் தேவையில்லாத அளவுக்கு கூட்டுடமையாக்கம் வெற்றி பெற்று ஒரு புதிய சகாப்தத்தை உருவாக்கிவிட்டது என்று வாதிட்டனர். இவ்வாறு ஆரம்பகாலக் குவியல் பற்றி ''பத்துப் பெரும் உறவுகளில்'' தெளிவாகக் கூறப்பட்ட மாவோவின் நிலைப்பாடுகளை லியூசோ சியும் கட்சியின் இதர தலைவர்களும் ஆதரிக்கத் தொடங்கியிருந்த போதிலும், உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்கு ''மக்களை நேரடி நடவடிக்கையில் வழி நடத்தக்கூடிய''[14] ''பிரதான போராட்ட முறைகள்'' இனிமேலும் தேவை இல்லை என்ற கட்டத்தை சீனாவின் கூட்டுடைமையாக்கல் அடைந்துவிட்டது என்றனர். 1956 செப்டம்பரில் நடந்த எட்டாவது கட்சிக் காங்கிரசில் லியூசோசி கூறினார்:

''இப்போது, எப்படியோ கொந்தளிப்பு மிக்க புரட்சிகர கால கட்டம் கடந்துவிட்டது, புதிய உற்பத்தி உறவுகள் உருவாக்கப் பட்டு விட்டன. நமது போராட்டத்தின் நோக்கம், சமுதாயத் தின் உற்பத்தி சக்திகளின் வெற்றிகரமான வளர்ச்சிக்குப் பாடு படுவது என்பதாக மாறிவிட்டது. (இவ்வாறு) இதன் விளைவாக

போராட்ட முறைகளில் இதற்கேற்ற வகையிலான மாறுதல்களைத் தொடரவேண்டும்...''[15]

1956-ம் ஆண்டுக்குள்ளாக விவசாயத்தில் கூட்டுறவு மய மாக்கலும், உற்பத்திச் சாதனங்களில் பொதுவுடைமையும் அடிப் படையில் சாதிக்கப்பட்ட நிலையில், லியூ-சோ-சியும் மற்றவர் களும் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கு அனைத்து சக்திகளையும் ஒன்றுகுவிக்க வேண்டியது அவசியம் என்று வலியுறுத்தினர். அவர்களுடைய இக்கூற்றில் ரசிய வளர்ச்சி முன்மாதிரியின் ஆழமான பாதிப்பு இருந்தது. ''(சோசலிச சமுதாயத்தில் உள்ள) இந்த முரண்பாடுகளின் சாராம்சம், முன்னேறிய சமுதாய அமைப்பு முறைக்கும் பின்தங்கிய சமுதாய உற்பத்தி சக்திகளுக்கும் இடையிலான முரண்பாடே''[16]என்று கூறிய எட்டாவது கட்சிக் காங்கிரசின் நிலைப்பாடுகளைப் பின்பற்றிய அவர்கள், அரசியல் சித்தாந்தத் தளங்களில் ஒரே சமயத்தில் ஒன்றுக்கொன்று தொடர்புடைய சோசலிசப் புரட்சியை நடத்த வேண்டியதன் அவசியத்தைப் புறக்கணித்தனர். புரட்சிகர போராட்டங்கள், உற்பத்தி சக்திகளைக் கட்டவிழ்த்து விடுவதற்கு பதிலாக விரைவான வளர்ச்சிக்கு தேவையான ஸ்திரத்தன்மை யைச் சீர்குலைத்துவிடும் என்று அவர்கள் கருதினர். புதிய கூட்டுறவு அமைப்புகளையும் பொருளாதார வளர்ச்சிக்குச் சாதக மான மனப்பான்மையையும் உருவாக்க கடுமையான வர்க்கப் போராட்டக் காலகட்டம் இனியும் தேவையில்லை என்றும், ''முன்னேறிய சமுதாய அமைப்பு'' ஏற்கனவே நிலவுகிறது அதை பலப்படுத்துவதுதான் அவசியமாக உள்ளது என்றும் அவர்கள் கருதினர்.

முந்தைய புரட்சிகரமான காலகட்டத்தின் கொந்தளிப்பான வர்க்கப் போராட்ட தன்மைகள் பெரும்பாலும் முடிவுக்கு வந்து விட்டன என்று 1956 மற்றும் 1957-ம் ஆண்டுகளில் மாவோகூட வாதாடினார். ஆனால் கட்சியின் இதர தலைவர்களைப் போல் அல்லாமல் அவர், ''பாட்டாளி வர்க்கத்திற்கும் முதலாளி வர்க்கத் திற்கும் இடையிலான வர்க்கப் போராட்டமும், பல்வேறு அரசியல் சக்திகளுக்கிடையிலான வர்க்கப் போராட்டமும், சித்தாந்த தளத் தில் பாட்டாளி வர்க்கத்திற்கும் முதலாளி வர்க்கத்திற்கும் இடையி லான வர்க்கப் போராட்டமும், நீண்டதாகவும், துயரமிக்கதாகவும், பல சமயங்களில் மிகக் கடுமையானதாகவும் தொடரும் என்று வலி யுறுத்தினார்.[17] இவ்வாறு, சோசலிச சமுதாயத்தில் உள்ள முரண்

பாடுகள் ''முன்னேறிய சமுதாய அமைப்புக்கும்,'' பின் தங்கிய சமுதாய உற்பத்தி சக்திகளுக்கும்'' இடையிலானதுதான் என்ற எட்டாவது கட்சிக் காங்கிரசின் தீர்மானத்தை வெகு விரைவிலேயே அவர் நிராகரிக்கத்தார். அதற்கு மாறாக அவர் வாதாடினார். உற்பத்தி உறவுகளுக்கும் உற்பத்தி சக்திகளுக்கும் இடையிலான முரன்பாடும், மேல் கட்டுமானத்திற்கும் பொருளாதார அடித்தளத் திற்கும் இடையிலான முரண்பாடும்தான் சோசலிச சமுதாயத்தில் அடிப்படை முரண்பாடுகளாக நீடிக்கின்றன... முதலாளித்துவ சித்தாந்தத்தின் மிச்ச சொச்சங்களும் நமது அரசு அங்கங்களில் பின்பற்றப்படும் அதிகாரவர்க்க வேலைமுறைகளும், அரசு நிறுவன இணைப்புகளில் காணப்படும் சில குறைபாடுகளும் சோசலிசப் பொருளாதார அடித்தளத்துடன் வெகுவாக முரண்பட்டு நிற்கின்றன.[18]

இவ்வாறு ''முன்னேறிய சமுதாய அமைப்பு முறையில்'' எதிர்த்துப் போராடப்பட வேண்டிய பலகடுமையான குறைபாடுகள் இருக்கின்றன என்றும் சாராம்சத்தில், தொடர்ச்சியான மக்கள் திரள் போராட்டத்தினால் மட்டுமே பலம் வாய்ந்த முதலாளித்துவ சித்தாந்தத்தின் பிடிப்பையும், அதிகார வர்க்க செயல் முறைகளையும் எதிர்த்துப்போராடமுடியும் என்றும் மாவோ வலியுறுத்தினார். எனவே, அரசு அதிகாரத்தைக் கைப்பற்றுவதும், உற்பத்திச் சாதனங்களில் பொதுவுடைமையாக்கமும் சோசலிசத்தைக் கட்டியமைக்க போதுமானவை அல்ல. ஈட்டிய வெற்றிகளை அவை மட்டுமே உறுதிப்படுத்த முடியாது. பொருளாதார அடித்தளத்தின் வளர்ச்சி மட்டுமே தானாகப் புரட்சியை முன்னோக்கி இயக்குவதற்கும் மக்கள் திரளின் உற்பத்தி சக்திகளைக் கட்டவிழ்த்து விடுவதற்கும் தேவையான மனப்பாங்கையும் அமைப்பு முறைகளையும் தோற்றுவிக்க முடியாது.

பொருளாதார அடித்தளத்தைக் கட்டியமைப்பதற்கு விசேஷ அழுத்தம் கொடுப்பதன் நீண்டகால விளைவுகள் என்று தான் கருதியவற்றை தனது ஆய்வுரையில் மாவோ அவரது கட்சித் தோழர்களுக்கு விளக்குகிறார். மாவோ குறிப்பிட்டுக்காட்டுவது போல ''பல வழிகளில் (பிரதானமாக உற்பத்தியில்) ரசியா தொடர்ந்து முன்னேறுகிறது. ஆனால் உற்பத்தி உறவுகளைப் பொருத்தமட்டில், அடிப்படையில் அவர்கள் முன்னேற்றம் தடைப்பட்டு விட்டது.''[19] ரசியர்கள், புரட்சிகரமான சமுதாய மாற்றத்தைத் தடுப்பதன் மூலமும், உற்பத்தியிலும் சமுதாயத்திலும்

மக்களிடையே உள்ள அடிப்படை உறவுகளை முடிந்த அளவு விரைவில் மாற்றுவதற்காகச் செயல்படாமல் இருப்பதன் மூலமும், குணாம்சரீதியாக எந்த மாற்றமும் நடைபெறாமல் செய்து விட்டனர். எல்லா உற்பத்தி உறவுகளும் கெட்டிதட்டிப் போய் விட்டன. ரசியர்கள், மக்கள் திரளின் படைப்பாற்றலையும், முன் முயற்சியையும் புறக்கணித்ததன் மூலம் சோசலிச சமுதாயத்திற்கும் கம்யூனிச மாற்றத்திற்கும் தேவையான புதிய மனப்பாங்கையும் அமைப்பு முறைகளையும் உருவாக்க முடியவில்லை.

உண்மையில், மக்கள் திரள் மீதும், மக்கள் திரள் போராட்டங்கள் மீதும் உள்ள ஆழமான அவநம்பிக்கையும் பீதியுமே, உற்பத்தி சக்திகள் பற்றிய ரசிய கோட்பாட்டின் மையமாக உள்ளது என்று மாவோ வாதாடினார். மேல் கட்டுமானத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் அடித்தளத்திற்கு அதிக ஈடுபாடு காட்டும் அவர்களுடைய இந்தப் போக்கைத்தான் ''சோவியத் அரசியல் பொருளாதாரம் ஒரு பாடநூல்'' என்ற நூலும் ஸ்டாலின் எழுதிய ''சோசலிசத்தின் பொருளாதாரப் பிரச்னைகள்'' என்ற நூலும் வெளிப்படுத்துகின்றன. இந்த ஒருதலைப்பட்சமான ஈடுபாட்டிலிருந்துதான், ஒன்றோடொன்று நெருக்கமான தொடர்புடைய பல்வேறு ரசிய நிலைப்பாடுகள் — வரலாற்றைப் படைக்கும் மக்கள் திரளைப் புறக்கணித்து விட்டு திட்டமிடுபவர்களைச் சார்ந்திருப்பது, தொழில் நுட்பத்திலும், நிபுணத்துவத்திலும் அதிக ஈடுபாடு கொள்வது; படிநிலை அமைப்பு முறைகளிலும் ஒரு நபர் நிர்வாகத்திலும் நம்பிக்கை; பொருளாயத ஊக்கத்தைச் சார்ந்திருப்பது; தனி நபர்களின் உலகக் கண்ணோட்டத்தை மாற்றுவதில் அடியோடு அக்கறையின்மை ஆகியன வெளிப்படுகின்றன என்று மாவோ கூறினார். இவற்றின் விளைவு மக்களிடமிருந்து முழுமையாக அந்நியப்பட்ட, பலம் வாய்ந்த அதிகார வர்க்க இயந்திர வளர்ச்சியாகும்.

## கம்யூனிஸ்ட் கட்சி பற்றிய ஒரு கருத்தாக்கம்

மாவோ தன் புரட்சிகர வாழ்க்கை முழுவதும் அதிகார வர்க்க முறைகளைக் கண்டித்து வந்துள்ளார். ஆனால் அரசு அதிகாரத்தைக் கைப்பற்றிய பிறகு, மாவோ சந்தித்த பல பிரச்சனைகளுக்கு ரசிய புரட்சிகர அனுபவங்களிலிருந்து எந்தவிதத் தீர்வும் கிடைக்கவில்லை. உதாரணமாக, அதிகாரவர்க்க முறைகள், பிரமுகர்

களுக்கு சலுகை போன்ற போக்குகள் மிகவும் பலம் வாய்ந்ததாக இருக்கும் போது, கட்சிக்கும் மக்கள் திரளுக்குமிடையே உள்ள நெருக்கமான பிணைப்புகளை எவ்வாறு தக்க வைத்துக் கொள்வது? அரசு அதிகாரத்தைக் கைப்பற்றி உற்பத்தி சாதனங்கள் பொது வுடமையாக்கப்பட்ட பிறகு புரட்சியை எவ்வாறு தொடர்வது?

1956 பிப்ரவரியில் ஸ்டாலின் மீது குருச்சேவ் தொடுத்த தாக்குதல், மாவோ மற்றும் கட்சியின் இதர தலைவர்கள் முன், இக்கேள்விகளை நேரடியாகவே எழுப்பியது. ஸ்டாலின் பற்றிய மதிப்பீடுகளில் ஏற்றுக்கொள்ளத்தக்க கோட்பாட்டுப் பார்வை இல்லை என்று குருச்சேவை கடுமையாக விமர்சித்த சீனக் கம்யூனிஸ்ட் கட்சி அதே சமயம் ஸ்டாலினியத்தின் அபாயங்களை யும் நிராகரிக்கவில்லை. சீனக் கம்யூனிஸ்ட் கட்சி 1956 ஏப்ரலில் தனது முதல் அதிகாரப்பூர்வமான பதிலில் மக்கள்திரள் பாதையை மீண்டும் வலியுறுத்தியதுடன், கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சியிலுள்ள போது அதைப் புறக்கணிக்கும் ஆபத்தைப் பற்றியும் எச்சரித்தது:

''கட்சி மற்றும் அரசில் உள்ள தனிப்பட்ட நபர்கள், பல திசைகளிலிருந்தும் அதிகாரவர்க்கப் போக்கால் நெருக்கப்படும் நிலையில் கட்சி மற்றும் அரசின் சனநாயகத்தை மீறி கட்டளை யிடும் போக்கை மேற்கொண்டு, மக்களிடமிருந்தும் கூட்டுத் தலைமையிடமிருந்தும் அன்னியப்பட்டு, அரசு யந்திரத்தை தம் விருப்பப்படி பயன்படுத்தும் பேரபாயம் உள்ளது.''[20]

''மக்களிடையே உள்ள முரண்பாடுகளை சரியாகக் கையாள் வது பற்றி'' என்ற கட்டுரையில் மாவோ வலியுறுத்தியதைப் போன்று ''சோசலிச நாடுகளில் அரசுக்கும் மக்களுக்குமிடையே முரண்பாடுகள்''[21] உள்ளன. ரசியா எப்போதும் ஒற்றுமை பற்றி யும் உறுதிப்படுத்துவது பற்றியும் பேசுவதன் மூலம், நடைமுறை யில் சமுதாயத்தில் உள்ள பல்வேறு முரண்பாடுகளுக்கு சரியான தீர்வு காண்பதற்கு முட்டுக்கட்டை இடுவதோடு சோசலிச வளர்ச்சி யையும் தடை செய்துள்ளது. சமுதாயத்தை எதிர்நோக்கியுள்ள உண்மையான பிரச்சினைகள் மூடி மறைக்கப்பட்டுள்ளன. அதிகார வர்க்க ஆதிக்கத்திற்கு ஒரு சாதகமான சித்தாந்தத் திரை உரு வாக்கப்பட்டுள்ளது.

ஆனால் கட்சியின் பல்வேறு தலைவர்கள் அதிகார வர்க்கத் தின் ஆபத்தைப் பற்றி எச்சரித்தாலும், மக்கள் திரள் பாதையைப்

பற்றி பேசினாலும் அவர்கள் அவற்றை புரிந்து கொண்ட முறையிலும், கம்யூனிஸ்ட் கட்சியின் பங்கு பற்றியும் அவர்களிடம் மிகவும் கூர்மையான வேறுபாடுகள் இருந்தன. மக்கள் திரள் பாதை பற்றிய மாவோவின் கண்ணோட்டத்திற்கு பிரதானமான சித்தாந்த எதிரி லியூ-சோ-சி தான் என்று கலாச்சாரப் புரட்சியின் போது சீனப் பத்திரிகைகளில் அடிக்கடி குறிப்பிடப்பட்டன. அதாவது, சந்தேகமற்ற முறையில் அவருடைய கருத்துக்களுக்கும் குறிப்பிடத்தக்க ஆதரவு இருந்தது; அவருடைய நிலைப்பாடு பல வழிகளிலும் அதிகாரப்பூர்வமான ரசிய ஆவணங்களில் பொதிந்துள்ள கம்யூனிஸ்ட் கட்சி பற்றிய கருத்துக்களைப் பின்பற்றியது. லி-யூ-சோ-சியைப் பொருத்த வரையில் கட்சி, கட்சி மட்டுமே, எது அவசியம் என்று கணிக்க முடியும், அவசியமான மாற்றங்களைக் கொண்டு வர முடியும்; மக்கள் திரளைப் பொருத்தவரையில் அது ஒரு ஒன்றுபட்ட தன்னலமற்று அர்ப்பணித்துக் கொண்டுள்ள அமைப்பாகக் காட்சியளிக்கிறது; மக்கள் சார்பில் சரியாகச் செயல்படும் கட்சியின் திறமைக்கு இறுதி உத்தரவாதம் அதன் முழுமையான தூய்மைமிக்க அர்ப்பணிப்பும், மரபு வழுவாத சித்தாந்த உறுதியும்தான்; "சிறந்த கம்யூனிஸ்ட்டாக இருப்பது எப்படி?" என்பதைப் பற்றி அதன் உறுப்பினர்களுக்கு போதனை அளித்த பிறகுதான் கட்சியானது மக்கள் தமது பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு செயலூக்கமுடன் உதவமுடியும்; ஒரு தன்னலமற்ற கட்சிப் பிரமுகர் வெளியார் கண்காணிப்புக்கு அப்பாற்பட்டவராக இருக்க வேண்டும்; அதன் தவறுகள் உட்கட்சி வழிமுறைகள் மூலமே திருப்தியான முறையில் திருத்தப்பட முடியும். 1957 இறுதியில் மாவோ கூறினார்: "கம்யூனிஸ்ட் கட்சிக்குள் வந்தவுடனே கருத்து வேறுபாடுகளும், தவறான எண்ணங்களும் இன்றி அனைவரும் துறவிகளாக மாறிவிடுகிறார்கள், கட்சி பரிசிலனைக்கு உட்பட்டதல்ல, இன்னும் தெளிவாகக் கூறப்போனால் அது ஒரு வார்ப்படம் போல் ஒரே மாதிரியாக உள்ளது என்று சிலர் கருதுவதாகத் தோன்றுகிறது."[22]

கட்சி என்பது தொடர்ச்சியான புரட்சியின் இயக்க இயல் நிகழ்முறையுடன் தன்னை ஒன்றிணைத்துக் கொண்டுள்ள ஒரு கருவியே அன்றி அதன் மீது ஆதிக்கம் செலுத்தும் ஒன்றல்ல என்று மாவோ வலியுறுத்தியதுதான் அவருக்கும் லியூ-சோ-சி யின் பழைமையான கண்ணோட்டத்திற்கும் இடையில் இருந்த வேறுபாட்டின் சாராம்சமாகும். முதலாவதாக அறிவு என்பது கட்சிப்பிரமுகர்களின்

வரம்பிற்கு மட்டுமே உட்பட்டது அல்ல என்று தனது ஆய்வுரைகளில் அவர் சுட்டிக் காட்டுகிறார். கட்சி என்பது புரட்சிகர நிகழ் முறைகளின் விதிகள் பற்றிய முன்னறிவுடன் அதற்கு வெளியில் நிற்பதல்ல, ''ஏனெனில் மக்கள் இவ்விதிகளைப் புரிந்து கொள்ள ஒரு நிகழ்முறைக்கு உட்பட வேண்டும். முன்னணிப் படையும் இதற்கு விதிவிலக்கல்ல.''[23] நடைமுறையின் மூலம் மட்டுமே அறிவு வளர்ச்சியடைய முடியும்; மக்களிடையே தன்னை ஆழமாக ஈடுபடுத்திக் கொள்வதன் மூலமே கட்சி புரட்சிக்குத் தலைமை தாங்க முடியும்.

சீனப் புரட்சி வரலாறு முழுவதும் என்ன செய்ய வேண்டும் என்பதைப்பற்றி தங்களுக்குத் துல்லியமாக தெரியும் என்று கருதியவர்களையும் மார்க்சிய-லெனினியத்தை ஒரு தயாரான விடைகள் நிறைந்த வரட்டுச் சூத்திரங்களாகக் கருதி அதை மட்டுமே சார்ந்து இருந்தவர்களையும் மாவோ விமர்சித்து வந்துள்ளார். புரட்சி என்பது வேதனைமிக்க கடினமான நிகழ்முறை என்று மாவோ வலியுறுத்தினார். அப்படியே எடுத்து உபயோகிப்பதற்கு ஏற்ற எளிமையான விடைகளும் இல்லை, விதிகளும் இல்லை. அவர் தனது ஆய்வுரையில் வாதிடுவதுபோல், சீனத்தில் முதலாளித்துவ சனநாயகப் புரட்சிக் கட்டத்தின் வெற்றியைச் சாதிக்கக் கூடிய சரியான வழி முறைகளை உருவாக்க சீனப் புரட்சியாளர்களுக்கு பல ஆண்டுக்கணக்கான கடினமான போராட்டம் தேவையாக இருந்தது. சோசலிசத்தையும் கம்யூனிசத்தையும் கட்டியமைக்க இதே போன்ற, கடுமையான போராட்டம் தேவைப்படும்.

மக்கள் திரள்தான் உண்மையில் வரலாற்றைப் படைப்பவர்கள் என்றும். அவர்களிடமிருந்துதான் கம்யூனிஸ்ட் கட்சி கற்றுக் கொள்ள வேண்டும் என்றும் மாவோ கருதினார். எந்த ஒரு மக்கள் திரள் போராட்டத்திலும் தவறுகளும் பின்னடைவுகளும் தோன்றும்; புரட்சி சில சமயங்களில் இரக்கமற்றதாகவும், வன்முறையாகவும் இருக்கும். ஆனால் புதிய கூட்டுறவு முறைகளுக்கும் - மனப்பான்மைக்கும் இட்டுச் செல்லும் ஆக்கப்பூர்வமான பெரும் வீச்சு புரட்சிகரப் போராட்டங்களிலிருந்து மட்டுமே தோன்ற முடியும். இவ்வாறு தான் ரசிய புரட்சியில் சோவியத்துக்கள் தோன்றின; இப்படித்தான் சீனாவில் கம்யூன்கள் வளர்ச்சி அடைந்தன என்றும் வலியுறுத்தினார் மாவோ. ஒருவர் தோல்விகளைக் கண்டும் அஞ்சக் கூடாது. ''மக்கள் தம்மை நடைமுறைக்கு உட்படுத்திக் கொள்வதன் மூலம் தான்

தம்முடைய சொந்த ஆய்வு முறையை மாவோ எவ்வாறு புரிந்து வைத்திருந்தார் என்பது பற்றிய ஒரு அருமையான பார்வையைப் பெறும் பொருட்டு இந்நூலினைப் படிக்கலாம். அவர் ''மார்க்சிய—லெனினியத்தால் எப்போதுமே எதிர்க்கப்பட்டு வந்த ஆய்வு முறையான'' விதிகள், கோட்பாடுகள், மார்க்சிய விதிகள் அல்லது ஊகிக்கப்பட்ட வரையறைகள் ஆகியவற்றிலிருந்து தொடங்கவில்லை.[28] பருண்மையான ஆய்வுகள் மூலமாக மட்டுமே புதிய கோட்பாடுகளைக் கண்டறிய முடியும். உண்மையில், ஸ்டாலின் மற்றும் அவருடைய சோவியத் அரசியல் பொருளாதார நூல் ஆகியவை பற்றிய மாவோவின் கடுமையான விமர்சனங்களில் ஒன்று ''அது பொருளாதார அடித்தளத்திற்கும் மேல் கட்டுமானத்திற்கும் இடையில்உள்ள முரண்பாட்டைப் பற்றிய பருண்மையான பகுப்பாய்விலிருந்து தொடங்கவில்லை. அது எப்போதும் பொதுவான பொருள் வரையறைகளிலிருந்தும், பொதுவான கருத்தாக்கங்களிலிருந்தும் தொடங்குகிறது. அது காரணகாரிய விளக்கம் கொடுக்காமலேயே பொருள் வரையறைகளைத் தருகிறது''[29] என்பதாகும்.

இவ்வாறு, மாவோ சீனாவை எதிர் நோக்கியுள்ள குறிப்பான நடைமுறை மற்றும் கோட்பாட்டுப் பிரச்னைகளை, குறிப்பாக கம்யூன்களை உருவாக்குவது பற்றிய பிரச்னைகளை தீர்க்கும் நோக்குடன்தான், ஸ்டாலின் எழுதிய **சோசலிசத்தின் பொருளாதாரப் பிரச்சனைகள்** என்ற நூலை ஆய்வு செய்தார். கம்யூன்கள் சமுதாயத்தின் புதிய அலகுகளாக உருவாக்கப்பட்ட பின், கம்யூன்களுக்குள்ளும் கம்யூன்களுக்கும் மற்ற அலகுகளுக்கிடையிலும் உற்பத்தியையும் பரிவர்த்தனையையும் எவ்வாறு மேற்கொள்ளுவது என்ற பிரச்சனை மிகவும் அவசர அவசியமானதாக இருந்தது. எனவே, சோசலிசத்தின் பொருளாதாரப் பிரச்சனைகள் என்ற நூலைப் பற்றிய மாவோவின் குறிப்புரைகளில் முதல் மூன்று அத்தியாயங்களில் பொருளாதார விதிகளின் தன்மை, பண்ட உற்பத்தி, சோசலிசத்தில் மதிப்பு விதி ஆகியவற்றுக்கு அதிக கவனம் செலுத்தப்படுகிறது. ஸ்டாலினுடைய எழுத்துக்களில் பயனுள்ளது என்று மாவோவால் கருதப்பட்டவை, அவரால் தெளிவற்றது அல்லது சரியல்லாதது என்று கருதப்பட்டவற்றிலிருந்து மிகுந்த கவனத்துடன் தனியே பிரிக்கப்பட்டிருக்கிறது.

ஸ்டாலின் எழுதிய **சோசலிசத்தின் பொருளாதாரப் பிரச்னைகள்** என்ற நூலை கட்சி உறுப்பினர்கள் படிக்க

வேண்டியதன் மிகவும் பயனுள்ள காரணங்களில் ஒன்று, கம்யூன்களின் தொடக்கத்துடன் சீனாவில் மிக வேகமாகப் பரவிய அதி தீவிர இடதுசாரிப் போக்கைப்பற்றி (''கம்யூனிஸ்ட் காற்று'') அவர்கள் புரிந்து கொள்ள உதவுவதாகும். பின்னாட்களில், 1959 ஜூலை லூசான் மாநாட்டில் மாவோ கூறினார்: கட்சி உறுப் உறுப்பினர்கள்,

''அரசியல் பொருளாதாரத்தைப் படித்திருக்கவில்லை. அவர்கள் மதிப்பு விதி, சம மதிப்புகளின் பரிவர்த்தனை, வேலைக்கு ஏற்ற ஊதியம் ஆகியவை பற்றித் தெளிவாக புரிந்து கொண்டிருக்கவில்லை...... பாடநூல்களை அவர்கள் சரியாகப் புரிந்து கொண்டிருக்கவில்லை என்றால், அவர்கள் மேலும் சிலமுறை படிக்கட்டும். கம்யூன்களில் மேல் மட்டத்தில் உள்ள கட்சி அணியினர் அரசியல் பொருளாதாரம் பற்றி ஓரளவுக்காவது புரிந்து கொள்ளவில்லை என்றால் அது நன்மை பயக்காது.''[30]

சோசலிசத்தின் பொருளாதாரத்தைப் பற்றியும் மாறுதல் கால கட்டத்தின் தன்மைகள் பற்றியும் கட்சி அணிகள் ஓரளவுக்குப் புரிந்து கொள்வது மாபெரும் பாய்ச்சலில் தோன்றும் பிரச்னைகளைச் சமாளிக்க உதவும் என்று மாவோ கருதினார். சில பகுதிகளில், கட்சி உறுப்பினர்களும், விவசாயிகளும், மாவோ மிக அவசியம் என்று வலியுறுத்திய, பல்வேறு கட்டங்களைக் கடந்து செல்வதற்கு மாறாக நேரடியான பாய்ச்சலின் மூலம் கம்யூனிச கட்டத்திற்குச் செல்லும் விருப்பத்தினால் ஆட்கொள்ளப் பட்டிருந்தனர். ''பண்ட உற்பத்தி முறையை அறவே ஒழித்துவிட வேண்டும் என்ற பலமான போக்கை'' மறுத்து சோசலிச சமுதாயத்தில் அதன் பங்கு பற்றிய சரியான புரிதலை உருவாக்க வேண்டும்; ''மக்கள் பண்ட உற்பத்தி முறையை கண்டவுடனே அதை முதலாளித்துவமாகக் கருதி விரக்கியடைந்து விடுகிறார்கள்'' என்று தனது ஆய்வுரையில் குறிப்பிட்ட மாவோ, ''ஆனால் இது பண்ட உற்பத்தியை மிக அதிகமாகப் பெருக்க வேண்டும், பணப் புழக்கத்தை அதிகரிக்க வேண்டும் என்பது போலத் தோன்றுகிறது'' ''பலநூறு ஆயிரக்கணக்கான கட்சி ஊழியர்களின் சித்தாந்தத்திற்கும் அதே சமயம் பல இலட்சக் கணக்கான விவசாயிகளுடனான ஒருமைப்பாட்டுக்கும் ஒரு பிரச்சனையாக முன் நிற்கிறது.''[31] என்றார்.

யும் மேலும் அதிக அக்கறை கொண்டார். சோசலிசத்தை நோக்கிய பயணத்திற்கு சமுதாயத்தின் ஒவ்வொரு அம்சத்திலும் மாபெரும் மாற்றங்கள் தேவைப்படுகின்றன. இந்த மாற்றங்களை தடுத்து நிறுத்த விடாப்பிடியாகச் சண்டையிட்டு வரும் சக்திகளை ''பிற் போக்கு சக்திகள்'' என்றும் ''வலது சாரிகள்'' என்றும் இந்த ஆய்வுரையில் மாவோ குறிப்பிடுகிறார். ஆனால், அப்படிப்பட்ட எதிர்ப்புகளின் தன்மை அவற்றுக்கும் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் உள்ள தொடர்பு ஆகியவற்றை மாவோ இன்னும் ஆய்வு நிலையிலேயே வைத்திருந்தார்; அவர் அவற்றைப் பற்றி இன்னும் துல்லியமான வரையறைகளுக்கு வரவில்லை. சோசலிசத்திற்கு மாறும் கால கட்டத்தில் வர்க்கப் போராட்டம் என்பதன் பொருள் என்ன என்பதைப் பற்றிக்கூட இன்னும் அவர் துல்லியமாக வரையறுத்து கூறவில்லை. பழைய முதலாளித்துவ மற்றும் நிலப்பிரபுத்துவத் தின் மூலக் கூறுகள் சீன சமுதாயத்தில் தொடர்ந்து நிலவி வந்தது, எனினும் அவர் பழைய மதிப்பீடுகள், எண்ணங்கள், பழக்கங்கள் ஆகியவற்றின் பிடிப்பைப் பற்றியே மேலும் மேலும் அதிக அக்கறை செலுத்தினார். ஒப்பீட்டளவில் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளைவிட அதிகமான பொருளாதார நலன்களை யும் அதிகாரத்தையும் அளிக்கக் கூடிய பதவிகளில் இருந்த கட்சி யின் அதிகாரப் பீடங்களில் இருந்தவர்களுக்கும், மேலாளர்களுக் கும், தொழில் நுட்ப வல்லுனர்களுக்கும், நிர்வாகத்துறையினருக் கும் இன்னும் பலவிதமான நிபுணர்களுக்கும் அறைகூவல் விடும் அவருடைய முயற்சிகளைக்கூட இக்கட்டுரைகள் வெளிப்படுத்து கின்றன. கட்சி உறுப்பினர்களின் குழந்தைகள் அவநம்பிக்கைக் குரியவர்களாகவும் மிக அதிகமான சலுகையுடன் வளர்க்கப் பட்ட வர்களாகவும், மிக அதிக அரசியல் பாசாங்கு செய்பவர்களாகவும் இருப்பதைக் கண்டார். ஆனால், இன்னும் அதிகாரவர்க்க முறையைப் பரப்புவதில்தான் புரட்சிக்கான ஆபத்து இருப்பதாகக் கருதினாரே ஒழிய, அதை ஒரு வர்க்கப் பிரச்னையாகக் கருத வில்லை. ரசியாவில் அதிகார வர்க்கத் தன்மை பற்றிய மாவோ வின் எச்சரிக்கைமிகுந்த விளக்கங்களிலிருந்தும், அவர் அதிகார வர்க்கத்தின் சலுகை பெற்ற பாத்திரத்தின் பொருளாயத அடிப் படைகளை முழுமையாக ஆய்வு செய்யவில்லை என்பதிலிருந்தும் இது தெளிவாகப் புலப்படுகிறது. 1964 ஜுலையில் ''குருச்சேவின் போலி கம்யூனிசமும், உலகத்திற்கு அதன் வரலாற்றுப் படிப்பினை களும்'' என்ற கட்டுரையில்தான் ''இந்த சலுகை பெற்ற அடுக்கிற்

கும் ரசிய மக்களுக்கும் இடையிலான முரண்பாடுதான் இன்றைய ரசியாவின் பிரதான முரண்பாடு என்றும், அது சமரசம் காண முடியாத பகை வர்க்க முரண்பாடாகும்''[32] என்றும் குறிப்பிடுகிறார்.

சீனாவில் மாபெரும் பாய்ச்சலை எதிர்ப்பவர்களுடன் நடத்திய போராட்டம், அவருடைய விமர்சகர்களைப் பற்றி மிகவும் ஆழமாக ஆய்வு செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்தை மாவோவுக்கு ஏற்படுத்தியது. முதலில் பெங் டெ-ஹை யாலும் பிந்தைய ஆண்டுகளில் தொடர்ந்து மற்றவர்களாலும் மாபெரும் முன்னோக்கிய பாய்ச்சல் மீது தொடுக்கப்பட்ட இந்தத் தாக்குதலிலிருந்து ''பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியைத் தொடருவது'' என்ற தனது கருத்தை மேலும் நுட்பமாக விரிவாக்கம் செய்தார். இருப்பினும் 1962 வரையிலும் கட்சியில் இருந்த வலது சாரியினர் திரிபுவாதிகள் என்று முத்திரை குத்தப்படவில்லை. கலாச்சாரப் புரட்சி காலம் வரையில் ''முதலாளித்துவ பாதையாளர்கள்'' என்ற கருத்தாக்கம் உருவாகவில்லை.

## ஸ்டாலினும் ரசிய புரட்சியும்

''ரசியப் பொருளாதாரம் பற்றிய ஒரு விமர்சனம்'' என்ற இந்நூல் ரசிய புரட்சி பற்றியும் அதில் ஸ்டாலின் பங்கு பற்றியும் மறு மதிப்பீடு செய்வதற்கான தூண்டுகோலாக உள்ளது. இக் கண்ணோட்டத்திலிருந்து இந்தக் குறிப்புரைகளைப் பயனுள்ள வகையில் படிக்கலாம். ஆனால், இக்குறிப்புரைகளை ஒரு வரலாற்று ரீதியான ஆய்வு என்ற முறையிலோ அல்லது ஸ்டாலினுடைய வரலாற்று ரீதியான பாத்திரத்தைப் பற்றிய விமர்சன ரீதியான மதிப்பீடு என்ற முறையிலோ மாவோ எழுதவில்லை. மாவோவின் உண்மையான நோக்கம் ரசிய அனுபவங்களின் பல்வேறு அம்சங்களை ஆய்வுசெய்வதன் வாயிலாகப் பெறப்படும் படிப்பினைகளினூடே சீனப்புரட்சி எதிர் கொண்டுள்ள பிரச்சனைகளை ஆய்வு செய்வதேயாகும்.

இக் குறிப்புரைகள் கலாச்சாரப் புரட்சியின்போது உட்கட்சி விவாதத்திற்காக சீனாவில் சுற்றுக்கு விடப்பட்டது. எனினும் அவை அதிகாரப் பூர்வமாக வெளியிடப்படவில்லை. இந்நூலின் *சீன* முன்னுரையில், இவை முழுஅளவில் சரியானதாகவும், முழுமை

யானதாகவும் இல்லாதிருக்கலாம் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் அவை ஒட்டுமொத்தத்தில் பார்க்கும்போது மிகவும் சரியானதாக இருப்பதோடு ஸ்டாலினை பற்றியும் ரசிய அனுபவங்களைப் பற்றியும் குறிப்பிடத்தக்க, மதிப்பு மிக்க, விரிவான பகுப்பாய்வை அளிப்பவையாகவும் இருக்கின்றன. இது போன்ற ஒன்று சீனாவில் பகிரங்கமாக எப்போதுமே கிடைத்ததில்லை.

ஸ்டாலின் மீது குருச்சேவ் தாக்குதல் தொடுத்த காலம் முதற் கொண்டு அதிகாரப்பூர்வமாக சீனர்கள் பெரும்பாலும் ஸ்டாலினை உயர்த்திப் பிடித்து வந்துள்ளனர். ''1956-ல் ஸ்டாலின் விமர்சனம் செய்யப்பட்டபோது ஒரு புறம் நாங்கள் மகிழ்ச்சியுற்றோம், ஆனால் மறுபுறம் நாங்கள் ஐயுற்று அஞ்சினோம்'' என்றும் ''சிந்தனையின் தளைகளை அகற்றவும், அடக்கப்பட்ட உணர்வுகளை விடுவிக்கவும், கண்மூடித்தனமான நம்பிக்கையைத் தகர்க்கவும் மூடியைத் திறந்து விடுவது அவசியமானதாக இருந்தது. ஆனால் அவரை ஒரேயடியாகத் தகர்த்துத் தரைமட்டமாக்குவதை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது''[33] என்றும் மாவோ கூறினார்.

உலகின் பார்வைக்கு, ஸ்டாலின் மாபெரும் மார்க்சிய–லெனினியவாதியாகவும், லெனினிய லட்சியங்களுக்கு வாரிசாகவும் சோசலிசத் தொழில் மயமாக்கல் மற்றும் விவசாயக் கூட்டு உடமையாக்கலை அடையவும் பாசிசத்திற்கு எதிரான போராட்டத்தில் வெற்றி ஈட்டவும் ரசிய மக்களை வழி நடத்தியவராகவும் காட்சியளிக்கிறார். ஆனால் அவர் கடுமையான தவறுகளை இழைத்தார் என்பதும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று. கடந்த இருபது ஆண்டுகளாக அந்தத் தவறுகள் கீழ்க்கண்டனவென்று கூறப்படுகிறது. சோசலிச சமுதாயத்தில் வர்க்கப் போராட்டத்தின் விதிகளைப் புரிந்து கொள்வதில் மார்க்சிய—லெனினிய இயக்க இயலை விட்டு வழுவிச் சென்றது, விவசாயத்தில் கூட்டுடைமை மயமாக்கலுக்குப் பிறகும் சோசலிசப் பாதைக்கும் முதலாளித்துவப் பாதைக்குமிடையே பகைமையான வர்க்கப் போராட்டமும் முரண்பாடுகளும் நீடிக்கும் என்பதை அங்கீகரிக்கத் தவறியது, முதலாளித்துவ சக்திகளுக்கு எதிரான போராட்டத்தில் பாட்டாளி வர்க்கத்தையும் மக்கள் திரளையும் சார்ந்து இல்லாமலிருந்தது, முதலாளித்துவ மீட்சிக்கான அபாயத்தை வெறும் சர்வதேச ஏகாதிபத்தியத்தின் ஆயுதம் தாங்கிய தாக்குதல் என்பதாகக் குறுக்கியது, விவசாயத்தையும் விவசாயிகளின் வாழ்க்கைத்

தரத்தையும் மிகவும் மோசமாக புறக்கணித்துவிட்டு கனரகத் தொழிலுக்கு ஒரு தலைப்பட்சமான முக்கியத்துவம் கொடுத்தது, ரசியா மீது ஜெர்மானியத் தாக்குதலுக்கு முன்னதாக எச்சரிக்கை யுடன் இல்லாமல் இருந்தது, எதிர்ப்புரட்சியாளர்களை ஒடுக்கு வதற்காக 1930-ம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட களையெடுப் பின் போது அதை அளவுக்கு அதிகமாக விரிவாக்கியது ஆகியன வாகும்.

இந்நூலில், ஸ்டாலினைப் பற்றிய மாவோவின் விமர்சனம் ரசியாவை தொழில் மயமாக்குவதற்காகப் பயன்படுத்தப்பட்ட முறைகளின் அடிப்படையையே தாக்குகிறது. இதன் காரணமாக அவை ரசியாவைப் பற்றிய ஒரு முக்கியத்துவம் வாய்ந்த மார்க்சிய ஆய்வை நமக்கு அளிக்கிறது. அவை, இனி எதிர் காலத்தில் சீனாவின் அதிகாரப் பூர்வமான கண்ணோட்டத்துடன் இணைக்கப்படலாம்; மேலும், இது தற்போது சீனாவுக்கு வெளி யில் உருவாகிக் கொண்டிருக்கும் ரசியா பற்றிய சரியான மார்க்சிய புரிதலுக்குக் கூடத் துணைபுரிவதாக அமையும்.

○

## 1977 ஆம் ஆண்டு ஆங்கிலப் பதிப்பில் (Monthly Review Press) இந்நூலின் மொழிபெயர்ப்பு ஆசிரியர்கள் கொடுத்துள்ள சில குறிப்புகள்

'மா-சே-துங் சிந்தனை நீடூழி வாழ்க' என்ற நூல் தொகுப்பு 1967-ல் முதன்முதலாக வெளியிடப்பட்டது. 1969-ல் அது மேலும் பல சேர்க்கைகளுடன் விரிவான வடிவத்தில் வெளியிடப்பட்டது. அதன் ஒரு பகுதியே இங்கு மொழிபெயர்த்து வெளியிடப்பட்டுள்ளது. இங்கே வெளியிடப்பட்டுள்ள, மா-சே-துங்கின் மூன்று கட்டுரைகளும் 1969 பதிப்பில் உள்ளன. முதல் இரண்டு கட்டுரைகள் 1967 பதிப்பிலும் உள்ளன அதாவது, **ரசியாவின் அரசியல் பொருளாதாரம்—பாடநூல் பற்றிய விமர்சனமும், ரசியாவில் சோசலிசத்தின் பொருளாதாரப் பிரச்சினைகள்** குறித்த மா-சே-துங்கின் உரையும் இரண்டு பதிப்புகளிலும் வெளியிடப்பட்டுள்ளன.

அச்சாக்க முறைகளிலும், விளக்கங்களிலும் ஒரு சில வேறுபாடுகள் இருந்தபோதிலும், இரண்டு பதிப்புகளும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியே உள்ளன. விளக்கங்களில் உள்ள வேறுபாடுகள் குறித்து ஆங்காங்கே அடிக்குறிப்புகள் இட்டு விளக்கியிருக்கிறோம்.[1] சிறு சிறு வடிவ வேறுபாடுகள் மட்டுமே உள்ள இடங்களில் அடிக்குறிப்புகள் போடப்படவில்லை; அவ்விடங்களில் 1969 பதிப்பின் வடிவத்தையே கையாண்டிருக்கிறோம்.

**'ரசியாவில் சோசலிசத்தின் பொருளாதாரப் பிரச்சினைகள்'** குறித்த மா-சே-துங்கின் உரை அநேகமாக 1958 நவம்பரில் நடைபெற்ற செங் செள மாநாட்டில் நிகழ்த்தப்பட்டது. அவரது எழுத்துப்பூர்வ விமர்சனம் 1959-ல் செய்யப்பட்டது. **பாடநூல்**

குறித்த விமர்சனம் 1960-ல் எழுதப்பட்டது என்று மாசேதுங் சிந்தனை நீடூழி வாழ்க என்ற வெளியீட்டின் 1967-ம் ஆண்டு பதிப்பிலும், 1961-1962-ல் எழுதப்பட்டது என்று அவ்வெளியீட்டின் 1969-ம் ஆண்டு பதிப்பிலும் குறிப்பிடப் பட்டுள்ளது. 1960-லேயே பாடநூல் குறித்த விமர்சனம் எழுதப்பட்டிருக்கும் என்று நாங்கள் நிச்சயமாக நம்புகிறோம்.

இந்த கட்டுரைகள் பகிரங்க வெளியீட்டிற்கானவை அல்ல என்று இந்த இரண்டு தொகுப்புகளின் முன்னுரைகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த கட்டுரைகளை யார் பகிரங்கப் படுத்தினார்கள், என்ன நோக்கத்திற்காக அதைச் செய்தார்கள் என்பவை பற்றி வெறும் யூகங்கள் மட்டுமே நிலவுகின்றன. நாங்கள் பயன்படுத்தியுள்ள சீனமொழிப் பதிப்பு, தைவான் அல்லது ஹாங்காங் வழியாக வெளிக்கொண்டு வரப்பட்ட, மூலப்பதிப்பின் ஒரு பிரதியாக இருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.

'பாடநூல் குறித்த விமர்சனம்' மொழிபெயர்ப்பின் சில குறைகள் குறித்து இங்கே குறிப்பிடவேண்டும். மாவோ இந்த விமர்சனக் குறிப்புகளை எழுதும்போது ரசியப் பாடநூலின் மூன்றாவது சீனமொழிப் பதிப்பிலிருந்தே பக்கங்களை மேற்கொள் காட்டியிருக்கிறார்—மூல ரசிய மொழிப் பதிப்பிலிருந்து அல்ல. எமக்கு சீனமொழிப் பதிப்பு கிடைக்காததால், மூலநூலிலிருந்து மாவோ எடுத்துக் கையாண்டுள்ள மேற்கோள்களை சரிபார்க்கவோ, ரசியப் பதிப்புடன் ஒப்பிட்டுப் பார்க்கவோ இயலவில்லை.

மேற்கத்திய மொழிகளில் சீனாவிலுள்ள பெயர்களை மொழி பெயர்க்கும் போது பின்-யின் உச்சரிப்பு முறையையே சீனர்கள் பரவலாகக் கையாளுகின்றனர். ஆனால் நாங்கள் மாற்றியமைக்கப்பட்ட வேட்-கைல்ஸ் மொழியாக்க முறையையே இந்நூலில் கையாண்டிருக்கிறோம். ஏனெனில் இந்த முறைதான் பெரும்பாலான மேற்கத்திய அறிஞர்களால் இதுவரை அங்கீகரிக்கப் பட்டு வந்துள்ளது. இருப்பினும் ஆர்வமுள்ள வாசகர்களுக்காகப் புதிய சொற்களையும் அடைப்புக் குறிகளுக்குள் கொடுத்திருக்கிறோம். நூலில் இடம்பெறும் சில பெயர்களைப் படிக்க அதிக சிரமப்பட வேண்டியிருக்கும் எனக் கருதி அவற்றுக்கு இணையான பெயர்களின் பட்டியலைக் கீழே கொடுத்துள்ளோம்.

| **வேட்-கைல்ஸ் முறை** | **பின்-யின் முறை** |
|---|---|
| ஹோனான் | ஹேனான் |
| ஹோப்பெய் | ஹேபெய் |
| செங் சௌ | செங் ஸோ |
| செங் து | செங் டு |
| குவாங் துங் | குவாங் டாங் |
| சிங் சியாங் | ஸின் ஜியாங் |
| சிங் ஹய் | கிங் ஹய் |
| புகியன் | புஜியன் |
| நிங் சியா | நிங் ஸியா |
| சிஹ்லோ | ஸிலோ |
| ஷாடுவோக்குவான் | ஷாவோ குவான் |
| செக்கியாங் | ஷெ ஜியாங் |
| சியூ வு | ஷியூ வு |

இறுதியாக, ரசியப் பொருளாதாரம் பற்றிய ஒரு விமர்சனம் என்ற இந்த நூல் உருவாக்கப்பட்டது பற்றிக் குறிப்பிடுகிறோம். மோஸ் ராபர்ட்ஸ் ஆக்கங்களை மொழிப் பெயர்ப்புச் செய்தார். ரிச்சர்ட் லெவி மொழி பெயர்ப்பைச் சரி பார்த்து பல திருத்தங்கள் செய்தார். ஜேம்ஸ் பெக், பால் ஸ்வீஸி இருவரும் மொழி பெயர்ப் பைப் படித்து, கூடுதல் ஆலோசனைகள் வழங்கினர். முன்னுரையை ஜேம்ஸ் பெக் எழுதினார்; ரிச்சர்ட் லெவி, மோஸ் ராபர்ட்ஸ் இருவரும் தமது விமர்சனங்கள், ஆலோசனைகள் மூலம் அதனைச் செழுமைப்படுத்தினர். நூலுக்கான குறிப்புகள் ரிச்சர்ட் லெவியால் எழுதப்பட்டு, ஜேம்ஸ் பெக், மோஸ் ராபர்ட்ஸ் இருவராலும் திருத்தியமைக்கப் பட்டன. இறுதியாக, எமது முயற்சியில் பொறுமையுடனும் மகிழ்ச்சியுடனும் ஆலோசனைகள் அளித்து உதவிய கரேன்ஜூட் அவர்களுக்கு இந்த முயற்சியில் ஈடுபட்ட நாங்கள் அனைவரும் எமது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவிக்கிறோம்.

**குறிப்பு :** 1. மா-சே-துங் சிந்தனை நீடுழி வாழ்க என்ற வெளியீட்டின் இரண்டு பதிப்புகளிலும் உள்ள வேறுபட்ட விளக்கங்களையும், இங்கு மொழி பெயர்க்கப்பட்டுள்ள குறிப்புகள் எழுதப்பட்ட காலத்தையும் பற்றி பகுப்பாய்வு செய்வதற்கும், இந்த ஆக்கங்கள் பற்றி மேலும் ஆய்வதற்கும் ரிச்சர்ட் லெவி எழுதிய 'New Light on Mao, The China Quarterly' 61 (1975) கட்டுரையைப் பார்க்க.

# அரசியல் பொருளாதாரம் என்ற ரசியப் பாடநூல் பற்றிய விமர்சனக் குறிப்புகள் 1961 - 1962

## பாகம் 1. அத்தியாயம் 20-23

### 1. முதலாளித்துவத்திலிருந்து சோசலிசத்திற்கு

ரசியப் பாடநூலின் பக்கங்கள் 327-28-ல் ''தவிர்க்க முடியாதபடி'' சோசலிசம் முதலாளித்துவத்தின் இடத்தைக் கைப் பற்றிக் கொள்ளும்; மேலும் அதை ''புரட்சிகரமான முறையில்'' நிறைவேற்றும் என்றும் ஏகாதிபத்திய காலகட்டத்தில் உற்பத்தி சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையிலான மோதல்கள் என்றுமில்லாத அளவு கூர்மை அடைந்திருக்கின்றன என்றும் பாட்டாளி வர்க்க சோசலிசப் புரட்சி ஒரு ''புறநிலைத் தேவை'' என்றும் கூறப்படுகிறது. இதுபோன்ற சொற்றொடர்கள் முற்றிலும் திருப்திகரமாக இருக்கின்றன. ஆனால், அவை இப்படி இருக்க வேண்டும்: ''புறநிலைத் தேவை'' என்பது முற்றிலும் சரியானதும் மக்களுக்கு ஏற்புடையதுமாகும். புரட்சி ஒரு புறநிலைத் தேவை என்று கூறுவதன் பொருள் அது தனி மனிதர்களின் விருப்பத்தைச்

சார்ந்தது அல்ல என்பதாகும். விரும்பினாலும் விரும்பாவிடினும் அது கண்டிப்பாக வரும்.

பாட்டாளி வர்க்கம் ''முதலாளித்துவத்தை தூக்கி எறிய அனைத்து உழைக்கும் மக்களையும் தன்னைச் சுற்றி ஒழுங்கமைத்துக் கொள்ளும்'' (பக்கம் 327). சரிதான். ஆனால் இந்த சந்தர்ப்பத்தில் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவது பற்றிய கேள்வியை ஒருவர் முன்வைக்க வேண்டும். ''பாட்டாளி வர்க்கப் புரட்சி, தயாராக உள்ள சோசலிச பொருளாதார அமைப்பு முறைகளுடன் வரும் என்று எதிர்பார்க்க முடியாது''. ''சோசலிச பொருளாதாரக் கூறுகள் தனிச்சொத்துடைமையை அடிப்படையாகக் கொண்ட முதலாளித்துவப் பொருளாதாரத்தினுள் வளர்ந்து முதிர்ச்சியடைய முடியாது'' (பக்கம் 328). உண்மையில், அவை ''வளர்ந்து முதிர்ச்சி அடைய'' முடியாது என்பது மட்டுமல்ல; அவை தோன்றவே முடியாது. முதலாளித்துவ சமுதாயங்களில் ஒரு (சோசலிச) கூட்டுறவு அல்லது அரசு நிர்வகிக்கும் பொருளாதாரம் பிறக்கவே முடியாது எனும் போது, முதிர்ச்சியடைவது பற்றிப் பேசுவதற்கு இடமில்லை. முதலாளித்துவ சமுதாயத்தில் நகராட்சி பொது நிறுவனங்கள் போன்றவை உண்மையில் சோசலிச கூறுகள் என்றும், முதலாளித்துவம் சோசலிசமாக அமைதியான முறையில் வளர்ச்சி அடையக் கூடும் என்றும் வாதிடுகின்ற திரிபுவாதிகளுக்கும் நமக்கும் இடையே உள்ள பிரதான வேறுபாடு இது. இது மார்க்சியத்தைக் கடுமையான முறையில் திரித்துக் கூறுவதாகும்.

## 2. மாறுதல் காலகட்டம்

அந்நூல் கூறுகிறது: ''மாறுதல் காலகட்டம் பாட்டாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தை நிறுவுவதில் தொடங்கி சோசலிசப் புரட்சிக் கடமைகளை நிறைவேற்றுவதுடன் — கம்யூனிசத்தின் முதல் கட்டமான சோசலிசத்தை நிறுவுவதுடன் — முடிவடைகிறது'' (பக்கம் 328). இறுதிப் பகுப்பாய்வில் மாறுதல் கால கட்டத்தில் எந்தெந்த கட்டங்கள் உள்ளடங்கி இருக்கின்றன என்பதைப் பற்றி ஒருவர் மிக்க கவனமுடன் ஆய்வு செய்ய வேண்டும். முதலாளித்துவத்திலிருந்து சோசலிசத்திற்கு மாறும் கால கட்டம் மட்டும் சேர்க்கப்பட்டுள்ளதா அல்லது சோசலிசத்திலிருந்து கம்யூனிசத்திற்கு மாறும் கால கட்டம் கூடவா?

முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிசம் வரை ஒரு ''புரட்சிகர மான மாறுதல் கால கட்டம்'' உள்ளது என்ற மார்க்சின் மேற்கோள் இங்கு பயன்படுத்தப்படுகிறது. தற்போது நாம் அப்படிப் பட்ட காலகட்டத்தில் இருக்கிறோம். குறிப்பிட்ட ஒரு சில ஆண்டு களுக்குள்ளாக நமது மக்கள் கம்யூன்கள், அடிப்படைக் குழுக்களின் (basic team) உடைமை முறைகளிலிருந்து அடிப்படை கம்யூன்களின் உடைமை முறைக்கும்[1] அதன் பிறகு அனைத்து மக்களின் உடைமை முறைக்கும்[2] மாற்றத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டியுள்ளது. ஏற்கனவே மக்கள் கம்யூன்களால் செய்து முடிக்கப்பட்ட அடிப் படைக் கம்யூன் உடைமைமுறை மாற்றமானது இன்னும் கூட்டு உடைமை முறையாகத்தான் இருக்கிறது. (அது இன்னும் அனைத்து மக்களின் உடைமை முறையாக மாறவில்லை)*

மாறுதல் காலகட்டத்தில் ''அனைத்து சமுதாய உறவுகளும் அடிப்படையிலேயே மாற்றப்பட வேண்டும்.'' கொள்கை அளவில் இந்த கருத்துரை சரியானது. அனைத்து சமுதாய உறவுகளும் என்பதில் உற்பத்தி உறவுகளும் மேல் கட்டுமானமும் — பொரு ளாதாரம், அரசியல், சித்தாந்தம், கலாச்சாரம் போன்ற அனைத் தும் — அடங்கும்.

மாறுதல் காலகட்டத்தில் நாம் ''சோசலிசத்தின் வெற்றியை உத்திரவாதம் செய்ய, உற்பத்தி சக்திகள் போதுமான அளவு வளர்ச்சி பெற உதவ வேண்டும்.'' விரிவாகக் கூறுவதெனில், சீனாவுக்கு குறைந்த பட்சம் 100 முதல் 200 மில்லியன் டன் எஃகு ஆண்டுதோறும் தேவைப்படும் என்று நான் கூறுவேன். இந்த ஆண்டு வரை நம்முடைய பிரதான சாதனையானது, உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்கான பாதையைச் செப்பனிட்டுக் கொடுப்பது தான். சீன சோசலிசத்தின் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சி இப் போது வெறும் தொடக்க நிலையில்தான் உள்ளது. 1958-59-ம் ஆண்டுகளின் மாபெரும் முன்னோக்கிய பாய்ச்சல் மூலம் 1960-ம் ஆண்டில் உற்பத்தியில் பெரும் வளர்ச்சியை நாம் எதிர்பார்க் கிறோம்.

---

* *அடைப்புக் குறியில் உள்ள வாக்கியம் ஆங்கில மொழிபெயர்ப் பாளரால் தெளிவுபடுத்துவதற்காக சேர்க்கப்பட்டது.*

## 3. பல்வேறு நாடுகளில் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் அனைத்தும் தழுவிய மற்றும் குறிப்பான தன்மைகள்

அந்நூல் கூறுகிறது: அக்டோபர் புரட்சி ஒரு''முன்மாதிரிக்கு வித்திட்டது.'' ஒவ்வொரு நாட்டிற்கும் ''சோசலிசத்தை கட்டி அமைக்க அதற்கே உரித்தான குறிப்பான வடிவங்களும் பருண்மை யான முறைகளும் உள்ளன.'' இந்தக் கருத்துரை ஆழமானது. 1848-ல் ஒரு கம்யூனிஸ்ட் அறிக்கை வெளியிடப் பட்டது. நூற்று பத்து ஆண்டுகளுக்குப் பிறகு பல்வேறு கம்யூனிஸ்ட் கட்சிகளால் 1957-ல் மாஸ்கோ பிரகடனம் என்ற மேலும் ஒரு கம்யூனிஸ்ட் அறிக்கை வெளியிடப்பட்டது. இந்த அறிக்கை அனைத்தும் தழுவிய விதிகளையும் பருண்மையான விபரங்களையும் ஒன்றிணைக்கும் பணியை மேற்கொண்டது.

அக்டோபர் புரட்சியின் முன் மாதிரியை ஏற்றுக் கொள்வது என்பது எந்த ஒரு நாட்டின் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கும்''அடிப் படை உள்ளடக்கம்'' ஒன்றே என்று ஏற்றுக்கொள்வதாகும். குறிப்பாக இங்கு நாம் திரிபுவாதிகளுக்கு எதிராக நிற்கிறோம்.

புரட்சியானது, மிக உயர்ந்த அளவு முதலாளித்துவ உற்பத்தி ஆற்றலும் அதிக அளவிலான பாட்டாளி வர்க்கமும் உள்ள மேற்கத்திய நாடுகளில் முதலில் வெற்றி பெறாமல் கிழக்கு நாடு களில்,உதாரணமாக ஒப்பீட்டளவில் மிகவும் குறைந்த முதலாளித் துவ உற்பத்தி ஆற்றலும் ஒப்பீட்டளவில் மிகச் சிறிய எண்ணிக்கை யிலான பாட்டாளி வர்க்கமும் உள்ள ரசியா, சீனா போன்ற நாடு களில் வெற்றி பெற்றது ஏன்? இந்த கேள்வி ஆய்வுக்குரிய ஒன்றாகும்.

பாட்டாளி வர்க்கம் தன் முதல் வெற்றியை ஏன் ரசியாவில் வென்றது? அந்நூல் கூறுகிறது: ஏனெனில் ''ஏகாதிபத்தியத் தின் அனைத்து முரண்பாடுகளும் ரசியாவில் ஒன்று குவிக்கப்பட்டிருந்தன.'' புரட்சியின் குவிமையம் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி மாறிக் கொண்டிருக்கிறது என்று புரட்சியின் வரலாறு எடுத்துரைக்கிறது. பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் குவிமையம் பிரான்சில் இருந்தது, எனவே அது உலக அரசியல் வாழ்க்கையின் மையமாக மாறியது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியில் குவிமையம் ஜெர்மனிக்கு

மாறியது. அங்கு பாட்டாளி வர்க்கம் அரசியல் அரங்கில் காலடி எடுத்து வைத்ததன் மூலம் மார்க்சியத்தைத் தோற்றுவித்தது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், இக் குவிமையம் ரசியாவுக்கு மாறி லெனினியத்தைத் தோற்றுவித்தது. மார்க்சியம் இந்த வளர்ச்சியை அடையாமல் ரசியப் புரட்சி வெற்றி பெற்றிருக்க முடியாது. இருபதாம் நூற்றாண்டின் மத்தியில் உலகப் புரட்சியின் குவிமையம் சீனாவுக்கு மாறியது. எதிர்காலத்தில் மீண்டும் இந்த குவிமையம் கண்டிப்பாக மாறும் என்பது கூறாமலேயே விளங்கும்.

ரசியப் புரட்சி வெற்றி அடைந்ததற்கு மற்றொரு காரணம், பரந்துபட்ட விவசாயிகள் புரட்சியின் நேச சக்தியாக இருந்ததே. அந்நூல் கூறுகிறது: ''ரசிய பாட்டாளி வர்க்கம் ஏழை* விவசாயிகளுடன் கூட்டணி அமைத்துக் கொண்டது (பக்கம் 328-29, 1967-ம் ஆண்டு பதிப்பு). விவசாயிகளுக்கிடையில் பல்வேறு அடுக்குகள் உள்ளன, அவற்றில் ஏழை விவசாயிகளைத்தான் பாட்டாளி வர்க்கம் சார்ந்து இருந்தது. ஒரு புரட்சி தொடங்கும் போது நடுத்தர விவசாயிகள் எப்போதுமே ஊசலாடுகிறார்கள்; புரட்சி பலமாக இருக்கிறதா, அது தன்னை நிலை நிறுத்திக் கொள்ள இயலுமா, அது தங்களுக்கு ஏதாவது ஆதாயம் அளிக்குமா என்று பார்க்க விரும்புகின்றனர். நிலைமைகள் ஒப்பீட்டளவில் தெளிவு ஆகாமல் நடுத்தர விவசாயி பாட்டாளி வர்க்கத்தின் பக்கம் மாறுவதில்லை. அக்டோபர் புரட்சியின் போதும் இப்படித்தான் இருந்தது. அப்படித்தான் எமது சொந்த நிலச் சீர்திருத்தத்திற்கும், கூட்டுறவுகளுக்கும், மக்கள் கம்யூன்களுக்கும் இருந்தது.[3]

போல்ஷ்விக்குகளுக்கும் மென்ஷ்விக்குகளுக்கும் இடையில் கோட்பாட்டு ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும், அமைப்பு ரீதியாகவும் ஏற்பட்ட பிளவு அக்டோபர் புரட்சியின் வெற்றிக்கு அடிகோலியது. மென்ஷ்விக்குகளுக்கும் இரண்டாம் அகிலத்தின் திரிபுவாதத்திற்கும் எதிரான போல்ஷ்விக்குகளின் போராட்டம் இன்றி அக்டோபர் புரட்சி ஒருபோதும் வெற்றி அடைந்திருக்க முடியாது. எல்லாவிதமான திரிபுவாதம் மற்றும் சந்தர்ப்பவாதத்திற்கு எதிரான போராட்டத்திலேயே லெனினியம் தோன்றி

* *1969-ம் ஆண்டுப் பதிப்பில் மட்டும் இவ்வாறு கூறப்பட்டுள்ளது.*

வளர்ச்சியடைந்தது. லெனினியம் இல்லாமல் ரசியப் புரட்சி வெற்றியடைந்திருக்கவே முடியாது.

அந் நூல் கூறுகிறது: ''பாட்டாளி வர்க்கப் புரட்சி முதலில் ரசியாவில் வெற்றி பெற்றது, புரட்சிக்கு முந்தைய ரசியாவில் புரட்சியின் வெற்றியைச் சாத்தியமாக்கத் தேவையான அளவு முதலாளித்துவ வளர்ச்சி இருந்தது''. மிக உயர்ந்த அளவு முதலாளித்துவ வளர்ச்சி உள்ள நாடுகளில்தான் பாட்டாளி வர்க்கப் புரட்சி வெற்றி அடையும் என்பதில்லை. லெனினை மேற்கோள் காட்டுவதில் இந்நூல் சரியாகவே இருக்கிறது. இன்று வரை, சோசலிசப் புரட்சி வெற்றியடைந்த நாடுகளில் கிழக்கு ஜெர்மனி மற்றும் செக்கோஸ்லாவேக்கியா ஆகிய நாடுகளில் மட்டுமே ஒப்பீட்டளவில் உயர்ந்த அளவு முதலாளித்துவம் இருந்தது. மற்ற இடங்களில் ஒப்பீட்டளவில் மிகவும் தாழ்ந்த மட்டத்தில் இருந்தது. ஒப்பீட்டளவில் உயர்ந்த அளவு வளர்ச்சி பெற்றிருந்த எந்தவொரு மேற்கத்திய நாட்டிலும் புரட்சி வெடிக்கவில்லை. ''ஏகாதிபத்திய உலகின் மிகவும் பலவீனமான கண்ணியில்தான் முதலில் புரட்சி வெடிக்கும்'' என்று லெனின் கூறினார். அக்டோபர் புரட்சி காலகட்டத்தில் ரசியாதான் அப்படிப்பட்ட பலவீனமான கண்ணியாக இருந்தது. அக்டோபர் புரட்சிக்குப் பிறகு சீனாவிற்கும் இதுதான் உண்மையாக இருந்தது. ரசியா, சீனா ஆகிய இரண்டிலும் ஒப்பீட்டளவில் அதிக அளவிலான பாட்டாளிகளும் மிகப் பரந்த அளவிலான ஒடுக்கப்பட்டு துயருற்று வரும் விவசாயிகளும் இருந்தனர். இரண்டும் பெரிய நாடுகளாக இருந்தன...* ஆனால் இவ் அம்சங்களில் இந்தியாகூட மிகவும் ஒத்திருந்தது. கேள்வி என்னவெனில் லெனினும், ஸ்டாலினும் விவரித்ததுபோல் ஏகாதிபத்தியத்தின் பலவீனமான கண்ணியை உடைத்து எறிந்து விட்டு இந்தியாவில் ஏன் ஒரு புரட்சி நடைபெறவில்லை? ஏனெனில், இந்தியா ஒரே ஏகாதிபத்திய அரசுக்கு சொந்தமான காலனியாக, ஆங்கிலேய காலனியாக இருந்தது. சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வேறுபாடு இதில்தான் அடங்கியிருந்தது. சீனா, பல்வேறு ஏகாதிபத்திய அரசுகளின் கீழ் ஒரு அரைக் காலனியாக இருந்தது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நாட்டின் முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியில் தீவிரமாக பங்கேற்கவோ அல்லது ஜனநாயகப் புரட்சியில் இந்திய

* சொல் எச்சம் ***(ellipis in original)***

பாட்டாளி வர்க்கம் தலைமை ஏற்க வழிவகுக்கவோ இல்லை. மேலும் சுதந்திரத்திற்குப் பிறகு இந்திய பாட்டாளி வர்க்கத்தின் தனித்தன்மையைப் பாதுகாப்பதற்காகக் கூட இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பாடுபடவில்லை.

அனுபவம் மிக்க ஒரு கட்சியானது, புரட்சியின் வெற்றிக்கு மிக முக்கியமான நிபந்தனை என்பதை சீன, ரசிய வரலாற்று அனுபவங்கள் நிரூபிக்கின்றன. ரசியாவில் போல்ஷ்விக்குகள் ஜனநாயகப் புரட்சியில் தீவிர பங்காற்றியதோடு 1905 புரட்சிக்கு பூர்ஷ்வாக்களின் திட்டத்திலிருந்து முற்றிலும் வேறுபட்ட திட்டத்தை முன் வைத்தனர். அத்திட்டம் ஜாரைத் தூக்கியெறி வதற்கான திட்டமாக இருந்தது. கூடவே ஜார் ஆட்சியைத் தூக்கியெறிவதற்கான போராட்டத்தில் அரசியல் ஜனநாயகக் கட்சியிடமிருந்து, தலைமையை கைப்பற்றுவது எப்படி என்ற பிரச்சனையைத் தீர்க்கக் கூடிய திட்டமாகவும் இருந்தது.

1911-ம் ஆண்டு புரட்சியின் போது சீனாவில் ஒரு கம்யூனிஸ்ட் கட்சி இல்லாதிருந்தது. 1921-ல் சீன கம்யூனிஸ்ட் கட்சி உருவாக்கப்பட்ட பின்பு அது உடனடியாகவும் தீவிரமாகவும் ஜனநாயகப் புரட்சியில் பங்கு கொண்டதுடன் புரட்சியின் முன்னணி யில் நின்றது. சீன முதலாளி வர்க்கத்தின் பொற்காலமானது, அவர்களுடைய புரட்சி பெரும் உயிராற்றல் மிக்கதாய் இருந்த காலமான 1905 முதல் 1917 வரையிலான ஆண்டுகளாகும். 1911-ம் ஆண்டு புரட்சிக்குப் பிறகு தேசியக்கட்சி வீழ்ச்சியடையத் தொடங்கியது. 1924-க்குள்ளாக அவர்கள் மேற்கொண்டு முன்னேற கம்யூனிஸ்ட் கட்சியை நாடுவது தவிர வேறு வழி இல்லாமல் இருந்தது. பாட்டாளி வர்க்கம் முதலாளி வர்க்கத்தின் இடத்தைப் பிடித்துக் கொண்டது. பாட்டாளி வர்க்க அரசியல் கட்சி ஜனநாயகப் புரட்சியின் தலைவனாகி முதலாளித்துவ அரசியல் கட்சியின் இடத்தைப் பிடித்துக் கொண்டது. 1927-ம் ஆண்டுகளில் சீன கம்யூனிஸ்ட் கட்சி இன்னும் முதிர்ச்சி அடைய வில்லை என்று நாங்கள் அடிக்கடி கூறிவந்தோம். முதன்மையாக இதன் பொருள், முதலாளி வர்க்கத்துடன் கூட்டணி அமைத்திருந்த ஆண்டுகளில் முதலாளி வர்க்கத்தினர் புரட்சியைக் காட்டிக் கொடுத்துவிடக் கூடிய சாத்தியக் கூறுகள் பற்றி எங்கள் கட்சி கணிக்கத் தவறியது என்பதாகும். உண்மையில், அப்படிப்பட்ட சூழ்நிலைக்கு முற்றிலும் தயாரிப்பு இன்றி இருந்தது என்பதே யாகும்.

அந்நூல் பக்கம் 331-ல் ஒரு கருத்தை முன் வைக்கிறது. அதாவது, முதலாளித்துவத்திற்கு முந்தைய பொருளாதார வடிவங்கள் ஆதிக்கம் செலுத்தும் நாடுகள், சோசலிசப் புரட்சியை நடத்த முடிந்ததற்குக் காரணம் முன்னேறிய சோசலிச நாடுகளின் உதவிதான் என்று கூறுகிறது. இது, விசயத்தை அரை குறையாக முன் வைப்பதாகும். சீனாவில் ஜனநாயகப் புரட்சி வெற்றி அடைந்த பிறகு நாங்கள் சோசலிசப் பாதையை மேற்கொள்ள முடிந்ததற்கு பிரதான காரணம், நாங்கள் ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம், அதிகார வர்க்க முதலாளித்துவம் ஆகியவற்றின் ஆட்சியை தூக்கி எறிந்திருந்தோம் என்பதே. உள்நாட்டு காரணிகள் தான் பிரதானமானவை. வெற்றி பெற்ற சோலிச நாடுகளிலிருந்து நாங்கள் பெற்ற உதவி முக்கிய நிபந்தனையாக இருந்த போதிலும், அது நாங்கள் சோசலிச பாதையை மேற்கொள்ள முடியுமா, முடியாதா என்ற பிரச்னையைத் தீர்மானிக்கக் கூடியதாக இல்லை. மாறாக அப்பாதையை மேற்கொண்ட பிறகு, எங்கள் முன்னேற்றத்தின் வேகத்தைத் தீர்மானிக்கக் கூடியதாக மட்டுமே அது இருந்தது. உதவி இருந்தால், எங்கள் முன்னேற்றம் வேகமாக இருக்கும், இல்லையெனில் அது மெதுவாக இருக்கும். உதவி என்று நாங்கள் பொருள்படுத்துவது பொருளாதார உதவியுடன், உதவி செய்யும் நாட்டின் வெற்றி மற்றும் தோல்விகளில் இருந்து பெறப்பட்ட நேர்மறை, எதிர்மறை அனுபவங்களை அறிவுப் பூர்வமாகப் பயன்படுத்துவது என்பதுமாகும்.

## 4. ''சமாதான மாற்றம்'' என்ற பிரச்னை

''சில முதலாளித்துவ நாடுகளிலும், முந்தைய காலனி நாடுகளிலும் அமைதியான பாராளுமன்ற வழிமுறைகள் மூலம் அரசியல் அதிகாரத்தை கைப்பற்றுவது என்பது நடைமுறை சாத்தியமே'' என்று அந்நூலின் 330-ம் பக்கம் கூறுகிறது. அந்த ''சில நாடுகள்'' எவை? ஐரோப்பாவிலும், வட அமெரிக்காவிலும் உள்ள பிரதான முதலாளித்துவ நாடுகள் அளவுக்கு அதிகமாக ராணுவ பலத்தை பெருக்கியுள்ளன. அவை அமைதியான முறையில் அதிகாரத்தை எடுத்துக் கொள்ள உங்களை அனுமதிக்கும் என்று எதிர்பார்க்கிறீர்களா?

ஒவ்வொரு நாட்டிலும் உள்ள புரட்சிகர சக்திகளும் கம்யூனிஸ்ட் கட்சியும் தனது இரு கரங்களையும், ஒரு கரம் சமாதான பூர்வமாகவே வெற்றியை ஈட்டவும், மற்றொன்று பலாத்காரமாக அரசியல் அதிகாரத்தை எடுத்துக் கொள்ளவும் — தயார் செய்ய வேண்டும். இவற்றில் எதையும் புறக்கணிக்கக் கூடாது. விஷயங்களின் பொதுவான போக்கை கவனிக்கும்போது முதலாளி வர்க்கத்தினருக்கு தங்கள் அரசியல் அதிகாரத்தை துறக்கும் நோக்கமே இல்லை என்பதை உணர்ந்து கொள்வது அவசியமாகும். அவர்கள் அதற்காகப் போராடுவார்கள்; அவர்கள் வாழ்க்கையே நிச்சயமற்ற ஆபத்தான நிலையில் இருக்கும் போது, அவர்கள் ஏன் பலாத்காரத்தை நாடமாட்டார்கள்? நம்முடையதில் இருந்தது போலவே அக்டோபர் புரட்சியிலும் இரண்டு கரங்களும் தயாராக இருந்தன: 1917 ஜூலை மாதத்திற்கு முன்பாக வெற்றியை ஈட்ட சமாதான முறைகளை பயன்படுத்துவதைப் பற்றி லெனின் ஆலோசித்தார்; ஆனால் ஜூலை நிகழ்ச்சிகள், சமாதான முறையில் அரசியல் அதிகாரத்தை பாட்டாளி வர்க்கத்திற்கு மாற்றுவது இனிமேல் சாத்தியம் இல்லை என்பதை நிரூபித்துக் காட்டியது. தன்னை மாற்றிக்கொண்டு, மூன்று மாத காலம் இராணுவத் தயாரிப்புகளை மேற்கொண்ட பிறகு தான் அக்டோபர் புரட்சியில் அவர் வெற்றியடைய முடிந்தது. அக்டோபர் புரட்சியின் வாயிலாக பாட்டாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிய பிறகும்கூட லெனின் சமாதான முறைகளில் இன்னமும் நாட்டங் கொண்டிருந்தார்; ''பாவ மன்னிப்பின்'' மூலம் முதலாளித்துவத்தை தூக்கி எறிந்துவிட்டு சோசலிச மாற்றத்தை நடைமுறைக்குக் கொண்டு வர முயன்றார். ஆனால், முதலாளி வர்க்கம் பதினான்கு ஏகாதிபத்திய நாடுகளுடன் கூட்டாக சதி செய்து ஆயுதம் தாங்கிய எதிர்ப்புரட்சி எழுச்சிகளையும், தலையீட்டையும் கட்டவிழ்த்துவிட்டது. அக்டோபர் புரட்சியின் வெற்றியை உறுதிப்படுத்துவதற்கு ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் மூன்று ஆண்டுக் காலம் ஆயுதம் தாங்கிய போராட்டத்தை நடத்த வேண்டியிருந்தது.

## 5. ஜனநாயகப் புரட்சியிலிருந்து சோசலிசப் புரட்சிக்கு — பல்வேறு பிரச்சனைகள்

நூலின் 330-ம் பக்க இறுதியில், ஜனநாயகப் புரட்சியிலிருந்து சோசலிசப் புரட்சிக்கு மாறுவது பற்றி குறிப்பிடப்

பட்டுள்ளது. ஆனால் இம் மாற்றம் எவ்வாறு சாதிக்கப்படும் என்பதைப் பற்றித் தெளிவாக விளக்கவில்லை. முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியால் நிறைவேற்றப்படாமல் விட்டு வைக்கப் பட்டிருந்த பணிகளை அக்கம் பக்கமாக நிறைவேற்றிய சோசலிசப் புரட்சிதான் அக்டோபர் புரட்சி. அக்டோபர் புரட்சி வெற்றி பெற்ற உடனே நிலங்கள் தேசியமயமாக்கப்பட்டதாகப் பிரகடனம் செய்யப்பட்டது. ஆனால், நிலப்பிரச்சனையில் ஜனநாயகப் புரட்சி முற்றுப் பெறுவதற்கு இன்னும் கொஞ்ச காலம் தேவைப்பட்டது.

விடுதலைப் போரின்போது ஜனநாயகப் புரட்சியின் கடமை களை சீனா நிறைவேற்றியது. 1949-ல் சீன மக்கள் குடியரசு நிறுவப்பட்டதானது ஜனநாயகப் புரட்சி அடிப்படையில் முற்றுப் பெற்றதையும் சோசலிசத்திற்கு மாறும் கால கட்டம் துவங்கியதை யும் குறித்தது. நிலச் சீர்திருத்தம் முற்றுப் பெற மேலும் மூன்று ஆண்டுகள் பிடித்தது; ஆனால், குடியரசு நிறுவப்பட்ட உடனே நாங்கள் அதிகாரவர்க்க முதலாளித்துவ நிறுவனங்களை — எங்கள் தொழிலக மற்றும் போக்குவரத்தின் 80 சதவீத சொத்துக்களை பறிமுதல் செய்து அவற்றை அனைத்து மக்களின் உடைமையாக மாற்றினோம்.

விடுதலைப் போரின் போது நாங்கள் ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு முழக்கங்களுடன் அதிகார வர்க்க முதலாளித்துவத்திற்கு எதிரான முழக்கங்களையும் முன் வைத் தோம். அதிகார வர்க்க முதலாளித்துவத்திற்கு எதிரான போராட்டம் இரண்டு தன்மைகள் கொண்டதாக இருந்தது: தரகு முதலாளித்துவத்திற்கு[4] எதிர்ப்பு என்ற வகையில் அது புரட்சிகர ஜனநாயகத் தன்மை கொண்டதாகவும், பெரும் முதலாளி களுக்கு எதிர்ப்பு என்ற வகையில் அது சோசலிசத் தன்மை கொண் டதாகவும் இருந்தது.

ஏகாதிபத்திய எதிர்ப்பு யுத்தத்தில் வெற்றியடைந்த பிறகு தேசியக் கட்சி (கோமிங்டாங்) ஜப்பான், ஜெர்மனி, இத்தாலி ஆகிய நாடுகளிடமிருந்து பெரும்பாலான அதிகார வர்க்க மூல தனத்தை கைப்பற்றிக் கொண்டது. அதிகார வர்க்க மூலதனமும் தேசிய (சீன) மூலதனமும் 8:2 என்ற விகிதத்தில் இருந்தன. விடுதலைக்குப் பிறகு நாங்கள் அதிகார வர்க்க மூலதனம் முழுவதையும் பறிமுதல் செய்து, சீன முதலாளித்துவத்தின்[5] பெரும் பகுதியை ஒழித்துவிட்டோம்.

ஆனால் நாடு முழுவதும் விடுதலை செய்யப்பட்ட பிறகு ''தொடக்கத்தில் புரட்சி பிரதானமாக முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியின் தன்மை கொண்டிருந்தது, அதன் பிறகுதான் அது படிப்படியாக ''சோசலிசப் புரட்சியாக வளர்ச்சி அடைந்தது'' (பக்கம் குறிப்பிடவில்லை) என்று கருதுவது தவறாகும்.

## 6. வன்முறையும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமும்

நூலின் 333-ம் பக்கத்தில் வன்முறை பற்றிய கருத்தை மேலும் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கலாம். மார்க்சும் எங்கெல்சும் ''அரசு என்பது எதிரி வர்க்கத்தை ஒடுக்குவதற்காகப் பயன்படுத்தப் படும் ஒரு பலாத்கார கருவியே'' என்று எப்போதும் விளக்கமுற வரையறுத்துக் கூறி வந்துள்ளனர். எனவே ''பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் சுரண்டுவோர் மீது நடவடிக்கை எடுக்கும் போது அப்பட்டமாகவும், சாதாரணமாகவும் வன்முறையைப் பயன் படுத்தாது என்றோ அல்லது முதன்மையாகப் பயன்படுத்தாது என்றோ எப்போதுமே சொல்ல முடியாது.

அதன் வாழ்வு ஆபத்திற்குள்ளாகும் போது சுரண்டும் வர்க்கம் எப்போதுமே பலாத்காரத்தைப் பயன்படுத்தும். உண்மையில், புரட்சி தொடங்குவதைக் கண்டவுடனே அவர்கள் அதை பலாத் காரத்தைக் கொண்டு ஒடுக்குகிறார்கள். ''அரசியல் அதிகாரத்தை மக்களுக்கு விட்டுக் கொடுக்க சுரண்டும் வர்க்கம் சிறிதும் விரும்புவ தில்லை என்பதோடு மக்களின் அரசியல் அதிகாரத்தை எதிர்க்க ஆயுதப் படைகளைப் பயன்படுத்தும் என்பதையும் வரலாற்று அனு பவம் நிரூபிக்கிறது'' என்று அந்நூல் கூறுகிறது. இப்படி கூறு வது விஷயத்தை முழுமையாக கூறுவதாகாது. புரட்சிகர அரசி யல் அதிகாரத்தை மக்கள் ஒழுங்கமைத்த பிறகுதான் சுரண்டும் வர்க்கம் அதை வன்முறை மூலம் எதிர்க்கும் என்பதல்ல, அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற மக்கள் எழுச்சியுறும் அந்த நிமிடமே, சுரண்டுவோர் புரட்சிகர மக்களை ஒடுக்க பலாத்காரத்தை பயன் படுத்துவர்.

நமது புரட்சியின் நோக்கம் சமுதாயத்தின் உற்பத்தி சக்தி களை வளர்ப்பதாகும். இந்த நோக்கத்திற்காக முதலில் நாம் எதிரியைத் தூக்கியெறிய வேண்டும். இரண்டாவதாக அதன்

எதிர்ப்பை ஒடுக்க வேண்டும். மக்களின் புரட்சிகரமான பலாத்காரம் இன்றி இதை நாம் எப்படிச் செய்ய முடியும்?

இங்கு அந்நூல், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் ''சாராம்சம்'' பற்றியும் சோசலிசப் புரட்சியில் பொதுவாக தொழிலாளி வர்க்கம் மற்றும் உழைக்கும் மக்களின் முதன்மையான பொறுப்புக்கள் பற்றியும் குறிப்பிடத் தொடங்குகிறது. ஆனால் எதிரிகளை ஒடுக்குவது பற்றியும், வர்க்கங்களை மறு வார்ப்புச் செய்வது பற்றியும் குறிப்பிடாததால் இவ் விவாதம் முற்றுப் பெறவில்லை. நிலப்பிரபுக்கள், அதிகார வர்க்கத்தினர், எதிர் புரட்சியாளர்கள், சமூக விரோத சக்திகள் ஆகியவர்களை மறு வார்ப்புச் செய்ய வேண்டும். இதுவே முதலாளி வர்க்கம், மேல் தட்டு குட்டி முதலாளிகள் மற்றும் நடுத்தர* விவசாயிகள் ஆகியோருக்கும் பொருந்தும். மறுவார்ப்புச் செய்வது கடினமான காரியம் என்பதை நமது அனுபவம் காட்டுகிறது. விட்டுக் கொடுக்காத, தொடர்ச்சியான போராட்டத்திற்கு உட்படாதவர்களை முறையாக மறுவார்ப்புச் செய்வது முடியாது. முதலாளி வர்க்கத்தினரின் எஞ்சியுள்ள சக்தியையும் அவர்களுக்கு ஏதாவது செல்வாக்கு இருந்தால் அதையும் முழுமையாக ஒழிப்பதற்கு குறைந்த பட்சம் பத்து அல்லது இருபது ஆண்டுகள் பிடிக்கலாம், ஒருவேளை அரை நூற்றாண்டு கூட தேவைப்படலாம். கிராமப்புறங்களில், அடிப்படை கம்யூன்களின் உடைமை நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டுள்ள இடங்களில், தனியுடமை அரசுடைமையாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது. நாடு முழுவதிலும் புதிய நகரங்களும், புதிய பெருந்தொழில்களும் நிறைந்திருக்கின்றன. நாடு முழுவதற்குமான போக்குவரத்தும் தகவல் தொடர்பும் நவீனமயமாக்கப் பட்டுள்ளது. உண்மையில், பொருளாதாரச் சூழ்நிலைமை முழுமையாக மாறியிருக்கிறது. முதன் முறையாக விவசாயிகளின் உலகக் கண்ணோட்டம் முழுமையாகவும் படிப்படியாகவும், தலைகீழாக மாறி வருகிறது. (இங்கு ''முதன்மையான கடமைகள்'' பற்றிப் பேசும் போது அந்நூல் லெனினுடைய சொற்களை அவருடைய மூல நூலின் நோக்கங்களுக்கு மாறுபட்ட பொருளில் பயன்படுத்துகிறது).

எதிரிகளுக்கும், ஏகாதிபத்தியவாதிகளுக்கும் ஏற்புடைய வகையில் பேசுவதும், எழுதுவதும் மக்களை ஏமாற்றுவதாகும், அதன் விளைவாக எதிரியை திருப்திபடுத்தும் அதே நேரத்தில்

* 1969-ம் ஆண்டு பதிப்பில் மட்டும்.

தன்னுடைய சொந்த வர்க்கத்தை அறியாமையில் ஆழ்த்தி வைப்பதாகும்.

## 7. பாட்டாளி வர்க்க அரசின் வடிவங்கள்

''பாட்டாளி வர்க்க அரசு பல்வேறு வடிவங்களில் இருக்கலாம்'' என்று பக்கம் 334-ல் அந்நூல் கூறுகிறது. உண்மைதான். ஆனால், மக்கள் ஜனநாயக நாடுகளில் உள்ள பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்திற்கும், அக்டோபர் புரட்சிக்குப் பிறகு ரசியாவில் நிறுவப்பட்டதற்கும் சாராம்சத்தில் பெரும் வேறுபாடு எதுவும் இல்லை. அத்துடன் ரசியாவில் உள்ள சோவியத்துக்கள் மற்றும் நம்முடைய மக்கள் காங்கிரசுகள், ஆகிய இரண்டுமே பிரதிநிதித்துவ சபைகள்தான், பெயரில் மட்டுமே மாற்றம் உள்ளது. சீனாவில் முதலாளிகளின் பிரதிநிதிகளும், தேசியக் கட்சியிலிருந்து பிரிந்து வந்த பிரதிநிதிகளும், பிரபலமான ஜனநாயக வாதிகளும் மக்கள் காங்கிரசில் சேர்த்துக் கொள்ளப்பட்டு இருக்கின்றனர். அவர்கள் அனைவரும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையை ஏற்றுக் கொண்டுள்ளனர். இவற்றில் ஒரு கும்பல் குழப்பம் விளைவிக்க முயற்சித்து, அதில் தோற்றுவிட்டது[6], இப்படி சேர்த்துக் கொள்வது சோவியத்திலிருந்து மாறுபட்டதாகத் தோன்றலாம்; ஆனால் அக்டோபர் புரட்சிக்குப் பிறகு வலதுசாரி மென்ஷ்விக்குகள், சமூக புரட்சிக் கட்சி, ஒரு டிராட்ஸ்கிய குழு, ஒரு புகாரின் குழு, ஜினோவேவ் குழு ஆகியவற்றின் பிரதிநிதிகளும் சோவியத்தில் இருந்தனர் என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். அவர்கள் பெயரளவில் தொழிலாளர் மற்றும் விவசாயிகளின் பிரதிநிதிகளாக இருந்தாலும் நடைமுறையில் முதலாளி வர்க்கத்தின் பிரதிநிதிகளாக இருந்தனர். அக்டோபர் புரட்சிக்கு பிந்திய காலகட்டம், கெரன்ஸ்கி அரசாங்கத்திலிருந்த பெரும் பான்மையான நபர்களை பாட்டாளி வர்க்கம் ஏற்றுக்கொண்ட காலகட்டமாக இருந்தது - அவர்கள் அனைவரும் முதலாளித்துவ நபர்களாக இருந்தனர். நமது சொந்த மத்திய மக்கள் அரசாங்கம், வட சீன மக்கள் அரசாங்கத்தின் அடித்தளத்தின் மீது நிறுவப்பட்டது. பல்வேறு துறைகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் அனைவரும் தளப் பிரதேசத்திலிருந்து வந்தவர்கள். மேலும் பெருவாரியான முக்கிய தலைமை ஊழியர்கள் அனைவரும் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர்கள்.

## 8. முதலாளித்துவ தொழில் மற்றும் வர்க்கத்தின் பண்பை மாற்றுவது

பக்கம் 335-ல், சீனாவில் முதலாளித்துவ உடைமையிலிருந்து அரசு உடைமைக்கு மாறிய நிகழ்ச்சிப் போக்கு பற்றி தவறான விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. அந்நூல் தேசிய மூலதனம் பற்றிய எமது கொள்கைகளை மட்டும் விவரிக்கிறதேயொழிய அதிகார வர்க்க மூலதனம் பற்றிய எமது (பறிமுதல்) கொள்கைகளை விவரிக்கவில்லை. அதிகார வர்க்க முதலாளிகளின் உடைமைகளைப் பொதுவுடைமையாக மாற்றுவதற்கு நாங்கள் பறிமுதல் செய்யும் முறையை மேற்கொண்டோம்.

335-ம் பக்கத்தில் உள்ள 2-ம் பத்தி, முதலாளித்துவத்தை மாற்றுவதற்காக அரசு முதலாளித்துவ முறையினூடே சென்ற அனுபவங்களை ஒரு தனிப்பட்ட விசேஷ அனுபவமாக வர்ணித்துள்ளது; அதன் அனைத்தும் தழுவிய தன்மையின் முக்கியத்துவம் மறுக்கப்பட்டுள்ளது. மேற்கு ஐரோப்பிய நாடுகளும், அமெரிக்காவும் மிக உயர்ந்த அளவு முதலாளித்துவ வளர்ச்சி அடைந்துள்ளன; சிறுபான்மை ஏகபோக முதலாளிகள் அவற்றைக் கட்டுப்படுத்தும் நிலைகளில் உள்ளனர். ஆனால், அதே சமயம் அங்கு சிறிய மற்றும் நடுத்தர முதலாளிகளும் பெருமளவில் உள்ளனர். இவ்வாறு அமெரிக்க மூலதனம் ஒன்று குவிக்கப்பட்டு இருப்பதோடு பரவலாக்கப்பட்டும் உள்ளது என்று கூறப்படுகிறது. இந்த நாடுகளில் புரட்சி வெற்றியடைந்ததும் சந்தேகத்திற்கிடமின்றி ஏகபோக மூலதனம் பறிமுதல் செய்யப்படவேண்டும்; ஆனால் அதேபோல் சிறிய மற்றும் நடுத்தர முதலாளிகளின் மூலதனமும் ஒரே மாதிரியாகப் பறிமுதல் செய்யப்படுமா? அவற்றை மாற்றுவதற்கு ஏதாவது ஒருவகை அரசு முதலாளித்துவம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது தான் சரியானதாக இருக்கும்.

நமது வடகிழக்கு மாநிலங்களை மிக உயர்ந்த அளவு முதலாளித்துவ வளர்ச்சி பெற்ற பகுதிகளாகக் கருதலாம். கியாங்சுவுக்கும் (ஷாங்கையை மையமாகக் கொண்ட பகுதிகளுக்கும் மாநிலத்தின் தென் பகுதிகளுக்கும்) இதுவே பொருந்தும். அரசு முதலாளித்துவம் இப்பகுதிகளுக்குப் பொருந்தும் என்றால், அதே கொள்கையை இம்மாநிலப் பகுதிகளையே ஒத்திருக்கும் மற்ற நாடுகளில் ஏன் செயல்படுத்த முடியாது என்று கூறுங்கள்?

நமது வடக்கு மாநிலங்களை ஜப்பானியர்கள் ஆக்கிரமித்து இருந்தபோது அவர்கள் பயன்படுத்திய முறைகள், பெரும் உள்ளூர் முதலாளிகளை ஒழிப்பதும் அவர்களுடைய நிறுவனங்களை ஜப்பானிய அரசு நிர்வாகத்தின் கீழ் அல்லது சிலவற்றை ஏகபோக முதலாளித்துவ நிர்வாகத்தின் கீழ் கொண்டு வருவதாகும். சிறிய மற்றும் நடுத்தர முதலாளிகளின் மீது கட்டுப்பாட்டைக் கொண்டு வருவதற்காகத் துணை நிறுவனங்களை ஏற்படுத்தினர்.

தேசிய மூலதனத்தை மாற்றியமைக்கும் நமது பணி மூன்று கட்டங்களைக் கடந்து வந்துள்ளது: அரசு ஆணையின் பேரில் தனியார் உற்பத்தி, ஒருங்கிணைந்த முறையில் தனியார் உற்பத்தி முழுவதையும் அரசே விலைக்கு வாங்குவதும் விற்பதும் (தனி நிறுவனங்களாகவோ, பல்கூட்டு தொகுதிகளாகவோ) அரசு மற்றும் தனியாரின் கூட்டுச் செயல்பாடு; ஒவ்வொரு கட்டமும் ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட முறையுடன் நிறைவேற்றப் பட்டது. இது உற்பத்திக்கு எந்த ஊறும் ஏற்படாமல் தடுத்த தோடு, நடைமுறையில் மாற்றத்தின் வளர்ச்சியின் கூடவே உற்பத்தியை அதிகரித்தது. அரசு முதலாளித்துவத்திலிருந்து நாம் ஏராளமான புதிய அனுபவங்களைப் பெற்றோம்; அரசு மற்றும் தனியாரின் கூட்டு செயல்பாடு என்ற கட்டத்திற்கு[7] பிறகு முதலாளிகளுக்கு ஒரு நிர்ணயிக்கப்பட்ட வட்டியை அளிப்பது இதற்கு ஒரு உதாரணமாகும்.

## 9. நடுத்தர விவசாயிகள்

நிலச் சீர்த்திருத்தத்திற்கு பிறகு, நிலத்திற்குப் பணமதிப்பு இல்லாமல் போய் விட்டது; எனவே விவசாயிகள் 'தங்களைப் பகட்டாகக் காட்டிக் கொள்ள'' அஞ்சினர். இந்த நிலைமை திருப்தியற்றதாக இருக்கிறது என்று சில தோழர்கள் ஒரு சமயம் கருதினர்; ஆனால், நடந்தது என்னவெனில், நிலப்பிரபுக்களையும், பணக்காரர்களையும் இழிவு படுத்திய வர்க்கப் போரட்டப்போக்கில் விவசாயிகள் ஏழ்மையை கௌரவம் மிக்கதாகவும், சொத்துக்களை இழிவானதாகவும் கருதலாயினர். ஏழை விவசாயிகள் அரசியல் ரீதியில் பணக்கார விவசாயிகளைத் தூக்கியெறிந்துவிட்டு கிராமப் புறங்களில் தங்கள் மேலாதிக்கத்தை நிலைநாட்டி விட்டனர் என்பதைக் காட்டிய, ஒரு வரவேற்கத்தக்க அறிகுறியாகும் இது-

பணக்கார விவசாயிகளிடமிருந்து பறித்து ஏழை மற்றும் நடுத்தர விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்ட நிலம் அரசால் பறிமுதல் செய்யப்பட்டு பிறகு விநியோகம் செய்யப்பட்டதாகும் என்று பக்கம் 339-ல், அந் நூல் கூறுகிறது. இது மக்கள் அணி திரட்டப்பட்டதையும் வர்க்கப் போராட்டம் கட்டவிழ்த்து விடப் பட்டதையும் மறந்து விட்டு, அது ஏதோ 'அரச சன்மானம்' என்று கருதும் ஒரு வலதுசாரிக் கண்ணோட்டமாகும். ஏழை விவசாயி களைச் சார்ந்திருந்து, பெருவாரியான நடுத்தர விவசாயிகளுடன் (அடித்தட்டு நடுத்தர விவசாயிகளுடன்) இணைந்து நிலப்பிரபுக் களின் நிலங்களை பறிமுதல் செய்வதுதான் எமது அணுகுமுறை யாக இருந்தது. கட்சி முன்னணிப் பாத்திரத்தை ஆற்றினாலும் அது மக்களுக்குத் பதிலாக தானே எல்லாவற்றையும் செய்வதை எதிர்த்தது. உண்மையில், அதன் பருண்மையான நடைமுறை ''அவர்களுடைய குறைகளை புரிந்து கொள்வதற்காக ஏழை மக்களை அணுகுவது'', செயலூக்கமுள்ள நபர்களை கண்டறிவது, அவர்களிடையே வேரூன்றி ஒன்றிணைவது, அதை கருவமைப் பாக உருவமைத்து பலப்படுத்துவது, குறைகளை எதிர்த்துக் குரல் கொடுப்பதை ஊக்குவிப்பது, வர்க்க அணிகளை ஒழுங்கமைப் பது — இவை யாவும் வர்க்கப் போராட்டத்தை கட்டவிழ்த்து விடுவதற்காகவே.

''நடுத்தர விவசாயிகள் கிராமப் புறங்களில் முக்கியப் புள்ளி களாயினர்'' என்று அந்நூல் கூறுகிறது. இது ஒரு திருப்தியற்ற துணிவுரையாகும். நடுத்தர விவசாயிகளை முக்கியமானவர்கள் என்று அறிவிப்பது, அவர்களைக் கடவுளுக்கு நிகராகப் போற்று வது, அவர்களுடைய கோபத்திற்கு அஞ்சித் துணிவற்றிருப்பது ஆகியன முந்தைய ஏழை விவசாயிகளுக்கு, தாம் ஒதுக்கப்பட்டு விட்டது போன்ற உணர்வை உருவாக்கும். தவிர்க்க முடியாதபடி இது வசதி படைத்த நடுத்தர விவசாயிகள் கிராமப் புறங்களில் தலைமையேற்க வழி கோலுகிறது.

அந்நூல் நடுத்தர விவசாயிகள் பற்றி எந்தப் பகுப்பாய்வும் செய்யவில்லை. நாம் மேல் தட்டு மற்றும் கீழ்த்தட்டு நடுத்தர விவ சாயிகளை வேறுபடுத்திக் காண்பதோடு இந்தப் பிரிவுகளில் உள்ள பழைய மற்றும் புதிய பிரிவையும் வேறுபடுத்திக் காணவேண்டும். இதில் புதிய பிரிவை சற்று கூடுதல் விரும்பத்தக்கதாகக் கருது கிறோம். ஏழை விவசாயிகள், புதிய கீழ்மட்ட நடுத்தர விவசாயிகள்,

பழைய கீழ்மட்ட நடுத்தர விவசாயிகள் ஆகியோருக்கு ஒப்பீட்டள வில் நல்ல அரசியல் மனப்பான்மை உள்ளது என்பதை ஒன்றன் பின் ஒன்றாக நடத்தப்பட்ட பல பிரச்சார இயக்கங்களின் அனுப வங்கள் காட்டுகின்றன. இவர்கள்தான் மக்கள் கம்யூன்களை மகிழ்ச்சியுடன் அரவணைத்துக் கொள்பவர்கள். மேல்தட்டு நடுத்தர விவசாயிகள் மற்றும் வசதிபடைத்த நடுத்தர விவசாயி களில் ஒரு பிரிவு கம்யூன்களை ஆதரிப்பதாகவும் மற்றொன்று எதிர்க்கக் கூடியதாகவும் உள்ளது. ஹோப்பே மாநிலத்திலிருந்து கிடைத்துள்ள தகவல்கள் படி, அங்கு மொத்தம் நாற்பதாயிரம் உற்பத்திக் குழுக்கள் உள்ளன; இவற்றில் 50 சதவீதம் எவ்வித தயக்கமுமின்றி கம்யூன்களை அரவணைத்துக் கொள்கின்றன, 35 சதவீதம் அவற்றை அடிப்படையில் — ஆனால் ஆட்சேபணை களுடன் — ஏற்றுக் கொள்கின்றன; அல்லது சில குறிப்பிட்ட பிரச்சனைகள் மீது சந்தேகங்களுடன் இருக்கின்றன. 15 சதவீதம் எதிர்க்கின்றன அல்லது கம்யூன்கள் பற்றி கடுமையான ஆட் சேபணைகளைக் கொண்டுள்ளன. இந்த கடைசிப் பகுதியினரின் எதிர்ப்புக்குக் காரணம், குழுக்களின் தலைமை வசதி படைத்த நடுத்தர விவசாயிகள் அல்லது விரும்பத்தகாத நபர்களின் கைகளுக்குப் போய்விட்டதேயாகும். இரு பாதைகளுக்கு இடையிலான போராட்டத்தின் மூலம் கற்றுக் கொடுக்கும் நிகழ்ச்சிப் போக்கில், இக் குழுக்களிடையே விவாதம் தோன்ற வேண்டுமெனில் அவற்றின் தலைமை மாற வேண்டியிருக்கும். எனவே, நடுத்தர விவசாயி பற்றிய ஆய்வைத் தொடர வேண்டும் என்பது தெளிவு. ஏனெனில், யார் கையில் கிராமப் புறத்து தலைமை உள்ளது என்பது அவ்விடத்தில் வளர்ச்சி திசையின் மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

''சாராம்சத்தில் நடுத்தர விவசாயிகளுக்கு இருவகையான பண்புகள் உள்ளன என்று பக்கம் 340-ல் அந் நூல் கூறுகிறது: இந்த பிரச்சனையின் மீதும் பருண்மையான பகுப்பாய்வு தேவைப் படுகிறது. ஒருவிதத்தில் ஏழை மற்றும் அடிமட்ட நடுத்தர, மேல் மட்ட நடுத்தர மற்றும் வசதி படைத்த நடுத்தர விவசாயிகள் யாவரும் உழைப்பாளர்கள், ஆனால் மற்றொருபுறம் அவர்கள் தனியுடைமையாளர்கள். தனியுடைமையாளர்கள் என்ற முறையில் அவர்கள் அனைவருடைய கண்ணோட்டமும் மாறுபட்டவை. ஏழை மற்றும் அடிமட்ட நடுத்தர விவசாயிகளை அரைத் தனியுடைமை

யாளர்கள் என்று கூறலாம்; அவர்களுடைய கண்ணோட்டத்தை ஒப்பீட்டளவில் எளிதில் மாற்றலாம். இதற்கு நேர் மாறாக, மேல் மட்ட நடுத்தர விவசாயிகள் மற்றும் வசதி படைத்த விவசாயிகள் கொண்டுள்ள தனியுடைமைக் கண்ணோட்டம் பொருள் நிறைந்தது; அவர்கள் கூட்டுறவு மயமாக்கலை தொடர்ச்சியாக எதிர்த்து வந்துள்ளனர்.

## 10. தொழிலாளி-விவசாயி கூட்டணி

பக்கம் 340-ல், மூன்றாவது, நான்காவது பத்திகள் தொழிலாளி—விவசாயி கூட்டணியின் முக்கியத்துவத்தைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. ஆனால் கூட்டணியை உருவாக்கி உறுதிப் படுத்துவதற்கு முன்பாக என்ன செய்யவேண்டும் என்று கூறத் தவறிவிட்டன. அந்நூல் மீண்டும், விவசாயிகளையும் சிறு வீத உற்பத்தியாளர்களையும் மாற்றுவதைத் துரிதப்படுத்த வேண்டியதன் அவசியத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறது; ஆனால் அந்த நிகழ்முறையை எவ்வாறு முன்னெடுத்துச் செல்வது, ஒவ்வொரு கட்ட மாற்றத்தின் போதும் எப்படிப்பட்ட முரண் பாடுகள் தோன்றும், அவற்றை எவ்வாறு தீர்ப்பது என்பவற்றைப் பற்றிக் குறிப்பிடத் தவறிவிட்டது; அந்த நிகழ்முறைக் காலம் முழுவதும் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் தந்திரோபாயங்கள் பற்றியும் அந்நூல் ஆய்வு செய்யவில்லை.

நமது தொழிலாளி விவசாயிகள் கூட்டணி ஏற்கனவே இரண்டு கட்டங்களைக் கடந்து வந்திருக்கிறது. முதலாவது நிலப் புரட்சியையும் இரண்டாவது கூட்டுறவு இயக்கத்தையும் அடிப்படையாகக் கொண்டது. கூட்டுறவு மயமாக்கலைத் தொடங்காமல் இருந்திருந்தால் தவிர்க்க முடியாதபடி விவசாயிகள் எதிர் எதிர் அணிகளாக திரண்டிருப்பதோடு, தொழிலாளி—விவசாயி கூட்டணி உறுதிப்பட்டிருக்காது. இதன் விளைவாக ''தனியார் உற்பத்தி செய்த பண்டங்களை ஒருங்கிணைவான முறையில் அரசே கொள்முதல் செய்வதும் விற்பனை செய்வதும்''[8] என்ற கொள்கையை செயல்படுத்தி யிருக்க முடியாது. காரணம், அக் கொள்கையை கூட்டுறவு மயமாக்கலின் அடிப்படையில்தான் நிர்வகிக்கவும் முழுமை யாக செயல்படுத்தவும் முடியும். தற்போது எமது தொழிலாளி—விவசாயி கூட்டணி அடுத்த அடியெடுத்து வைத்து

தன்னை இயந்திரமயமாக்கல் அடிப்படையில் நிலை நிறுத்திக் கொள்ள வேண்டியுள்ளது. ஏனெனில், இயந்திரமயமாக்கலின்றி வெறுமனே கூட்டுறவு மற்றும் கம்யூன் இயக்கங்களை மேற் கொள்வதன் மூலம் மட்டுமே கூட்டணியை உறுதிப்படுத்த முடியாது. நாம் இன்னும் கூட்டுறவுகளை மக்கள் கம்யூன்களாக வளர்க்க வேண்டி உள்ளது. நாம் இன்னும் கம்யூன் குழுவின் அடிப்படை உடைமை முறையிலிருந்து கம்யூனின் அடிப்படை உடைமைக்கும், அதை மேற்கொண்டு அரசுடைமை முறைக்கும் வளர்க்க வேண்டியுள்ளது. அரசுடமை முறையும் இயந்திர மயமாக்கலும் ஒன்றிணைக்கப்படும் போது நாம் உண்மை யிலேயே தொழிலாளி-விவசாயி கூட்டணியை உறுதிப்படுத்துவதை துவக்க முடியும்; தொழிலாளி—விவசாயிகளுக்கு இடையிலான வேறுபாடுகளை படிப்படியாகவும் நிச்சயமாகவும் ஒழிக்கமுடியும்.

## 11. அறிவு ஜீவிகளை மாற்றுவது

பக்கம் 341-ல் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளாக உள்ள அறிவு ஜீவிகளின் வளர்ச்சிக்கு உதவும் பிரச்சனைகள் பற்றியும், முதலாளித்துவ அறிவு ஜீவிகளை சோசலிச கட்டு மானத்தில் ஈடுபடுத்தும் பிரச்சனைகள் பற்றியும் குறிப்பாக எழுதப்பட்டுள்ளது. இருப்பினும் அறிவு ஜீவிகளை மாற்றுவது பற்றி அந்நூல் குறிப்பிடவில்லை. முதலாளித்துவ அறிவு ஜீவி களை மட்டும் இன்றி தொழிலாளர் மற்றும் விவசாயிகள் மத்தி யிலிருந்து தோன்றியுள்ள அறிவு ஜீவிகளைக் கூட மாற்ற வேண்டியுள்ளது. ஏனெனில், அவர்கள் பல்வேறு வகைப்பட்ட முதலாளித்துவ செல்வாக்கிற்கு உட்படுகிறார்கள். கலை, இலக்கிய வட்டத்திலிருந்து லியூ-ஷாஓ-டாங் ஒரு படைப்பாளி ஆன பிறகு சோசலிசத்தின் மிகப் பெரிய எதிரியானார் என்பது இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். அறிவு ஜீவிகள் வழக்கமாக அறிவை எப்படி பார்க்கிறார்களோ அப்படியே தங்கள் பொதுக் கண்ணோட்டத்தை வெளிப்படுத்துகிறார்கள். அது தனியான உடைமையா அல்லது பொதுவான உடைமையா? சிலர் அதை, சரியான விலை கிடைக்கும்போது விற்கக்கூடிய, இல்லையெனில் இல்லை என்று சொல்லக் கூடிய விற்பனைக் குரிய தங்களுடைய தனியுடைமை என்று கருதுகின்றனர். அவர் கள், கட்சி ''வெளியே'' உள்ளது, அது ''உள்ளே'' இருப்பவர்

களுக்குத் தலைமை தாங்க முடியாது'' என்று கூறுகின்றனர். அத்தகையவர்கள் வெறும் ''நிபுணர்கள்'' தான்; ''சிவப்பர்கள்''[9] அல்ல. திரைப்படத் துறையில் உள்ளவர்கள், கட்சி திரைப்படத் துறையில் உள்ளவர்களுக்குத் தலைமை அளிக்க முடியாது என்று வாதிடுகின்றனர். இசை அல்லது நாட்டியத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் அதில் கட்சி தலைமை அளிக்க முடியாது என்று கூறுகின்றனர். அணுஅறிவியலில் ஈடுபட்டுள்ளவர்களும் இதையே கூறுகின்றனர். மொத்தத்தில், அவர்கள் அனைவரும் கூறுவது, கட்சி எங்குமே தலைமையளிக்க முடியாது என்பதுதான். சோசலிசப் புரட்சி மற்றும் சோசலிசக் கட்டுமான காலகட்டம் முழுவதும் அறிவு ஜீவிகளை மறுவார்ப்புச் செய்வது மிகவும் முக்கியமான பிரச்சனையாகும். இப்பிரச்சனையைக் குறைத்து மதிப்பிடுவதோ அல்லது முதலாளித்துவ விஷயங்களில் சலுகை மனோபாவத்தை மேற்கொள்வதோ தவறானதாகும்.

மீண்டும் பக்கம் 341-ல் இடைக்கால பொருளாதாரத்தில் உள்ள அடிப்படை முரண்பாடு முதலாளித்துவத்திற்கும் சோசலிசத்திற்கும் இடையிலானதே என்று அந்நூல் கூறுகிறது. சரிதான். ஆனால், இந்தப் பத்தியில் பொருளாதார வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் யார் வெற்றி பெறுவார்கள் என்ற போராட்டத்தை கட்டவிழ்த்து விடுவதைப் பற்றி மட்டுமே குறிப்பிடப்படுகிறது. இவை எதுவுமே முழுமையானது அல்ல. நாம் இதை கீழ்க் கண்டவாறு முன்வைக்கிறோம்: முழுநிறைவான சோசலிசப் புரட்சியானது அரசியல், பொருளாதாரம், சித்தாந்தம் ஆகிய மூன்று துறைகளிலும் முன்னேற வேண்டும்.

நிறுவனங்களின் நிர்வாகத்திலும், அரசிலும் முதலாளித்துவ நிபுணர்கள் பங்கேற்பதைச் சாத்தியமாக்கும் பொருட்டு நாம் அந்நபர்களை ஈர்த்துக் கொள்கிறோம் என்று அந்நூல் கூறுகிறது. பக்கம் 357-ல்* இதுவே திரும்பக் கூறப்பட்டுள்ளது. ஆனால், நாம் முதலாளித்துவ நபர்களை மறுவார்ப்புச் செய்யும் கடமையை வலியுறுத்துகிறோம். அவர்கள் தங்கள் வாழ்க்கை முறையையும், அவர்களுடைய பொதுவான கண்ணோட்டத்தையும், குறிப்பிட்ட பிரச்சனைகள் பற்றிய அவர்களுடைய கண்ணோட்டங்களையும் மாற்றிக்கொள்ள நாம் உதவுகிறோம். ஆனால் மறுவார்ப்பு செய்வதைப் பற்றி அந்நூல் குறிப்பிடவே இல்லை.

* *1967-ம் பதிப்பில் 341-வது பக்கம்.*

## 12. தொழில் மயமாக்கலுக்கும் விவசாய கூட்டுடைமையாக்கலுக்கும் இடையே உள்ள உறவு

அந்நூல் சோசலிச தொழில்மயமாக்கலை விவசாய கூட்டுடைமையாக்கலுக்கு ஒரு முன் நிபந்தனையாக கருதுகிறது. இந்த கண்ணோட்டம், கூட்டு உடைமையாக்கலை 1930-1932 களிலேயே அடிப்படையில் நிறைவு செய்த ரசிய நிலமைகளுக்குக் கூட எந்த விதத்திலும் பொருந்துவதாக இல்லை. இப்போது நம்மிடம் உள்ளதைவிட அப்போது அவர்களிடம் அதிகமான டிராக்டர்கள் இருந்தபோதிலும் இயந்திரமயமாக்கப்பட்ட விவசாயம் மொத்த விவசாய நிலங்களில் 20.3 சதவீதத்திற்கும் குறைவாகவே இருந்தது. கூட்டுடைமையாக்கல் ஒட்டு மொத்தத்தில் இயந்திரமயமாக்கலினால் தீர்மானிக்கப்படுவதில்லை, எனவே தொழில்மயமாக்கல் அதற்கு ஒரு முன் நிபந்தனை அல்ல.

கிழக்கு அய்ரோப்பிய சோசலிச நாடுகளில் விவசாயக் கூட்டுடைமையாக்கல் மிகவும் மெதுவாகவே நிறைவேற்றப்பட்டது. ஏனெனில் நிலச் சீர்த்திருத்தத்திற்குப் பிறகு அவர்கள் காற்றுள்ள போதே தூற்றிக் கொள்வதற்கு மாறாக கொஞ்சகாலம் தாமதித்தனர். நமது சொந்த பழைய தளப்பிரதேசங்கள் சிலவற்றில் கூட விவசாயிகளில் ஒரு பகுதியினர் நிலச் சீர்த்திருத்தத்திலேயே திருப்தியுற்று, மேலும் முன் செல்ல விருப்பமின்றி இருந்தனர். இந்த நிலைமை தொழில் மயமாக்கப்பட்டுள்ளதா இல்லையா என்பதை சார்ந்திருக்கவில்லை.

## 13. யுத்தமும் புரட்சியும்

பக்கம் 352-54-ல், பல்வேறு கிழக்கு அய்ரோப்பிய மக்கள் ஜனநாயக நாடுகளில் ''உள்நாட்டு யுத்தமோ, வெளிநாட்டு ஆயுதம் தாங்கிய தலையீடோ இல்லாமலேயே சோசலிசத்தைக் கட்டமைக்க முடிந்தது'' என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. மேலும் ''இந்நாடுகளில் சோசலிச மாற்றம் உள்நாட்டு யுத்தம் என்ற கடும் சோதனை இன்றி அடையப்பட்டது'' என்றும் வாதிக்கப்பட்டுள்ளது. இந்த நாடுகளில் நடந்தது என்னவென்றால் உள்நாட்டு யுத்தமானது சர்வதேச யுத்தம் என்ற வடிவில் நடத்தப்பட்டது;

அதாவது உள்நாட்டு யுத்தமும் சர்வதேச யுத்தமும் ஒன்றாக நடத்தப்பட்டது என்று கூறுவதுதான் சிறப்பாக இருக்கும். இந்த நாடுகளில் இருந்த பிற்போக்காளர்கள் ரசிய செஞ்சேனையின் காலடியில் புதையுண்டு போயினர். இந்த நாடுகளில் உள்நாட்டு யுத்தம் நடக்கவில்லை என்பது உள்ளடக்கத்தைக் கண்டுகொள்ளாத வெறும் வடிவவாதம் ஆகும்.

புரட்சிக்குப் பிறகு கிழக்கு அய்ரோப்பிய நாடுகளில் ''பாராளு மன்றங்கள் மக்களின் நலன்களைப் பரந்த அளவில் பிரதிநிதித்துவ படுத்தும் அமைப்புக்களாக மாறின'' என்று அந்நூல் கூறுகிறது. உண்மையில் இந்த பாராளுமன்றங்கள் பழைய முதலாளித்துவப் பாராளுமன்றங்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டவையாகும். அவை பெயரில் மட்டுமே ஒத்ததாக இருக்கின்றன. விடுதலைக்குப் பிறகு தொடக்க காலத்தில நாம் வைத்திருந்த அரசியல், ஆலோசனை மாநாட்டிற்கும் தேசியக் கட்சிக் காலத்தில் இருந்த அரசியல் ஆலோசனை மாநாட்டிற்கும் பெயரில் வேறு பாடு இல்லை. நாம் தேசியக் கட்சியினருடன் பேச்சுவார்த்தை நடத்தியபோது மாநாட்டைப் பற்றி நாம் அக்கறை கொள்ள வில்லை; ஆனால் சியாங்கே ஷேக் அதில் மிகுந்த அக்கறையுடன் இருந்தார். விடுதலைக்குப் பிறகு அவர்களுடைய பெயர் பலகையை நாம் எடுத்துக் கொண்டு தேசிய அளவிலான சீன மக்கள் அரசியல் ஆலோசனை மாநாட்டைக் கூட்டினோம்; அது தற்காலிக மக்கள் காங்கிரசாக செயல்பட்டது.[10]

சீனா தனது ''புரட்சிகர போராட்டத்தின் போக்கில் மக்கள் ஜனநாயக அய்க்கிய முன்னணியை உருவாக்கியது'' என்று அந்நூல் கூறுகிறது (பக்கம் 357). ஏன்? ''புரட்சிகர போராட்டம்'' மட்டும்தானா, ''புரட்சிகர யுத்தம்'' அல்லவா? 1927 லிருந்து நாடு தழுவிய வெற்றியை ஈட்டும் வரை நாம் இருபத்திரண்டு ஆண்டுகள் இடையீடு இல்லாத நீண்டகாலம் யுத்தம் நடத்தினோம். அதற்கு முன்பாகக்கூட, 1911-ல் முதலாளித்துவப் புரட்சியில் தொடங்கி அதற்குப்பிறகு 15 ஆண்டுக் காலம் யுத்தம் நடந்தது. ஏகாதிபத்தியங்களின் வழிகாட்டுதலின் கீழ் யுத்த பிரபுக்கள் நடத்திய குழப்பமான யுத்தங்களையும் கணக்கில் கொள்ள வேண்டும். இவ்வாறு 1911 முதல் அமெரிக்க ஆக்கிரமிப்பை எதிர்த்து கொரியாவுக்கு ஆதரவாக நடத்திய யுத்தம் வரை, சீனா தொடர்ச்சியாக 40 ஆண்டுகள் யுத்தம் நடத்தியுள்ளது—புரட்சி யுத்தங்களும், எதிர்ப்புரட்சி யுத்தங்களும் இதில் அடங்கும். நமது கட்சி தோற்று

விக்கப்பட்டதிலிருந்தே சுமார் 30 ஆண்டுகாலமாக அது யுத்தத்தில் பங்கேற்றது அல்லது யுத்தத்தை வழிநடத்தியது.

ஒரு மாபெரும் புரட்சி உள்நாட்டு யுத்தப் பாதையைக் கடந்து செல்லவேண்டும். இது ஒரு நியதி. யுத்தத்தின் ஆதாயங்களை விட்டு விட்டு தீமைகளை மட்டுமே காண்பது ஒரு தலைப் பட்சமான கண்ணோட்டமாகும். ஒரு தலைப் பட்சமாக யுத்தத்தின் அழிவுத் தன்மையைப் பற்றி மட்டுமே பேசுவது மக்கள் புரட்சிக்கு எந்த விதத்திலும் உதவாது.

## 14. பின் தங்கிய நாடுகளில் புரட்சி மிகவும் கடினமானதா?

பல்வேறு மேற்கத்திய நாடுகளில் எந்தவிதமான புரட்சியையோ, ஆக்கபூர்வமான இயக்கத்தையோ முன்னெடுத்துச் செல்ல பெருந்தடை உள்ளது; அதாவது முதலாளித்துவ நஞ்சு ஒவ்வொரு மூலை முடுக்கிற்கும் ஊடுருவும் அளவுக்கு வீரியமிக்கதாய் உள்ளது. நமது நாட்டு முதலாளிகளுக்கு வெறும் மூன்று த்லைமுறைகள்தான் ஆகியுள்ளது; ஆனால், இங்கிலாந்து மற்றும் பிரான்சு முதலாளிகளுக்கு 250-300 ஆண்டு வளர்ச்சி சரித்திரம் உள்ளது; அவர்களுடைய கோட்பாடுகளும் செயல் முறைகளும் அவர்களுடைய சமுதாயத்தின் சகல அம்சங்கள் மீதும் அடுக்குகள் மீதும் செல்வாக்கு செலுத்துகின்றன. ஆகவேதான் இங்கிலாந்து நாட்டு தொழிலாளி வர்க்கம் கம்யூனிஸ்ட் கட்சியைப் பின்பற்றாமல் தொழிற் கட்சியைப் பின்பற்றுகிறது.

''ஒரு நாடு எந்த அளவுக்கு பின்தங்கியதாக இருக்கிறதோ அந்த அளவுக்கு முதலாளித்துவத்திலிருந்து சோசலிசத்திற்கு மாறுவது கடினமாக இருக்கும்'' என்று லெனின் கூறினார். இது இன்று சரியானதல்ல என்று தோன்றலாம். உண்மையில் பொருளாதாரம் எந்த அளவுக்குப் பின் தங்கியதாக இருக்கிறதோ அந்த அளவுக்கு மாற்றம் கடினமற்றதாக இருக்கிறது; ஏனெனில், மக்கள் எந்த அளவுக்கு ஏழைகளாக இருக்கிறார்களோ அந்த அளவுக்கு அதிகமாகப் புரட்சியை விரும்புகிறார்கள். மேற்கத்திய முதலாளித்துவ நாடுகளில் வேலை செய்வோர் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் மிக அதிகமாக இருப்பதைப் போலவே ஊதிய மட்டமும் அதிகமாக உள்ளது. அங்கு உள்ள தொழிலாளர்கள்

முதலாளிகளின் ஆழமான செல்வாக்கிற்கு ஆட்பட்டிருப்பதால் சோசலிச மாற்றம் அந்த அளவுக்கு சுலபமானதாக இல்லை. அங்கு இயந்திர மயமாக்கல் மிக உயர்ந்த அளவில் உள்ளதால் புரட்சி வெற்றி பெற்ற பிறகு மிகப்பெரிய பிரச்சனை மக்களை மாற்றுவதாகத் தான் இருக்குமே ஒழிய இயந்திர மயமாக்கலை முன்னெடுத்துச் செல்வதாக இருக்காது. கிழக்கத்திய நாடுகளான சீனாவும், ரசியாவும் பின்தங்கியனவாகவும், ஏழையாகவும் இருந்தன. ஆனால் இப்பொழுது இவற்றினுடைய சமுதாய அமைப்பு மேற்கத்திய நாடுகளில் உள்ளதைவிட மிக முன்னேறியதாக இருப்பதோடு உற்பத்தி சக்திகளின் வளர்ச்சி விகிதமும் மேற்கத்திய நாடுகளைவிட வெகுதூரம் முந்தியிருக்கிறது. மீண்டும், முதலாளித்துவ நாடுகளினுடைய வளர்ச்சியின் வரலாற்றில், 20-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அமெரிக்கா இங்கிலாந்தை விஞ்சியது போலவும்- ஜெர்மனி இங்கிலாந்தை விஞ்சியது போலவும், பின் தங்கியவை முன்னேறியவற்றை விஞ்சுகின்றன.

## 15. சோசலிச மாற்றத்திற்கு பெருவீதத் தொழில்கள் அடிப்படையானவையா?

''சோசலிசக் கட்டுமானப் பாதையை மேற்கொண்டுள்ள நாடுகள் பெருவீதத் தொழில் வளர்ச்சியை (சோசலிச பொருளாதார மாற்றத்திற்கான அடிப்படை) துரிதப்படுத்த முதலாளித்துவ ஆட்சியின் விளைவுகளாக விளங்குபவனவற்றை எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக ஒழிக்க வேண்டிய கடமையை எதிர்கொண்டுள்ளன'' என்று அந்நூலின் பக்கம் 364-ல்* கூறப்பட்டுள்ளது.'' பெருவீதத் தொழில்களின் வளர்ச்சி சோசலிசப் பொருளாதார மாற்றத்திற்கான அடிப்படை என்று வலியுறுத்துவது போதுமானது அல்ல. பின்தங்கிய உற்பத்தி உறவுகளை மாற்ற புதிய உற்பத்தி சக்திகளின் முழுமையான வளர்ச்சி முன்நிபந்தனை அல்ல என்பதை அனைத்துப் புரட்சிகளின் வரலாறும் காட்டுகிறது. புரட்சிக்கு ஆதரவாக மக்களிடம் புதிய கருத்தை உருவாக்க உதவிய மார்க்சிய—லெனினியப் பிரச்சாரத்துடன் எங்கள் புரட்சி தொடங்கியது. மேலும்

* 1967 பதிப்பின்படி பக்கம் 349.

புரட்சியின் போக்கில் நாங்கள் ஒரு பின்தங்கிய மேல் கட்டுமானத்தைத் தூக்கியெறிந்த பிறகு தான், பழைய உற்பத்தி உறவுகளைத் தகர்க்க முடிந்தது. பழைய உற்பத்தி உறவுகள் தகர்க்கப்பட்ட பிறகு தான் புதியவை படைக்கப்பட்டன; இவை புதிய சமுதாய உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்கு வழிகோலின. இந்தப் பின்னணியில் சமுதாய உற்பத்தி சக்திகளை பெருமளவில் வளர்க்கும் பொருட்டு தொழில் நுட்பப் புரட்சியை முடுக்கிவிடுவது எங்களுக்கு சாத்தியமாகியது. அதே சமயத்தில் உற்பத்தி உறவுகளையும், சித்தாந்தங்களையும் நாங்கள் இன்னும் தொடர்ந்து மாற்ற வேண்டியிருந்தது.

இந்தநூல் பொருளாயத முன் நிபந்தனைகளைப் பற்றி மட்டுமே குறிப்பிடுகிறது. அரசின் வர்க்கத்தன்மை, தத்துவம், விஞ்ஞானம் போன்ற மேல்கட்டுமானம் பற்றிய பிரச்னையில் அபூர்வமாகவே ஆர்வம் காட்டுகிறது; பொருளாதாரத்தின் பிரதான ஆய்வுப் பொருள் உற்பத்தி உறவுகளாகும். அதேபோல அரசியல் பொருளாதாரமும் வரலாற்றுப் பொருள் முதல்வாதக் கண்ணோட்டமும் நெருக்கமான உறவு கொண்டவை, மேல்கட்டுமானம் பற்றிய பிரச்சனையைப் புறக்கணித்தால் பொருளாதார அடித்தளம் மற்றும் உற்பத்தி உறவுகள் பற்றிய பிரச்சனைகளைத் தெளிவாகக் கையாள்வது கடினமாகும்.

## 16. சோசலிசப் பாதையை மேற்கொள்வதன் சிறப்பு அம்சங்கள் பற்றிய லெனின் ஆய்வுகள்

''இந்த அல்லது அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த எடுத்துக் கொண்ட முயற்சிகளுடன் கூடவே குடிமக்களின் உணர்வு மட்டம், அவர்கள் மேற்கொண்ட சோசலிசத்திற்கான பாதையின் தனிச் சிறப்பான அம்சங்களில் பிரதிபலித்தே தீரும்'' என்று, லெனின் எழுத்துக்களிலிருந்து ஒரு பகுதி 376-வது பக்கத்தில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. இது மிகத் தெளிவாக கூறப்பட்டுள்ளது. மேலும் நமது வேலைமுறைகளை உயர்த்திப் பிடிக்க மிகவும் உதவிகரமாக உள்ளது.

''அரசியலை ஆணையில் வைப்பது'' என்ற நமது கோட்பாடு குறிப்பாக நமது சுற்றுப்புறத்தினரின் உணர்வுமட்டத்தை உயர்த்துவதற்கானதாகும். நமது மாபெரும் முன்னோக்கிய பாய்ச்சல்

குறிப்பாக ''இந்த அல்லது அந்த திட்டத்தை நிறைவேற்றுவதற்கான முயற்சியேயாகும்.''

## 17. தொழில் மயமாக்கலின் விகிதம் ஒரு கடுமையான பிரச்சனை

''ரசியாவைப் பொருத்தமட்டில் தொழில் மயமாக்கலின் விகிதம் ஒரு கடுமையான பிரச்சனை'' என்று அந்நூல் கூறுகிறது. தற்சமயம் இது சீனாவுக்கும் கூட ஒரு கடுமையான பிரச்சனையே. உண்மையில் தொழிற்துறை எந்த அளவுக்குப் பின் தங்கியுள்ளதோ அந்த அளவுக்கு இப்பிரச்சனை அதிகக் கடுமையானது. இது ஒரு நாட்டிற்கும் இன்னொரு நாட்டிற்கும் மட்டுமல்லாது, ஒரே நாட்டில் உள்ள ஒரு பகுதிக்கும் இன்னொரு பகுதிக்கும் கூட பொருத்தமான உண்மையாகும். உதாரணமாக, நமது வடகிழக்கு மாநிலங்களிலும் ஷாங்கையிலும் ஒப்பீட்டளவில் உறுதியான அடித்தளம் உள்ளதால், அங்கு ஓரளவுக்கு குறைந்த வேகத்தில் தான் அரசு முதலீடு அதிகரித்தது. மற்ற பகுதிகளில் எங்கு ஏற்கனவே முதலீடு குறைவாக இருந்து வளர்ச்சி மிகவும் அவசரமாகத் தேவைப்பட்டதோ அங்கு அரசு முதலீடு மிக வேகமாக அதிகரித்தது. ஷாங்கை விடுதலை செய்யப்பட்ட பத்து ஆண்டுகளில் சுமார் 2.2 மில்லியன் சீன டாலர்கள்[11] முதலீடு செய்யப்பட்டன; அதில் 500 மில்லியன் டாலருக்கு மேல் முதலாளிகளால் செய்யப்பட்டது. ஷாங்கையில் சாதாரணமாக அரை மில்லியன் தொழிலாளர்களுக்கு மேல் இருப்பர்; இப்போது அங்கிருந்து வெளியிடங்களுக்கு மாற்றப்பட்ட நூறாயிரக் கணக்கானவர்களைக் கணக்கில் கொள்ளாமல் பார்த்தால்கூட அந்நகரத்தில் ஒரு மில்லியனுக்கு மேல் உள்ளனர். இது முந்தைய தொழிலாளர் தொகையைப் போல் இரண்டு மடங்காகும். தொழிலாளர் எண்ணிக்கை பெருமளவில் அதிகரித்த சில புதிய நகரங்களுடன் இதை ஒப்பிட்டால், குறைவான தொழில் அடிப்படை இருந்த பகுதிகளில் விகிதம் பற்றிய பிரச்சனை மிகக் கடுமையாக உள்ளது என்பதை நாம் தெளிவாகக் காணமுடியும். இங்கு அரசியல் சூழ்நிலைமை உயர்ந்த விகிதத்தைக் கோருகிறது என்று மட்டுமே அந் நூல் கூறுகிறது, ஆனால் சோசலிச அமைப்பால் உயர்ந்த விகிதத்தை அடையமுடியுமா, இல்லையா என்பதை விளக்கவில்லை. இது ஒருதலைப் பட்சமானது. எனக்குச் சொல்லுங்கள்:

தேவை மட்டும் இருந்து அதற்கான திறன் இல்லையெனில் உயர்ந்த விகிதத்தை எவ்வாறு அடையமுடியும்?[12]

## 18. சிறிய, நடுத்தர மற்றும் பெருவீதத்தொழில் நிறுவனங்களை ஒருங்கிணைந்த முறையில் வளர்ப்பதன் மூலம் உயர்ந்தபட்ச தொழில் வளர்ச்சி விகிதத்தைச் சாதிப்பது

பக்கம் 381-ல் அந்நூல் நம்முடைய சிறிய மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் பரவலான வளர்ச்சியைப் பற்றி மேலோட்டமாகக் குறிப்பிடுகிறது; ஆனாலும் உள்நாட்டு, வெளி நாட்டு, சிறிய நடுத்தர மற்றும் பெருவீதத்தொழில் நிறுவனங்களை ஒருங்கிணைந்த முறையில் ஊக்குவிப்பது பற்றிய நமது தத்துவத்தை துல்லியமாக பிரதிபலிக்கத் தவறிவிட்டது. ''மிகப் பின்தங்கிய தொழில்நுட்பப் பொருளாதாரம், நமது மக்கள் தொகையின் அளவு, மிகக் கடுமையான வேலைவாய்ப்புப் பிரச்சனை ஆகிய வற்றின் காரணமாக நாம் சிறிய மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை மிகப் பெரும் அளவில் வளர்க்கத் தீர்மானித் தோம்'' என்று அந்நூல் கூறுகிறது. ஆனால் பிரச்சனை தொழில் நுட்ப வளர்ச்சியின் அளவு, மக்கள் தொகையின் அளவு, வேலை வாய்ப்பை அதிகரிக்க வேண்டியதன் அவசியம் ஆகியவற்றில் இல்லை. பிரதானமாக உயர்விகிதத் தொழில் வளர்ச்சியை அடைவதற்காக நாம் பெரும் தொழில் நிறுவனங்களின் வழி காட்டுதலின் கீழ் சிறிய மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களை வளர்க்கிறோம்; உள்நாட்டு முறைகளை வெளிநாட்டு முறைகளின் வழிகாட்டுதலின் கீழ் எங்கெல்லாம் சாத்தியமோ அங்கெல்லாம் மேற்கொண்டு வருகிறோம்.

## 19. இருவகை சோசலிச உடைமைமுறை களுக்கிடையில் நீண்டகாலத்திற்கு சகவாழ்வு சாத்தியமா?

''இரு வேறுபட்ட அடித்தளங்கள் மீது ஒரு சோசலிச அரசை யும் சோசலிச கட்டுமானத்தையும் எவ்வளவு காலமானாலும்

நிறுவமுடியாது. அதாவது, அவற்றை பிரம்மாண்டமாக உயர்ந்த பட்சம் ஒன்றிணைக்கப்பட்ட சோசலிசத் தொழில் அடித்தளம் மற்றும் சிதறிக்கிடக்கும் பிற்போக்கான சிறு வீத விவசாயப் பண்ட பொருளாதார அடித்தளம் ஆகியவற்றின் மீது நிறுவமுடியாது'' என்று பக்கம் 386 கூறுகிறது. இதில் ஒருவகையில் பிரச்சனையின் சாரம் மிகச் சரியாகக் கையாளப்பட்டுள்ளது; எனவே கீழ்க்காணும் முடிவுகளை அடையும் வகையில் நாங்கள் இவ்வாதத்தை விரிவு படுத்துகிறோம் : அனைத்து மக்களின் உடைமை முறை, கூட்டு உடைமை முறை ஆகிய இரு வேறுபட்ட உடைமை முறைகளின் அடிப்படைகள் மீது சோசலிச அரசையும் சோசலிச கட்டுமானத்தையும் எவ்வளவு காலமானாலும் நிர்மாணிக்க முடியாது.

ரசியாவில் இந்த இரண்டு விதமான உடைமை முறைகளுக்கு இடையிலான சக வாழ்வுக் காலகட்டம் மிகவும் நீடித்து விளங்கியது. அனைத்து மக்களின் உடைமை முறைக்கும் கூட்டு உடைமை முறைக்கும் இடையிலான முரண்பாடுகள் உண்மையில் தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் இடையிலான முரண்பாடுகளே ஆகும். அந்நூல் இதுபோன்ற முரண்பாடுகளை அங்கீகரிக்கத் தவறுகிறது.

அதே போன்று, அனைத்து மக்கள் உடைமைமுறை கூட்டு உடைமை முறை ஆகியவற்றின் நீண்டகால சகவாழ்வு கொஞ்சம் கொஞ்சமாக உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்கு இசைவற்றதாக மாறுவதோடு, தொடர்ந்து அதிகரித்து வரும் விவசாயிகளின் நுகர்வுத்தேவைகள் மற்றும் விவசாய உற்பத்தித் தேவைகளை அல்லது தொழிற் சாலைகளின் கச்சாப் பொருள் தேவைகளை நிறைவு செய்யத் தவறிவிடும். இத்தகைய தேவைகளை நிறைவு செய்ய, நாம் இந்த இரண்டுவகை உடைமைமுறைகளுக்கு இடையிலான முரண்பாடுகளை தீர்த்து கூட்டு உடைமைமுறையை அனைத்து மக்களின் உடைமைமுறையாக மாற்றி, ஒரு பகுக்க முடியாத தேசத்தின் அனைத்து மக்களின் உடைமை என்ற அடிப்படையில் தொழிலிலும் விவசாயத்திலும் உற்பத்தி மற்றும் பங்கீட்டிற்கான ஒரு ஒருங்கிணைந்த திட்டத்தை உருவாக்க வேண்டும்.

உற்பத்தி சக்திகள் மற்றும் உற்பத்தி உறவுகளுக்கிடையிலான முரண்பாடுகள் தங்கு தடையின்றி வெளிப்படுகின்றன. ஒரு சமயம் உற்பத்தி சக்திகளுடன் ஒத்துப் போன உறவுகள் கொஞ்ச காலத்திற்குப் பிறகு அப்படி இல்லாமற் போய்விடும்.

சீனாவில் நாம் மிக முன்னேறிய கூட்டுறவுகளை ஒழுங்கமைத்த பிறகு, பெரிய மற்றும் சிறிய அலகுகள் இரண்டையும் வைத்திருப்பது பற்றிய பிரச்சனை ஒவ்வொரு சிறப்பு மாவட்டத்திலும் ஒவ்வொரு பகுதியிலும் முன்னுக்கு வந்தது.

சோசலிச சமுதாயத்தின் வகைக் கூறுகளான உழைப்புக்கேற்ற பங்கீடு, பண்ட உற்பத்தி, மதிப்பு விதி ஆகியவை தற்போதுள்ள உற்பத்தி சக்திகளின் தேவைகளுக்கு ஏற்ப தகவமைக்க பட்டுள்ளன. ஆனால் இந்த வளர்ச்சி தொடரும் போது இவ்வகை கூறுகளை ஏற்றுக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லாத நாள் ஒன்று கண்டிப்பாக வரும். அச் சமயத்தில், இந்த வகைக் கூறுகள் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியினால் அழிக்கப்படும்; அவற்றின் ஆயுட் காலம் முடிந்துவிடும். சோசலிச சமுதாயத்தில் இருக்கும் பொருளாதார வகைக்கூறுகள் நிரந்தரமானவை மாற்றமுடியாதவை என்று நாங்கள் நம்ப வேண்டுமா? உழைப்பிற்கேற்ற பங்கீடு மற்றும் கூட்டுடைமைமுறை போன்ற வகைக் கூறுகள், வரலாற்று பூர்வமாக (எனவே ஒப்பீட்டளவில்) உள்ள இதர வகைக்கூறுகள் போல் அன்றி நிரந்தரமானவை என்று நாங்கள் நம்பவேண்டுமா?

## 20. விவசாயத்தில் சோசலிச மாற்றம் இயந்திர மயமாக்கலை மட்டுமே சார்ந்திருக்க முடியாது

''விவசாயத்தில் சோசலிச மாற்றத்தை கொண்டு வருவதற்கு இயந்திரங்களும் டிராக்டர் நிலையங்களும் முக்கியமான சாதனங்களாகும்'' என்று பக்கம் 392-ல் அந்நூல் கூறுகிறது. இம் மாற்றத்திற்கு இயந்திரங்கள் எவ்வளவு முக்கியமானவை என்பதை அந்நூல் மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறது. ஆனால், விவசாயிகளின் உணர்வு மட்டம் உயர்த்தப்படாவிட்டால், சித்தாந்தம் மாற்றப்படாவிட்டால், நீங்கள் இயந்திரங்களைத் தவிர வேறு எதையும் சாராதிருந்தால் — அது என்ன நன்மையைத் தரும்? சோசலிசம், முதலாளித்துவம் ஆகிய இரண்டு பாதைகளுக்கிடையிலான போராட்டம், மக்களை மாற்றி அமைப்பது மறுகல்வி அளிப்பது ஆகிய பிரச்சனைகள் தான் சீனாவின் மிகப்பெரிய பிரச்சனைகளாகும்.

கூட்டுடைமையாக்குவதற்கான பொதுவான தொடக்கப் பணி களைச் செய்ய முற்படும்போது எதிர்ப்புணர்ச்சி உள்ள பணக்கார விவசாயிகளுக்கு எதிரான போராட்டம் பற்றிய பிரச்சனை முன்னுக்கு வருகிறது என்று பக்கம் 395-ல் அந்நூல் கூறுகிறது; ஒரு வகையில் இதுசரியே. ஆனால், கூட்டுறவுகள் அமைக்கப்பட்ட பிறகு கிராமப் புறங்களின் நிலைமைகளைப் பற்றிய மதிப்பீட்டில், வளமான சமூக அடுக்கு பற்றிய பிரச்சனை அறவே விடப்பட்டுவிட்டது; அதே போல் அரசுக்கும், கூட்டுடைமை முறைக்கும், தனிநபர்களுக்கும் இடையிலான முரண்பாடுகள் பற்றியோ, சேமிப்புக்கும் நுகர்வுக்கும்[13] இடையிலான முரண்பாடு பற்றியோ கூட ஒன்றும் குறிப்பிடப்படவில்லை.

''விவசாய கூட்டுறவு இயக்கத்தின் உச்ச கட்டத்தில் நடுத்தர விவசாயிகளில் பெருந்திரளான மக்கள் மீண்டும் ஊசலாட மாட்டார் கள்'' என்று பக்கம் 395-ல் அந்நூல் கூறுகிறது. இது மிகவும் பொதுவானது. பணக்கார, நடுத்தர விவசாயிகளில் ஒரு பகுதியினர் தற்போது ஊசலாடிக் கொண்டிருக்கின்றனர், எதிர் காலத்திலும் அவ்வாறே செய்வர்.

## 21. சொல்லிக் கொள்ளப்படுகின்ற முழுமையான உறுதிப்படுத்தல்

''...கூட்டுப் பண்ணைமுறை முழுமையாக உறுதிப்படுத்தப் பட்டுவிட்டது'' என்று பக்கம் 407-ல் அந்நூல் கூறுகிறது. ''முழுமையாக உறுதிப்படுத்துதல்''- இச் சொற்றொடர் ஒருவரை அதிருப்தியடையச் செய்கிறது. எதையும் உறுதிபடுத்துவது என்பதே ஒப்பீட்டளவிலானது. அது எப்படி ''முழுமையான''தாக இருக்க முடியும்? மனித இனம் தோன்றியதிலிருந்து ஒருவரும் இறக்க வில்லை என்றால், ஒவ்வொருவரும் ''முழுமையாக உறுதிப் படுத்தப்பட்டு'' இருந்தால் என்னவாயிருக்கும்? அது எப்படிப் பட்ட உலகமாக இருந்திருக்கும்! இந்த அண்டவெளியில், நமது பூமி உருண்டையின் மீது எல்லாப் பொருட்களும் முடிவில்லாமல் தோன்றுகின்றன, வளர்கின்றன, மறைகின்றன. அவற்றில் எதுவுமே எப்போதுமே ''முழுமையாக உறுதிப் படுத்தப்பட வில்லை.'' ஒரு பட்டுப் பூச்சியின் வாழ்க்கையை எடுத்துக் கொள்ளுங்கள், இறுதியில் அது மறைய வேண்டும் என்பது மட்டு

மல்லாமல், அது தன் வாழ்நாளில் முட்டை, பட்டுப் புழு, கூட்டுப் புழு, அந்துப் பூச்சி ஆகிய நான்கு வளர்ச்சிக் கட்டங்களைக் கடக்க வேண்டும். அது ஒரு கட்டத்திலிருந்து அடுத்த கட்டத்திற்கு தொடர்ந்து நகர்ந்து கொண்டே இருக்க வேண்டுமேயொழிய, எந்த ஒரு கட்டத்திலும் தன்னை முழுமையாக உறுதிப்படுத்திக் கொள்ளவே முடியாது. இறுதியில் அந்துப் பூச்சி இறக்கிறது, அதன் பழையசாரம் புதிய சாரமாக மாறுகிறது (அது தனக்குப் பின்னால் பல முட்டைகளை விட்டுச் செல்வதால்). இது ஒரு குணாம்ச ரீதியான பாய்ச்சல். இயல்பாகவே முட்டையிலிருந்து பட்டுப்புழு, பட்டுப் புழுவிலிருந்து கூட்டுப்புழு, கூட்டுப் புழுவி லிருந்து அந்துப் பூச்சி ஆகியன மிகத் தெளிவாகவே அளவு மாற்றத்தைவிட உயர்ந்த ஒன்றாகும். இதில் குணாம்ச ரீதியான மாற்றமும் உள்ளது, ஆனால் அது பகுதியளவான (partial) குணாம்ச மாற்றமாகும். மனிதர்கள்கூட, வாழ்க்கையின் வளர்ச்சிப்போக்கில் மரணத்தை நோக்கி முன்னேறும்போது குழந்தை, சிறுவர், இளைஞர், நடுத்தர வயதினர், முதியவர் போன்ற பல்வேறு கட்டங்களை எதிர்கொள்கின்றனர். மக்களுக்கு பிறப்பு முதல் இறப்பு வரை ஒரு அளவு ரீதியான மாற்றப்போக்கு உள்ளது; ஆனால் அதே சமயம் அவர்கள் ஒரு குறிப்பிட்ட அளவு குணாம்ச ரீதியான மாற்றப் போக்கினூடாகவே முன்னேறுகின் றனர். இளமை முதல் முதுமை வரை குணாம்ச ரீதியான மாற்ற மின்றி வெறும் அளவுரீதியான மாற்றம் மட்டுமே உள்ளது என்று கருதுவது நகைப்புக்குரியதாக இருக்கும். மனிதஉடல் உறுப்புகளில் இடையறாது உயிரணுக்கள் பிளவுறுகின்றன; பழையன இறக் கின்றன, மறைகின்றன; புதியன தோன்றுகின்றன, வளர்கின்றன. இவை இடையறாது நடைபெறுகின்றன. மரணத்தில் ஒரு முழுமை யான குணாம்ச ரீதியான மாற்றம் உள்ளது; இது இதற்கு முந்தைய அளவு ரீதியான மாற்றத்தின்போது நிகழ்ந்த அளவு ரீதியான மாற்றம் மற்றும் பகுதியளவான குணாம்ச ரீதியான மாற்றம் ஆகியவற்றால் விளைந்தது. அளவு ரீதியான மாற்றமும் குணாம்ச ரீதியான மாற்றமும் எதிரெதிரான அம்சங்களின் ஒற்றுமையாகும். அளவு ரீதியான மாற்றங்களுக்குள்ளேயே பகுதியளவான குணாம்ச ரீதியான மாற்றங்கள் நிகழ்கின்றன. அளவு ரீதியான மாற்றத்திற்குள்ளாகவே குணாம்ச ரீதியான மாற்றமே இல்லை என்று யாரும் கூறமுடியாது. அதேபோல் குணாசம் ரீதியான மாற்றங்களுக்குள்ளேயே அளவு ரீதியான

மாற்றங்கள் உள்ளன. குணாம்ச ரீதியான மாற்றங்களில் அளவு ரீதியான மாற்றங்கள் இல்லை என்று யாரும் கூறமுடியாது.

எந்தவொரு நீண்ட மாற்றப்போக்கிலும் இறுதியாக குணாம்ச ரீதியான மாற்றத்தை அடைவதற்கு முன்பாக அப்பொருள் இடையீடின்றி அளவு ரீதியான மாற்றங்களையும் ஏராளமான பகுதியளவான குணாம்ச ரீதியான மாற்றங்களையும் கடந்து சென்றாக வேண்டும். ஆனால், பகுதியளவான குணாம்ச ரீதியான மாற்றங்களும் குறிப்பிடத்தக்க அளவு ரீதியான மாற்றங்களும் இன்றி இறுதியான குணாம்ச ரீதியான மாற்றம் ஏற்பட முடியாது. உதாரணமாக, ஒரு குறிப்பிட்ட வகைப்பட்ட இயந்திர சாதனங்களை கொண்ட ஆலையும் அதன் வடிவளவும் அதன் இயந்திரங்களும் மற்ற அமைப்புகளும் ஒவ்வொரு பகுதியாக புதுப்பிக்கப்படும் போது குணாம்ச ரீதியாக மாற்றமடைகிறது. வெளிப்புறமும் வடிவளவும் மாறவில்லை எனினும் உட்புறம் மாறுகிறது. ஒரு வீரர்களின் படைப்பிரிவும் இதிலிருந்து மாறுபட்டது அல்ல. ஒரு யுத்தத்தில் ஈடுபட்டு பல டஜன் கணக்கான வீரர்களை அது இழந்த பிறகு நூறு வீரர்களைக் கொண்ட படைப்பிரிவு அதன் இழப்பை ஈடு செய்ய வேண்டியுள்ளது. தொடர்ச்சியாக யுத்தத்தில் ஈடுபடுவது, இழப்பை ஈடு செய்வது — இவ்வாறுதான் ஒரு படைப்பிரிவு இடையீடின்றி பகுதியளவான குணாம்ச ரீதியான மாற்றத்திற்கு உள்ளாகிறது. இதன் விளைவாக படைப்பிரிவு தொடர்ச்சியாக வளர்ந்து உறுதியடைகிறது.

சியாங்கே-ஷேக்கின் அழிவு ஒரு அளவு ரீதியான மாற்றத்தின் மூலம் ஏற்பட்ட குணாம்ச ரீதியான மாற்றமாகும். உதாரணமாக, அவனுடைய இராணுவத்தையும் அரசியல் அதிகாரத்தையும் ஒவ்வொரு பகுதியாக அழிப்பதற்கு மூன்றரையாண்டுக் காலம் தேவைப்பட்டது. இந்த அளவு ரீதியான மாற்றத்திற்குள்ளேயே குணாம்ச ரீதியான மாற்றத்தையும் காணலாம். விடுதலைக்கான யுத்தம், பல்வேறுபட்ட கட்டங்களைக் கடந்து சென்றது ஒவ்வொரு புதிய கட்டமும் அதற்கு முந்தைய கட்டங்களிலிருந்து குணாம்ச ரீதியாக மாறுபட்டது. தனிநபர் பொருளாதாரத்திலிருந்து கூட்டுப் பொருளாதாரத்திற்கான மாற்றம் ஒரு குணாம்ச ரீதியான மாற்றப் போக்காகும். நமது நாட்டில் இந்த மாற்றப் போக்கு பரஸ்பர உதவிக் குழுக்கள், ஆரம்ப கட்ட கூட்டுறவுகள், முன்னேறிய கூட்டுறவுகள், மக்கள் கம்யூன்கள் ஆகியவற்றைக் கொண்டதாக இருந்தது[14], இது போன்ற பல்வேறு கட்டங்களைக்

கொண்ட பகுதியளவான குணாம்ச மாற்றம், தனிநபர் பொருளாதாரத்திலிருந்து கூட்டுப் பொருளாதாரத்தை உருவாக்கியது.

நமது நாட்டில் நிலவும் சோசலிசப் பொருளாதாரம் அனைத்து மக்களின் உடைமைமுறை மற்றும் கூட்டு உடைமைமுறை ஆகிய இருவேறுபட்ட பொதுவுடைமை அமைப்பு முறைகள் மூலம் ஒழுங்கமைக்கப்பட்டது. இந்த சோசலிச பொருளாதாரம் அதற்கே உரிய தோற்றத்தையும் வளர்ச்சியையும் கொண்டதாகும். இந்த மாற்றப் போக்கு ஒரு முடிவுக்கு வந்துவிட்டது; எனவே ''இந்த இரண்டுவகை உடைமை முறைகளும் இனி வரும் எல்லா காலத்திற்கும் முழுமையாக உறுதிப்பட்டு நீடித்திருக்கும்'' என்று நாம் கூறினால் யார் நம்புவார்கள்? ''உழைப்புக்கேற்ற பங்கீடு'', ''பண்ட உற்பத்தி'' மற்றும் ''மதிப்பு விதி'' போன்ற சோசலிச சமுதாயத்தின் சூத்திரங்கள் என்றென்றைக்கும் நிலைத்திருக்கும் என்றால் யார் நம்புவார்கள்? வெறும் தோற்றமும் வளர்ச்சியும் மட்டுமே இருக்கும், இறப்பும் மாற்றமும் இருக்காது என்றும் மற்றவைகளைப் போல் அல்லாமல் இந்த சூத்திரங்கள் வரலாற்று விதிகளுக்கு அப்பாற்பட்டது என்றும் கூறினால் யார் நம்புவார்கள்?

சோசலிசம் கம்யூனிசமாக மாறும். அச் சமயத்தில் சோசலிச கட்டத்திற்கான பல விசயங்கள் இறந்துபட வேண்டியதிருக்கும். மேலும், கம்யூனிச கால கட்டத்திலும்கூட இடையீடற்ற வளர்ச்சி இருக்கும். கம்யூனிசம் பல்வேறுபட்ட கட்டங்களைக் கடந்து செல்ல வேண்டி இருக்கலாம். ஒருமுறை கம்யூனிசத்தை அடைந்தவுடனே எதுவும் மாறாது என்றும் ''முழுமையாக உறுதிப்படுத்தப்பட்டு'' யாவும் தொடர்ந்து நீடிக்கும் என்றும் அளவு ரீதியான மாற்றம் மட்டுமே இருக்கும், தொடர்ந்து எப்போதும் பகுதியளவான குணாம்ச ரீதியான மாற்றம் எதுவும் இருக்காது என்றும் நாம் எவ்வாறு கூற முடியும்?

ஒரு கட்டம் வேறு ஒரு கட்டத்திற்கு இட்டுச் செல்வதும், இடையீடின்றி முன்னோக்கிச் செல்வதும் பொருட்களின் வளர்ச்சி முறையாகும். ஆனால் ஒவ்வொரு கட்டத்திற்கும் ஒரு ''எல்லை'' உண்டு. ஒவ்வொரு நாளும் நாம் நான்கு மணியிலிருந்து படிக்கத் துவங்கி ஏழு அல்லது எட்டு மணிக்கு முடிக்கிறோம் என்று கூறுகிறோம். அது தான் எல்லை. சோசலிச சித்தாந்த மறுவார்ப்பு என்பதைப் பொருத்த வரையில், அது ஒரு நீண்டகாலப் பணி.

ஆனால் ஒவ்வொரு சித்தாந்த இயக்கமும் அதன் முடிவை எய்து கிறது, அதாவது அதற்கு ஒரு எல்லை உண்டு. சித்தாந்த அரங் கில், நாம் இடையீன்றி அளவு ரீதியான மாற்றங்களுக்கும், பகுதி யளவான குணாம்ச மாற்றங்களுக்கும் உட்பட்டுவரும் போது, முதலாளித்துவ சித்தாந்தத்தின் செல்வாக்கிலிருந்து நாம் முழுமை யாக விடுபடும் அந்த நாள் வரும். அந்தநேரத்தில் சித்தாந்த மறுவார்ப்பின் குணாம்ச ரீதியான மாற்றங்கள் முடிவுக்கு வரும், ஆனால் அது ஒரு புதிய குணாம்சத்தினுடைய அளவு ரீதியான மாற்றங்களின் தொடக்கமாகவே இருக்கும்.

சோசலிச கட்டுமானத்திற்கும்கூட ஒரு எல்லை உண்டு. நாம் அட்டவணைகளை தயாரிக்க வேண்டும்: உதாரணமாக, மொத்த உற்பத்தியில் தொழில் துறைப் பொருட்களின் விகிதம் என்னவாக இருக்க வேண்டும், எவ்வளவு எஃகு உற்பத்தி செய்ய வேண்டும், மக்களின் வாழ்க்கைத் தரத்தை எந்த அளவுக்கு உயர்த்த முடியும் போன்றவை. சோசலிச கட்டுமானத்திற்கு ஓர் எல்லை உண்டு என்பதன் பொருள் கம்யூனிசத்திற்கு மாற நாம் அடுத்த அடி எடுத்து வைக்க விரும்பவில்லை என்பதல்ல. முதலாளித்துவத்தி லிருந்து கம்யூனிசத்திற்கான மாற்றத்தை இரண்டு கட்டங்களாகப் பிரிக்கலாம். ஒன்று முதலாளித்துவத்திலிருந்து சோசலிசம், இதை நாம் பின் தங்கிய சோசலிசம் என்று அழைக்கலாம்; மற் றொன்று சோசலிசத்திலிருந்து கம்யூனிசத்திற்கு, அதாவது ஒப் பீட்டளவில் பின் தங்கிய சோசலிசத்திலிருந்து ஒப்பீட்டளவில் வளர்ச்சியடைந்த சோசலிசத்திற்கு, அதாவது கம்யூனிசத்திற்கு. இந்த பிந்தைய கட்டம் முந்தையதைவிட நீண்டகாலம் கொண்ட தாக இருக்கலாம். ஆனால் அந்த கட்டத்தை ஒரு முறை கடந்த பிறகு, பொருள் உற்பத்தியும் ஆன்மீக வளமும் மிகவும் தாராள மாக இருக்கும். மக்களின் கம்யூனிச உணர்வு மிகப் பெரும் அள வில் வளர்ந்திருக்கும்; அவர்கள் கம்யூனிசத்தின் மிக உயர்ந்த கட்டத்திற்குள் அடியெடுத்து வைக்கத் தயாராக இருப்பர்.

சோசலிச உற்பத்தி முறைகள் உறுதியாக நிறுவப்பட்ட பிறகு உற்பத்தி ஒரே சீராகவும் வேகமாகவும் விரிவடையும். உற்பத்தி திறன் விகிதம் ஒரே சீராக உயரும் என்று பக்கம் 409-ல் கூறப் படுகிறது. 'ஒரே சீராக' அல்லது 'இடையீடின்றி' என்ற பதங்களை அந்நூல் திரும்பத் திரும்பப் பல முறை பயன்படுத்துகிறது, ஆனால் அளவு ரீதியான மாற்றத்தைப் பற்றி குறிப்பிடுவதற்கு

மட்டுமே பயன்படுத்துகிறது. பகுதியளவான குணாம்ச மாற்றத்தைப் பற்றி அது அரிதாகவே குறிப்பிடுகிறது.

## 22. யுத்தமும் சமாதானமும்

முதலாளித்துவ சமுதாயங்களில் ''உபரி உற்பத்தி என்ற நெருக்கடி தவிர்க்க முடியாதபடி தோற்றுவிக்கப்படும், அதன் காரணமாக வேலையின்மை அதிகரிக்கும்'' என்று பக்கம் 408-ல் அந்நூல் கூறுகிறது. இதில்தான் யுத்தம் சூல் கொண்டிருக்கிறது. முதலாளித்துவ நிறுவனங்கள் தொடர்ந்து நீடிக்கும் உலகத்தில் மார்க்சிய பொருளாதாரத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் திடீர் என்று செயலற்றுப் போய்விடும் என்றும் யுத்தத்தை முழுமையாக ஒழித்துவிட முடியும் என்றும் கூறுவதை நம்புவது கடினமே.

யுத்தத்தை நிரந்தரமாக ஒழிக்கும் சாத்தியக் கூறுகள் தோன்றி விட்டன என்று கூறமுடியுமா? உலகத்தின் அனைத்து செல்வங்களையும் வளங்களையும் மனித இனத்தின் மேம்பாட்டுக்காகவே ஈடுபடுத்தும் சாத்தியக் கூறுகள் தோன்றிவிட்டன என்று கூற முடியுமா? இந்தக் கண்ணோட்டம் மார்க்சியமல்ல; இதில் வர்க்கப் பகுப்பாய்வு இல்லை; மேலும் இது முதலாளித்துவ ஆட்சி மற்றும் பாட்டாளி வர்க்க ஆட்சியின் கீழ் உள்ள நிலைமைகளைத் தெளிவாக வேறுபடுத்திப் பார்க்கவில்லை. நீங்கள் வர்க்கங்களை ஒழிக்கவில்லை என்றால், யுத்தத்தை எவ்வாறு ஒழிக்க முடியும்?

ஒரு உலக யுத்தத்தை நடத்துவதா இல்லையா என்பதைத் தீர்மானிப்பது நாமாக இருக்க முடியாது. ஒரு போர் மறுப்பு உடன்படிக்கை கையெழுத்தானால் கூட யுத்தத்திற்கான சாத்தியக் கூறுகள் தொடர்ந்து நீடிக்கும். ஏகாதிபத்தியம் போரிட விரும்பினால், அது எந்த ஒப்பந்தத்தையும் கணக்கில் கொள்ளாது. மேலும், யுத்தம் வந்தால் அணுகுண்டு பயன்படுத்தப்படுமா, ஹைட்ரஜன் குண்டு பயன்படுத்தப்படுமா என்பது மற்றொரு பிரச்சனையாகும். இரசாயன ஆயுதங்கள் கைவசம் இருந்த போதும், யுத்த காலத்தில் அவை பயன்படுத்தப்படவில்லை; வழக்கமான ஆயுதங்கள்தான் பயன்படுத்தப்பட்டன. இரண்டு முகாம்களுக்கிடையில் யுத்தம் இல்லை என்ற போதிலும், முதலாளித்துவ உலகத்திற்குள்ளாகவே யுத்தம் நடக்காது என்பதற்கு எவ்வித உத்திரவாதமும் இல்லை. ஏகாதிபத்தியம்

ஏகாதிபத்தியத்தின் மீது போர் தொடுக்கலாம். ஒரு ஏகாதிபத்தியத்தின் முதலாளி வர்க்கம் அதன் பாட்டாளி வர்க்கத்தின் மீது போர் தொடுக்கலாம். இப்போதுங் கூட ஏகாதிபத்தியம் காலனி மற்றும் அரைக்காலனிகள் மீது போர் நடத்திக் கொண்டிருக்கிறது. யுத்தம் என்பது ஒரு வகையான வர்க்கப் போராட்டமாகும். ஆனால், ஒரு யுத்தத்தின் மூலமாக அல்லாமல் வர்க்கங்களை ஒழிக்கமுடியாது, அத்துடன் வர்க்கங்களை ஒழிப்பதன் மூலம் அல்லாமல் யுத்தத்தை நிரந்தரமாக ஒழிக்கமுடியாது. புரட்சிகரமான யுத்தத்தை நடத்தாமல் வர்க்கங்களை ஒழிக்க முடியாது. வர்க்கங்களை அழிக்காமல் யுத்த தளவாடங்களை அழிக்கமுடியும் என்று நாம் நம்பவில்லை. அது சாத்தியமில்லை. வர்க்க சமுதாயங்களின் வரலாற்றில் எந்த வர்க்கமும் அல்லது அரசும் ''தனது பலத்தின் மேலாண்மையைப்'' பற்றித்தான் அக்கறை கொள்ளும். அந்த நிலைமையை அடைவதுதான் வரலாற்றின் தவிர்க்கவியலாத நிகழ்முறையாக இருந்து வந்துள்ளது. ஒரு வர்க்கத்தின் உண்மையான பலத்தின் பருண்மையான சின்னமாக ஆயுதப்படைகள் திகழ்கின்றன. அத்துடன், வர்க்கப் பகைமை நீடிக்கும் வரை ஆயுதப்படைகள் இருக்கும். இயற்கையாகவே, நாம் போரை விரும்பவில்லை, நாம் அமைதியை விரும்புகிறோம். இரண்டு முகாம்களுக்கிடையில் அணு ஆயுதப் போரைத் தவிர்க்கவும் பரஸ்பர அனாக்கிரமிப்பு ஒப்பந்தம் ஏற்படவும் அதிகபட்ச முயற்சி மேற்கொள்ளப்படுவதை நாம் விரும்புகிறோம். பத்து அல்லது இருபது ஆண்டுகள் அமைதியையாவது பெறுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று நாம் நீண்ட நாட்களுக்கு முன்பிருந்தே கூறி வருகிறோம்: நம்முடைய இந்த விருப்பம் நிறைவேறுமானால், அது சோசலிச முகாம் முழுமைக்கும், கூடவே சீனாவின் சோசலிச கட்டுமானத்திற்கும் பயனுள்ளதாக இருக்கும்.

இப்போது ரசியா முதலாளித்துவத்தினால் சூழப்பட்டிருக்கவில்லை என்று பக்கம் 409-ல் அந்நூல் கூறுகிறது. இப்படிப்பட்ட பேச்சு மக்களை மயக்கத்தில் ஆழ்த்தி உறங்கவைக்கும் அபாயத்தைக் கொண்டிருக்கிறது. ஒரே ஒரு சோசலிச நாடு மட்டுமே இருந்த காலத்தை விட இன்றைக்கு நிலைமை பெருமளவுக்கு மாறி உள்ளது என்பது உண்மைதான். ரசியாவுக்கு மேற்கே இப்போது பல்வேறு கிழக்கு அய்ரோப்பிய சோசலிச நாடுகள் உள்ளன. ரசியாவுக்கு கிழக்கே சோசலிச நாடுகளான சீனா,

கொரியா, மங்கோலியா, வியட்நாம் ஆகிய நாடுகள் உள்ளன. ஆனால் தரையிலிருந்து இயக்கக்கூடிய ஏவுகணைகளுக்கு கண்கள் இல்லை; அவை ஆயிரக்கணக்கான அல்லது பத்தாயிரக் கணக்கா்ன கிலோ மீட்டர்களுக்கு அப்பால் உள்ள இலக்குகளைத் தாக்கமுடியும். ரசியாவையும் இதர சோசலிச நாடுகளையும் இலக்காகக் கொண்டு சோசலிச நாடுகளைச் சுற்றிலும் அமெரிக்க ராணுவத் தளங்கள் நிறுவப்பட்டுள்ளன. ஏவுகணைகளின் வட்டத் திற்குள் இனியும் ரசியா இல்லை என்று கூறமுடியுமா?

## 23. ஒருமித்த கருத்துதான் சமுதாய வளர்ச்சியின் உந்து சக்தியா?

''ஒருமித்த கருத்தின் ஒருமைப்பாடு'' மற்றும் ''பாறையைப் போன்ற உறுதி''யை சோசலிசம் உருவாக்கும் என்றும், ''ஒருமித்த கருத்துதான் சமுதாய வளர்ச்சிக்கு உந்துசக்தி'' என்றும் பக்கம் 413 மற்றும் 417-ல் அந்நூல் கூறுகிறது.

இது ஒருமித்த கருத்தின் ஒருமைப்பாட்டை மட்டுமே அங்கீகரிக்கிறது. சோசலிச சமுதாயத்தில் உள்ள முரண்பாடு களையோ, அந்த முரண்பாடுகள் சமுதாய வளர்ச்சியின் உந்து சக்தியாக இருப்பதையோ அங்கீகரிக்கவில்லை. அதை இவ்வாறு முன்வைக்கும்போது முரண்பாட்டின் அனைத்தும் தழுவிய தன்மை பற்றிய விதி மறுக்கப்படுகிறது; இயக்க இயல்விதிகள் செயலற்றவையாக்கப்படுகின்றன. முரண்பாடுகள் இல்லாமல் இயக்கம் என்பது இல்லை; சமுதாயம் எப்போதும் இயக்கத்தின் மூலமாகவே வளர்ச்சியுறுகிறது. சோசலிச சகாப்தத்தில் கூட சமுதாய வளர்ச்சிக்கு முரண்பாடுகள் தான் உந்து சக்தியாக விளங்குகின்றன. குறிப்பாக ஒருமித்த கருத்து இல்லை என்ற காரணத்தினாலேயே ஒற்றுமைக்கான பொறுப்பும், அதற்காகப் போராட வேண்டிய அவசியமும் இருக்கிறது. எப்போதுமே 100 சதவீதம் கருத்தொற்றுமை இருக்குமானால், ஒற்றுமைக்காகத் தொடர்ந்து பாடுபட வேண்டியதன் அவசியத்தை விளக்குவது எது?

## 24. சோசலிசத்தில் உழைப்பாளரின் உரிமைகள்

பக்கம் 414-ல் உழைப்பாளர் அனுபவிக்கும் உரிமைகள் பற்றிய கருத்துக்களைக் காண்கிறோம். ஆனால், அரசு பல்வேறு

நிறுவனங்கள், கல்வி, கலாச்சாரம் ஆகியவற்றை இயக்குவதற் கான உழைப்பாளரின் உரிமைகள் பற்றிய எந்த கருத்துக்களும் இல்லை. உண்மையில், இதுதான் சோசலிசத்தின் கீழ் உழைப் பாளரின் மிகப்பெரிய உரிமை; மிகவும் அடிப்படையான உரிமை. இது இல்லாமல் வேலை செய்யவும், கல்வி கற்கவும், ஓய்வெடுக்க வும் இன்ன பிறவற்றிற்கும் எவ்வித உரிமையும் இல்லை.

சோசலிச ஜனநாயகத்தின் தலையாய பிரச்சனை: பல்வேறு பகைமை சக்திகளையும் அவற்றின் செல்வாக்கையும் கீழ்ப்படிய வைக்க உழைப்பாளருக்கு உரிமை உள்ளதா? என்பதேயாகும். உதாரணமாக, செய்திப் பத்திரிக்கைகள், சஞ்சிகைகள், ஒலிபரப்பு நிலையங்கள், திரைப்படம் போன்றவற்றை யார் கட்டுப் படுத்து கிறார்கள்? யார் விமர்சனம் செய்கிறார்கள்? இவையாவும் உரிமை பற்றிய பிரச்சனையின் ஒரு பகுதியாகும். இவையாவும் வலது சந்தர்ப்பவாதிகளின் (சிறுபான்மையினர்) கைகளில் இருந்தால், ஒரு மாபெரும் பாய்ச்சல் அவசரமாகத் தேவைப்படுகின்ற தேசிய அளவிலான பரந்த பெரும்பான்மைக்கு இந்த உரிமைகள் மறுக்கப் படும். சுங்-டியென்-பெய்[15] போன்றவர்களின் கையில் திரைப் படத்துறை இருந்தால், அந்தத் துறையில் மக்கள் தங்கள் உரிமை களை எவ்வாறு பெற முடியும்? மக்களிடையே பலதரப்பட்ட உட்பிரிவுகள் (factions) உள்ளன. பல்வேறு அமைப்புகளையும், நிறுவனங்களையும் யார் கட்டுப்படுத்துகிறார்கள் என்பது, மக்களின் உரிமைகளை உத்திரவாதம் செய்வது பற்றிய பிரச்சனை மீது மிகப் பெரிய தாக்கத்தை உருவாக்குகிறது. இவை மார்க்சிய-லெனினியவாதிகளின் கட்டுப்பாட்டில் இருந்தால் பரந்துபட்ட பெரும்பான்மை மக்களின் உரிமைகள் உத்திரவாதம் செய்யப் படும். வலதுசாரிகள் அல்லது வலது சந்தர்ப்பவாதிகளின் கட்டுப் பாட்டில் இருந்தால், இந்த அமைப்புக்கள் மற்றும் நிறுவனங்கள் குணாம்ச ரீதியில் மாற்றமடையலாம், மேலும் அவை சம்பந்தப் பட்ட மக்களின் உரிமைகள் உத்திரவாதம் செய்யப்பட முடியாது. மொத்தத்தில், மேல் கட்டுமானத்தை நிர்வகிக்க மக்களுக்கு உரிமை இருக்க வேண்டும். அரசு ஒரு பகுதி மக்களால் மட்டுமே நிர்வகிக்கப்பட வேண்டும் என்றும், குறிப்பிட்ட சிலருடைய நிர் வாகத்தின் கீழ் மட்டுமே உழைப்பாளர்க்கான உரிமைகள், கல்விக் கான உரிமைகள், சமுதாயக் காப்புறுதி போன்றவற்றை மக்கள் பெறமுடியும் என்றும் நாம் மக்களுடைய உரிமைகள் என்பதற்குப் பொருள் கொள்ளக் கூடாது.

## 25. கம்யூனிசத்திற்கு மாறுவது ஒரு புரட்சியா?

''கம்யூனிசத்துடன் முரண்படும் நலன்களை உடைய வர்க்கங்கள் அல்லது சமுதாயக் குழுக்கள் சோசலிசத்தின் கீழ் இருக்காது எனவே கம்யூனிசத்திற்கான மாற்றம் ஒரு சமுதாயப் புரட்சி, இன்றியே சாத்தியப்படும்'' என்று அந்நூல் பக்கம் 417-ல் கூறுகிறது.

கம்யூனிசத்திற்கான மாற்றம் என்பது நிச்சயமாக ஒரு வர்க்கம் இன்னொரு வர்க்கத்தைத் தூக்கியெறிவது அல்ல. ஆனால் இதன் பொருள் ஒரு சமுதாயப் புரட்சி இருக்காது என்பதல்ல. ஏனெனில், ஒரு வகை உற்பத்தி உறவுகளுக்குப் பதில் வேறு ஒன்று இடம் பெறுவது ஒரு குணாம்சரீதியான பாய்ச்சலாகும், அதாவது புரட்சியாகும். தனிநபர் பொருளாதாரத்திலிருந்து கூட்டு பொருளாதாரத்திற்கும், கூட்டு பொருளாதாரத்திலிருந்து பொதுவுடைமைக்கும் என்று சீனாவில் நிகழ்ந்த இரு வகை மாற்றங்களும் உற்பத்தி உறவுகளில் நிகழ்ந்த இரு புரட்சிகளாகும். எனவே சோசலிசத்தின் ''உழைப்புக்கேற்ற விநியோகத்திலிருந்து'' கம்யூனிசத்தின் ''தேவைக்கேற்ற விநியோகம்'' என்பதற்கு மாறிச் செல்வதானது உற்பத்தி உறவுகளில் நிகழும் புரட்சி என்றுதான் கூறவேண்டும். சந்தேகத்திற்கிடமின்றி ''தேவைக்கு ஏற்ற விநியோகம்'' என்பதை படிப்படியாகத் தான் கொண்டு வரமுடியும். பிரதான நுகர்வுப் பொருட்கள் போதுமான அளவு கிடைக்கும் போது அவற்றை நாம் இவ்வாறு பங்கிடு செய்ய முற்படலாம்; உற்பத்தி சக்திகளின் மேற்படி வளர்ச்சியை அனுசரித்து இதை மற்ற பொருட்களுக்கும் விரிவு படுத்தலாம்.

நமது மக்கள் கம்யூன்களின் வளர்ச்சியை எடுத்துக் கொள்வோம். நாம் ஒரு குழுவின் அடிப்படை உடமையிலிருந்து ஒரு கம்யூனின் அடிப்படை உடைமைக்கு மாறியபோது ஒரு பகுதி மக்கள் எதிர்ப்பதற்கான சாத்தியக் கூறுகள் இருந்ததா இல்லையா? இந்த கேள்வி நம் ஆய்வுக்கு மிகவும் உகந்ததாகும். கம்யூன் உடைமைப் பொருளாதாரத்தின் வருமானம், முழுக் கம்யூனின் மொத்த வருமானத்தில் பாதிக்கு மேல் இருந்தது என்பதுதான் இந்த மாற்றத்தைச் சாதிப்பதற்கான நிர்ணயகரமான நிபந்தனையாகும். அடிப்படைக் கம்யூன் உடைமை முறையை நடைமுறை படுத்துவது, கம்யூன் உறுப்பினர்களுக்கு பொதுவாக பயனுள்ள

தாகும். எனவே பரந்துபட்ட மக்களுக்கு எந்தவித ஆட்சேபணையும் இருக்க முடியாது என்று நாம் கருதுகிறோம். ஆனால், மாற்றக்காலத்தின் இச்சூழ்நிலைமைகளில் தொடக்கம் முதலே உள்ள குழு உறுப்பினர்களை இனியும் ஒப்பீட்டளவில் குறைக்க முடியாது. அவர்கள் மாற்றத்திற்கு உட்படுவார்களா?

சோசலிச சமுதாயத்தில் வர்க்கங்கள் ஒழிக்கப்பட்டு விடலாம் என்ற போதிலும், அதன் வளர்ச்சிப் போக்கில் ஏற்கனவே இருக்கும் நிறுவனங்களில் திருப்தியுற்று அவற்றை மாற்ற விரும்பாத ''சலுகை பெற்ற குழுக்களுடன்'' சில பிரச்சனைகள் உருவாகும். உதாரணமாக, உழைப்பிற்கேற்ற பங்கீடு என்ற நியதி நடைமுறையில் இருந்தால் அதிகமான வேலைக்கு உயர்ந்த சம்பளத்தினால் அவர்கள் பயனடைவர்; ஆனால் ''தேவைக்கேற்ற பங்கீடு'' என்ற மாற்றம் வரும்போது அவர்கள் இப்புதிய சூழ்நிலைமைகளினால் பாதிக்கப்படலாம். எந்த ஒரு புதிய அமைப்பையும் நிறுவுவதற்கு பழையவை சிலவற்றை அழிப்பது அவசியமாகிறது. அழிவு இன்றி படைக்க முடியாது. அழிவு அவசியமானது என்றால் அது கொஞ்சம் எதிர்ப்பைத் தோற்றுவிக்கத்தான் செய்யும். உண்மையில் மனிதப் பிராணி மிகவும் விசித்திரமானது; கொஞ்சம் மேல் நிலையை அடைந்தவுடன் தாங்கள் மிக உயர்ந்த நிலையை அடைந்து விட்டதைப்போல் மக்கள் கருதிக் கொள்கிறார்கள்.... இதைக் கண்டு கொள்ளாமல் விடுவது மிகவும் ஆபத்தானது.

## 26. ''சீனாவில் மிகக் கடுமையான வர்க்கப் போராட்ட முறைகளை மேற்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை'' என்ற வாதம் பற்றி

பக்கம் 419-ல் ஒரு தவறு இருக்கிறது. அக்டோபர் புரட்சிக்கு பிறகு ரசிய முதலாளி வர்க்கங்கள் நாட்டின் பொருளாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்ததைக் கண்டனர். எனவே, பாட்டாளி வர்க்கம் இந்த நிலைமையை மாற்றமுடியாது என்றும் தன் அரசியல் அதிகாரத்தைத் தொடர்ந்து நிலைநிறுத்திக் கொள்ளும் வலிமை அதற்கு இல்லை என்றும் முடிவு செய்தனர். தாங்கள் செயல்படத் தொடங்கினாலே பாட்டாளி வர்க்க அரசியல்

அதிகாரம் தூக்கியெறியப்பட்டுவிடும் என்றும் கணித்தனர். இந்த கணிப்பின் அடிப்படையில்தான் அவர்கள் ஆயுதம் தாங்கிய எதிர்ப்பைத் தொடங்கினர். இது கடுமையான நடவடிக்கையின் மூலம் அவர்களுடைய சொத்துக்களைப் பறிமுதல் செய்யும்படி பாட்டாளி வர்க்கத்தை நிர்ப்பந்தப்படுத்தியது. அச்சமயத்தில் எந்த வர்க்கத்திற்கும் போதுமான அனுபவம் இருக்கவில்லை.

சீனாவின் வர்க்கப் போராட்டம் கடுமையானதாக இல்லை என்று கூறுவது யதார்த்தத்திற்குப் புறம்பானது; அது மிகத் தீவிரமானதாக இருந்தது! நாம் இருபத்தியிரண்டு ஆண்டுக் காலம் தொடர்ச்சியாகப் போராடினோம். யுத்தத்தின் மூலம் நாம் தேசியக் கட்சியின் முதலாளித்துவ ஆட்சியைத் தூக்கி எறிந்து நமது நாட்டின் மொத்த முதலாளித்துவப் பொருளாதாரத்தில் 80 சதவீதமாக இருந்த அதிகாரவர்க்க மூலதனத்தைப் பறிமுதல் செய்தோம். இவ்வாறுதான், மீதமிருந்த 20 சதவீத தேசிய மூலதனத்தை மறு ஒழுங்கு செய்ய சமாதான முறைகளை நம்மால் பின்பற்ற முடிந்தது. மறு ஒழுங்கு செய்யும் போக்கிலே கூட நாம் ''மூன்று எதிர்ப்புகள்'' மற்றும் ''அய்ந்து எதிர்ப்புகள்'' போன்ற பிரச்சார இயக்கங்கள்[16] மூலம் கடுமையான போராட்டங்களை நடத்த வேண்டியிருந்தது.

420-வது பக்கத்தில் முதலாளித்துவத் தொழில் மற்றும் வர்த்தக நிறுவனங்களை மறு சீரமைப்பு செய்வதைப் பற்றித் தவறாக விவரிக்கப்படுகிறது. விடுதலைக்குப் பிறகு சோசலிச மறு சீரமைப்புப் பாதையை மேற்கொள்ளுமாறு தேசிய முதலாளிகள் நிர்ப்பந்திக்கப்பட்டனர். நாம் சியாங்கே சேக்கை வீழ்த்தி அதிகார வர்க்க மூலதனத்தைப் பறிமுதல் செய்தும், நிலச் சீர்திருத்தத்தை நிறைவு செய்தும், ''மூன்று எதிர்ப்புகள்'' மற்றும் ''அய்ந்து எதிர்ப்புகள்'' இயக்கத்தை மேற்கொண்டும், கூட்டுறவுகளை நடைமுறை சாத்தியமாக்கினோம். நாம் ஆரம்பம் முதலே சந்தைகளைக் கட்டுப்படுத்தினோம். இந்த அடுத்தடுத்த மாற்றங்கள், படிப்படியாக மறுசீரமைப்பை ஏற்றுக் கொள்ளும்படி தேசிய முதலாளிகளை நிர்ப்பந்தித்தன. இன்னொரு கோணத்திலிருந்து பல்வேறு பொருளாதார நலன்களுக்கும் வாய்ப்பளிக்கும் வகையில் பொதுவான திட்டம் வரையறுக்கப்பட்டது. இது முதலாளிகள் தங்களால் எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்கு லாபம் சம்பாதிக்க முயற்சிப்பதைச் சாத்தியமாக்கியது.

இத்துடன், அரசியல் அமைப்புச் சட்டம் அவர்களுக்கு வாக்குரிமையையும், வாழும் உரிமையையும் அளித்தது. இவையாவும் முதலாளி வர்க்கம் மறுசீரமைப்பை ஏற்றுக்கொள்வதன் மூலம், தாங்கள் ஒரு சமூக அந்தஸ்துடன் வாழமுடியும் என்பதையும், கலாச்சாரத்திலும் பொருளாதாரத்திலும் ஒரு குறிப்பிட்ட பங்காற்ற முடியும் என்பதையும் உணரச் செய்ய உதவின.

அரசு — தனியார் கூட்டுத்தொழில் நிறுவனங்களில் முதலாளிகளுக்கு அந்த நிறுவனங்களின் மீது எந்தவிதமான உண்மையான நிர்வாக உரிமைகளும் இல்லை. முதலாளிகள் மற்றும் பொது மக்களின் பிரதிநிதிகளால் கூட்டாக உற்பத்தி நிர்வகிக்கப் படவில்லை. ''மூலதனம் தொழிலாளர்களைச் சுரண்டுவது வரையறைக்குட்படுத்தப்பட்டது'' என்றும் கூறமுடியாது. அது உண்மையிலேயே வெட்டிக் குறைக்கப்பட்டுவிட்டது. நாம் இங்கு குறிப்பிடும் கூட்டாக நிர்வகிக்கப்படும் நிறுவனங்கள் 75 சதவீதம் சோசலிசத் தன்மை வாய்ந்தவை என்பதை அந்நூல் கருத்தில் கொள்ளவில்லை. சந்தேகமின்றி, அவை தற்போது 90 சதவீதம் அல்லது அதற்கும் மேலாக சோசலிசத் தன்மை வாய்ந்தவை.

முதலாளித்துவத் தொழில் மற்றும் வர்த்தகத்தை மறுசீரமைப்பு செய்யும் பணி அடிப்படையில் நிறைவு பெற்றுவிட்டது. ஆனால் முதலாளிகளுக்கு வாய்ப்புக் கிடைத்தால் அவர்கள் எவ்விதத் தயக்கமுமின்றி நம்மைத் தாக்குவார்கள். 1957-ல் நாம் வலதுசாரிகளின் தாக்குதல்களை முறியடித்தோம்.[17] 1959-ல் நம் கட்சியில் இருந்த தங்கள் பிரதிநிதிகள் சிலர் மூலம் அவர்கள் நமக்கு எதிராக மீண்டும் ஒரு தாக்குதலைத் தொடுத்தனர்.[18] நம்முடன் இட்டுச் செல்வது பிறகு அவர்களைச் சுற்றி வளைத்துக்கொள்வது என்பதுதான் தேசிய முதலாளிகளின்பால் நமது கொள்கையாக இருந்தது.

அரசு முதலாளித்துவம் ''வர்க்கப் போராட்டத்தை வேறு ஒரு வடிவில் தொடருகிறது'' என்ற லெனின் கூற்றை அந்நூல் பயன்படுத்துகிறது. இது சரியானது. (பக்கம் 421)

## 27. சோசலிச நிர்மாணத்தின் காலக்கெடு

1957[19] ஆம் ஆண்டு நாங்கள் அரசியல் மற்றும் சித்தாந்தத் துறைகளில் சோசலிசப் புரட்சியை ''நிறைவு செய்துவிட்டோம்''

என்று பக்கம் 423-ல் அந்நூல் கூறுகிறது. மாறாக நாங்கள் ஒரு தீர்மானகரமான வெற்றி அடைந்தோம் என்றே கூற விரும்புகிறோம்.

அதே பக்கத்தில், நாம் பத்துப் பதினைந்து ஆண்டுகளில் சீனாவை ஒரு பலம் வாய்ந்த சோசலிச நாடாக மாற்ற விரும்புகிறோம் என்றும் கூறுகிறது. இது நாம் இப்போது ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒன்று! அதாவது, இரண்டாவது அய்ந்தாண்டுத் திட்டத்திற்குப் பிறகு 1972 வரை நாம் மேலும் இரண்டு அய்ந்தாண்டுத் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும். (அல்லது முன்கூட்டியே செய்ய முயற்சித்தால் 1969-ல் இதை செய்து முடிக்கலாம்). தொழில், விவசாயம், அறிவியல், கலாச்சாரம் ஆகியவற்றை நவீனப்படுத்துவதுடன் நாம் தேசப் பாதுகாப்பையும் நவீனப்படுத்த வேண்டும். நம்மைப் போன்ற நாடுகளில் சோசலிச நிர்மாணத்தை முடிவுக்குக் கொண்டு வருவதென்பது மிகவும் கடினமான காரியமாகும். சோசலிச நிர்மாணத்தில் ''விரைவிலேயே'' என்று நாம் பேசக்கூடாது.

## 28. தொழில் மயமாக்கலுக்கும் சோசலிச மாற்றத்திற்கும் இடையிலான உறவுகள் பற்றி மேலும் சில விவாதங்கள்

தொழில் மயமாக்கலைச் சாதிப்பதற்கு வெகுநாட்களுக்கு முன்பே உடைமை முறையில் சீர்திருத்தம் செய்யப்பட்டது, சீனாவின் தனிச்சிறப்பு வாய்ந்த நிலைமைகளால் உருவாக்கப் பட்ட சூழ்நிலைமைகளின் விளைவாகும் என்று பக்கம் 423-ல் அந்நூல் கூறுகிறது. இது ஒரு தவறாகும். சீனாவைப் போலவே, கிழக்கு அய்ரோப்பிய நாடுகளும்' 'ஒரு வல்லமை மிக்க சோசலிச முகாம் மற்றும் ரசியாவின் அளவுக்கு வளர்ச்சியுற்ற தொழில் மயமாக்கப்பட்ட நாட்டின் உதவியால் பயன்பெற்றன''. கிழக்கு அய்ரோப்பிய நாடுகளில் தொழில் மயமாக்கல் ஒரு யதார்த்த மாவதற்கு முன்பாக உடைமை முறையில் (விவசாயம் உட்பட) சோசலிச மாற்றத்தை நிறைவேற்ற முடியவில்லை என்பதற்கான

காரணம் என்ன? என்பதே கேள்வியாகும்.* தொழில் மயமாக்கலுக்கும் சோசலிச மாற்றத்திற்கும் இடையிலான உறவுபற்றிய உண்மையாதெனில், ரசியாவில் கூட உடைமை பற்றிய பிரச்சனை தொழில் மயமாக்கல் முடிவடையும் முன்பாகவே தீர்க்கப்பட்டுவிட்டது என்பதே.

அதேபோன்று, வரலாற்று ரீதியாகப் பார்க்கும்போது முதலாளித்துவப் புரட்சிகளும், முதலாளித்துவ நாடுகளும் உருவாக்கப்பட்டது தொழிற் புரட்சிக்கு முன்பாக நடந்தேறினவேயொழிய பின்பு அல்ல. முதலாளிகள் உண்மையான பலம் பெறுவதற்கான பிரச்சாரத்தை முடுக்கிவிடுவதற்கு முன்பாகவே மேல் கட்டுமானத்தை மாற்றியமைத்து அரசு இயந்திரத்தைக் கைப்பற்றிக் கொண்டனர். அதன் பிறகே உற்பத்தி உறவுகளில் பெரும் மாற்றங்களைப் புகுத்தினர். உற்பத்தி உறவுகள் உறுதி செய்யப்பட்டு அவை சரியான திசைவழியில் இருக்கும்போது தான், உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்கான பாதையைத் திறந்து விடுகின்றன. உறுதியாகக் கூறுவதெனில், உற்பத்தி சக்திகளின் ஓரளவு வளர்ச்சி உற்பத்தி உறவுகளில் புரட்சிகரமான மாற்றத்தை உருவாக்குகிறது; ஆனால் எப்போதும் உற்பத்தி உறவுகளில் மாற்றம் ஏற்பட்ட பிறகே உற்பத்தி சக்திகள் மாபெரும் வளர்ச்சி அடைகின்றன. முதலாளித்துவ வளர்ச்சியின் வரலாற்றைக் கவனிப்போம். முதலில் மிக எளிமையான ஒருங்கிணைப்பு நடை

---

* *அத்தியாயம் 28, பத்தி 1 (1967-ம் ஆண்டு பதிப்பு); பக்கம் 423 கூறுகிறது: ''வல்லமை மிக்க சோசலிச முகாம் இருந்ததினாலும் சக்தி வாய்ந்த, தொழில் துறையில் மிகுந்த வளர்ச்சி பெற்ற ரசிய நாட்டின் உதவி கிடைக்கப் பெற்றதன் மூலமாகவும், சீனாவிற்கு வாய்த்திருந்த தனிச் சிறப்பான நிலைமைகளின் காரணமாகவும் அங்கு சோசலிச தொழில் மயமாக்கல் முடிவுறும் முன்பாகவே உடைமை முறையில் செய்த (விவசாயம் உட்பட) சீர்திருத்தம் வெற்றியடைந்தது''. இது தவறு. சீனாவுக்கு எந்த விதத்திலும் குறைவின்றி கிழக்கு அய்ரோப்பிய நாடுகளும் ''ஒரு சக்திவாய்ந்த சோசலிச முகாமையும், ரசியாவைப் போலவே உயர் வளர்ச்சியுற்ற தொழில் மயமான ஒரு நாட்டின் உதவியையும்'' பெற்றிருந்தன. அவர்கள் ஏன் தொழில் மயமாக்கல் முடிவடையும் முன்பே உடைமை முறையில் (விவசாயம் உட்பட) சோசலிச மாற்றத்தைச் சாதிக்க முடியவில்லை?*

பெற்று பின்னர் அது பட்டறைக் கைத்தொழிலாக வளர்ச்சி யுற்றது. இச்சமயத்தில் முதலாளித்துவ உற்பத்தி உறவுகள் ஏற்கனவே உருவாகத் தொடங்கிவிட்ட போதிலும், பட்டறைகளில் இயந்திரங்கள் இன்றியே உற்பத்தி நடைபெற்றது. இத்தகைய முதலாளித்துவ உற்பத்தி உறவுகள் தொழில்நுட்ப வளர்ச்சிக்கான தேவைகளை உருவாக்கி இயந்திர உபயோகத்திற்கான நிலைமை களை உருவாக்கின. இங்கிலாந்தில் முதலாளித்துவப் புரட்சிக்குப் பிறகு தான், அதாவது, 17-ம் நூற்றாண்டிற்குப் பிறகு தான் (18-ம் நூற்றாண்டின் இறுதியிலும், 19-ம் நூற்றாண்டின் தொடக்கத்திலும்) தொழிற் புரட்சி நடந்தேறியது. ஜெர்மனி, பிரான்ஸ், அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகளிலும் முதலாளித்துவத் தொழிலில் பெரும் வளர்ச்சி அடைவதற்கு முன்பாகவே தத்தமக்குரிய வழிகளில் மேல்கட்டுமானத்திலும், உற்பத்தி உறவுகளிலும் மாற்றம் நிகழ்ந்தது.

அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக, முதலில் மக்களின் கருத்தைத் திரட்டாதவரை, நீங்கள் உடைமைப் பிரச்சனையை தீர்த்து உற்பத்தி சக்திகளை விரிவு படுத்தும் பணியை மேற்கொள்ள முடியாது என்பது பொதுவான விதி யாகும். முதலாளித்துவப் புரட்சிக்கும் பாட்டாளி வர்க்கப் புரட்சிக் கும் இடையே சில வேற்றுமைகள் இருந்தபோதிலும் (பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கு முன்பாக சோசலிச உற்பத்தி உறவுகள் நிலவுவதில்லை. ஆனால், முதலாளிய உற்பத்தி உறவுகள் நிலப்பிரபுத்துவ சமுதாயத்திலேயே ஏற்கனவே வளரத்தொடங்கி விடுகின்றன) அவை இரண்டும் அடிப்படையில் ஒரே மாதிரி யானவை.

### பாகம் II அத்தியம் 24 - 29

## 29. சோசலிச உற்பத்தி உறவுகளுக்கும் உற்பத்தி சக்திகளுக்கும் இடையிலான முரண்பாடுகள்

பக்கம் 433-ல் சோசலிசத்தின் கீழ் உற்பத்தி உறவுகளுக்கும் உற்பத்தி சக்திகளுக்கும் இடையிலான ''பரஸ்பர செய

லொற்றுமை'' பற்றி மட்டும் தான் விவாதிக்கப்படுகிறதே யொழிய அவற்றுக்கு இடையிலான முரண்பாடுகளைப் பற்றி விவாதிக்க வில்லை. உற்பத்தி உறவுகள் என்பவை உற்பத்தி சாதனங்களின் உடைமை, உற்பத்தியின் நிகழ்முறையில் மக்களுக்கிடையிலான உறவுகள், பங்கீட்டு முறை ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். சொல்லப் போனால், உடைமை முறையிலான புரட்சியே அடிப் படையானதாகும். உதாரணமாக, மக்கள் உடைமை ஒப்பீட்டள வில் மிக நீண்டகாலம் நடைமுறையில் இருக்குமெனினும், கூட்டுடைமையிலிருந்து மக்களின் உடமையாக மாறியதன் மூலம் தேசியப் பொருளாதாரம் முழுவதும் பகுக்க முடியாதபடி அனைத்து மக்களுக்கும் சொந்தமான பின்னரும், அவ்வாறு சொந்தமான அனைத்து நிறுவனங்களிலும் முக்கியப் பிரச்சனை கள் தொடர்ந்து இருக்கும். மைய-உள்ளூர் அதிகாரப் பங்கீடு நடைமுறைப் படுத்தப்பட வேண்டுமா? எந்த நிறுவனம் யாரால் நிர்வகிக்கப்பட வேண்டும்? 1958-ல் சில அடிப்படைக் கட்டுமான அலகுகளில் மூலதன முதலீட்டுக்கு நிலையான பொறுப்பு முறைகள் நடைமுறைப் படுத்தப்பட்டன. இதன் விளைவாக இந்த அலகுகளில் பிரமாண்டமான உத்வேகம் கட்டவிழ்த்து விடப்பட்டது. தன்னுடைய சொந்த முன் முயற்சிகளில் மையத் திற்கு நம்பிக்கையில்லையெனில், அது நிறுவன அல்லது உள்ளூர் மட்டங்களில் உத்வேகத்தைக் கட்டவிழ்த்து விடவேண் டும். அதுபோன்ற உத்வேகம் சீர்குலைக்கப்படும்போது உற்பத்தி பாதிக்கப்படுகிறது.

எனவே, மக்கள் உடைமையின் கீழ் உள்ள உற்பத்தி உறவு களில் தீர்க்கப்பட வேண்டிய முரண்பாடுகள் நிலவுகின்றன என்பதை நாம் காண்கிறோம். உழைப்பின் நிகழ்முறையில் மக்களிடையே நிலவும் உறவுகளையும்,பங்கீட்டு உறவுகளையும் பொருத்தமட்டில் அவற்றை இடைவிடாது மேம்படுத்துவது மிகவும் அவசிய மாகும். இவற்றைப் பொருத்தமட்டில் எது அடிப்படை யானது என்று கூறுவது மிகவும் கடினம். உழைப்பின் நிகழ்முறையில் நிலவும் மனித உறவுகள் பற்றி நிறைய அதாவது, தலைமை, சமத்துவ மனப்பான்மையை மேற்கொள்ள வேண்டியது, சில ஒழுங்கு முறைகளையும், நிலை நிறுத்தப்பட்டுவிட்ட நடை முறைகளையும் மாற்றுவது ''இரண்டு பங்கேற்புகள்'' (நிர்வாகத் தில் தொழிலாளரின் பங்கு, ஆக்கபூர்வமான உழைப்பில் நிர்வாகத் தின் பங்கு) ''மூன்று சேர்க்கைகள்'' (முன்னணியினர், தொழிலாள ர், தொழில் வல்லுனர் ஆகியோருடைய முயற்சிகளின் கூட்டு)

போன்றவைப் பற்றியெல்லாம் எழுதப்படவேண்டும். புராதன கம்யூன்களின் பொதுவுடைமை நீண்ட காலம் நீடித்திருந்தது, எனினும் அக்காலத்தில் உழைப்பின் நிகழ்முறையில் மக்களுக்கிடையிலான உறவுகள் ஏராளமான மாற்றங்களுக்குள்ளாயின.

## 30. கூட்டுடைமைமுறையிலிருந்து மக்களின் உடைமைமுறைக்கு மாறுவது தவிர்க்க முடியாதது

பக்கம் 435-ல் அந்நூல், இரண்டு வகையான பொதுவுடைமை முறை நிலவுவது தவிர்க்க முடியாத புறநிலை யதார்த்தம் என்று மட்டும் கூறுகிறதேயொழிய கூட்டு உடைமைமுறையிலிருந்து மக்களின் உடைமைமுறைக்கு மாறுவதுகூட தவிர்க்க முடியாத புறநிலை யதார்த்தம் என்று கூறவில்லை. நமது நாட்டின் சில குறிப்பிட்ட பகுதிகளில் தற்போது காணப்படும் நிலைமைகள், இது ஒரு தவிர்க்க முடியாத புறநிலை நிகழ்வுப் போக்காகும் என்பதற்கு எடுத்துக்காட்டாகும். ஹோப்பே மாநிலத்திலுள்ள செஸ்-ஆன் மாவட்டத்திலிருந்து கிடைத்துள்ள புள்ளி விவரப்படி, தொழிற்சாலைகளுக்குத் தேவையான பயிர்களைப் பயிரிடும் கம்யூன்கள் முன்னேறிக் கொண்டிருக்கின்றன. அவற்றின் மூலதனத் திரட்சி 45 சதவீதமாக[20] உயர்ந்துள்ளது. உழவர்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்த நிலையில் உள்ளது. நாம் கூட்டு உடைமையை மக்கள் உடைமையாக மாற்றி முரண்பாடுகளைத் தீர்க்காமல் இந் நிலைமையைத் தொடர அனுமதித்தால், விவசாயிகளின் வாழ்க்கைத் தரம் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மிஞ்சி, அதன் காரணமாக தொழில் மற்றும் விவசாய வளர்ச்சி ஆகிய இரண்டுமே பாதிப்புக்குள்ளாகும்.

''அரசு நிர்வகிக்கும் தொழில் நிறுவனங்கள் கூட்டுறவு நிறுவனங்களிலிருந்து அடிப்படையில் வேறுபட்டவை அல்ல.........இரு வகையான பொதுவுடைமைமுறைகள் நிலவுகின்றன...புனிதமானது மற்றும் மாற்ற முடியாதது'' என்று பக்கம் 438-ல் அந்நூல் கூறுகிறது. முதலாளித்துவத்தைப் பொருத்த வரையில் கூட்டுடைமை முறைக்கும் மக்கள் உடைமைமுறைக்கும் இடையில் எந்தவேறுபாடுமில்லை, ஆனால் சோசலிசப் பொருளாதாரத்தில் இவற்றுக்கிடையிலான வேறுபாடு அடிப்படையானது. ''புனிதமானது மற்றும் மாற்ற முடியாதது'' என்று இருவகை உடைமை முறைகளைப்பற்றி அந்நூல் கூறுகிறது. பகை சக்திகளைப்பற்றி பேசும் போது இது

அனுமதிக்கத் தக்கதே, ஆனால் பொதுவுடமைமுறையின் வளர்ச்சிப் போக்கு பற்றிப் பேசும் போது இது தவறாகிவிடும். மாற்றமின்றி இருப்பது என்று எதையுமே கூறமுடியாது. அனைத்து மக்களின் உடைமைமுறைக்கும் கூட ஒரு மாற்றப் போக்கு உண்டு.

பல ஆண்டுகளுக்குப்பிறகு, மக்கள் கம்யூன்களின் உடைமைமுறை அனைத்து மக்களின் உடைமைமுறையாக மாறிய பிறகு, நாடு முழுவதும் அனைத்து மக்களின் பகுக்கமுடியாத உடைமைமுறையாக மாறும். இது உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியைப் பெருமளவுக்கு முடுக்கிவிடும். ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு இது அனைத்து மக்களின் உடைமைமுறையான சோசலிச அமைப்பாக நீடிக்கும், அதன் பிறகு மீண்டும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகுதான் அது அனைத்து மக்களின் உடைமைமுறையான கம்யூனிச உடைமைமுறையாக மாறும். இவ்வாறு மக்களின் உடைமைமுறைகூட உழைப்புக் கேற்ற பங்கீடு என்பதிலிருந்து தேவைக்கேற்ற பங்கீடு என்ற நிலைக்கு வளர்ச்சியடைய வேண்டியதிருக்கிறது.

## 31. தனி நபர் சொத்து

''மற்றொரு பாகம் நுகர்வுப் பொருட்கள்... அவை தொழிலாளர்களுடைய தனி நபர் சொத்துக்களாகும்'' என்று பக்கம் 439-ல் அந்நூல் கூறுகிறது. இவ்வாறு கூறுவது ''நுகர்வுப் பொருட்கள்'' என்று வகைப்படுத்தபட்ட பொருட்களை தொழிலாளர்களுக்கு தனி நபர் சொத்தாக பகிர்ந்தளிக்கலாம் என்ற கருத்தை மக்களிடையே உருவாக்குகிறது. இது சரியானதல்ல. நுகர்வுப் பொருட்களின் ஒரு பகுதி தனிநபர் சொத்து மற்றது பொதுச் சொத்து—உதாரணமாக, கலாச்சார மற்றும் கல்வி வசதிகள், மருத்துவ மனைகள், உடற் பயிற்சி வசதிகள், பூங்காக்கள் ஆகியன. அத்துடன் இப்பகுதி அதிகரிக்கிறது. இயல்பாகவே, அவை ஒவ்வொரு தொழிலாளியும் அனுபவிப்பதற்காகத்தான்; இருப்பினும் அவை தனிநபர் சொத்து அல்ல.

பக்கம் 440-ல் தொழில் வருமானம் மற்றும் சேமிப்பு, வீட்டு வசதி, வீட்டு உபயோகப் பொருட்கள், தனி நபர் நுகர்வுக்கான பொருட்கள், சாதாரணக் கருவிகள் ஆகியவற்றை வகை பிரிக்காமல் ஒட்டுமொத்தமாக குறிப்பிடப்பட்டிருப்பதை காண்கிறோம். இது திருப்தியற்றது; ஏனெனில் சேமிப்பு, வீட்டுவசதி போன்றவை

அனைத்தும் உழைக்கும் மக்களின் வருமானத்திலிருந்து பெறப்படு பவையே.

இந்நூல் தனி நபர் நுகர்வைப் பற்றி மட்டுமே அதிகமாகக் குறிப்பிடுகிறதே யொழிய மக்கள் நல்வாழ்வு, கலாச்சாரம், சுகாதாரம் போன்ற சமுதாய ரீதியான நுகர்வு பற்றிக் குறிப்பிடுவதில்லை. இது ஒரு தலைப்பட்சமானது. நமது கிராமப் புறங்களில் வீட்டு வசதி மிகவும் மோசமாக உள்ளது. கிராமப்புற குடியிருப்பு நிலமையை நாம் மிகவும் ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் அபிவிருத்தி செய்ய வேண்டும்.* குடியிருப்பு கட்டுமானப் பணிகளில் குறிப்பாக நகர்ப்புறங்களில் கூட்டு சமுதாய சக்திகளின் பயன்பாடு பிரதானமாக கொள்ளப்படவேண்டுமே அன்றி, தனிப்பட்ட சக்திகளின் பயன்பாடு அல்ல. ஒரு சோசலிச சமுதாயம் கூட்டு முயற்சிகளை மேற்கொள்ளவில்லை என்றால், இறுதியில் அது எப்படிப்பட்ட சோசலிசமாக இருக்கும்? முதலாளித்துவத்தை விட சோசலிசம்தான் பொருளாதார ஊக்குவிப்புகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கிறதென்று சிலர் கூறுகின்றனர். இது போன்ற பேச்சு மிகவும் விஷமத்தனமானது.

கூட்டுப் பண்ணைகள் உற்பத்தி செய்யும் செல்வத்தில் தனி நபர் சொத்தும் துணைத் தொழில்களும் அடங்கும் என்று இங்கு அந்நூல் கூறுகிறது. இந்த துணைத் தொழில்களை பொதுவுடைமையாக மாற்றம் செய்வதை நாம் நோக்கமாகக் கொள்ளவில்லை என்றால் விவசாயிகள் என்றென்றைக்கும் விவசாயிகளாகவே இருப்பர். ஒரு குறிப்பிட்ட சமுதாய அமைப்பு ஒரு குறிப்பிட்ட கால கட்டத்திற்குள் உறுதிப்படுத்தப்பட வேண்டும். ஆனால் உறுதிப்படுவதும்கூட ஒரு எல்லைக்குட்பட்டே இருக்கும். அது தொடர்த்து மேலும் மேலும் நீடித்தால், அந்த அமைப்பு முறையைப் பிரதி பலிக்கும் சித்தாந்தம் இறுகியதாக மாறி, புதிய நிலைமைகளுக்கேற்ப மக்கள் தங்கள் சிந்தனையை தகவமைத்துக் கொள்ள இயலாதபடிச் செய்து விடும்.

அதே பக்கத்தில் தனி நபர் மற்றும் கூட்டு நலன்களை ஒருங்கிணைப்பது பற்றிக் கூறப்பட்டுள்ளது. ''ஒருங்கிணைப்பு கீழ்க் காணும் முறையில் சாதிக்கப்படுகிறது. தனி நபர்களின் பொருளாயத நலன்கள் என்ற கோட்பாட்டின்படி சமுதாயத்தின்

---

* 1969 பதிப்பில் மட்டும்

ஒரு அங்கத்தினருக்கு அவருடைய உழைப்பின் தரத்திற்கும் அளவிற்கும் ஏற்ப ஈடு செய்யப்படுகிறது'' என்று அந்நூல் கூறுகிறது. இங்கு அந்நூல், தேவையான ஒதுக்கீடுகள் பற்றிய எவ்வித விவாதமுமின்றி தனிநபர் நலன்களை முதன்மைப்படுத்துகிறது. இது தனி நபர் பொருளாயத நலன்கள் பற்றிய கோட்பாட்டை ஒரு தலைப்பட்சமாக அணுகுவதாகும்.

பக்கம் 441-ல் ''தனி நபர் மற்றும் பொது நலன்கள் ஆகிய இரண்டும் ஒன்றுக்கொன்று எதிரானவை அல்ல; அவற்றைப் படிப்படியாக ஒன்றிணைக்க முடியும்'' என்று கூறப்படுகிறது. இந்த வெற்றுப் பேச்சு எதையும் தீர்ப்பதில்லை. நம்முடையதைப் போன்ற நாடுகளில் ஒரு சில ஆண்டுகளுக்கு ஒரு முறை மக்களுக்கு இடையிலான முரண்பாடுகள் ஒழுங்கு படுத்தப்படவில்லை என்றால் அவற்றை எப்போதுமே தீர்க்க முடியாது.

## 32. ஒரு சோசலிச சமுதாயத்தில் முரண்பாடுகளே வளர்ச்சியின் உந்து சக்தியாகும்

பக்கம் 443 பத்தி 5-ல், ஒரு சோசலிச சமுதாயத்தில் உற்பத்தி சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையில் முரண்பாடு நிலவுகிறது என்பதை அங்கீகரிப்பதோடு அது போன்ற முரண்பாடுகளைத் தீர்ப்பது பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் முரண்பாடுகளே உந்து சக்தி என்பதை அந்நூல் எவ்விதத்திலும் அங்கீகரிக்கவில்லை.

இதற்கு அடுத்த பத்தி ஏற்றுக் கொள்ளத் தக்கதாக உள்ளது; இருப்பினும், சோசலிசத்தின் கீழ் மனித உறவுகளில் சில குறிப்பிட்ட அம்சங்களும் பொருளாதாரத்தை வழி நடத்தும் சில முறைகளும் மட்டுமல்லாது, உடைமை முறை பற்றிய பிரச்சனைகளும் கூட (உதாரணமாக இரண்டு விதமான உடைமைகள்) உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியைத் தடை செய்யக்கூடும்.

அடுத்த பத்தியில் உள்ள கண்ணோட்டம் தவறானதாக உள்ளது. ''சோசலிசத்தின் கீழ் நிலவும் முரண்பாடுகள் சமரசம் காண முடியாதவை அல்ல'' என்று அது கூறுகிறது. இது எல்லா முரண்பாடுகளும் சமரசம் காணமுடியாதவையே என்னும் இயக்க இயல் விதிகளுக்கு ஒத்ததாக இல்லை. சமரசம் காணக் கூடிய முரண்பாடு

என்று எப்போதாவது ஏதாவது ஒன்று இருந்ததுண்டா? சில பகைமையானவை, சில பகைமையற்றவை, ஆனால் அவற்றை சமரசம் காணக்கூடிய மற்றும் சமரசம் காணமுடியாத முரண்பாடுகளாகக் கருதக் கூடாது.

சோசலிசத்தின் கீழ்* யுத்தங்கள் இல்லாமல் இருக்கலாம்; ஆனால் இன்னும் போராட்டம் இருக்கிறது; அது மக்கட் பகுதியினருக்கிடையிலான போராட்டமாக இருக்கிறது; ஒரு வர்க்கம் இன்னொரு வர்க்கத்தை தூக்கியெறியும் புரட்சியாக இல்லாமல் இருக்கலாம், ஆனால் புரட்சி என்பது இன்னமும் இருக்கிறது. சோசலிசத்திலிருந்து கம்யூனிசத்திற்கு மாறுவது புரட்சியாகும். கம்யூனிசத்தின் ஒரு கட்டத்திலிருந்து இன்னொரு கட்டத்திற்கு மாறுவதும் கூட புரட்சியாகும். அப்பொழுது, தொழில்நுட்பப் புரட்சியும், கலாச்சாரப் புரட்சியும் நிகழ்கிறது. சந்தேகத்திற்கிடமின்றி கம்யூனிசம் பல கட்டங்களையும் பல புரட்சிகளையும் கடக்க வேண்டியிருக்கும்.

இந்த இடத்தில் முரண்பாடுகளை சரியான சமயத்தில் தீர்க்க பரந்துபட்ட மக்களின் ''ஆக்க ரீதியான நடவடிக்கைகளை'' சார்ந்து இருக்கவேண்டும் என்பதைப் பற்றி அந்நூல் குறிப்பிடுகிறது. ''ஆக்க ரீதியான நடவடிக்கைகள்'' சிக்கல் நிறைந்த போராட்டங்களையும் உள்ளடக்கியதாகும்.

''சோசலிசத்தில் காலாவதியாகிப் போன பொருளாதார உறவுகளைப் பாதுகாக்க ஊக்கமுடன் சதிசெய்யும் எந்த வர்க்கமும் இல்லை''. மிகவும் சரி. ஆனால், சோசலிச சமுதாயத்தில் இன்னமும் பழைமைவாதப் பிரிவுகளும் ''சலுகை பெற்ற குழுக்கள்'' போன்றவையும் நீடிக்கின்றன. மூளை உழைப்பிற்கும், உடலுழைப்பிற்கும் இடையில், நகரத்திற்கும் கிராமப்புறத்திற்கும் இடையில், தொழிலாளிக்கும் விவசாயிக்கும் இடையில் முரண்பாடுகள் இன்னமும் நீடிக்கின்றன. இவை பகை முரண்பாடுகள் அல்லவெனினும் போராட்டமின்றி அவற்றைத் தீர்க்க முடியாது.

---

* *மாவோ, ''கம்யூனிசத்தின் கீழ்'' என்று தான் பொருள் கொள்கிறார் என்று 1967-ம் ஆண்டுப் பதிப்பின் மொழிப் பெயர்ப்பாளர் கூறுகிறார்.*

நமது முன்னணியினரது குழந்தைகளின் நிலைமை ஊக்கமூட்டுவதாக இல்லை. அவர்களுக்கு வாழ்க்கை மற்றும் சமுதாயத்தைப் பற்றிய அனுபவமில்லை, எனினும் அவர்களிடம் போலிப் பாசாங்கும், அகம்பாவமும் மிக அதிகமாக இருக்கிறது. அவர்கள் தங்கள் பெற்றோர்களையோ சென்ற கால தியாகிகளையோ சார்ந்திருக்காமல் முற்றும் தங்களைத் தாங்களே சார்ந்திருக்குமாறு பயிற்றுவிக்கப்பட வேண்டும்.

ஒரு சோசலிச சமுதாயத்தில் எப்போதும் முன்னேறிய மற்றும் பின்தங்கிய நபர்கள் இருப்பார்கள். சிலர் கூட்டு முயற்சியில் உறுதி குலையாத பற்று கொண்டவர்களாகவும், கடுமையான உழைப்பும், நேர்மையும் கொண்டவர்களாகவும், புத்துணர்வும் உயிர்த்துடிப்பும் உள்ளவர்களாகவும் இருப்பார்கள். வேறு சிலர் புகழுக்காகவும், பொருளுக்காகவும், சுயநல நோக்கத்துடனும், தனக்காகவும் செயல்படுவார்கள்; அல்லது ஆர்வமின்றியும், சோர்வுற்றும் இருப்பார்கள். சோசலிச வளர்ச்சிப் போக்கில் ஒவ்வொரு கால கட்டத்திலும் பின்தங்கிய உற்பத்தி உறவுகளையும், சமூக அமைப்புக்களையும் பாதுகாப்பதில் அதீத அக்கறை காட்டக்கூடிய ஒரு கூட்டம் காணப்படும். பல பிரச்சனைகளில் செல்வ வளம் வாய்ந்த நடுத்தர விவசாயிகளுக்கு தனிப்பட்ட கருத்துக்கள் இருக்கின்றன. புதிய முன்னேற்றங்களை அவர்களால் ஏற்றுக் கொள்ள முடியாது, கவுங்-துங் கிராமப் பகுதிகளைச் சேர்ந்த வளமையான விவசாயிகளுடன் நடத்தப்பட்ட 'எட்டுச் சொல்' அமைப்பு விதிகள்[21] பற்றிய விவாதத்தின் போது நிரூபிக்கப் பட்டதைப் போல், அவர்களில் சிலர் புதிய மாற்றங்களை எதிர்க்கின்றனர்.

பக்கம் 453-ன் கடைசிப் பத்தியில் ''சோசலிச சமுதாயத்தின் வளர்ச்சிக்கு விமர்சனமும் சுயவிமர்சனமும் மிகச் சக்திவாய்ந்த உந்து சக்திகளாகும்'' என்று கூறப்பட்டுள்ளது. இந்தக் கூற்று பொருத்தமானதல்ல. முரண்பாடுகளே உந்து சக்திகளாகும், விமர்சனமும் சுயவிமர்சனமும் முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளாகும்.

## 33. அறிவின் இயக்கவியல் நிகழ்முறை

உடைமை பொதுவானதாக மாறிவிடுவதால் ''மக்கள் தங்கள் சமுதாயத்தின் பொருளாதார உறவுகளின் எஜமானர்களாகி

விடுகின்றனர்'' என்றும், அவர்கள் ''இந்த விதிகளை முழுமையாகவும் உணர்வுப் பூர்வமாகவும் தங்கள் கட்டுப்பாட்டில் எடுத்துப் பிரயோகிக்க முடியும்'' என்றும் பக்கம் 446-ல் பத்தி 2 கூறுகிறது. இதற்கு ஒரு நிகழ்முறையினூடே செல்வது அவசியம் என்பதைக் கவனிக்க வேண்டும். விதிகளைப் புரிந்து கொள்வது என்பது எப்போதும் பெரும்பான்மையினரின் அறிவாக மாறுவதற்கு முன் சிறுபான்மையினர் புரிந்துகொள்வது என்பதில் தொடங்குகிறது. அறியாமையில் இருந்து அறிவுக்குச் செல்ல, நடைமுறை மற்றும் ஆய்வு என்ற நிகழ்முறையினூடே செல்வது அவசியமாகிறது. தொடக்கத்தில் யாருக்கும் அறிவு இருப்பதில்லை. முன்னறிவு என்பது எக்காலத்திலும் இருந்ததில்லை; நல்ல முடிவுகளைப் பெறுவதற்காக மக்கள் நடைமுறையில் ஈடுபடும்போது அவர்கள் தோல்விகளைச் சந்திக்கிறார்கள், பிரச்சனைகள் தோன்றுகின்றன. இதுபோன்ற நிகழ்முறையின் மூலமாகத்தான் அறிவு படிப்படியாக வளர்ச்சியடையமுடியும். பொருட்கள் மற்றும் நிகழ்வுகளின் வளர்ச்சி பற்றிய புறநிலை விதிகளைப் பற்றி நீங்கள் அறிந்து கொள்ள விரும்பினால், நீங்கள் நடைமுறை நிகழ்ச்சிப் போக்கினூடே செல்லவேண்டும்; மார்க்சிய-லெனினிய அணுகுமுறையை மேற்கொண்டு, தோல்விகளையும் வெற்றிகளையும் ஒப்பிட்டுப் பார்த்து, எண்ணற்ற வெற்றிகள் மற்றும் தோல்விகளினூடே நடைமுறையில் ஈடுபடுவதையும் ஆய்வு செய்வதையும் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும்; இத்துடன், கவனமான தவறற்ற ஆராய்ச்சிகள் நடத்தவேண்டும். ஒருவருடைய சொந்த அறிவை படிப்படியாக விதிகளுக்கு ஒத்திருக்கச் செய்வதற்கு வேறு வழி ஏதுமில்லை. தோல்விகளைக் காணாது வெற்றிகளை மட்டுமே காணக் கூடியவர்கள் இந்த விதிகளை அறிந்து கொள்வது சாத்தியமில்லை.

''இந்த விதிகளை முழுமையாகவும் உணர்வு பூர்வமாகவும் அறிந்திருப்பதும் பிரயோகிப்பதும்'' எளிதல்ல என்று பக்கம் 466-ல் அந்நூல் எங்கெல்சை மேற்கோள் காட்டுகிறது. ''இந்தச் சமயத்தில் மட்டுமே முழுமையான உணர்வு படைத்தவன் வரலாற்றைப் படைக்கத் தொடங்குகிறான். முதல் முறையாக ஒரு பெரும் அளவுக்கு, முடிவில்லாத மிகப் பெரும் அளவுக்கு, மக்கள் தாங்கள் ஆர்வத்துடன் விரும்பும் விளைவுகளை உருவாக்க முடியும்''. ''துவங்குகிறான்'' என்பதும் ''முடிவில்லாத பெரும் அளவுக்கு'' என்பதும் ஒப்பீட்டளவில் சரியானவையே.

அந்நூல், தோற்றத்திற்கும் சாராம்சத்திற்கும் இடையிலான முரண்பாட்டை இனங்காணத் தவறியுள்ளது. சாராம்சம் எப்போதும் தோற்றத்திற்குப் பின் புதைந்து கிடக்கிறது; இதை தோற்றத்தின் மூலமாக அல்லது வேறு வழிகளில் வெளிக்காட்ட முடியாது. ஒருவர் விதிகளை அறிந்துகொள்ள ஒரு நிகழ்முறையினூடே செல்ல வேண்டியது அவசியம் என்ற கருத்தை அந்நூல் திட்டவட்டமாகக் கூறவில்லை. முன்னணியும் இதற்கு விதிவிலக்கல்ல.

## 34. சங்கங்களும் ஒருநபர் தலைமை முறையும்

பக்கம் 452-ல், தொழிற்சங்கங்களின் நோக்கம் பற்றிக் குறிப்பிடுகையில், சங்கங்களின் பிரதானப் பணி, உற்பத்தியைப் பெறுக்குவது என்று அந்நூல் கூறவில்லை; அரசியல் கல்வியை உறுதிப்படுத்துவதற்கான வழிமுறைகளைப் பற்றி விவாதிக்க வில்லை; நல்வாழ்வுக்கு மட்டுமே அதிக அழுத்தம் கொடுக்கிறது.

''ஒருநபர் வழிகாட்டும் முறை என்ற கொள்கையின் அடிப் படையில் உற்பத்தியை நிர்வகிப்பது'' என்பதைப் பற்றியே அந் நூல் முழுவதும் குறிப்பிடப்பட்டுள்ளது. முதலாளித்துவ நாடுகளில் உள்ள எல்லா நிறுவனங்களும் இக்கொள்கையை நடைமுறைப் படுத்துகின்றன. சோசலிச மற்றும் முதலாளித்துவ நிறுவனங்களை நிர்வகிப்பதற்கான கோட்பாடுகளில் ஒரு அடிப்படை வேறுபாடு இருக்கவேண்டும். சீனாவில் நாம் ஆலைத்தலைவர்களின் பொறுப்பை கட்சியின் வழிகாட்டுதலின் கீழ்க் கொண்டு வந்ததன் மூலம் நமது முறைகளை முதலாளித்துவ முறைகளிலிருந்து கறாராக வேறுபடுத்திக் கொண்டுள்ளோம்.

## 35. அடிப்படைக் கோட்பாடுகள் மற்றும் விதிகளில் இருந்து தொடங்குவது மார்க்சிய முறை அல்ல

இரண்டாவது அத்தியாயம் முதற்கொண்டு ஏராளமான விதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. 'மூலதனம்' என்ற நூல் முதலாளித்துவப் பொருளாதாரத்தைப் பற்றிய பகுப்பாய்வை, தோற்றங்களிலிருந்து தொடங்கி, சாராம்சத்தைத் தேடுகிறது,

அதன் பிறகுதான் தோற்றத்தை விளக்க சாராம்சத்தைப் பயன்படுத்துகிறது. இந்த முறையின் மூலம் ஆற்றல் மிக்க தொகுப்புரைகளையும், பொது வரையறைகளையும் உருவாக்கு கிறது. ஆனால் பாடநூல் ஒரு பகுப்பாய்வைப் பின்பற்ற வில்லை. அதன் கட்டுரையாக்கத்தில் ஒரு ஒழுங்கு இல்லை. இந்நூல், மார்க்சிய—லெனினியத்தால் எப்போதும் எதிர்க்கப்பட்டு வந்த ஆராய்ச்சி முறையான நியதிகள், கோட்பாடுகள், விதிகள், வரையறைகள் ஆகியவற்றிலிருந்துதான் எப்போதும் தொடங்கு கிறது. கோட்பாடுகள் மற்றும் விதிகளின் விளைவுகள் பகுப்பாய் வுக்கும், முழுமையான ஆய்வுக்கும் உட்படுத்தப்பட வேண்டும்; அப்போதுதான் அதிலிருந்து கோட்பாடுகளையும் விதிகளையும் பெற முடியும். மனித அறிவு எப்போதும் தோற்றத்தைத்தான் முதலில் எதிர்கொள்கிறது. அங்கிருந்து தொடங்கி ஒருவர் கோட் பாடுகள் மற்றும் விதிகளுக்கான தேடலில் ஈடுபடுகிறார். பாடநூல் இதற்கு நேர்மாறாகச் செய்கிறது. அதன் ஆய்வு முறை பொதுக் கருத்திலிருந்து குறிப்பான உண்மையைப் பிரித்தெடுக்கும் முறை யாக இருக்கிறது, பகுப்பாய்வு முறையாக இல்லை. தர்க்கவியலின் விதிப்படி ''மக்கள் எல்லாம் இறக்கக்கூடியவர்கள். திரு. சாங் ஒரு நபர். எனவே, திரு. சாங் இறப்பார்.'' இந்த முடிவு எல்லா மனிதர்களும் இறப்பார்கள் என்ற மெய்யாகக் கொள்ளப்பட்ட மூலக் கூற்றில் இருந்து பெறப்பட்டதாகும். இது பொதுக் கருத் திலிருந்து புது முடிவுகளுக்கு வரும் முறையாகும். ஒவ்வொரு பிரச் னைக்கும் அந்நூல், முதலில் வரையறை அளிக்கிறது; பிறகு அதை மெய்யாகக் கொள்ளப்பட்ட மூலக் கூற்றாக எடுத்துக் கொண்டு அங்கிருந்து ஆராயத் தொடங்குகிறது; இதன் காரண மாக ஒரு பிரச்சனையைப் பற்றிய ஆய்வின் விளைவுதான் முக்கியத் துவம் வாய்ந்த மெய்யாகக் கொள்ளப்பட்ட மூலக் கூற்றாக இருக்க வேண்டும் என்பதைப் புரிந்துக் கொள்ளத் தவறுகிறது. பருண்மை யான ஆய்வுகளை மேற்கொள்ளாதவரை கோட்பாடுகளும் விதி களும் கண்டுபிடிக்கப்பட்டு நிரூபிக்கப்படுவது சாத்தியமில்லை.

## 36. முன்னேறிய அனுபவங்களை முயற்சி இன்றியே பிரபலப்படுத்த முடியுமா?

''ஒரு சோசலிச தேசிய பொருளாதாரத்தில் மிக நவீன அறிவியல் சாதனைகளையும், தொழில் நுட்ப கண்டுபிடிப்புகளை

யும், மிகவும் முன்னேறிய அனுபவங்களையும் எந்தவிதச் சிரமமுமின்றி எல்லா தொழில் நிறுவனங்களிலும் பிரபலப்படுத்திவிடலாம்'' என்று பக்கம் 461 பத்தி 2-ல் அந்நூல் கூறுகிறது. இந்தக் கூற்று உண்மைக்கு புறம்பானது.ஒரு சோசலிச சமுதாயத்தில் அறிவியல் ஆராய்ச்சி நிறுவனங்களைக் கட்டுப்படுத்தி, புதிய சக்திகளை அடக்கி ஒடுக்கும் ''அறிவுத்துறைப் பிரபுக்கள்'' இன்னும் இருக்கின்றனர்.இதன் காரணமாகத்தான் அறிவியலின் நவீன சாதனைகளை எவ்வித சிரமும் இன்றி பிரபலப்படுத்த முடிவதில்லை. எனவே, இப்படிப்பட்ட பேச்சுக்கள், ஒரு சோசலிச சமுதாயத்திற்குள்ளே முரண்பாடுகள் நிலவுகிறது என்பதை சாராம்சத்தில் அங்கீகரிக்கத் தவறுகிறது. எப்போதெல்லாம் புதியதாக ஒன்று தோன்றுகிறறோ, அப்போதெல்லாம் ஒரு வேளை அது மக்களுக்கு பழக்கமில்லாததாலோ அல்லது அதைப் புரிந்து கொள்ளாததாலோ அல்லது அது ஒரு குறிப்பிட்ட குழுவின் நலன்களுக்கு எதிராக உள்ளது என்பதினாலோ அது தடைகளைச் சந்திக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. உதாரணமாக, நமது 'நெருங்கி நடுதல்' மற்றும் 'ஆழச்சால்களை அமைத்தல்' ஆகியவற்றுக்கு எவ்வித வர்க்கத் தன்மையும் இல்லையெனினும் அவற்றை ஒரு குறிப்பிட்ட குழுவினர் எதிர்த்து, தடுத்து நிறுத்த முற்பட்டனர். இயல்பாகவே ஒரு சோசலிச சமுதாயத்தில் உள்ள இதுபோன்ற தடங்கல் நிலைமைகள் முதலாளித்துவ சமுதாயத்தில் உள்ளதிலிருந்து அடிப்படையிலேயே மாறுபட்டதாகும்.

## 37. திட்டமிடுதல்

பக்கம் 465-ல் ''சோசலிசத்தின் கீழ் முன்னதாக தீர்மானிக்கப்பட்ட திட்டத்திற்கு ஏற்ப சமுதாய உற்பத்தியை மேற்கொள்ள முடியும்'' என்ற ஏங்கெல்சின் மேற்கோள் எடுத்தாளப்பட்டுள்ளது. இது சரிதான். முதலாளித்துவ சமுதாயத்தில் பொருளாதார நெருக்கடிகள் மூலம் தேசியப் பொருளாதாரத்தின் சமநிலை அடையப்படுகிறது. சோசலிச சமுதாயத்தில் திட்டமிடுதல் மூலம் சமநிலையை அடைவதை ஒரு நடைமுறை யதார்த்தமாக்குவது சாத்தியமாகிறது. இந்த சாத்தியப்பாடு காரணமாக,தேவையான விகிதங்களைப் பற்றிய அறிவு ஒரு நிகழ்முறையின் மூலமாகத்தான் பெறப்படும் என்பதை நாம் மறுத்துவிடக்கூடாது. ''தன்னெழுச்சியும், அரசியற் கட்டுப்பாடற்ற வணிகக் கோட்பாடும் உற்பத்தி

சாதனங்களில் பொதுவுடைமையுடன் ஒத்துப்போகாது'' என்று இங்கு அந்நூல் கூறுகிறது. எனினும் தன்னெழுச்சியும், அரசியற் கட்டுப்பாடற்ற வணிகமும் சோசலிச சமுதாயத்தில் இல்லை என்று கருதக்கூடாது. விதிகளைப் பற்றிய நமது அறிவு உடனடியாக முழு நிறைவானதாகி விடுவதில்லை. ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் இன்னின்ன பணிகள் இன்னின்னாருடையது அல்லது வேறு ஒரு குழுவினுடையதாக இருக்கிறது என்று நடைமுறைப் பணிகள் நமக்கு எடுத்துரைக்கின்றன. ஒரு குறிப்பிட்ட குழுவின் திட்டம் விதிகளுக்குப் பொருந்துகிறது என்று யாரும் கூற முடியாது. நிச்சயமாக, சில திட்டங்கள் இசைவானதாக அல்லது அடிப்படையில் இசைவானதாக இருக்கும்,அதே சமயம் மற்றவை அப்படி இருக்காது அல்லது அடிப்படையில் அப்படி இருக்காது.

விகிதம் பற்றிய அறிவைப் பெற ஒரு வளர்ச்சிப் போக்கு— வெற்றி தோல்விகளை ஒப்பிடுவது, ஒரு கடுமையான வளர்ச்சிப் பாதை — அவசியம் இல்லை என்று கருதுவது, ஒரு இயக்க மறுப்பியல் கண்ணோட்டமாகும். தேவையை அங்கீகரிப்பதுதான் சுதந்திரம்; ஆனால் தேவையை ஒரு கண நேரப் பார்வையில் உணர்ந்து கொள்ள முடியாது உலகத்தில் இயற்கையான ஞானிகள் யாரும் இல்லை; அல்லது சோசலிச சமுதாயத்தை அடைந்தவுடன் ஒவ்வொருவரும் முன்னறிவு படைத்தவர்களாகி விடுவதில்லை. அரசியல் பொருளாதாரம் பற்றிய இந்த நூல் ஏன் கொஞ்ச காலம் முன்னதாக வெளியிடப்படவில்லை? இது வெளியிடப்பட்ட பிறகும் மீண்டும் மீண்டும் அது ஏன் திருத்தப்படுகிறது? இவ்வளவு நடந்த பிறகும் சென்ற காலத்தில் அறிவு முழுமை பெறாததாக இருந்தது, இப்போதும் அப்படித்தான் இருக்கிறது, இதற்கு காரணம் என்ன? நமது அனுபவங்களையே எடுத்துக் கொள்வோம் — தொடக்கத்தில் சோசலிசத்தை எப்படிச் செயல் படுத்துவது என்பதைப் பற்றி நாம் புரிந்திருக்கவில்லை; படிப்படியாக, நடைமுறையின் மூலம் ஓரளவுக்குப் புரிந்து கொண்டோம், ஆனால் போதுமான அளவு அல்ல. அது போதுமானது என்று நாம் கருதினால் இனிமேல் செய்வதற்கு ஏதுமில்லை!

''உணர்வுப் பூர்வமாக உரிய விகிதாச்சாரத்தை தொடர்ந்து பராமரிப்பது'' என்பது சோலிசத்தின் சிறப்புமிக்க அம்சமாகும் என்று பக்கம் 446-ல் கூறப்படுகிறது. இது பொறுப்பானதும்,தேவையானதும், நிறைவேற்றுவதற்கு கடினமானதும் ஆகும். ரசியாவின்

திட்டங்கள், விதிகளின் தேவைகளை ஏற்கனவே முழுமையாகப் பிரதிபலிக்கின்றன என்று கூற முடியாது என்று ஸ்டாலின் கூடக் கூறியிருக்கிறார்.

''உரிய விகிதத்தைத் தொடர்ந்து பராமரிப்பது'' என்பது அதே சமயத்தில் தொடர்ந்து சமனற்ற நிலையை தோற்றுவிப்பது மாகும். ஏனெனில், சரியான விகிதத்தை அடைய முடியாத போதுதான், பொருட்களை சரியான விகிதத்தில் வைத்திருக்க வேண்டிய அவசியம் தோன்றுகிறது. ஒரு சோசலிச பொருளாதாரத்தின் வளர்ச்சிப் போக்கில் சமனற்ற நிலைமை தொடர்ந்து தோன்றுவதால்தான் நாம் விகிதாச்சாரத்தையும், ஒருங்கமைப்பையும் பற்றி நிற்பதன் மூலம் பொருட்களை சமப்படுத்த வேண்டியுள்ளது. உதாரணமாக, பொருளாதாரம் வளர்ச்சி அடைய அடைய தொழில் நுட்பவியலாளர்கள் மற்றும் ஊழியர்களின் பற்றாக்குறை எல்லா இடங்களிலும் உணரப்படுகிறது. தேவைக்கும் அளிப்புக்கும் இடையில் முரண்பாடு தோன்றுகிறது. இதன் காரணமாக இந்த முரண்பாட்டைத் தீர்ப்பதற்கு மேலும் மேலும் அதிகப் பள்ளிகளை நடத்துவதற்கும், மேலும் மேலும் அதிக ஊழியர்களை பயிற்றுவிப்பதற்கும் இது நம்மைத் தூண்டுகிறது. சமச்சீரற்ற நிலைமைகளும், தாறுமாறான விகிதமும் தோன்றிய பிறகு தான் மக்கள் புறநிலை விதிகளை மேலும் புரிந்து கொள்கிறார்கள்.

திட்டமிடுதலில் கணக்கு வைப்பு முறையைப் பின்பற்றாமல், விஷயங்களை அதன் போக்கிற்கு விட்டாலோ அல்லது எல்லாம் தவறே இல்லாமல் இருக்கவேண்டும் என்று அதிக எச்சரிக்கையை மேற்கொண்டாலோ நமது முறைகள் வெற்றியடையாது, அதன் விளைவாக விகிதாச்சார முறையே அழிக்கப்பட்டு விடும்.

திட்டம் என்பது ஒரு சித்தாந்த வடிவமாகும். சித்தாந்தம், யதார்த்தத்தின் பிரதிபலிப்பாகும்; ஆனால், அதுவும்கூட யதார்த்தத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்துகிறது. நமது கடந்த காலத் திட்டங்கள் நமது கடற்கரைப் பகுதிகளில் எந்த தொழிற்சாலையையும் தொடங்கக்கூடாது என்று தீர்மானித்திருந்தது; 1957 வரை அங்கு எதுவும் நிர்மாணிக்கப்படவில்லை. நாம் ஏழு வருடங்களை வீணாக்கிவிட்டோம். 1958-க்குப் பிறகுதான் பெரிய அளவிலான கட்டுமானப் பணி துவங்கப்பட்டது. கடந்த இரண்டாண்டுகளில் பிரம்மாண்டமான வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. இவ்வாறே, திட்டங்கள்

போன்ற சித்தாந்த வடிவங்கள் பொருளாதார வளர்ச்சி மற்றும் அதன் வேகத்தின் மீது பெரும் பாதிப்பை உருவாக்குகின்றன.

## 38. உற்பத்தி சாதன உற்பத்தியின் வளர்ச்சிக்கு முன்னுரிமை; தொழில் மற்றும் விவசாயத்தை அக்கம் பக்கமாக வளர்ப்பது

உற்பத்தி சாதனங்களை உற்பத்தி செய்வதற்கு முன்னுரிமை அளித்து வளர்ப்பது பற்றிய பிரச்சனை, பக்கம் 466-ல் குறிப்பிடப் பட்டுள்ளது.

உற்பத்தி சாதன உற்பத்தியின் வளர்ச்சிக்கு முன்னுரிமை அளிப்பது என்பது விரிவாக்கப்பட்ட மறு உற்பத்தி கொண்ட எல்லா சமுதாயங்களுக்கும் பொதுவான ஒரு பொருளாதார விதியாகும். முதலாளித்துவ சமுதாயத்தில் உற்பத்தி சாதனங்களின் உற்பத்திக்கு முன்னுரிமை அளிக்கப்படவில்லை என்றால் விரிவாக்கப்பட்ட மறுஉற்பத்தி சாத்தியமில்லை. ஸ்டாலின் காலத்தில், கனரகத் தொழில் வளர்ச்சிக்கு முன்னுரிமை அளிக்க விசேஷ அழுத்தம் கொடுக்கப்பட்டதால் திட்டங்களில் விவசாயம் புறக்கணிக்கப்பட்டது. கிழக்கு அய்ரோப்பிய நாடுகளிலும் சென்ற சில ஆண்டுகளாக இதுபோன்ற பிரச்சனைகள் இருக்கின்றன. நமது அணுகுமுறை விவசாயம் மற்றும் தொழில் துறையை ஒருசேர ஊக்குவிக்கும் அதேசமயம் அவற்றில் ஒவ்வொன்றிலும் ஒரு பிரதான அம்சத்தை உள்ளடக்கிய வேறு பல திட்டங்களையும் மேற்கொள்வதற்கு ஒரு முன் நிபந்தனையாக கனரகத் தொழில் வளர்ச்சிக்கு முன்னுரிமை அளிப்பதாகும். விவசாயம் வளர்ச்சி அடையவில்லையெனில் ஒரு சில பிரச்சனைகளைத்தான் தீர்க்க முடியும். தொழில் துறையையும் விவசாயத்தையும் ஒருங்கிணைந்த முறையில் ஊக்குவிக்கும் ஆலோசனை 1960-ல் தான் உண்மையில் நடைமுறைப்படுத்தப்பட்டது எனினும், நான்கு ஆண்டுகளுக்கு முன்பே முன் வைக்கப்பட்டது. விவசாயத்தை நாம் எந்த அளவுக்கு உயர்வாக கருதுகிறோம் என்பது விவசாயத்திற்கு எவ்வளவு எஃகு பொருட்கள் ஒதுக்கப்படுகின்றன என்பதிலிருந்து புலப்படும். 1959-ல் நாம் 5,90,000 டன்கள் மட்டுமே ஒதுக்கீடு செய்தோம். ஆனால் இந்த ஆண்டு (நீர்த்தேக்கக் கட்டுமானங்கள் உட்பட)

நாம் 1.3 மில்லியன் டன்கள் ஒதுக்கீடு செய்தோம். இதுதான் உண்மையிலேயே தொழிலையும் விவசாயத்தையும் ஒருசேர வளர்ப்பதாகும்.

1925-க்கும் 1958-க்கும் இடைப்பட்ட காலத்தில் ரசியாவில் உற்பத்தி சாதனங்களின் உற்பத்தி 103 மடங்கு உயர்ந்துள்ளது. அதேசமயம் நுகர்வுப் பொருட்களின் உற்பத்தி 15.6 மடங்கு உயர்ந்துள்ளது என்று இங்கு அந்நூல் குறிப்பிடுகிறது. 103:15.6 என்ற விகிதம் கனரகத்* தொழில்களின் வளர்ச்சிக்கு உதவுகிறதா, இல்லையா? என்பதுதான் கேள்வி. நாம் கனரகத் தொழிலை வேகமாக வளர்ச்சியடையச் செய்ய வேண்டுமானால் ஒவ்வொருவரும் முன்முயற்சியையும், உயர்ந்த உற்சாகத்தையும் வெளிப்படுத்தவேண்டும். அதை நாம் விரும்பினால், தொழிற் துறையையும் விவசாயத்தையும் ஒருசேர வளர்க்கவேண்டும், இதுவே மென்ரகத் தொழிலுக்கும் கனரகத் தொழிலுக்கும் பொருந்தும்.

விவசாயம், மென்ரகத் தொழில், கனரகத் தொழில் ஆகியவற்றை ஒரே சமயத்தில் உயர்ந்த விகிதத்தில் வளருவதைச் சாத்தியமாக்கினால், கனரகத் தொழில் வளர்ச்சியின் கூடவே மக்களின் வாழ்க்கைத் தரமும் தகுந்த முறையில் அபிவிருத்தி அடைவதை உத்திரவாதம் செய்யமுடியும். விவசாயம் வளர்ச்சி அடையவில்லையெனில், மென்ரகத் தொழில் வளர்ச்சி அடையவில்லையெனில் அது கனரகத் தொழில் வளர்ச்சியைப் பாதிக்கிறது என்பதை ரசிய அனுபவத்திலிருந்து எந்த விதத்திலும் குறையாது நமது அனுபவமும் நிரூபிக்கிறது.

## 39. ''பங்கீடு தீர்மானகரமானது''- என்பதில் ஒரு தவறான கண்ணோட்டம்

''சோசலிச உற்பத்தியின் வளர்ச்சியில், தொழிலாளர்களுக்கு தங்கள் தனிப்பட்ட பொருளாதய நலனில் உள்ள அக்கறையைப் பயன்படுத்திக் கொள்வதுதான் அரசு நிர்வாகத்தில் உள்ள தொழில்களின் உயர்வான நிலைக்கு முன் நிபந்தனையாகும்'' என்று அத்தியாயம் 20-ல் அது கூறுகிறது. ''தொழில் மயமாக்கலுக்கான தேசியப் போராட்டத்தில் ஒரு முக்கியமான கடமையாற்ற,

* 1967 ஆம் ஆண்டு பதிப்பில் மட்டும்.

உழைப்புக்கேற்ற பங்கீடு என்ற பொருளாதார விதியை (தொழிலாளர்களின் தனிப்பட்ட பொருளாயத நலன்களை சோசலிச உற்பத்தி நலன்களுடன் இணைக்கும் விதியை) பயன்படுத்தி பொருளாதார கணக்கீட்டை முழுமையாக நிறைவேற்றுங்கள்'' என்று அத்தியாயம் 21-ல் அது கூறுகிறது. மேலும் ''சோசலிச உற்பத்தி இலக்குகள் தங்களுடைய சொந்த பொருளாயத நலன்களின் அடிப்படையில் தொழிலாளர்கள் உற்பத்தியை பெருக்குவதில் கடும் முயற்சிகள் எடுப்பதையும் திட்டப் பணியாளர்கள் தங்களுடைய உழைப்பின் பலன்களைப் பற்றி அக்கறை கொண்டிருப்பதையும் ஊக்குவிக்கின்றன. சோசலிச உற்பத்தியின் வளர்ச்சிக்கு இது ஒரு மகத்தான உந்து சக்தியாகும்'' என்று அத்தியாயம் 25-ல் அது கூறுகிறது. இவ்வாறு ''தனிநபர்களின் பொருளாயத நலன்களைப் பற்றிய அக்கறையை'' வரம்பற்றதாக்குவது தவிர்க்க முடியாத வகையில் தனிநபர் வாதத்தை வளர்க்கும் அபாயத்தைக் கொண்டுள்ளது.

உழைப்புக்கேற்ற பங்கீடு என்ற விதி ''சோசலிச உற்பத்தியை நிர்ணயிக்கும் உந்து சக்திகளில் ஒன்றாகும்; ஏனெனில், அது அனைத்துத் தொழிலாளர்களையும் தங்கள் சொந்தப் பொருளாயத நலன்களின் காரணமாக உற்பத்தித்திறனை அதிகரிக்கும் திட்டங்களை நிறைவேற்றுவதில் அக்கறையுடையவர்களாக்குகிறது'' என்று பக்கம் 452 கூறுகிறது. சோசலிசத்தின் அடிப்படைப் பொருளாதார விதிகள்தான் சோசலிச உற்பத்தியின் திசைவழியை நிர்ணயிக்கிறது என்றால், பிறகு தனி நபர்களின் பொருளாயத நலன்கள்தான் உற்பத்தியை தீர்மானிக்கின்ற உந்துசக்தி என்று 'கூறப்படுவது' எவ்வாறு பொருந்தும்? என்று ஒருவர் வினா எழுப்பாமல் இருக்கமுடியாது. நுகர்வுப் பொருட்களின் பங்கீட்டை தீர்மானகரமான உந்து சக்தியாகக் கருதுவது, பங்கீட்டை நிர்ணயகரமானது என்று கருதும் தவறான கண்ணோட்டமாகும். மார்க்ஸ் தனது **கோதா வேலை திட்டத்தைப் பற்றிய விமர்சனம்** என்ற நூலில் கூறினார்: ''பங்கீடு என்பது முதலில் உற்பத்திச் சாதனங்களின் பங்கீடாக இருக்கவேண்டும்; உற்பத்தி சாதனங்கள் யார் கையில் இருக்கிறது? இது ஒரு தீர்மானகரமான கேள்வியாகும். உற்பத்தி சாதனங்களின் பங்கீடு தான் நுகர்வுப் பொருட்களின் பங்கீட்டைத் தீர்மானிக்கிறது''. நுகர்வுப் பொருட்களின் பங்கீட்டை தீர்மானகரமான உந்து சக்தியாகக் கருதுவது

மார்க்சின் சரியான கண்ணோட்டத்தைச் சிதைப்பதும் கடுமையான தத்துவார்த்தத் தவறும் ஆகும்.

## 40. அரசியலை ஆணையில் வைப்பதும் பொருளாயத ஊக்கமும்

பக்கம் 452 பத்தி 2, கட்சி அமைப்பை உள்ளூர்ப் பொருளாதார அமைப்புகளுக்கு பின் வைக்கிறது; பிந்தியவை மத்திய அரசின் நேரடி நிர்வாகத்தின் கீழ் உள்ள தலைமையிடங்களாக மாறுகின்றன. உள்ளூர் கட்சி அமைப்புகள் அப்பகுதிகளில் அரசியல் தலைமையை மேற்கொள்ள முடியாமல் செய்து,அனைத்து ஆக்கப்பூர்வமான சக்திகளையும் போதுமான அளவுக்குத் திரட்டுவதைச் சாத்தியமற்றதாக்குகிறது. பக்கம் 457-ல், அந்நூல், மக்கள் திரளின் ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை ஏற்றுக் கொண்ட போதிலும், ''கம்யூனிச நிர்மாணத்தை துரிதப்படுத்துவதற்கான மிக முக்கியமான நிபந்தனைகளில் ஒன்று, தேசியப் பொருளாதார வளர்ச்சித் திட்டங்களை நிறைவு செய்யவும்— கூடுதலாக நிறைவு செய்யவும் நடைபெறும் போராட்டத்தில் மக்கள் திரளின் பங்கேற்பேயாகும்'' என்று அந்நூல் கூறுகிறது. பக்கம் 447-ல் ''பண்ணையில் உள்ள நபர்களின் முன்முயற்சி விவசாயத்தை வளர்ப்பதற்கான, ஒரு தீர்மானகரமான காரணியாகும்'' என்று மேலும் அது கூறுகிறது. மக்கள் திரள் போராட்டத்தை ''ஒரு முக்கிய காரணியாக'' கருதுவது, மக்கள் தான் வரலாற்றைப் படைப்பவர்கள் என்ற கோட்பாட்டை அவமதிப்பதாகும். வரலாற்றை உருவாக்குபவர்கள் மக்கள் அல்ல, திட்டமிடுபவர்கள்தான் என்று எந்தச் சூழ்நிலைமைகளிலும் கருத முடியாது.

அதன் பிறகு அந்நூல் உடனடியாக ''தொடக்கத்தில் நாம் பொருளாயத ஊக்கத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்'' என்ற விசயத்தை எழுப்புகிறது. இது மக்கள் திரளின் ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் பொருளாயத நலன்களால் ஊக்கப்படுத்தப்பட வேண்டும் என்பது போல் தோன்றச் செய்கிறது. இனிமையான வருங்கால வாய்ப்புகளைப் பற்றி மக்களுக்கு ஆசை காட்டிக் கவர்ந்திழுக்கும் ஒரு சாதனமாக தனி நபர் பொருளாயத நலன்களைப் பற்றி ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அந்நூல் விவா

திக்கிறது. இது பெருவாரியான பொருளாதார அலுவலர்கள் மற்றும் முன்னணி நபர்கள் ஆகியோரின் அகநிலையையும், அரசியல் கோட்பாட்டுப் பணிகளுக்கு அழுத்தம் கொடுக்கத் தவறியதையும் பிரதிபலிக்கிறது. அதுபோன்ற சூழ்நிலைமைகளில் பொருளாயத ஊக்குவிப்பைச் சார்ந்திருப்பதைத் தவிர வேறு வழியில்லை. ''ஒவ்வொருவரிடமிருந்தும் அவருடைய தகுதிக்கேற்ற உழைப்பைப் பெறுவது, ஒவ்வொருவருக்கும் அவருடைய உழைப் புக்கேற்ப அளிப்பது'' என்ற முழக்கத்தின் முதல்பாதி, உற்பத்தியில் மிகப் பெரும் ஆற்றல் ஈடுபடுத்தப்பட வேண்டும் என்று அர்த்தப் படுத்துகிறது. முழக்கத்தின் இரு பாதிகளையும் பிரித்து ஒருதலைப் பட்சமாக எப்போதும் பொருளாயத ஊக்கத்தைப் பற்றி மட்டுமே பேசுவது ஏன்? பொருளாயத ஊக்கத்திற்கான இதுபோன்ற பிரச்சாரம் முதலாளித்துவத்தை வெல்லப்பட முடியாததாக்கி விடும்.

## 41. சம நிலையும் சமனற்ற நிலையும்

பக்கம் 432-ல் பத்தி 1 தவறானது. முதலாளித்துவ தொழில் நுட்ப வளர்ச்சி சில அம்சங்களில் சம நிலையையும் மற்றதில் சமனற்ற நிலையையும் பெற்றதாக உள்ளது. இங்கு கவனத்திற் குரியது என்னவெனில் சோசலிசத்தின் கீழும் முதலாளித்துவத்தின் கீழும் தொழில்நுட்ப வளர்ச்சியில் நிலவும் சமநிலையும், சமனற்ற நிலையும் சாராம்சத்தில் வெவ்வேறானவை. சோசலிசத்தின் கீழ் சமநிலையும், சமனற்ற நிலையும் உள்ளது; உதாரணமாக, விடுதலைக்குப் பிறகு தொடக்க காலத்தில் வெறும் 200 நில அறிவியல் திட்டப் பணியாளர்கள் மட்டுமே இருந்தனர். எனவே தேசியப் பொருளாதார வளர்ச்சித் தேவைகளுடன் கனிவள வாய்ப்பு ஆய்வு இணக்கமற்று இருந்தது. பல ஆண்டுக் கால கடுமையான முயற்சிகளுக்குப் பிறகு நிலைமை கிட்டத்தட்ட சீர் செய்யப்பட்ட போது, புதிய சமனற்ற நிலைமைகள் தோன்றின. தற்போது சீனா வில், உற்பத்தியைப் பெருக்குவது மற்றும் உழைப்புத் திறனை அதிகரிப்பது என்ற தமது தேவைகளுடன் முற்றிலும் பொருந்தி வராத வகையில், சமாளிக்க முடியாத அளவு உடலுழைப்பு விஞ்சி யுள்ள நிலைமை உள்ளது. இதனால்தான், நாம் ஒரு பரந்த தொழில்நுட்பப் புரட்சியைத் தொடங்கி இந்த சமனற்ற நிலைமை யைப் போக்கவேண்டும். ஒவ்வொரு புதிய தொழில்நுட்பத் துறையின் தோற்றத்துடனேயே, தொழில்நுட்ப வளர்ச்சியில்

தவிர்க்க இயலாதவாறு மீண்டும் சமனற்ற நிலைமைகள் தென்படும். உதாரணமாக, நாம் இப்போது மிக உயர்ந்த தொழில் நுட்பத்தைச் சமாளித்து வருகிறோம்; எனவே, பல விசயங்களின் இசைவின்மையைப் பற்றி நாம் உணர்ந்திருக்கிறோம். ஆனால் இந்த ரசிய நூல் முதலாளித்துவத்தின் கீழ் ஓரளவு சமநிலை உள்ளதை மட்டுமல்லாது சோசலிசத்தின் கீழ் ஓரளவு சமனற்ற நிலை உள்ளதையும் மறுக்கிறது.

தொழில்நுட்பமும் பொருளாதாரமும் இவ்வாறுதான் வளர்ச்சி அடைகின்றன. சோசலிச பொருளாதாரத்தின் வளர்ச்சியை ஏற்ற இறக்கம் ஏதுமற்ற சமச்சீரான நேர்கோடு என்று அந்நூல் கருதுவதுடன் சோசலிச உற்பத்தியின் வளர்ச்சி அலை போன்று முன்னேறுகிறது என்பதைப் பற்றி அந்நூல் ஏதும் அறியாதது போலத் தோன்றுகிறது. இதுபோன்ற ஒன்றை சிந்தித்துக் கூடப் பார்க்கமுடியாது. வளர்ச்சிப் பாதை எதுவுமே நேரானது அல்ல; அது அலை அல்லது திருகுசுருள் வடிவிலானதாகும். நமது படிப்பும் கூட இதுபோன்றதுதான். படிப்பதற்கு முன் நாம் வேறு ஒன்றைச் செய்து கொண்டிருக்கிறோம். அதற்குப் பிறகு சில மணி நேரம் ஓய்வு எடுத்துக்கொள்கிறோம். இரவு பகலாக நாம் தொடர்ந்து படித்துக்கொண்டே இருக்கமுடியாது. நாம் ஒருநாள் அதிகமாகப் படிக்கிறோம்; மறுநாள் குறைவாகப் படிக்கிறோம். மேலும் நமது அன்றாடப் படிப்பில் சில சமயம் கருத்துக் கூற அதிகம் இருக்கும். சிலசமயம் குறைவாக இருக்கும். இவையாவும் அலைகள் போன்று, அதிகரிப்பதும் குறைவதுமாக இருக்கின்றன. சமநிலை சமச்சீரற்ற நிலையுடன் தொடர்புடையது. சமச்சீரற்ற நிலை இல்லாமல் சமநிலை இல்லை. எல்லாப் பொருட்களின் வளர்ச்சியும் சமச்சீரற்ற பண்பைக் கொண்டதாய் உள்ளது. அதனால்தான் சமநிலை கோரப்படுகிறது. பல்வேறு பகுதிகள் மற்றும் துறைகளின் எல்லா அங்கங்களிலும் சமநிலைக்கும் சமச்சீரற்ற நிலைக்கும் இடையிலான முரண்பாடுகள் இடைவிடாது தோன்றிக் கொண்டும், இடைவிடாது தீர்க்கப்பட்டுக் கொண்டும் இருக்கின்றன. முதல் ஆண்டிற்கு ஒரு திட்டம் உள்ளபோது அடுத்த ஆண்டிற்கும் ஒன்று இருக்கவேண்டியது அவசியமாகிறது. ஓராண்டுத் திட்டத்திற்கு ஒரு காலாண்டுத்திட்டம் தேவைப்படுகிறது, அதேபோல் அதற்கு ஒரு மாதாந்திரத் திட்டம் தேவைப்படுகிறது. பன்னிரண்டு மாதங்களில் ஒவ்வொரு மாதமும் சமநிலைக்கும் சமச்சீரற்ற நிலைக்கும் இடையிலான முரண்பாடுகள் தீர்க்கப்பட வேண்டியுள்ளன. குறிப்பாக, புதிய சமச்சீரற்ற

நிலைமைகள் மீண்டும் மீண்டும் தோன்றுகின்றன என்பதனாலேயே திட்டங்கள் எப்போதும் திருத்தி அமைக்கப்படவேண்டியுள்ளன.

ஆனால், பல்வேறு பிரச்சனைகளைப் பற்றி ஆய்வு செய்ய அந்நூல் இயக்கவியல் முறையை போதுமான அளவு பிரயோகிக்க வில்லை. தேசிய பொருளாதாரத்தை திட்டமிட்ட விகிதாச்சாரப் படி வளர்க்கும் விதிகளைப் பற்றிய அத்தியாயம் மிகவும் நீண்ட தாக இருக்கிறது; எனினும் சமநிலை மற்றும் சமச்சீரற்ற நிலை களுக்கிடையிலான முரண்பாடுகள் பற்றி ஒன்றுமே குறிப்பிடப் படவில்லை.

ஒரு சோசலிச சமுதாயத்தின் தேசியப் பொருளாதாரம், சமச்சீரற்ற நிலையை ஒழுங்குபடுத்துகிற திட்டமிட்ட விகிதாச் சார வளர்ச்சியை அடையமுடியும். இருப்பினும், சமச்சீரற்ற நிலைமை மறைந்து விடுவதில்லை. ''சமச்சீரற்ற தன்மை பொருட்களின் இயல்பிலேயே அடங்கியுள்ளது.'' தனியுடைமை ஒழிக்கப்பட்டு விட்டதால் பொருளாதாரத்தை திட்டமிட்ட முறையில் ஒழுங்கமைப்பது சாத்தியமாகியது. எனவே, ஒப்பீட்டள வில் பல தற்காலிக* சமநிலைகளை உருவாக்கும் பொருட்டு சமச் சீரற்ற நிலைமையின் புறநிலை விதிகளை உணர்வுப் பூர்வமாகக் கட்டுப்படுத்துவதும், பயன்படுத்துவதும் சாத்தியமாக இருந்தது.

உற்பத்தி சக்திகள் வேகமாக வளர்ச்சியடைந்தால், உற்பத்தி உறவுகள் உற்பத்தி சக்திகளுடன் பொருந்தி வரா; மேல்கட்டுமானம் உற்பத்தி உறவுகளுடன் பொருந்தி வராது. இந்தச் சந்தர்ப்பத்தில் உற்பத்தி சக்திகளுடன் பொருந்தி வரும் வகையில் மேல் கட்டுமானமும் உற்பத்தி உறவுகளும் மாற்றி அமைக்கப்பட வேண்டும். மேல்கட்டுமானத்திற்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையிலும், உற்பத்தி உறவுகளுக்கும் உற்பத்தி சக்திகளுக்கும் இடையிலும் - சமநிலையை ஒப்பீட்டளவில்தான் அடையமுடியும். ஏனெனில், உற்பத்திசக்திகள் எப்போதும் முன்னேறிக் கொண்டே இருக்கின்றன, எனவே எப்போதும் சமச்சீரற்ற நிலைமை நிலவுகிறது என்று சிலர் சொல்கிறார்கள். சம நிலையும் சமச் சீரற்ற நிலையும் ஒரு முரண்பாட்டின் இரண்டு பக்கங்கள்; அவற் றுள் சமச்சீரற்ற நிலை தனித்தன்மை பெற்றது; சமநிலை சார்பு

---

* 1969 ஆம் ஆண்டு பதிப்பில் மட்டும்.

உடையது. இவை இவ்வாறு இல்லையெனில், மேல் கட்டுமானம் ஆகட்டும், அல்லது உற்பத்தி உறவுகளாகட்டும், அல்லது உற்பத்தி சக்திகளாகட்டும் எதுவுமே மேலும் வளர்ச்சியடைய முடியாது; அவை உயிராற்றல் இழந்து மரத்துப் போகும். சமநிலை ஒப்பீட்டளவிலானது, சமச்சீரற்ற நிலை தனித்தன்மை வாய்ந்தது. இது ஓர் அனைத்தும் தழுவிய விதி, இது சோசலிச சமுதாயத்திற்கும் பொருந்தும் என்று நான் கருதுகிறேன். முரண்பாடும், போராட்டமும் தனித்தன்மை வாய்ந்தவை; ஒற்றுமை, ஏகோபித்த கருத்து, ஒருமைப்பாடு ஆகியன மாறக்கூடியவை (transitional) எனவே அவை சார்புடையவை. திட்டமிடுவதில் அடையப் பெற்ற பல்வேறு சமநிலைகள் தற்காலிகமானவை, மாறக் கூடியவை, நிபந்தனைக்கு உட்பட்டவை, எனவே அவை ஒப்பீட்டளவிலானவை. நிபந்தனையற்ற என்றென்றைக்கும் நிலையான சமநிலை பற்றி யார்தான் கற்பனை செய்ய முடியும்?

உற்பத்தி சக்திகள், உற்பத்தி உறவுகள், மேல் கட்டுமானம் ஆகியவற்றிலுள்ள சமநிலையையும் சமச்சீரற்ற நிலையையும் சோசலிசத்தின் பொருளாதார பிரச்சனைகளைப் பற்றி ஆராய்ச்சி செய்ய வழிகாட்டும் நெறிகளாக நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

அரசியல் பொருளாதார ஆய்வின் பிரதான ஆய்வுப் பொருள் உற்பத்தி உறவுகளாகும். ஆனால் உற்பத்தி உறவுகளை தெளிவாக ஆய்வு செய்ய வேண்டுமானால் அத்துடன் இணைந்த முறையில் உற்பத்தி சக்திகளையும் உற்பத்தி உறவுகள் மீது மேல் கட்டுமானம் உருவாக்கும் நேர் மறை, எதிர் மறை விளைவுகளையும் ஆய்வு செய்ய வேண்டியது அவசியமாகிறது. அந்நூல் அரசு பற்றி குறிப்பிடுகிறது; ஆனால் அதை ஆழமாக ஆய்வு செய்யவில்லை. புறக்கணிக்கப்பட்டவற்றுள் இதுவும் ஒன்றாகும். ஐயத்திற்கிடமின்றி, அரசியல் பொருளாதாரத்தை ஆய்வு செய்யும் போக்கில் உற்பத்தி சக்திகள் மற்றும் மேல் கட்டுமானத்தைப் பற்றிய ஆய்வுகளை அளவுக்கு அதிகமாக எடுத்துக் கொள்ளக் கூடாது. உற்பத்தி சக்திகளைப் பற்றிய ஆய்வு அளவுக்கதிகமாக மேற்கொள்ளப்பட்டால் அது தொழில் நுட்பவியலாகவும் இயற்கை விஞ்ஞானமாகவும் மாறிவிடுகிறது. மேல்கட்டுமானத்தைப் பற்றிய ஆய்வு அளவுக்கு அதிகமாக மேற்கொள்ளப்பட்டால் அது தேசம்-அரசு பற்றிய கோட்பாடாகவும், வர்க்கப் போராட்டம் பற்றிய

கோட்பாடாகவும் மாறிவிடும். சோசலிசம் என்ற தலைப்பின் கீழ் (மார்க்சியத்தின் மூன்று உள்ளடக்கக் கூறுகளில் ஒன்று) நாம் ஆய்வு செய்வது என்னவெனில் வர்க்கப் போராட்டத்தைப் பற்றிய கோட்பாடுகள், அரசு பற்றிய கோட்பாடுகள், கட்சி மற்றும் புரட்சி பற்றிய கோட்பாடுகள் அத்துடன் ராணுவ யுத்ததந்திரம், போர்த்தந்திரம் போன்றவையாகும்.

பகுப்பாய்வு செய்யப்பட முடியாதது என்று உலகில் எதுவும் இல்லை. ஆனால் சூழ்நிலைமைகள் மாறுபடுகின்றன, அதே போன்று சாராம்சமும் மாறுபடுகின்றன. பல அடிப்படை வகையினங்கள் மற்றும் விதிகள் — உதாரணமாக முரண்பாட்டின் ஒற்றுமை — பிரயோகிக்கப்படக் கூடியவை. நாம் பிரச்சனைகளை இவ்வழியில் ஆய்வு செய்தால், நாம் பிரச்சனைகளை இவ்வாறு உற்று நோக்கினால் நாம் ஒருமித்த ஒரு முழுமையான உலகக் கண்ணோட்டத்தையும் ஆராய்ச்சி முறையையும் பெறுவோம்.

## 42. ''பொருளாயத ஊக்குவிப்புகள்''

''சோசலிசக் கட்டத்தில் சமுதாயத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும் உழைப்பானது வாழ்க்கையின் அத்தியாவசியத் தேவையாக இன்னும் மாறவில்லை; எனவே உழைப்புக்கு பொருளாயத ஊக்குவிப்பு மிக முக்கியத்துவ முடையதாகும்.'' என்று பக்கம் 486 கூறுகிறது. இங்கு ''அனைத்து உறுப்பினர்கள்'' என்பது மிகவும் பொதுப்படையானது. லெனின் சமுதாயத்தின் ஓர் உறுப்பினராக இருந்தார். அவருடைய உழைப்பு அவருடைய வாழ்க்கையின் ''அத்தியாவசியத் தேவையாக'' இருக்கவில்லையா?

சோசலிச சமுதாயத்தில் தங்களுடைய கடமைகளை நேர்மையுடன் நிறைவேற்றும் பெரும்பான்மையினரும், தங்களுடைய கடமையில் நேர்மையற்று இருக்கும் ஒரு சில நபர்களும் என இரண்டு வகையான தனி நபர்கள் உள்ளனர் என்று பக்கம் 486 குறிப்பிடுகிறது. இது ஒரு சரியான பகுப்பாய்வு. ஆனால் நாம் இந்த இரண்டாம் பிரிவினரையும் நமது வழிக்குக் கொண்டு வரவேண்டுமெனில் நாம் பொருளாயத ஊக்குவிப்புகளை மட்டுமே நம்பியிருக்க முடியாது. அவர்களுடைய உணர்வு மட்டத்தை உயர்த்துவதற்காக நாம் அவர்களை இன்னும் விமர்சிக்கவும், கற்றுக் கொடுக்கவும் வேண்டும்.

அந்நூலின் இப்பகுதி, ஒப்பீட்டளவில் கடுமையான உழைப் பாளர்களாகவும், ஆக்கப்பூர்வமானவர்களாகவும் உள்ள தொழி லாளர்களைப் பற்றிக் கூறுகிறது. இப்படிப் பட்டவர்கள் சமத்துவ நிலைமைகளில் அதிகப்படியாக உற்பத்தி செய்யக் கூடியவர்கள். தெளிவாகவே, ஒரு தொழிலாளி கடும் உழைப்பை நல்குபவராக வும் ஊக்கமுடையவராகவும் இருக்கிறாரா இல்லையா என்பதைத் தீர்மானிப்பது அவருடைய அரசியல் உணர்வுதானே யொழிய தொழில் நுட்ப மட்டமோ அல்லது கலாச்சாரத் தேர்ச்சியோ அல்ல. உயர்வான தொழில் நுட்ப அறிவும் கலாச்சாரத் தரமும் உடைய ஒரு சிலர் கடினமாக உழைப்பவர்களாகவோ உத்வேகமுள்ளவர் களாகவோ இல்லை; வேறு சிலருடைய தரம் இவற்றில் குறை வாக இருப்பினும் மிகவும் உத்வேகமுள்ளவர்களாகவும், கடின மாக உழைப்பவர்களாகவும் உள்ளனர். அரசியல் உணர்வு மட்டம் முந்தைய பிரிவினருக்கு குறைவாகவும் பிந்தையவர்களுக்கு உயர் வாகவும் இருப்பதுதான் இதற்கு காரணமாகும்.

உழைப்புக்கு பொருளாயத ஊக்கமளிப்பது, ''உற்பத்தியை அதிகரிக்கத் தூண்டுகிறது.'' என்றும் ''உற்பத்தியை அதிகரிக் கத் தூண்டும் தீர்மானகரமான காரணிகளில் ஒன்றாக அது இருக்கிறது'' என்றும் இந்நூல் கூறுகிறது. ஆனால், பொருளாயத ஊக்கம் தவிர்க்க இயலாதவாறு ஒவ்வொரு ஆண்டும் மாறுவ தில்லை. அது போன்ற ஊக்கம் மக்களுக்கு நாள் தோறும், மாதம் தோறும், ஆண்டு தோறும் தேவைப்படுவதில்லை. கடினமான காலக்கட்டத்தில் ஊக்கம் குறைக்கப்படும் போது கூட மக்கள் தொடர்ந்து திருப்திகரமாக செயல்பட வேண்டும். பொருளாயத ஊக்குவிப்பை ஒருதலைப்பட்சமாக முழுமையானதாக்கியதன் மூலம், அந்நூல் உணர்வு மட்டத்தை உயர்த்துவதற்குப் போதிய முக்கியத்துவம் அளிக்காததோடு ஒரே அளவு சம்பளம் பெறுகின்ற மக்களின் உழைப்பில் ஏன் வேறுபாடுகள் உள்ளது என்பதை விளக்க முடியவில்லை. உதாரணமாக 5-ம் எண்[22] சம்பள அளவில் ஒரு குழு மிகச் சிறப்பாகவும், மற்றொன்று மிகவும் மோசமாக வும், மூன்றாவது ஒட்டுமொத்தத்தில் சுமாராகவும் செயல்படலாம். ஒரே மாதிரியான பொருளாயத ஊக்குவிப்பில், இது போன்ற வேறுபாடுகள் ஏன் தோன்றுகிறது என்பதை அவர்களுடைய பரிசீலனை முறை மூலம் விளக்க முடியாது.

பொருளாயத ஊக்கத்தின் முக்கியத்துவத்தை அங்கீகரித் தாலும் கூட என்றைக்கும் அது மட்டுமே ஒரு கோட்பாடாக்

இருக்க முடியாது. அரசியல் கோட்பாட்டிலிருந்து பெறப்படும் ஆன்மீக அகத்தூண்டுதல் என்னும் மற்றொரு கோட்பாடு எப் போதும் உள்ளது. மேலும், நாம் பொருளாயத ஊக்கம் பற்றிக் கவனம் செலுத்தும் போது அந்த விசயத்தை வெறும் தனிநபர் நலனாக மட்டுமே கருத முடியாது; பொது நலன் என்பது ஒன்று உண்டு, அதற்கு தனிப்பட்ட நலன்கள் கீழ்ப்படுத்தப்பட வேண்டும்; நீண்ட கால நலன்களுக்கு தற்காலிக நலன்களும், முழுமையின் நலன்களுக்கு பகுதி நலன்களும் கீழ்ப்படுத்தப்பட வேண்டும்.

''உழைப்புக்கு பொருளாயத ஊக்குவிப்பு, சோசலிச முன் மாதிரி'' என்ற பகுதியில் முன்மாதிரி பற்றி சிறப்பாக எழுதப்பட்ட பல பத்திகள் காணப்படுகின்றன. அதில் காணப்படாதது அரசிய லைப் பற்றிய விவாதம் தான்!

முதலாவதாக, மக்களைக் கொல்லும் அளவுக்கு வேலையில் ஈடுபடுத்தாதீர்கள். இரண்டாவதாக, அவர்களுடைய ஆரோக்கி யத்தைப் பாழாக்காமல், படிப்படியாக அவர்களை மேலும் திடகாத்திரமானவர்களாக்குங்கள். இந்த இரண்டு விசயங்களும் அடிப்படையானவை. மற்ற விசயங்களைப் பொறுத்தவரையில், நாம் அவற்றை பெற முடியும் என்றால், மிகவும் நல்லது; இல்லை யெனில் பரவாயில்லை! மக்கள் ஓரளவு உணர்வு பெற்றவர்களாக இருக்க வேண்டும் என்று நாம் விரும்புகிறோம். அந்நூல் பொருளாயத நலன்களுக்கு மட்டுமே அழுத்தம் கொடுக்கிறது. பொருளாயத நலன்கள் என்ற பாதையை அது உறுதியாகப் பற்றி நிற்கிறது. அதை ஏதோ ஒரு மந்திரக்கோல் எனக் கருதி அதை தனிநபர் நலன் பற்றிய ஒரு கோட்பாடாக கண்மூடித்தனமாக மாற்றுகிறது. அந்நூல், எதிர் காலத்திற்கும் எதிர்காலச் சந்ததி யினருக்கும் எவ்வித முக்கியத்துவமும் அளிப்பதில்லை என்றே தோன்றுகிறது.

அனைத்து மக்களின் நலன்களும் நிறைவுறும்போது தனிநபர் களின் நலன்களும் நிறைவுறும் என்பதை அவர்கள் கூறுவதில்லை. அவர்களால் வலியுறுத்தப்படும் தனிநபர் பொருளாயத நலன்கள் என்பது முதலாளித்துவத்திற்கு எதிரான பாட்டாளி வர்க்க போராட்டக் காலம் முதல் தொடருகின்ற குறுகிய தனிநபர் வாதமும், ஒரு பொருளாதாரவாதப் போக்கும் ஆகும். இது சோசலிச கட்டுமான காலத்திலும் வெளிப்படுகிறது. முதலாளித்துவ புரட்சிகளுக்கான சகாப்தத்தில் எண்ணற்ற முதலாளித்துவப்

புரட்சியாளர்கள், தங்களுடைய வர்க்கத்தின் நலன்களுக்காகவும், தங்கள் வர்க்கத்தின் எதிர்கால சந்ததியினருக்காகவும் வீரமிக்க தியாகங்கள் புரிந்துள்ளனர். அவர்களுடைய திட்டங்களும் நிச்சய மாக அவர்களுடைய தனிப்பட்ட உடனடி நலன்களுக்காக செய்யப்பட்டவை அல்ல.

நாம் தளப்பிரதேசங்களில் இருந்தபோது நமக்கு சுதந்திரமான (சந்தை அல்லாத) விநியோக அமைப்புமுறை இருந்தது.[28] அப்போது மக்கள் மிகவும் முரட்டு சுபாவம் உள்ளவர்களாக இருந்தனர்; இருப்பினும் விசேச சலுகைகள் பெறுவதற்காக எவ்வித சச்சரவும் இருந்ததில்லை. விடுதலைக்குப் பிறகு நாம் ஊதிய முறையை பெற்றோம்; தரவாரியாகப் பிரிப்பதை ஏற்றுக் கொண்டோம்; இருப்பினும் நமது பிரச்சனைகள் பெருகித்தான் உள்ளன. மக்களில் பலர் பதவிக்காக அடிக்கடி சச்சரவில் ஈடுபடு கின்றனர்; அவர்களை நாம் மிகவும் அறிவுறுத்தி இணங்கச் செய்ய வேண்டியுள்ளது.

நமது கட்சி இருபது ஆண்டுகளுக்கும் மேலாக ஓய்வு ஒழிச்சல் இன்றி யுத்தம் செய்ய வேண்டியிருந்தது. நீண்ட காலத்திற்குநாம் சந்தையற்ற விநியோக முறையைச் செயல்படுத்தி வந்தோம். அந்த காலத்தில் தளப் பிரதேசத்திலிருந்த சமுதாயம் முழுவதும் இம்முறையைச் செயல்படுத்தியவர்களின் எண்ணிக்கை பல லட்சங்கள் அளவுக்கு உயர்ந்தது; மிகக் குறைந்த பட்சமாகக் கூட அது பல பத்தாயிரங்களாக இருந்தது. ஜப்பானிய எதிர்ப்பு யுத்தத்தின் போது அது மறுபடியும் ஒரு மில்லியனுக்குச் சற்றுக் கூடுதலாக இருந்து பல மில்லியன்களாக உயர்ந்தது. விடுதலை யின் முதல்கட்டம் வரையிலும் நமது மக்கள் கடுமையாக உழைத்து கொண்டும் தீரமாகப் போராடிக் கொண்டும், பொருளாதார ஊக்குவிப்புகளை ஒரு சிறிதும் சாராமல், புரட்சிகர உள்ளுணர்வி னால் மட்டுமே எழுச்சி பெற்று ஒரு சமத்துவ வாழ்க்கை வாழ்ந்து வந்தனர். அதற்கு முன்பும் பின்பும் நாம் பல வெற்றிகளைப் பெற்றிருந்தாலும், உள்நாட்டு யுத்தத்தின் இரண்டாவது கட்டத்தின் இறுதியில் நாம் தோல்வியைத் தழுவினோம். இந்த நிகழ்ச்சிகளுக்கும் பொருளாதார ஊக்குவிப்பு இருந்ததா, இல்லையா என்பதற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. அது நமது அரசியல் பாதையும் இராணுவப் பாதையும் சரியாக இருந்ததா இல்லையா என்பதுடன் மட்டுமே சம்பந்தப்பட்டது.

இந்த வரலாற்று அனுபவங்கள் நமது சோசலிச கட்டுமான பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு மாபெரும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும்.

அத்தியாயம் 26 பக்கம் 482, ''சோசலிச தொழில் நிறுவனங்களில், தங்கள் பொருளாயத நலன்களுக்காக, தங்கள் சொந்த உழைப்பின் விளைவுகளைப் பற்றி அக்கறை கொள்ளும் தொழிலாளர்கள்தான் சோசலிச உற்பத்தியை வளர்ச்சியடையச் செய்வதற்கான உந்து சக்திகளாகும்'' என்று கூறுகிறது.

அத்தியாயம் 27 பக்கம் 501-503,''திறமைமிக்க உழைப்புக்கு ஒப்பீட்டளவில் ஊதியம் அதிகமாக உள்ளது...... இது தொழிலாளர்கள் தங்களுடைய கலாச்சார மற்றும் தொழில்நுட்ப தரத்தை உயர்த்த ஊக்குவித்து உடலுழைப்புக்கும் மூளை உழைப்புக்கும் இடையிலான அத்தியாவசியமான வேறுபாட்டைக் குறைக்கிறது'' என்று கூறுகிறது.

இங்கு திறமையான உழைப்பிற்குக் கொடுக்கப்படும் அதிக சம்பளமானது திறமையற்ற தொழிலாளர்களைத் தொடர்ந்து முன்னேறச் செய்து தங்களையும் திறமையான உழைப்பாளர்களில் ஒருவராக இணைத்துக் கொள்ளச் செய்தது எனக் கூறப்படுகிறது. இதன் பொருள் அதிகமான பணம் சம்பாதிப்பதற்காகத்தான் அவர்கள் கலாச்சாரத்தையும், தொழில் நுட்பத்தையும் கற்றார்கள் என்பதாகும். ஒரு சோசலிச சமுதாயத்தில், கலாச்சாரத்தையும் தொழில் நுட்பத்தையும் பயிலுவதற்காகப் பள்ளிக்குச் செல்லும் ஒவ்வொருவரும் தாங்கள் கலாச்சாரத்தையும் தொழில் நுட்பத்தையும் பயில்வது சோசலிச கட்டுமானத்திற்காகவும், தொழில் மயமாக்கலுக்காகவும், மக்களுக்குச் சேவை செய்வதற்காகவும், கூட்டு நலனுக்காகவுமேயன்றி எல்லாவற்றுக்கும் மேலாக அதிக ஊதியம் பெறுவதற்காக அல்ல என்பதை அனைத்துக்கும் முன்னதாக அங்கீகரிக்க வேண்டும்.

அத்தியாயம் 28 பக்கம் 526-ல், ''உழைப்பிற்கேற்ற பங்கீடு என்பது உற்பத்தியின் வளர்ச்சியை இயக்கும் மிகப் பெரிய சக்தி'' எனக் கூறப்படுகிறது. மேலும் இப்பக்கத்தின் இறுதியில், சோசலிசத்தின் கீழ் ஊதியம் தொடர்ந்து அதிகரிக்கிறது என்பதை விளக்கிய பிறகு, இப்புத்தகத்தின் திருத்தப்படாத மூன்றாவது பதிப்பு ''குறிப்பாக இந்த அம்சத்தில்தான் சோசலிசம் முதலாளித்துவத்திலிருந்து அடிப்படையில் மேம்பட்டது'' என்று

கூறும் அளவுக்குச் செல்கிறது. இவ்வாறு, ஊதியம் தொடர்ந்து அதிகரிக்கிறது என்ற காரணத்தினாலேயே சோசலிசம் முதலாளித்துவத்திலிருந்து அடிப்படையிலேயே உயர்வானது என்று கூறுவது மிகவும் தவறானதாகும். ஊதியம் என்பது நுகர்வுப் பொருட்களின் பங்கீடாகும். உற்பத்திச் சாதனங்களின் பங்கீடு இல்லையெனில், உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் அதாவது நுகர்வுப் பொருட்களின் பங்கீடு என்பதும் இருக்க முடியாது. பிந்தையது முந்தையதின் பயனிலைக்கூறு ஆகும்.

## 43. சோசலிசத் தொழில் நிறுவனங்களில் தனிநபர்களுக்கு இடையிலான உறவுகள்

பக்கம் 500 கூறுகிறது: ''சோசலிசத்தின் கீழ் பொருளாதாரத் தலைவர்களின் கௌரவம் அவர்கள் மீது மக்கள் திரள் வைத்திருக்கும் நம்பிக்கையைச் சார்ந்தது.'' இது மிகவும் சரியாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இத்தக் குறிக்கோளை அடைய உழைக்க வேண்டியுள்ளது. எமது அனுபவத்தில், ஊழியர்கள் (caders) பாசாங்கு செய்வதை ஒதுக்கி வைத்துவிட்டு தொழிலாளர்களுடன் ஒன்றிணையவில்லையெனில், தொழிலாளர்கள் தொழிற்சாலையை ஊழியர்களுடையதாகக் கருதுவார்களேயொழிய தங்களுடையதாக எப்பொழுதும் கருதமாட்டார்கள். ''வீட்டு எஜமானன்'' என்ற மனப்பான்மை தொழிலாளர்களை சுய கட்டுப்பாட்டுடன் உழைப்பு ஒழுங்கைப் பின்பற்றுவதில் ஆர்வமற்றவர்களாக்கும். சோசலிசத்தின் கீழ் தொழிலாளர்களுக்கும் தொழில் நிறுவனங்களின் தலைமைக்கும் இடையில் ஆக்கபூர்வமான ஒத்துழைப்பு, அதற்காக மேற்கொள்ள வேண்டிய எதையும் செய்யாமல் தானாகவே தோன்றிவிடும் என்று நினைக்காதீர்கள்.

உடலுழைப்புச் செய்யும் தொழிலாளர்களும் தொழில் நிறுவனங்களின் தலைவர்களும் ஆகிய இருவருமே ஒருங்கிணைந்த உற்பத்திக் கூட்டின் உறுப்பினர்கள் எனில், ''சோசலிச தொழில் நிறுவனங்களை, கூட்டுத் தலைமையின் வழி காட்டுதல் மூலமாக அல்லாமல் அதாவது, தொழிற்சாலையின் தலைமைப் பொறுப்பு கட்சிக் கமிட்டியின் வழிகாட்டுதல் மூலம் அல்லாமல் ஏன் 'தனிப்பட்ட தலைமை'யின் கீழ் செயற்படுத்த வேண்டும்?''

அரசியல் பலவீனப்பட்டுள்ளபோது பொருளாயத ஊக்கம் பற்றிப் பேசுவதைத் தவிர வேறு வழி இல்லை. அதனால் தான், ''தொழிலாளர்கள் தங்கள் பொருளாயத நலன்களை முன்னிட்டு தங்கள் உழைப்பின் பலனைப் பற்றி மிகவும் அக்கறை கொள்வார்கள் என்ற தத்துவத்தை முழுமையாக நடைமுறைப் படுத்துவது தான், சோசலிச உற்பத்தியைப் பற்றிப் புரிந்து கொள்வதற்கும், அதை உயர்த்துவதற்கும் அடிப்படையாக உள்ளது'' என்று அந் நூல் கூறுகிறது.

## 44. விரைவுத் திட்டங்கள், முடுக்கி விடப்பட்ட பணிகள்

பக்கம் 505-ல், ''முடுக்கி விடப்பட்ட பணிகள் என்ற நிகழ்ச்சிகளை கைவிட்டு விடவும். செய்ய வேண்டிய பணி பற்றி, முன்னதாக தயாரிக்கப்பட்ட திட்டத்தின்படி, சமச்சீரான முறையில் உற்பத்தியை மேற்கொள்ளவும்'' என அந்நூல் கூறுகிறது. திருத்தப்படாத மூன்றாவது பதிப்பில் இந்த வாக்கியம் பின் வருமாறு காணப்படுகிறது: ''நாம் விரைவுத் திட்டங்களை' எதிர்த்துப் போராடி சமச்சீரான முறையில் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட கால அட்டவணைக்கு ஏற்பச் செயல்பட வேண்டும்.'' விரைவுத் திட்டங்களையும், முடுக்கி விடப்பட்ட பணிகளையும் முழுமையாக மறுதலிப்பது சிறிதும் சரியல்ல.

விரைவுத் திட்டங்களை நாம் அறவே மறுதலிக்க முடியாது. அவற்றின் பயனும் பயன்படாமையும் எதிர்மறைக் கூறுகளின் ஒற்றுமையாகும். இயற்கையில் இளந்தென்றலும் தூமழையும் உள்ளன; அதே போல் பெருங்காற்றும் பேய் மழையும் உள்ளன. அவசரத் திட்டங்களின் பயன் அலைகளைப் போல் தோன்றி மறைகின்றன. உற்பத்தியிலும் தொழில் நுட்பப் புரட்சியிலும் அவற்றிற்கான அவசியம் தொடர்ந்து தோன்றுகிறது. விவசாயத்தில் நாம் பருவங்களுடன் போராடி வெற்றியடைய வேண்டியுள்ளது. நாடகத்திற்கு அதனுடைய இறுதிக் காட்சி இருந்தே தீர வேண்டும். விரைவுத் திட்டங்களை மறுத்துப் பேசுவது உண்மையில் இறுதிக் கட்டத்தை மறுப்பதாகும். ரசியா அமெரிக்காவை விஞ்ச விரும்புகிறது. நாம் ரசியாவின் மட்டத்தை, ரசியா எடுத்துக் கொண்ட காலத்தைவிடக் குறைந்த காலத்தில் அடைய விரும்புகிறோம். இது ஒரு விதமான விரைவுத் திட்டமாகும்.

சோசலிசப் போட்டியின் பொருள், பின் தங்கியது முன்னேறியதை விஞ்சுவதாகும். விரைவுத் திட்டங்கள் மூலமே இது சாத்தியம். தனி நபர்களுக்கிடையில், அலகுகளுக்கிடையில், தொழில் நிறுவனங்களுக்கிடையில், தேசங்களுக்கிடையில் உள்ள உறவுகள் யாவும் போட்டியே. நாம் முன்னேறியவற்றை விஞ்ச வேண்டுமெனில் விரைவுத் திட்டங்களைத் தவிர வேறு வழியில்லை. நிர்மாணப் பணிகளோ புரட்சியோ நிர்வாக ஆணைகளின் தாக்குதலுக்கு உள்ளாக்கப்படுமேயானால் (உதாரணம்: நிர்வாக ஆணைகள் மூலம் நிலச் சீர்திருத்தங்களை நிறைவேற்றுவது, அல்லது கூட்டுறவுகளை ஒழுங்கமைப்பது) உற்பத்தியில் தவிர்க்க முடியாதபடி வீழ்ச்சி ஏற்படும்; ஏனெனில் மக்கள் திரட்டப்பட்டிருக்க மாட்டார்கள் என்ற காரணத்தினால்தானே அல்லாமல் விரைவுத் திட்டங்களினால் அல்ல.

## 45. மதிப்பு விதியும் திட்டமிடுதலும்

பக்கம் 521-ல் சிறு எழுத்தில் அச்சிடப்பட்டுள்ள ஒரு சரியான பத்தி உள்ளது; அது விமர்சனப் பூர்வமாகவும். பிரச்சனைக்குரிய விவாதங்களுடன் இணைந்தும் உள்ளது.

மதிப்பு விதி திட்டமிடுதலுக்கு ஓர் கருவியாகப் பயன்படுகிறது. சரியே. ஆனால் மதிப்பு விதியை, திட்டமிடுவதற்கான பிரதான அடிப்படையாக ஆக்கிவிடக் கூடாது. நாம் மாபெரும் பாய்ச்சலை மதிப்பு விதியின் தேவைகளின் அடிப்படையில் அல்லாமல் உற்பத்தியை விரிவுபடுத்த வேண்டிய தேவையின் அடிப்படையிலும் சோசலிசத்தின் அடிப்படைப் பொருளாதார விதிகளின் அடிப்படையிலும் நிறைவேற்றினோம். மதிப்பு விதி என்ற குறுகிய கண்ணோட்டத்தில் விசயங்களைக் கவனித்தால் மாபெரும் பாய்ச்சல் அதில் ஏற்பட்ட இழப்புகளுக்கு ஈடான மதிப்புடையதல்ல என்றும், சென்ற ஆண்டில், இரும்பும் எஃகும் உற்பத்தி செய்ய முழுமூச்சுடன் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் விரயமாக்கப்பட்ட உழைப்பு என்றும் தீர்மானிக்க வேண்டும். உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட எஃகின் அளவும் தரமும் மிகவும் குறைவாக இருந்தது; இழப்புக்களை அரசு ஈடுசெய்ய வேண்டியிருந்தது. பொருளாதார விளைவுகள் குறிப்பிடத்தக்கதாக இல்லை. இப்படிப் பல இருந்தன. குறுகிய கால அரைகுறைக் கண்ணோட்டத்தின்படி இவ்வியக்கம்

ஒரு இழப்பாகும்; ஆனால் ஒட்டுமொத்த நீண்டகாலக் கண்ணோட்டத்தின்படி, அவ்வியக்கம் ஒரு பெரும் மதிப்புள்ளதாகும்; ஏனெனில் அது ஒரு முழுமையான பொருளாதாரக் கட்டுமானக் கால கட்டத்திற்கான பாதையை அகலத் திறந்துவிட்டது. நாடு முழுவதும் இரும்பு மற்றும் எஃகு உற்பத்திக்கு பல புதிய தொடக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன, பல தொழில் மையங்கள் நிறுவப்பட்டன. இது நமது முன்னேற்றத்தைப் பெருமளவில் துரிதப் படுத்த உதவியது.

1959 குளிர் காலத்தில் நாடு முழுவதும் 75 மில்லியன் மக்கள் நீர்ச் சேமிப்புப் பணிகளில் ஈடுபட்டிருந்தனர். நமது நீர்ச்சேமிப்பின் அடிப்படைப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு இரண்டு பெரிய இயக்கங்களை ஒழுங்கமைக்கும் முறை பின்பற்றப்பட்டது ஒன்று இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் என்ற நோக்கு நிலையிலிருந்து பார்த்தால், இந்த அளவு உழைப்புக்கு ஈடாகக் கொடுக்கப் படும் உணவு தானியத்தின் மதிப்பு இயல்பாகவே மிகவும் அதிகமாகவே உள்ளது. ஆனால், நீண்டகாலக் கண்ணோட்டத்தில் இந்த இயக்கம் தானிய உற்பத்தியைப் பெருக்குமளவுக்கு அதிகப் படுத்துவதோடு அதை விரைவுபடுத்தவும் செய்யும்; அத்துடன் விவசாயப் பொருட்களின் உற்பத்தியையும் நிலை நிறுத்தும். ஒரு மூல அலகு ஆதாயத்திற்கு பண்டங்களின் மதிப்பையும் நிலைப் படுத்தும். பிறகு இவை யாவும் மக்களின் தானியத் தேவைகளை நிறைவு செய்வதாக அமையும்.

தொடர்ச்சியான விவசாய வளர்ச்சியும் மென்ரகத் தொழில் வளர்ச்சியும் கனரகத் தொழிலுக்கு மேலும் மூலதனத்தை திரட்டு கிறது. இதுவும் கூட நீண்டகால அடிப்படையில் மக்களுக்குப் பயனளிக்கக்கூடியதே. நாடு முழுவதும் உள்ள விவசாயிகளும் மக்களும் அரசு என்ன செய்கிறது என்பதைப் புரிந்து கொண்டால், பணம் பெறப்படுகிறதா, இழக்கப்படுகிறதா என்பதைப் பற்றிக் கவலைப் படாமல் நிச்சயமாக அங்கீகரிப்பார்கள், எதிர்க்க மாட்டார்கள். விவசாயிகள் மத்தியிலிருந்தே தொழிலை ஆதரிப்பது என்ற முழக்கம் முன் வைக்கப்பட்டது. இதோ நிரூபணம்! ஸ்டாலினும் லெனினும் கூறினர்: ''சோசலிச கட்டுமான காலகட்டத்தில் விவசாயிகள் அரசுக்குக் கப்பம் செலுத்தவேண்டும்''. பெருவாரியான சீன விவசாயிகள் ஆக்க ரீதியிலான மனப்பான்மையுடன் ''கப்பம்'' செலுத்தி வருகின்றனர். விவசாயிகளில் பதினைந்து சதவீதத்தினராகிய வசதிபடைத்த விவசாயிகள் மற்றும் நடுத்தர

விவசாயிகள் மத்தியில்தான் ஓரளவு அதிருப்தி நிலவுகிறது. அவர்கள் மாபெரும் பாய்ச்சல் மற்றும் மக்கள் கம்யூன்கள் என்ற கருத்தாக்கத்தையே எதிர்க்கிறார்கள்.

மொத்தத்தில், நாம் செலவை விட திட்டங்களுக்கு முன்உரிமை கொடுக்கிறோம். சந்தேகமின்றி நாம் செலவைப் பற்றி கண்டு கொள்ளாமல் இருக்க முடியாது. சில ஆண்டுகளுக்கு முன் பன்றி களின் வாங்கும் விலையைக் கூட்டினோம்; இது பன்றி வளர்ப்பின் மீது ஆக்கப் பூர்வமான விளைவுகளை உருவாக்கியது. ஆனால் இப்போது உள்ள தேசிய அளவிலான பன்றி வளர்ப்புக்கு, திட்டமிடுதலைத்தான் நாம் பிரதானமாகச் சார்ந்து இருக்க வேண்டியுள்ளது.

பக்கம் 521, கூட்டுப் பண்ணைகளின் சந்தைகளில் உள்ள விலை நிர்ணயிப்புப் பிரச்சனைகளைப் பற்றிக் குறிப்பிடுகிறது. அவர்களுடைய கூட்டுப் பண்ணை சந்தைகளுக்கு மிக அதிகமான சுதந்திரம் உள்ளது. அதுபோன்ற சந்தைகளில் விலைகளை ஒழுங்குபடுத்த அரசின் பொருளாதார அதிகாரத்தை மட்டும் பயன்படுத்துவது போதுமானதல்ல. தலைமையளிப்பதும் கட்டுப் படுத்துவதும் கூட அவசியமானது. நமது சந்தைகளில், முதல் கட்டத்தில் அரசு, விலைவாசிகளை ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் வைத்திருந்தது. இவ்வாறு சில சிறு சலுகைகள் பெரியதாக வளர்ச்சி யடையாதவாறு கட்டுப் படுத்தப் பட்டன.

பக்கம் 522, ''மதிப்பு விதியின் மீது நமக்கு இருந்த ஆளுமை யின் காரணமாக, இந்த விதி முதலாளித்துவ சமுதாயத்தில் தவிர்க்க முடியாதபடி உருவாக்கும் சமுதாய உழைப்புச் சக்தியின் விரயம், அராஜக உற்பத்தி ஆகியவற்றை சோசலிச பொருளாதாரத் தில் காண முடியவில்லை'' என்று கூறுகிறது. இது மதிப்பு விதியின் விளைவுகளை மிகைப் படுத்துகிறது. சோசலிச சமுதாயத் தில், பிரதானமாக உடைமை முறையின் காரணமாக, அதாவது- சோசலிசத்தின் அடிப்படை விதிகள், உற்பத்தி மற்றும் பங்கீட்டில் தேசிய அளவிலான திட்டமிடுதல், சுதந்திரமான போட்டி இன்மை அல்லது அராஜகம் இன்மை போன்றவற்றின் காரணமாக, நெருக்கடிகள் உருவாவதில்லையே யொழிய மதிப்பு விதியின் மீது நமக்கிருக்கும் ஆளுமையின் காரணமாக அல்ல. முதலாளித்துவத்

தில் பொருளாதார நெருக்கடிகள் உடைமை முறையினாலும் தீர்மானிக்கப்படுகிறது என்பது கூறாமலேயே விளங்கும்.

## 46. ஊதியங்களின் வடிவங்கள்

பக்கம் 530-ல், ஊதிய வடிவங்கள் பற்றிய விவாதத்தில், உற்பத்தியின் அளவிற்கேற்ற ஊதியத்தைப் பிர்தானமாகவும்,நேரத் திற்கேற்ற ஊதிய விகிதந்தை இணைந்து செல்லக்கூடிய ஒன்றாக வும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று வாதாடுகிறது. நாம் இதற்கு நேர்மாறாகச் செய்கிறோம். உற்பத்தியின் அளவிற்கேற்ப ஊதியம் என்பதற்கு ஒருதலைப் பட்சமாக அழுத்தம் கொடுப்பது வயதான மற்றும் இளைய தொழிலாளர்களுக்கிடையிலும், பலமான மற்றும் பலவீனமான தொழிலாளர்களுக்கிடையிலும் தவிர்க்க முடியாதபடி முரண்பாடுகளைத் தோற்றுவிப்பதோடு, தொழிலாளர்களிடையே ''பெரியவற்றுக்கு ஏங்குவது'' என்ற மனோபாவத்தை ஊட்டி வளர்க்கும். இது கூட்டு நோக்கங்கள் அல்ல, தனிநபர் வருமானம் தான் பிரதான குறிக்கோள் என்றாக்கிவிடுகிறது. உற்பத்தியின் அளவிற்பேற்ப ஊதியம் அளிக்கும் முறை தொழில் நுட்பக் கண்டு பிடிப்புக்களையும், இயந்திர மயமாக்கலையும் தடை செய்கிறது என்பதற்குக் கூடச் சான்றுகள் உள்ளன.

உற்பத்தியின் அளவிற்கேற்ப ஊதியமளிப்பது, தானியங்கி உற்பத்தி முறைக்குப் பொருத்தமற்றது என்பதை இந்நூல் ஏற்றுக் கொள்கிறது. ஒரு புறம் அவர்கள் தானியங்கி முறையைப் பரவ லாக வளர்ப்பதை விரும்புவதாக கூறுகிறார்கள். மறுபுறம் உற்பத்தி யின் அளவிற்கேற்ப ஊதியம் அளிக்கும் முறையை பரவலாகப் பயன்படுத்த வேண்டும் என்று விரும்புகின்றனர். இதில் ஒரு முரண்பாடு உள்ளடங்கியுள்ளது.

நாம் நேர விகித முறையையும் அத்துடன் வெகுமதிகளையும் நடைமுறைப் படுத்தியுள்ளோம். சென்ற இரண்டு ஆண்டு காலத்தில் ஆண்டு இறுதி ''பாய்ச்சல் முன்னேற்ற'' போனஸ் இதற்கு ஓர் உதாரணமாகும். அரசாங்கம் மற்றும் கல்வித் துறையில் பணி புரி பவர்களைத் தவிர்த்து, மற்ற எல்லா அலுவலர்களும் தொழிலாளர் களும், குறிப்பிட்ட தொழில் அலகுகளின் அலுவலர்களும் தொழி லாளர்களும் தாங்களே முடிவு செய்தபடி வேறுபட்ட தொகைகளை ஆண்டு இறுதி பாய்ச்சல் முன்னேற்ற போனசாகப் பெற்றனர்.

## 47. விலையைப் பற்றி இரண்டு கேள்விகள்

இங்கே இரண்டு கேள்விகள் பரிசீலனைக்குரியவையாக உள்ளன.

முதலாவது, நுகர்வுப் பொருட்களுக்கு விலை நிர்ணயிப்பது. ''சோசலிசமானது மக்களுக்கு நுகர்வுப் பொருட்களின் விலையை குறைக்கும் கொள்கையை நடைமுறைப் படுத்துவதாகத்தான் எப்போதும் இருந்து வந்திருக்கிறது'' என்று அந்நூல் கூறுகிறது. நமது அணுகுமுறை விலையை நிலைப் படுத்துவதாக உள்ளது. பொதுவாக அவற்றை அதிகரிக்க அனுமதிப்பதும் இல்லை, குறைப் பதும் இல்லை. நமது ஊதிய மட்டங்கள் ஒப்பீட்டளவில் குறைவாக இருந்த போதிலும், எல்லோருக்கும் வேலையும், குறைந்த விலைவாசியும், குறைந்த வாடகையும், ஊழியர்கள் மற்றும் தொழி லாளர்களின் வாழ்க்கைத் தரத்தைப் போதுமான அளவு பாங் குடையதாக வைத்திருக்கிறது. இறுதிப் பகுப்பாய்வில், தொடர்ந்து விலையைக் குறைப்பது சிறந்ததா அல்லது அவற்றை ஏறாமலும் இறங்காமலும் வைப்பது சிறந்ததா என்பது ஆய்வுக்குரிய பிரச் சனையாகும்.

மற்றொரு பிரச்சனை கனரக மற்றும் மென்ரகத் தொழிற் சாலைகளின் உற்பத்திப் பொருட்களின் விலையை நிர்ணயிப்பது சம்பந்தப்பட்டது. ஒப்பீட்டளவில் பேசுகையில் அவர்கள் முந்தைய வற்றுக்கு குறைந்த விலையும் பிந்தையவற்றுக்கு அதிக விலையும் நிர்ணயித்துள்ளனர். நாம் இதற்கு நேர் எதிராகச் செய்கிறோம். ஏன்? இறுதியில் எது சரியான வழி என்பது ஆய்வுக்குரிய மற்றொரு பிரச்னையாகும்.

### பாகம் III அத்தியாயம் 30-34

## 48. வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு தொழில்களையும், பெரிய, நடுத்தர மற்றும் சிறிய தொழில்களையும் ஒருசேர வளர்ப்பது

பக்கம் 547 கட்டுமானத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியைப் பகிர்ந் தளிப்பதற்கு எதிர்ப்பு தெரிவிக்கிறது. அளவுக்கு அதிகமான பெரும்

திட்டங்களை ஒரே சமயத்தில் மேற்கொள்வதன் மூலம் எதையுமே குறிப்பிட்ட காலத்தில் நிறைவு செய்ய முடியாது என்று அவர்கள் அர்த்தப் படுத்துவார்களே யானால், உண்மையில் நாம் அவர் களுடன் உடன்படுகிறோம். ஆனால் பெரிய கட்டுமானங்களின் போது சிறிய மற்றும் நடுத்தர திட்டங்கள் எதிர்க்கப்பட வேண்டும் என்பது முடிவாக இருப்பின் நாம் அதற்கு உடன்படவில்லை. 1958-ல் நடுத்தர மற்றும் சிறுவீத தொழில் நிறுவனங்கள் பெரு மளவில் வளர்க்கப்பட்டதன் அடிப்படையில் சீனாவின் பிரதான புதிய தொழில் மையங்கள் நிறுவப்பட்டன. இரும்பு எஃகு தொழிலில் தொடக்க ஏற்பாடுகளின்படி, அடுத்த எட்டு ஆண்டுகாலத்தில் இருபத்தொன்பது பெரிய, கிட்டத்தட்ட நூறு நடுத்தர மற்றும் பல நூறு சிறுவீத தொழில் மையங் கள் கட்டி முடிக்கப்படும். நடுத்தர மற்றும் சிறு வீதத் தொழில் கள் ஏற்கனவே இரும்பு மற்றும் எஃகு தொழிலின் மீது பெரும் பாதிப்பை ஏற்படுத்தி யுள்ளன. 1959-ம் ஆண்டின் கண் ணோட்டத்தின்படிக் கூறுவதாயின், நாடு தழுவிய அளவில் கச்சா இரும்பின் உற்பத்தி 20 மில்லியன் டன்களைத் தாண்டியுள்ளது. அதில் பாதிக்கு மேல் நடுத்தர மற்றும் சிறுவீதத் தொழில்களில் உற்பத்தி செய்யப் பட்டவை. எதிர் காலத்தில் இரும்பு, எஃகு தொழில் வளர்ச்சிக்கு நடுத்தர மற்றும் சிறுவீதத் தொழில் நிறு வனங்கள் தொடர்ந்து பெரும் முக்கியத்துவ முடையதாக இருக் கும். பல சிறியவை நடுத்தரமானவையாகவும், பல நடுத்தர மானவை பெரியவைகளாகவும் மாறும்; பின்தங்கியவை முன்னேறி யவையாகவும், உள்நாட்டு மாதிரிகள், வெளிநாட்டினதைப் போலவும் மாறும் - இதுதான் வளர்ச்சியின் புறநிலை விதியாகும்.

நாம் முன்னேறிய தொழில்நுட்பத்தை மேற்கொள்வோம். ஆனால் ஒரு குறிப்பிட்ட கால கட்டத்திற்கு பின்தங்கிய தொழில் நுட்பத்தின் அவசியத்தையும், தவிர்க்க முடியாமையை யும் மறுக்க முடியாது. வரலாறு தொடங்கிய காலம் முதல், புரட்சிகர யுத்தங்கள் ஆயுதங்களில் குறைபாடு உள்ளவர்களால் எப்போதும் வெல்லப்பட்டுள்ளது; ஆயுதங்களில் மேநிலை வகித்த வர்கள் தோல்வியுற்றுள்ளனர். நமது உள்நாட்டு யுத்த காலத்தி லும், ஜப்பானிய எதிர்ப்பு யுத்தத்தின் போதும், விடுதலைப்போரின் போதும் நம்மிடம் நாடு தழுவிய அரசியல் அதிகாரமும் நவீன யுத்த தளவாடங்களும் இல்லை. மிக நவீன ஆயுதங்கள் இல்லா

மல் ஒருவர் யுத்தம் செய்ய முடியாது என்றால், அது ஒருவர் தன்னை நிராயுதபாணியாக்கிக் கொள்வதற்குச் சமமாகும்.

அந் நூல் விவரிப்பது போன்ற (பக்கம். 420) ஒட்டு மொத்த இயந்திர மயமாக்கலை இரண்டாவது பத்தாண்டுகளில் நிறைவு செய்ய வேண்டும் என்ற நமது விருப்பம் இன்னும் நிறைவு பெற முடியாத ஒன்றாகவே தோன்றுகிறது; ஒரு வேளை நமது மூன்றாவது பத்தாண்டுகளில் அது சாத்தியமாகலாம். எதிர்காலத்தில், போதுமான அளவு இயந்திரங்கள் இல்லாத காரணத்தால் பகுதி இயந்திர மயமாக்கலுக்கும் நமது கருவிகளை அபிவிருத்தி செய்யவும் நாம் அறைகூவல் விடலாம். தற்போது நாம் பொதுவாகத் தானியங்கி மயமாக்கலை ஒதுக்கி வைத்துள்ளோம். இயந்திர மயமாக்கலைப் பற்றி நாம் விவாதிக்க வேண்டும்; ஆனால் அதை ஒரு விகிதாச்சாரம் பற்றிய உணர்வுடன் செய்ய வேண்டும். தானியங்கி மற்றும் இயந்திர மயமாக்கலைப் பெரிதுபடுத்தினால், பகுதி இயந்திர மயமாக்கலையும், சுதேசி உற்பத்தி முறையையும் மக்கள் வெறுக்கத் தொடங்குவர். கடந்த காலத்தில் நாம் அது போன்று வழி தவறினோம்; எல்லோரும் புதிய தொழில்நுட்பம், புதிய இயந்திரங்கள், பெருவீத உற்பத்தி, உயர்ந்த தரம் ஆகிய வற்றைக் கோரியபோது சுதேசி, நடுத்தர அல்லது சிறுவீத உற்பத்தி ஆகியன வெறுத்து ஒதுக்கப்பட்டன. நாம் உள்நாட்டு, வெளிநாட்டு மற்றும் பெருவீத, நடுத்தர, சிறிய தொழில்களை ஒருசேர வளர்க்காத வரை இந்தப் போக்கை நம்மால் முற்றாகக் களைய முடியவில்லை.

தற்சமயம் நாம் விவசாயத்தில் இரசாயன மயப்படுத்தலை முன்வைக்கவில்லை. இதற்கு ஒரு காரணம் அடுத்துவரும் பல ஆண்டுகளில் கூட நாம் போதுமான அளவு ரசாயன உரங்களை உற்பத்தி செய்யமுடியும் என்று எதிர் பார்க்க வில்லை. (ஓரளவு நம்மிடம் உள்ளது கூட பணப்பயிருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது). இன்னொரு காரணம் நாம் இரசாயனங்களைப் பயன்படுத்துவதில் கவனத்தைத் திருப்பினால், ஒவ்வொருவரும் அதிலேயே கவனத்தைச் செலுத்தி பன்றி வளர்ப்பைப் புறக்கணித்துவிடுவர். செயற்கை (இரசாயன) உரங்களும்கூடத் தேவைதான் ஆனால் அவற்றை இயற்கை உரங்களுடன் இணைக்கவேண்டும்; தனியாக இட்டால் அவை மண்ணைக் கடினப்படுத்தி விடும்.

ஒவ்வொரு துறையிலும், புதிய தொழில் நுட்பங்களை மேற்கொள்வது பற்றி அந்நூல் கூறுகிறது. ஆனால் இதைச் செய்வது

அவ்வளவு எளிதானதல்ல. எப்போதும் படிப்படியான வளர்ச்சி முறை இருக்க வேண்டியது அவசியமாகும். மேலும், புதிய இயந் திரங்கள் புகுத்தப்படும் போதும் கூட, பழையவை பல தொடர்ந்து நீடிக்கும். நீங்கள் ஏற்கனவே இருக்கும் தொழிற்சாலைகளில் புதிய இயந்திரங்களை புகுத்தும்போதும், புதிய தொழில் நிறுவனங் களை நிர்மாணிக்கும் போதும், அவற்றில் இருந்த இயந்திரங் களையும், இயந்திர சாதனங்களையும் புத்திசாலித் தனத்துடனும் அதிக பட்சம் பயனுள்ள வகையிலும் பயன்படுத்த வேண்டும் என்று அந்நூல் கூறுவது மிகவும் சரியானதே (பக்கம் 427). எதிர்காலத் திலும் நிலைமை இதிலிருந்து மாறுபட்டதாக இருக்காது.

''பெரிய'' மற்றும் ''அந்நிய''மானவற்றில் ''புதிய வளர்ச் சிக்கான சுய சார்பு'' என்ற உணர்வுடன் நாம் செயல்படவேண்டும். 1958-ல் நாம் பொய்மைகளில் இருந்து விடுபடுவது மற்றும் நமது சொந்தக் கைகளைக் கொண்டே செயல்படுவது என்ற முழக்கங் களை முன்வைத்தோம். நாம் சொந்தமாகச் செயல்படுவது சாத்திய மானதே என்று உண்மைகள் எடுத்துக் காட்டுகின்றன. சென்ற காலத்தில் பின்தங்கிய முதலாளித்துவ நாடுகள், உற்பத்தியில் முன்னேறிய முதலாளித்துவ நாடுகளை எட்டிப்பிடிக்க புதிய தொழில் நுணுக்கங்களைப் பயன்படுத்தின. அதேபோன்று ரசியா வும் முதலாளித்துவ நாடுகளை எட்டிப் பிடிக்க நவீன தொழில் நுட்பத்தை பயன்படுத்தியது. அதையேதான் நாமும் செய்ய வேண்டும்; நம்மால் செய்ய முடியும்.

## 49. எது முதலில், டிராக்டர்களா அல்லது கூட்டுறவுகளா?

''1928-ல் ஒட்டு மொத்தக் கூட்டு உடைமை செயல்படுத்தப் பட்ட போது 99 சதவீத இளவேனிற்காலப் பயிர் செய்யப்படும் பகுதிகள் மரத்தினால் ஆன அல்லது குதிரைகளால் இழுக்கப்பட்ட கலப்பைகளைக் கொண்டு உழப்பட்டது'' என்று பக்கம் 563-ல் அந்நூல் கூறுகிறது. இவ்விபரங்கள் ''கூட்டுறவுகளுக்கு முன்பாக டிராக்டர்கள் வேண்டும்'' என்று அந்நூலில் திரும்பத் திரும்ப வற்புறுத்திக் கூறப்பட்டவைகளை மறுக்கின்றன. அதே பக்கத்தில்

''சோசலிச உற்பத்தி உறவுகள் விவசாய உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்கும் விவசாய தொழில் நுட்ப முன்னேற்றத்திற்கும் பரந்த களத்தை செப்பனிட்டுத் தந்தது'' என்று கூறப்பட்டுள்ளது. இது உண்மையானது.

முதலில் உற்பத்தி உறவுகள் மாற்றப்பட வேண்டும்; அதன் பிறகு, அதன் பிறகு மட்டுமே உற்பத்தி சக்திகள் பரந்த அளவில் வளர்ச்சியடைய முடியும். இது உலகு தழுவிய விதியாகும். சில கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் கூட்டுறவுகள் தீவிரமாக ஒழுங்கமைக்கப்படவில்லை; அவை இன்று வரை கூட நிறைவு செய்யப்படாமலிருக்கின்றன. அவர்களிடம் டிராக்டர்கள் இல்லை என்பதல்ல இதற்கு பிரதான காரணம் (ஒப்பீட்டளவில் கூறுவதெனில், நம்மை விட அவர்களிடம் மிக அதிகமாக இருந்தன); மாறாக அவர்கள் நிலச் சீர்த்திருத்தத்திற்கு கடைசி முக்கியத்துவம் அளித்தனர். நிலம் கொஞ்சம் கொஞ்சமாக நிர்ணயிக்கப்பட்ட அளவில் பறிமுதல் செய்யப்பட்டது. (சில நாடுகளில் 100 ஹெக்டருக்கு குறைவான பண்ணைகள் பறிமுதல் செய்யப்படவில்லை); பறிமுதல் பணிகள் நிர்வாக ஆணைகள் மூலம் நிறைவேற்றப்பட்டன; நிலச் சீர்த்திருத்தத்திற்குப் பிறகு காற்றுள்ள போதே தூற்றிக் கொள்வதற்கு மாறாக, முழுமையாக ஐந்து அல்லது ஆறு ஆண்டுகள் எதுவுமே செய்யாமல் காலந்தள்ள அனுமதிக்கப்பட்டது. நாம் இதற்கு நேர் எதிராகச் செயல்பட்டோம். நாம் மக்கள் திரள் வழியை[24] நடைமுறைப் படுத்தி, ஏழை மற்றும் நடுத்தர விவசாயிகளை எழுச்சியுறச் செய்து, வர்க்கப் போராட்டத்தைத் தொடங்கி, நிலப்பிரபுத்துவ வர்க்கத்தின் முழுநிலத்தையும் பணக்கார விவசாயிகளின் உபரி நிலத்தையும் பறிமுதல் செய்து நபர் வாரி அடிப்படையில் பிரித்துக் கொடுத்தோம். (கிராமப் புறங்களில் இது ஒரு மாபெரும் புரட்சியாகும்.) அதன் பிறகு, உடனடியாக நாம் பரஸ்பர உதவி மற்றும் கூட்டுறவு இயக்கங்களைத் தொடர்ந்தோம். பிறகு அந்த இடத்திலிருந்து, விவசாயிகளுக்கு சோசலிசப் பாதையில் படிப்படியாகத் தொடர்ந்து முன்னேற வழி காட்டினோம். நம்மிடம் ஒரு பெருந்திரளான கட்சியும் இராணுவமும் இருந்தன. நமது படைகள் தெற்கே சென்ற போது, மாநில, பிரதேச, மாவட்ட மற்றும் வட்டார அளவில் பகுதிப் பணிகளை மேற்கொள்ள மாநில வாரியாக ஊழியர் குழுக்கள் உருவாக்கப்பட்டன. நமது படைகள் வந்து சேர்ந்தவுடனே அவர்கள் விவசாயக் கிராமங்களில் ஆழமாக ஊடுருவி ''ஏழைகளின் குறைகளை அறிந்து கொள்வதற்காக

அவர்களை அணுகி'', ''அவர்களிடையே வேரூன்றி விஷயங் களைச் சரி செய்து'' ஏழை மற்றும் நடுத்தர விவசாயிகளிடையே இருந்த செயலூக்கமுள்ள நபர்களை அமைப்பாக்கினர்.

## 50. இரண்டு குறிக்கோள்கள்: பெரியது மற்றும் பொது மக்களுக்கானது

ரசியாவிலிருந்த கூட்டுப் பண்ணைகள் இருமுறை இணைப்புக் குள்ளானது. 2,50,000க்கும் மேற்பட்ட பண்ணைகள் இணைக்கப் பட்டு 93,000 ஆகவும், பிறகு இவை மறுபடியும் இணைக்கப்பட்டு சுமார் 70,000மாகவும் ஆக்கப்பட்டன. எதிர்காலத்தில் அவை நிச்சயமாக மீண்டும் விரிவடையும். பக்கம் 568ல் ''நாம் பல்வேறு கூட்டுப் பண்ணைகளின் உற்பத்தி உறவுகளை பலப்படுத்தி வளர்ப்பதோடு, கூட்டுப் பண்ணைகளுக்கிடையில் பொதுவாக பயன் படுத்தக் கூடிய உற்பத்தி நிறுவனங்களை உருவாக்கவேண்டும்'' என்று அந்நூல் கூறுகிறது. இங்கு, உண்மையில், நமது சொந்த முறைகளுடன் பல ஒத்த தன்மைகள் உள்ளன, அவர்கள் விஷயங் களை வேறு விதத்தில் கூறுகின்றனர். அவர்களுடைய அணுகு முறை நம்முடையது போன்று இருந்தாலும் எதிர்காலத்தில் அவர்கள் 'கம்யூன்' என்ற சொல்லைப் பயன்படுத்துவார்களா என்பது சந்தேகமாகவே உள்ளது. சொல்லும் விதத்திலும், சொற்களிலும் உள்ள வேறுபாடு முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையை உள்ளடக்கியுள்ளது, அதாவது மக்கள் திரள் பாதை நடைமுறைப் படுத்தப்படுகிறதா இல்லையா என்பதாகும்.

உறுதியாக, ரசியாவின் பெருவீதக் கூட்டுப் பண்ணைகள், குடும்பங்களின் அடிப்படையிலும் மக்கட்தொகை அடிப்படையிலும் நம்முடையதை என்றுமே நெருங்க முடியாது; ஏனெனில் அவர் களுடைய கிராமப்புற மக்கட் தொகை மிகக் குறைவாகவும் நிலப் பரப்பு மிகப் பெரியதாகவும் இருக்கிறது. ஆனால் இக்காரணங் களால் அவர்களுடைய கூட்டுப் பண்ணைகளின் விரிவாக்கம் தற் போது தேவையற்றது என்று யார் கூறமுடியும்? சிங்கியாங் மற்றும் சிங்ஹை போன்ற இடங்களில் மிக அதிக நிலத்திற்கு குறைவான மக்களே இருந்த போதிலும் கம்யூன்களை மேலும் பெரிதாக்க வேண்டிய அவசியம் உள்ளது. நமது தெற்கு மாநிலங்களின்

சில மாவட்டங்களில் (உதாரணம் வடக்கு பூக்கியன்) ஒரே மாதிரி யான நிலைமைகளை கொண்ட பெரும் கம்யூன்கள் உள்ளன.

கம்யூன்களை விரிவுபடுத்துவது ஒரு பெரிய பிரச்சினை. அளவு ரீதியான மாற்றங்கள் அது போன்ற மாற்றங்களை ஊக்குவிக்கும் பொருட்டு குணரீதியான மாற்றங்களைக் கண்டிப்பாகத் தோற்று விக்கும். நமது மக்கள் கம்யூன்கள் ஒரு சிறந்த உதாரணமாகும்— "பெரியது மற்றும் மக்களுடையது!" முதலில் "பெரியது" வரும்; இது "மக்களுடையதின்" மட்டத்தை உயர்த்தும் இதன் பொருள் அளவு ரீதியான மாற்றங்கள் பகுதியளவான குணாம்ச மாற்றங் களை உருவாக்கும் என்பதாகும்.

## 51. பொருளாயத நலன்களுக்கு கூடுதல் அழுத்தம் கொடுப்பதற்கான அடிப்படை காரணம் என்ன?

கூட்டுப் பண்ணை முறை பற்றிய அத்தியாயத்தில் தனி நபர் பொருளாயத நலன்கள் பற்றித் தொடர்ச்சியாக விவாதிக்கப் பட்டுள்ளது (பக்கம் 565-571.) பொருளாயத நலன்களுக்கு தற் போது அளிக்கப்படும் கூடுதல் அழுத்தத்திற்கு ஒரு காரணம் உண்டு. ஸ்டாலின் காலத்தில் கூட்டு நலன்களுக்கு அளவுக்கு மீறிய முக்கியத் துவம் இருந்தது; தனி நபர் ஆதாயம் புறக்கணிக்கப்பட்டது. பொதுவானவற்றிற்கு அளவுக்கதிகமான அழுத்தம் கொடுக்கப் பட்டது, தனிப்பட்டவற்றுக்கு போதுமான அழுத்தம் கொடுக்கப்பட வில்லை. இப்போது அவர்கள் நேர் எதிர் முனைக்குச் சென்று விட்டனர்; பொருளாயத நலன்களுக்கு அளவுக்கு அதிகமான அழுத்தம் கொடுத்து, கூட்டு நலன்களைப் புறக்கணித்துள்ளனர். அவர்கள் இப்பாதையில் தொடர்ந்தால் அது நிச்சயமாக மீண்டும் நேர் எதிர்த் திசைக்குப் போகும்.

"பொது"வானது "தனி"யானதுடன் தொடர்புடையது; இதை நேர் எதிராகவும் கொள்ளலாம், இது எதிர்மறைகளின் ஒற்றுமையாகும். ஒன்று இல்லாமல் மற்றொன்று சாத்திய மில்லை. பொதுவானதையும் தனிப்பட்டதையும் ஒரு சேரக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நாம் எப்போதும் கூறி வந்திருக்கிறோம்; ஒன்று அல்லது மற்றது மட்டுமே என்ப தாக எதுவுமே இல்லை என்றும் ஆனால் பொதுவானது தனிப்பட்

டதை விட முன்னுரிமை பெறுகிறது என்றும் நாம் வெகு காலத்திற்கு முன்பே எடுத்துக் கூறியுள்ளோம். கூட்டானதின் ஒரு பகுதி தான் தனி நபர். கூட்டு நலன்கள் மேம்படும் போது, அதன் விளைவாக தனி நபர்களின் நிலைமையும் மேம்படும்.

இரட்டைத் தன்மை என்பது, எல்லாக் காலத்திலும் எல்லாப் பொருட்களுக்கும் உள்ள இயற்பண்பாகும். உண்மையில், இரட்டைத் தன்மை, வேறுபட்ட குறிப்பான வடிவங்கள் மூலம் வெளிப்படுகிறது, எனவே பொருட்களின் தன்மையும் மாறுபடுகிறது. மரபுத் தொடர்பும் (heridity) மாற்றமும் (mutation) எதிர் மறைகளின் ஒற்றுமையில் உள்ள இரட்டைத் தன்மையாகும், முந்தையது இன்றி பிந்தையது மட்டும் இருந்தால் அடுத்து வரும் தலைமுறை அதற்கு முன் இருந்ததிலிருந்து முற்றிலும் தொடர்பற்றதாக இருக்கும். அரிசியை எது அரிசியாக்குகிறதோ அது தொடர்ந்து இருக்காது, அதே போல்தான் நாய்களும் மக்களும். மாற்றத்தை விரும்பாதவற்றிலும் கூட ஒரு நல்லது இருக்கும், ஒரு ஆக்க பூர்வமான பணி இருக்கும். தங்கு தடையற்ற மாற்றத்திற்கு மத்தியில் அது உயிருள்ள பொருட்களுக்கு ஒரு தற்காலிக நிரந்தரத்தை அல்லது மாறாத தன்மையை அளிக்க முடியும். எனவேதான் மேம்படுத்தப்பட்ட அரிசிகூட இன்னும் அரிசியாகவே இருக்கிறது. ஆனால், மாற்றம் (mutation) இல்லாத மரபுத் தொடர்பு (heridity) என்பதன் பொருள் முன்னேற்றம் இல்லை என்பதாகும், எனவே வளர்ச்சி நின்று போகும்.

## 52. முடிவாக மக்கள் தான் செயல்படவேண்டும்

"கூட்டுப்பண்ணைகள், வேறுபாட்டு நிலவாடகை (Differential-rent) கிடைப்பதற்கான இயல்பான மற்றும் பொருளாதார நிலைமைகளை அளிக்கின்றன என்று பக்கம் 577 கூறுகிறது. வேறுபாட்டு நிலவாடகையை புறநிலைமைகள் மட்டுமே தீர்மானிப்பதில்லை. உண்மையில் இவ்விசயம் மக்களின் செயல்பாட்டைச் சார்ந்துள்ளது. உதாரணமாக ஹோபிப் மாநிலத்தில் பீக்கிங்-ஹாங்கோவ் இருப்புப் பாதை நெடுகிலும் இயந்திர மயமாக்கப்பட்ட கிணறுகள் பல உள்ளன; ஆனால் டியன்ஷியன்—பூகோவ் நெடுகிலும் மிகச் சிலவே உள்ளன. இயற்கை நிலைமைகள் ஒரே மாதிரியாக உள்ளன, செய்தித் தொடர்புச் சாதனங்களும் ஒரே மாதிரி வசதி கொண்டவையாக உள்ளன; ஆனால் நில அபிவிருத்தி இடத்திற்கு இடம் ஒரே

மாதிரியாக இல்லை. ஒரு பகுதி ஏன் அபிவிருத்திக்கு இடமளிப்ப தாக (அல்லது இடமளிக்காததாக) இருக்கிறது என்பதற்கான காரணங்கள் இருக்கலாம்; அல்லது வேறுபட்ட வரலாற்று ரீதியான காரணங்களால் கூட அப்படி இருக்கலாம். ஆனால், யாவற்றுக்கும் மேலாக, பிரதான விசயம், முடிவாக செயல்பட வேண்டியது மக்கள்தான் என்பதே.

இது தொடர்பாகக் கவனிக்கும் போது, ஷாங்கையைச் சுற்றி யுள்ள சில வட்டாரங்களில் சரியான முறையில் பன்றி வளர்க்க முடிகிறது. மற்றவற்றில் முடியவில்லை. சங்மிங்க் மாவட்டத்தில் சில இயற்கை நிலைமைகள், உதாரணமாக அங்கு பெரிய எண்ணிக்கையிலான ஏரிகள் இருப்பது பன்றி வளர்ப்புக்குச் சாதக மாக இருக்காது என்று ஆரம்பத்தில் கருதப்பட்டது. ஆனால் சிரமங் களைப் பற்றிய மக்களின் பயத்தைக் களைந்த பிறகு பன்றி வளர்ப்புத் தொழிலைப் பற்றி மக்கள் ஆக்கபூர்வமான கண்ணோட் டத்தைப் பெற்ற பிறகு இந்த இயற்கை நிலைமைகள் ஒரு தடை யாக இருப்பதற்கு மாறாக சாதகமாக அமைந்தன. உண்மையில் ஆழ உழுவது, தோட்டக்கலை, இயந்திர மயமாக்கல் அல்லது கூட்டுடைமையாக்கல் போன்ற எதுவாக இருப்பினும் இறுதியாகச் செயல்பட வேண்டியது மக்களே.

சாங்பிங் மாநிலமும், பீகிங் நகரமும் எப்போதும் வெள்ளம் மற்றும் வறட்சித் தொல்லைகளுக்கு ஆளாகி வந்தன. ஆனால் மிங் வம்சத்தினரின் சமாதிகளுக்கு அருகில் நீர்த்தேக்கம் கட்டப்பட்ட பிறகு நிலைமை மாறிவிட்டது. இறுதியில் செயல்பட வேண்டியது மக்கள் தான் என்பதை மீண்டும் இது படம் பிடித்துக் காட்டவில்லையா? ஹோனானில் பல பெருமளவிலான குழாய்க் கால்வாய்களைக் கட்டி முடிப்பதன் மூலம் மஞ்சள் நதியைக் கட்டுப் படுத்த 1959 மற்றும் 1960க்குப் பிறகு மேலும் மூன்றாண்டுகளைச் செலவழிக்க திட்டமிட்டு வருகின்றனர். முடிவில் மக்கள் தான் செயல்படவேண்டும் என்பதை இவையாவும் மீண்டும் சுட்டிக் காட்டுகின்றன.

## 53. போக்குவரத்து மற்றும் வர்த்தகம்

போக்குவரத்து மற்றும் சிப்பங்களாக கட்டுவது (packaging) பயன்மதிப்பை அதிகரிக்கச் செய்வதில்லை, ஆனால் அவை

மதிப்பை அதிகரிக்கச் செய்கின்றன. அவற்றுக்குப் பயன்படுத்தும் உழைப்பு, தேவையான சமுதாய உழைப்பின் ஒரு பகுதியாகும். ஏனெனில், போக்குவரத்தும் சிப்பங் கட்டலும் இல்லாமல் உற்பத்தி நிகழ்முறை (process) முழுமையடையாது; நுகர்வு கட்டத்திற்குள் செல்லமுடியாது; மேலும் உற்பத்தி செய்யப்பட்ட பயன் மதிப்பைப் பயன்படுத்திக் கொள்ளமுடியாது. நிலக்கரியை எடுத்துக் கொள்ளுங்கள், சுரங்கத்திலிருந்து வெட்டி எடுக்கப்பட்ட பிறகு, அதை நுகர்வோருக்கு ரயில், கப்பல் அல்லது லாரி மூலம் எடுத்துச் சென்று சேர்க்காமல் அந்த இடத்திலேயே விட்டுவைத்தால் அதன் பயன்மதிப்பு முற்றிலும் பயன்படாமல் போய்விடும்.

அரசு நடத்தும் வர்த்தக அமைப்பு என்றும், கூட்டுறவு வர்த்தக அமைப்பு என்றும் அவர்களிடையே இரு வர்த்தக அமைப்பு முறைகள் உள்ளன என்று பக்கம் 585 கூறுகிறது. அத்துடன் அவர்களிடம் ''ஒழுங்கு படுத்தப்படாத சந்தைகள்'', அதாவது கூட்டுப்பண்ணைச் சந்தைகள் உள்ளன. நம்மிடம் ஒரே ஒரு அமைப்பு முறை மட்டுமே உள்ளது. நாம் கூட்டுறவு வணிகத்தை அரசு நடத்தும் வணிகத்துடன் இணைத்துவிட்டோம், இந்த அமைப்பு முறை இப்போது இயக்குவதற்கு எளிதாகி இருக்கிறது. எல்லா வகைகளிலும் மிகுந்த சிக்கனம் ஏற்பட்டுள்ளது.

பக்கம் 587, வர்த்தகத்தின் மீது பொதுமக்கள் கண்காணிப்பு பற்றிக் குறிப்பிடுகிறது. இதற்கு நாம் பிரதானமாக கட்சியின் வழி வழிகாட்டுதலைச் சார்ந்திருக்கிறோம். அரசியலை ஆணையில் கொண்டு மக்கள் திரள் கண்காணிக்கிறது. வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் உழைப்பு சமுதாயத் தேவையாகும், அது இல்லாமல் உற்பத்தியானது நுகர்வு நிலையை அடைய முடியாது (உற்பத்தி நுகர்வு மற்றும் தனிநபர் நுகர்வு உட்பட)

## 54. தொழிலையும் விவசாயத்தையும் ஒருசேர வளர்ப்பது

உற்பத்தி சாதனங்களை அதிகரிப்பதற்கு முன்னுரிமை அளிப்பதற்கான விதிகளைப் பற்றி பக்கம் 623 விவாதிக்கிறது. குறிப்பாக, திருத்தப்படாத மூன்றாவது பதிப்பு ''உற்பத்தி சாதனங்களை அதிகரிப்பதற்கு முன்னுரிமை அளிப்பது என்பதன் பொருள்

தொழில்துறை, விவசாயத்தை விட வேகமாக வளர்ச்சி அடையும் என்பதாகும்'' என்று கூறுகிறது.

''விவசாயத்தை விட தொழில்துறை வேகமாக வளர்ச்சி அடையும் என்பது ஒரு சரியான வழியில் வலியுறுத்தப்படவேண்டும். ஒரு பொறுத்தமற்ற விகிதத்தில் தொழில்துறையை வளர்க்க ஒருவர் வலியுறுத்தமுடியாது. அப்படி வலியுறுத்தினால் அதனால் கண்டிப்பாக சங்கடங்கள் உருவாகும். நமது லியானிங் மாநிலத்தை எடுத்துக் கொள்வோம். அதில் பல தொழிற்சாலைகள் இருப்பதன் காரணமாக இம்மாநிலத்தின் மக்கள் தொகையில் நகர்ப்புற மக்கட் தொகை மூன்றில் ஒரு பங்காக உள்ளது. கடந்த காலத்தில் அவர்கள் தொடர்ந்து தொழிலுக்கு முதலிடம் அளிக்கும் அதே சமயம் விறுவிறுப்பான விவசாய வளர்ச்சிக்குப் போதிய கவனம் செலுத்தவில்லை.இதன் விளைவாக நகரச் சந்தைகளுக்கு தானியம், இறைச்சி மற்றும் காய்கறிகள் அனுப்புவதை மாநிலத்தின் விவசாயத்தால் உத்திரவாதம் செய்ய முடியவில்லை; அவர்கள் எப்போதும் இப் பொருட்களை மற்ற மாநிலங்களில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டியிருக்கிறது. விவசாய உழைப்பு மிகப் பெரிய சிரமத்தில் இருப்பதும் தேவையான அளவுக்கு இயந்திரங் கள் இல்லாததும் அங்கு முக்கியமான பிரச்சினையாகும். இது உற்பத்தியின் வளர்ச்சியை மட்டுப்படுத்துகிறது. வளர்ச்சி ஒப்பீட் டளவில் மெதுவாக இருக்கிறது. வடகிழக்கு போன்ற பகுதிகளில், அதிலும் குறிப்பாக லியோனிங் பகுதியில், நாம் விவசாயத்தை உறுதியாகப் பற்றி இருந்திருக்கவேண்டும் என்பதை நாம் புரிந்து கொள்ளத் தவறிவிட்டோம். எனவே, தொழிலை உறுதியாகப் பற்றுவது பற்றி மட்டுமே ஒருவர் வலியுறுத்த முடியாது.

நமது நிலைப்பாடு கனரகத்தொழிலுக்கு முன்னுரிமை அளித்து வளர்ப்பதோடு கூடவே தொழிலும் விவசாயமும் ஒரு சேர வளர்க் கப்பட வேண்டும் என்பதே. ''ஒரு சேர வளர்ப்பது'' என்ற சொற்றொடர் விவசாயத்தை விடத் தொழிலை வேகமாக வளர்ப் பதையோ அதற்கு முன்னுரிமை யளிப்பதையோ எந்த விதத்திலும் மறுப்பதில்லை. மேலும் ''ஒரு சேர வளர்ப்பது'' என்பது நமது பலத்தை சமமாகச் செலவிடுவது என்பதும் அல்ல. உதாரண மாக, இந்த ஆண்டு நாம் 14 மில்லியன் டன் எஃகுப் பொருட் களை உற்பத்தி செய்வோம் என்று மதிப்பீடு செய்கிறோம், அவற்றில் 10 சதவீதம் விவசாய தொழில்நுட்ப மாற்றத்திற்கும்,

நீர்தேக்கக் கட்டுமானப் பணிகளுக்கும் பயன்படுத்தப்படும். மீதியுள்ள 90 சதவீதம் பிரதானமாக கனரகத் தொழில், தகவல் தொடர்பு மற்றும் போக்குவரத்துக் கட்டுமானங்களுக்குப் பயன்படுத்தப்படும். இந்த ஆண்டின் நிலைமைகளில் இதுதான் தொழில் மற்றும் விவசாயத்தை ஒரு சேர வளர்ப்பதாகும். இது கனரகத் தொழில்களின் முதன்மையான வளர்ச்சிக்கோ அல்லது துரிதமான தொழில்* வளர்ச்சிக்கோ பாதகமானதாக இருக்கக்கூடாது.

போலந்தில் 30 மில்லியன் மக்கட் தொகை உள்ளது; ஆனால் பன்றிகள் 4, 50, 000 தான் உள்ளன. இட்போது இறைச்சி விநியோகம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது; இன்றைக்கும் கூட போலந்து தனது நிகழ்ச்சி நிரலில் விவசாய வளர்ச்சியைச் சேர்க்கவில்லை என்று தெரிகிறது.

''பல்வேறு காலகட்டங்களில் பின்தங்கிய விவசாயம், மென்ரகத் தொழில் மற்றும் உணவுத் தொழில்களின் வளர்ச்சியைத் துரிதப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படுகிறது'' என்று பக்கம் 624 கூறுகிறது. சரிதான்; ஆனால், விவசாயம் மற்றும் மென்ரகத் தொழிலின் பின் தங்கிய நிலைமையால் உருவாக்கப்பட்ட ஏற்றத் தாழ்வுகளும் ஒழுங்கீனமும் வெறும் ''பகுதியளவு ஏற்றத் தாழ்வு மற்றும் ஒழுங்கீனம்'' என்று கூற முடியாது. இவை ஒரு முழுமை பற்றிய பிரச்சினையாகும்.

பக்கம் 625 கூறுகிறது : ''கனரக மற்றும் மென்ரகத் தொழில்களில், எந்த நேரத்திலும் சரியான வீதத்தை நிர்வகிக்க மூலதனத்தை அளவோடு ஒதுக்கீடு செய்வது அவசியமாகும்''. இந்த பத்தி, கனரக மற்றும் மென்ரகத் தொழில்களைப் பற்றி மட்டுமே குறிப்பிடுகிறது, தொழில் மற்றும் விவசாயத்தைப் பற்றிக் குறிப்பிடாமல் விடுகிறது.

## 55. சேமிப்புக்கான அளவுகோல்

போலந்தில் இது ஒரு பெரிய பிரச்சினையாக மாறி இருக்கிறது. தொடக்கத்தில் கோமுல்கா பொருளாயத ஊக்குவிப்பை

* *1967 பதிப்பில் இது விவசாயம் என்றுள்ளது.*

வலியுறுத்தினார். அவர் தொழிலாளர்களின் ஊதியத்தை உயர்த்தினார்; ஆனால், அவர்களுடைய உணர்வுகளை உயர்த்துவதைப் புறக்கணித்தார். இதன் விளைவாக தொழிலாளர்கள் அதிகமாக சம்பாதிப்பதைப் பற்றி மட்டுமே சிந்தித்தனர்; அவர்களுடைய பணியை பற்றி சரியான ஊக்கம் கொள்ளவில்லை. ஊதிய உயர்வு உற்பத்தி உயர்வை விஞ்சியது; ஊதியம் மூலதனத்தை விழுங்கி வந்தது. நெருக்கடி அவர்களை பொருளாயத ஊக்கத்திற்கு எதிராகவும், ஆன்மீகத் தூண்டுதலுக்கு ஆதரவாகவும் செயல்பட நிர்ப்பந்தித்தது. ''பணம் மக்கள் மனதை விலைக்கு வாங்காது'' என்று கூட கோமுல்கா கூறினார்.

பொருளாயத ஊக்கத்திற்கு அதிக அழுத்தம் கொடுப்பது எப்போதும் அதன் எதிர் நிலைக்கே இட்டுச்செல்லும். ஏராளமான காசோலைகளை எழுதுவது உயர்ந்த ஊதியம் பெறும் பகுதியினரை மகிழ்ச்சியடையச் செய்யும்; ஆனால் பரந்துபட்ட தொழிலாளர்களும் விவசாயிகளும் அவற்றைப் பெற விரும்பும் போது அது முடியாது என்று காண்கின்றனர்; எனவே ''ஆன்மீகத்தை'' நோக்கிச் செல்வதற்கான நிர்ப்பந்தம் ஆச்சரியமானதல்ல.

பக்கம் 631ல் கூறப்பட்டுள்ளதன்படி ரசியாவில் மூலதனக் குவிப்பு தேசிய வருமானத்தில் நான்கில் ஒரு பகுதியாகும். சீனாவில் அதன் அளவு பின் வருமாறு: 1957ல் 27 சதவீதம், 1958ல் 36 சதவீதம், 1959ல் 42 சதவீதம், எதிர்காலத்தில் இந்த அளவை 30 சதவீதத்திற்கும் அதிகமாக, தொடர்ந்து வைத்திருக்க முடியும் என்று தோன்றுகிறது. பிரதான பிரச்சினை உற்பத்தியின் பரந்து விரிந்த வளர்ச்சியில் தான் உள்ளது. உற்பத்தி அதிகரித்து சேமிப்பின் சதவீதமும் ஓரளவுக்கு அதிகரித்தால் தான் மக்களின் வாழ்க்கைத் தரத்தை இறுதியாக அபிவிருத்தி செய்ய முடியும்.

சிக்கனத்தைக் கடைபிடிப்பதும், பெரும் அளவிலான பொருட்களையும் செல்வத்தையும் திரட்டுவதும் நமது தொடர்ச்சியான பொறுப்பாகும். இதை பாதகமான நிலைமைகளில் மட்டும்தான் செய்ய வேண்டும் என்று கருதுவது தவறாகும். கஷ்டங்கள் குறையும் போது சிக்கனமும் சேமிப்பும் தேவையில்லை என்று நம்புவது கடினமாக உள்ளது.

## பாகம் IV அத்தியாயம் 35-லிருந்து முடிவுவரை

### 56. கம்யூனிச அரசு

''கம்யூனிசத்தின் உயர்ந்த கட்டங்களில் அரசு தேவையற்ற தாகி படிப்படியாக மங்கி மறைந்து விடும்'' என்று பக்கம் 639 கூறுகிறது. இருந்தபோதிலும் அதற்கு குறிப்பிட்ட சர்வதேச நிலைமைகள் தேவைப்படுகின்றன. வேறு ஒருவரிடம் அரசு இயந்திரம் இருந்து உங்களிடம் இல்லையெனில், அது மிகவும் ஆபத்தானது. பக்கம் 640-ல் கம்யூனிசம் நிறுவப்பட்ட பிறகும் கூட, ஏகாதிபத்திய நாடுகள் இருக்கும் வரை தொடர்ந்து அரசு தேவைப்படும் என்று கூறுப்படுகிறது. இந்த நிலைப்பாடு சரியானது. அதன் பிறகு உடனடியாக அந்நூல் கூறுகிறது: ''அத்தகைய அரசின் தன்மையும், வடிவமும் கம்யூனிச அமைப்பு முறையின் குறிப்பான சிறப்பு அம்சங்களால் தீர்மானிக்கப்படும்.'' இந்த வாக்கியத்தைப் புரிந்து கொள்வது கடினமாக இருக்கிறது. அரசின் தன்மை என்னவெனில் அதனை எதிர்க்கும் சக்திகளை ஒடுக்குவதற்கான ஓர் இயந்திரம் என்பதேயாகும். உள்நாட்டில் அதுபோன்ற பணி இனிமேற்கொண்டு தேவையற்றுப் போனாலும், வெளிநாட்டு எதிர்ப்பு சக்திகளைப் பொருத்த வரையில் அதன் பலாத்காரத் தன்மை மாறி இருக்காது. அரசின் வடிவம் என்று சொல்லப்படுவதன் பொருள், என்னவெனில் ஆயுதம் தாங்கிய படைகள்,சிறைகள்,கைதுகள், தூக்கு தண்டனை போன்றவையே என்பதற்கு மேல் ஒன்றும் இல்லை. ஏகாதிபத்தியம் நீடிக்கும் வரை, கம்யூனிசத்தை அடைந்தாலும் (அரசின்—மொ-ர்) வடிவத்தில் என்ன மாற்றம் இருக்கப் போகிறது?

### 57. கம்யூனிசத்திற்கான மாற்றம்

''ஒரு சோசலிச சமுதாயத்தில் பகை வர்க்கங்கள் இல்லை'' ஆனால் ''இன்னும் பகை வர்க்கங்களின் மிச்ச சொச்சங்கள் இருக்கின்றன'' என்று பக்கம் 641 கூறுகிறது. சோசலிசத்திலிருந்து கம்யூனிசத்திற்கு மாறுவதற்கு ஒரு சமுதாயப் புரட்சி தேவை இல்லை. அதாவது, ஒரு வர்க்கம் இன்னொரு வர்க்கத்தைத் தூக்கி

எறியும் சமுதாயப் புரட்சி தேவையில்லை, ஆனால் பழைய உற்பத்தி உறவுகளையும், சமூக நிறுவனங்களையும் அகற்றி விட்டு அவ்விடத்தில் புதிய உற்பத்தி உறவுகளையும் சமுதாய நிறுவனங்களையும் நிறுவுவதற்கான சமுதாயப் புரட்சி தேவைப் படும்.

''இதன் பொருள் சமுதாயம் கம்யூனிசப் பாதையில் முன்னேறும் போது உள் முரண்பாடுகளை வெற்றி கொள்ள வேண்டிய அவசியம் இருக்காது என்பதல்ல'' என்று இங்கு அந்நூல் தொடர்ந்து பிரகடனம் செய்கிறது. இந்த பிரகடனம் வெறும் தற்செயலானது. இந்நூல் பல இடங்களில் தற்செயலாகவே முரண்பாட்டை அங்கீகரிக்கிறது. இந்நூலில் காணப்படாத ஒரு அம்சம் என்னவெனில், விவாதத்திற்குரிய விஷயங்களை விளக்கும் போது அது முரண்பாடுகளின் பகுப்பாய்விலிருந்து தொடங்குவ தில்லை. விஞ்ஞானத்தின் ஒரு பிரிவு என்ற முறையில், அரசியல் பொருளாதாரம் அதன் முரண்பாடுகளைப் பற்றிய பகுப்பாய் விலிருந்து தொடங்க வேண்டும்.

கம்யூனிச சமுதாயத்தை அடைந்த பிறகு உழைப்பின் ஒழுங் கமைப்பு இப்போது உள்ளதை விட மிகக் கடுமையாக இருக்க வேண்டியதிருக்கும். ஏனெனில், மிக உயர்ந்தமட்ட தானியங்கி உற்பத்தி முறைக்கு மேலும் மேலும் உயர்ந்த, இம்மியளவும் பிசகாத மக்களின் உழைப்பும் நடத்தையும் அவசியமாகிறது.

தற்போதைக்கு கம்யூனிச சமுதாயம் கீழ்நிலை கம்யூனிச சமுதாயம் என்றும், உயர் நிலை கம்யூனிச சமுதாயம் என்றும் இரண்டு கட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளதாக கூறுகிறோம். இதைத்தான் மார்க்சும் அவரைச் சுற்றி இருந்தவர்களும் அன்றைய சமுதாய வளர்ச்சி நிலைமைகளின் அடிப்படையில் முன்னுணர்ந் தனர். உயர்ந்த கட்டத்திற்குள் பிரவேசித்த பிறகு கம்யூனிச சமுதாயம் ஒரு புதிய கட்டமாக வளர்ச்சியடையும்; புதிய இலட்சியங்களும் பணிகளும் நிச்சயமாக முன்னுக்கு வரும்.

## 58. கூட்டு உடைமை முறையின் எதிர்கால வளர்ச்சி

பக்கம் 650-ல் ''கூட்டுப் பண்ணைகள் மற்றும் கூட்டுறவு களில் உள்ள உற்பத்தி உறவுகளின் வடிவங்கள் கிராமப்புறங்களில்

உள்ள உற்பத்தி சக்திகளின் தற்போதைய மட்டத்திற்கும் தற்போதைய தேவைகளுக்கும் முற்றிலும் பொருத்தமானதாக உள்ளது'' என்று கூறப்படுகிறது. நடைமுறையில் இது உண்மை தானா என்று நான் ஆச்சரியப்படுகிறேன்.

சிவப்பு அக்டோபர் கூட்டுப் பண்ணையை அறிமுகப்படுத்தும் ஒரு ரசிய கட்டுரை ''இணைப்பிற்கு முன்பு சில பண்ணைகளை நிர்வகிப்பதில் பல்வேறு அம்சங்களில் கடினமாக இருந்தன; பிறகு பிரச்சினைகள் தீர்ந்தன''என்று கூறுகிறது இக்கட்டுரை. பண்ணையின் மக்கட் தொகை பத்தாயிரமாக இருக்கிறது என்றும் மூவாயிரம் பேருக்கான குடியிருப்பு திட்டம் வகுக்கப்பட்டுள்ளது என்றும் கூறுகிறது. தற்போதைய பண்ணை அமைப்பு முறை உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்கு முற்றிலும் ஏற்புடையதாக இல்லை என்பதை இது குறிப்பிடுகிறது.

அதே பத்தி ''கூட்டுறவுகள், கூட்டுப் பண்ணை உடைமை முறை ஆகியவற்றைப் பலப்படுத்தவும் மேலும் வளர்க்கவும் நாம் எல்லாவித கடுமையான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.'' என்று மேலும் கூறுகிறது. வளர்ச்சி தேவையெனில், ஒரு நிகழ் முறை (process) மாற்றம் ஏற்பட வேண்டும். பின் ''பலப்படுத்து வதற்கு எல்லாவிதமான கடுமையான முயற்சிகளும்'' எதற்காக வேண்டும்? சோசலிச உற்பத்தி உறவுகளையும், சமுதாய அமைப்பு முறைகளையும் பலப்படுத்துவது பற்றி பேச வேண்டும் என்பது சரி தான், ஆனால் அவற்றை அழிக்கும் அளவுக்குச் செல்லக்கூடாது. எதிர்கொண்டுள்ள பாதை குறித்து அந்நூல் தெளிவில்லாத வகையில் பேசுகிறது. எனவே பருண்மையான நடவடிக்கைகள் தேவை என்று வரும் போது அது எல்லாத் தெளிவையும் இழந்து விடுகிறது. பல்வேறு வழிகளில் (பிரதானமாக உற்பத்தியில்) ரசியா தொடர்ந்து முன்னேறுகிறது. ஆனால் உற்பத்தி உறவுகளைப் பொருத்தவரையில் அடிப்படையில் அவர்கள் முன்னேறுவது நின்று விட்டது.

கூட்டு உடைமையை அனைத்து மக்களின் பகுக்க முடியாத உடைமையாக மாற்றுவது அவசியம் என்று அந்நூல் கூறுகிறது. ஆனால் நமது கண்ணோட்டத்தின்படி முதலில் கூட்டு உடைமையை அனைத்து மக்களின் சோசலிச உடைமையாக மாற்றுவது அவசியமாகும். அதாவது, விவசாய உற்பத்தி சாதனங்கள் முழுவதையும் அரசுடைமையாக்குவதும் அரசுடனான ஒரே

மாதிரியான ஊதிய ஒப்பந்தத்தின் கீழ் விவசாயிகள் அனைவரையும் தொழிலாளர்களாக மாற்றுவதும் அவசியமாகும். தற்போது, நாடு முழுவதும், ஒவ்வொரு சீன விவசாயிக்கும் 85* யுவான் சராசரி ஆண்டு வருமானம் உள்ளது. எதிர்காலத்தில், இந்த தொகை 150 யுவான்களை எட்டும் போது, பெரும்பான்மையான தொழிலாளர்களுக்கு கம்யூன்கள் ஊதியம் அளிக்கும் போது, கம்யூன் உடைமை முறை அமைப்பை அடிப்படையில் செயல்படக் கூடியதாக்குவது சாத்தியமாகும். இவ்வாறு அரசு உடைமைக்கான அடுத்த அடி எடுத்து வைப்பது எளிதாக இருக்கும்.

## 59. கிராமப்புறங்களுக்கும் நகர்ப்புறங்களுக்கும் இடையிலான வேறுபாட்டை ஒழிப்பது

பக்கம் 651-ன் கடைசிப் பத்தி கிராமப்புறக் கட்டுமானம் பற்றி சரியான நிலைப்பாட்டை மேற்கொண்டுள்ளது.

அவர்கள் கிராமப்புறத்திற்கும் நகர்புறத்திற்கும் இடையிலான வேறுபாட்டை (''அடிப்படை வேறுபாடு'' என்று அந்நூல் கூறுகிறது) ஒழிக்க விரும்பும் போது அது ''பெரிய நகரங்களின் செயல்பாட்டை குறைப்பதற்காக'' அல்ல என்று அந்நூல் ஏன் விசேஷமாகக் குறிப்பிட வேண்டும்? எதிர்காலத்து நகரங்கள் பெரியதாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை. பெரும் நகரங்களில் குடியிருப்போர் கிராமப்புறங்களில் பரவலாகக் குடியமர்த்தப்பட வேண்டும். பல சிறிய நகரங்களை நிர்மாணிப்பது அணு ஆயுதப் போர் நடக்கும் பட்சத்தில் ஒப்பீட்டளவில் அனுகூலமானதாகும்.

## 60. பல்வேறு சோசலிச நாடுகள் இணைந்த ஒரு பொருளாதார அமைப்பு முறையை உருவாக்குவது பற்றிய பிரச்சினை

''ஒவ்வொரு நாடும் தனது சொந்த மனித ஆற்றலையும், பொருளாயத வளங்களையும், ஒருமுகப்படுத்தி தனக்கு மிகவும் சாதகமான இயற்கை மற்றும் பொருளாதார நிலைமைகளையும்,

* 1967 பதிப்பில் 65

உற்பத்தியில் அனுபவம் வாய்ந்த துறைகளையும் ஊழியர்களை யும் வளர்க்க வேண்டும். ஒவ்வொரு நாடும் மற்ற நாடுகளால் தர முடிகிற பொருட்களை உற்பத்தி செய்ய வேண்டிய அவசியம் இல்லை'' என்று பக்கம் 689-ல் கூறப்படுகிறது.

இது சரியான கருத்து அல்ல. நமது சொந்த மாநிலங்களைப் பொருத்தமட்டில் கூட இந்த ஆலோசனையை நாம் கூற மாட் டோம். நாம் ஒட்டுமொத்த வளர்ச்சியை முன்வைக்கிறோம்; ஒவ்வொரு மாநிலமும் மற்ற மாநிலங்கள் அளிக்கக் கூடிய பொருட் களை உற்பத்தி செய்ய வேண்டிய தேவை இல்லை என்று நாம் கருதவில்லை.ஒட்டுமொத்தமாக பாதகமான விளைவுகள் ஏற்படாத வரையில், பல்வேறு மாநிலங்களும் பல்வேறு வகைப்பட்ட உற்பத்தியை முழு அளவு வளர்க்க வேண்டும் என்று நாம் விரும்பு கிறோம். பல்வேறு நாடுகளும் சுதந்திரமாக இருப்பது ஐரோப்பா விற்கு உள்ள சாதகமான அம்சங்களில் ஒன்று. ஒவ்வொன்றும் ஒவ்வொரு முழு அளவு தொகுப்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டு உள்ளன. இதன் விளைவாக ஐரோப்பிய பொருளாதாரம் ஒப்பீட் டளவில் மிக வேகமாக வளர்ச்சியுறுகிறது.சின் பேரரசர்கள் காலம் முதல், மொத்தத்தில் நீண்ட காலம் ஒற்றுமையைப் பாதுகாத்ததன் காரணமாக சீனா ஒரு பெரும் சக்தியாக உருவாயிற்று. அதிகார வர்க்க முறை ஒரு பெரும் குறையாக இருந்தது. அதன் கழுத்தை நெறிக்கும் கட்டுப்பாட்டின் கீழ் உள்நாட்டு பகுதிகள் சுயேச்சை யாக வளர முடியவில்லை. ஒவ்வொருவரும் தட்டிக் கழிக்கும் போக்கை மேற்கொண்டதால் பொருளாதார வளர்ச்சி மிகவும் மெதுவாக இருந்தது. தற்போது நிலைமை முற்றிலும் மாறுபட்ட தாக இருக்கிறது. ஒற்றுமைக்கு உட்பட்டு, பல்வேறு மாநிலங் களும் சுதந்திரம் உடையதாகச் செய்வதற்கு முயன்று வருகிறோம். இதுதான் சார்பு நிலை ஒற்றுமையும் (Relative Unity),சார்பு நிலை சுதந்திரமும் (Relative Indipendence) ஆகும்.

மாநிலங்கள் மைய அதிகாரத்தின் முடிவுகளுக்குக் கீழ்ப் படிந்து அதன் கட்டுப்பாட்டை ஏற்றுக்கொள்ளும் அதே சமயம் தங்களுடைய சொந்தப் பிரச்சினைகளை தாங்களே சுயேச்சையாக தீர்த்துக் கொள்கின்றன. மற்றொரு வகையில் மையத்தின் எல்லா முக்கியப் பிரச்சினைகளின் மீதான முடிவுகளும் மையத்திற்கும் மாநிலங்களுக்கும் இடையிலான கலந்தாலோசனைகள் மூலம் கூட்டாகச் செய்யப்படுகின்றன. உதாரணமாக, லூஷான் மாநாட்டு தீர்மானங்கள் இவ்வாறு இருந்தன.[25] அவை நாடு முழுவதன்

தேவைகளுக்கும் பொருந்துவதாக இருந்ததோடு மட்டுமின்றி அவை பல்வேறு மாநிலங்களின் தேவைகளுக்கும் பொருந்துவதாக இருந்தன. வலது சந்தர்ப்பவாதத்தை எதிர்க்கவேண்டிய அவசியம் மையத்திற்குத்தான் உண்டு, பகுதிகளுக்கு இல்லை என்ற நிலைப் பாட்டை யார் மேற்கொள்ள முடியும்? நாடு முழுமைக்குமான ஒரு ஒருங்கிணைந்த திட்டத்தின் கீழ் மாநிலங்கள் ஒரு தொகுப்பான நடவடிக்கைகளில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்பதை நாம் ஆதரிக்கிறோம். மூலப் பொருட்களும் சந்தையும் இருக்கு மெனில், பொருட்களைப் பெற்று அப்பகுதியிலேயே விற்பனை செய்யமுடியும் எனில், என்னவெல்லாம் செய்ய முடியுமோ அவற்றை சாத்தியமானவரை முழு அளவில் செய்யவேண்டும். மாநிலங்கள் வளர்ச்சியடைந்த பிறகு, பல்வேறு விதமான தொழில்களும், பண்டங்களும் (உதாரணமாக ஷாங்கை போன்ற இடங்களிலிருந்து) கண்டிப்பாக தேவையற்றவையாகி விடும் என்பது முன்பு எமது கவலையாக இருந்தது. ஆனால் நிலைமை அதுவல்ல என்று இப்போது தோன்றுகிறது. ஷாங்கை ஏற்கனவே மேலும் உயர் வான, பெரிய அளவிலான, நேர்த்தியான மற்றும் சிறப்பான உற்பத்தியை வளர்க்கத் திட்டமிட்டுள்ளது. அவர்கள் இன்னும் செய்யவேண்டிய காரியங்கள் உள்ளன!

மற்ற நாடுகள் தர முடிகிற பொருட்களை உற்பத்தி செய்யா மல் இருப்பதற்கு மாறாக ஒவ்வொரு நாடும் தன்னால் இயன்றதை தனக்குத் தானே செய்துக் கொள்வதை அந்நூல் ஏன் அனுமதிப்ப தில்லை? என்று நான் வியப்படைகிறேன். சுய சார்புக்கும் புதிய வளர்ச்சிக்குமான ஒரு சாதனமாக ஒவ்வொருவரும் தன்னால் எவ்வளவு முடியுமோ அவ்வளவையும் தனக்குத் தானே செய்து கொள்வது, எவ்வளவு அதிகபட்ச அளவுக்கு சுயமாகச் செயல்பட முடியுமோ அந்த அளவுக்குச் செயல்படுவது, மற்றவர்களைச் சார்ந்து இருப்பதில்லை என்பதை ஒரு கோட்பாடாகக் கடைபிடிப் பது, எதார்த்தமாகவும் உண்மையாகவும் செய்யமுடியாது என்ற நிலையில் மட்டுமே ஒன்றைச் செய்யாமல் இருப்பது இதுவே சரியான முறையாகும். எல்லாவற்றுக்கும் மேலாக, விவசாயத்தை எந்த அளவுக்குச் சிறப்பாக செய்ய முடியுமோ அந்த அளவுக்குச் செய்ய வேண்டும். உணவுக்கு மற்ற நாடுகளையோ, மற்ற மாநிலங்களையோ சார்ந்து இருப்பது மிகவும் ஆபத்தானது.

சில சிறிய நாடுகளில் ''எல்லாத் தொழில் துறைகளையும் வளர்ப்பது பொருளாதார ரீதியாக அபத்தமானதும் அவர்களுடைய

சக்திக்கு மீறியதும்'' ஆகும் என்று அந்நூல் சரியாகக் கூறுகிறது. அந்த நிலைமையில், ஒரு நாடு வேண்டுமென்றே தன்னை அவ்வாறு கூடுபடுத்திக் கொள்ளக்கூடாது. மிகக் குறைந்த மக்கட் தொகையுள்ள நம்முடைய சிங்க்ஹாய் அல்லது நிங்ஷியா போன்ற மாநிலங்களில் ஒட்டுமொத்த வளர்ச்சி அடைவது கடினமாக இருக்கும்.

## 61. பல்வேறு சோசலிச நாடுகளின் வளர்ச்சியை சமன்படுத்த முடியுமா?

''... பல்வேறு சோசலிச நாடுகளின் பொருளாதாரம் மற்றும் கலாச்சாரத்தின் ஒட்டு மொத்த வளர்ச்சி மட்டம் படிப்படியாக சமனடைகின்றன'' என்று பக்கம் 660ல் அந்நூல் கூறுகிறது. இந் நாடுகளின் மக்கட் தொகையும், மூலாதாரங்களின் அடிப்படையும், வரலாற்று ரீதியான நிலைமைகளும் ஒரேமாதிரியாக இல்லை. அவற்றில் சிலவற்றின் புரட்சி மிகவும் பின் தங்கியதாகவும், மற்றவைகளின் புரட்சி மிகவும் முன்னேறியதாகவும் இருக்கிறது. அவை எப்படி சமநிலையை அடையமுடியும். ஒரு தந்தைக்கு ஒரு டஜன் குழந்தைகள் இருக்கின்றன என்றால், சில உயரமாகவும், சிலகுட்டையாகவும், சில பெரியதாகவும், சில சிறியதாகவும், சில திறமையானதாகவும், சில மந்தமானதாகவும் உள்ளன, அவற்றை எவ்வாறு சமன்படுத்த முடியும்? இது புகாரினுடைய சமநிலை கோட்பாடு. பல்வேறு சோசலிச நாடுகளின் பொருளாதார வளர்ச்சி சமநிலையில் இல்லை; அதே போல் ஒரு நாட்டிற்குள் இருக்கும் மாநிலங்களிலும் அல்லது மாநிலங்களுக்குள் இருக்கும் பகுதிகளிலும் அவ்வாறில்லை. குவாங்டுங் மாநிலத்தின் பொது சுகாதாரத்தை எடுத்துக்கொள்ளுங்கள், ஃபோஷான் நகரமும், சீஹாவோ கம்யூனும் மிகச் சிறப்பாகச் செயல்பட்டுள்ளன. இதன் விளைவாக ஃபோஷான் நகரம், மாநிலம் முழுவதுடனும் சமநிலையில் இல்லை. சிஹா்வே, ஷாஓகானுடன் சமநிலையில் இல்லை. சமனற்ற நிலையை எதிர்ப்பது தவறாகும்.

## 62. இறுதியான பிரச்சினை அமைப்பு முறையைப் பற்றியது தான்

பக்கம் 668ல் சோசலிச கடன்கள் ஏகாதிபத்தியக் கடன்களிலிருந்து வேறுபட்டவை என்று கூறப்படுகிறது. இது யதார்த்தத்

துடன் பொருந்துவதாக உள்ளது. முதலாளித்துவ நாடுகளை விட சோசலிச நாடுகள் எப்போதும் விரும்பத்தக்கவை. இந்தக் கோட்பாட்டை நாம் புரிந்து கொண்டுள்ளோம். இறுதியான பிரச்சினை அமைப்பு சம்பந்தப்பட்டது, நிறுவனங்கள் பற்றியது. ஒரு நாடு எந்த திசை வழியில் செல்லும் என்பதை அமைப்பு முறைகள் தீர்மானிக்கின்றன. சோசலிச நாடுகள் எப்போதும் ஏகாதிபத்திய நாடுகளை எதிர்த்து நிற்கும் என்பதையும் அவற்றின் சமரசம் எப்போதும் தற்காலிகமானது என்பதையும் சோசலிச அமைப்பு முறைகள் தீர்மானிக்கின்றன.

## 63. உலகிலுள்ள இரு பொருளாதார அமைப்பு முறைகளுக்கிடையிலான உறவுகள்

பக்கம் 658, ''இரு உலக அமைப்பு முறைகளுக்கிடையிலான போட்டியை'' பற்றிக் கூறுகிறது. **ரசியாவில் சோசலிசத்தின் பொருளாதாரப் பிரச்சினைகள்** என்ற நூலில், இரு உலகச் சந்தைகள் பற்றிய விவாதத்தை ஸ்டாலின் முன் வைக்கிறார். அந்நூல் இங்கு இரு அமைப்பு முறைகளுக்கு இடையிலான சமாதான பூர்வமான போட்டியைப் பற்றியும், ''அமைதியாக வளர்ந்து வரும்'' பொருளாதார உறவுகளை கட்டமைப்பது பற்றியும் வலியுறுத்துகிறது. இது உண்மையில், நிலவும் இரு உலகச் சந்தைகளை ஐக்கியப்பட்ட உலகின் இரு பொருளாதார அமைப்பு முறைகளாக மாற்றுகிறது— ஸ்டாலினுடைய கண்ணோட்டத்திலிருந்து ஒரு படி பின்நோக்கிச் செல்கிறது.

இரு பொருளாதார அமைப்பு முறைகளுக்கு இடையில் யதார்த்தத்தில் போட்டி மாத்திரம் அல்ல, கடுமையான, மிகப் பரந்த அளவிலான போராட்டம் கூட உள்ளது, இந்த போராட்டத்தைப் பற்றி அந்நூல் எதுவும் கூறாது தூர விலகி நிற்கிறது.

## 64. ஸ்டாலினைப் பற்றிய ஒரு விமர்சனம்

**ரசியாவில் சோசலிசத்தின் பொருளாதாரப் பிரச்சினைகள்** என்ற ஸ்டாலினுடைய நூல், அவருடைய மற்ற நூல்களைப் போலவே தவறான வாதங்களைக் கொண்டிருக்கிறது. ஆனால்

பக்கம் 681ல் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு குற்றச்சாட்டுகள் நம்பக் கூடியனவாக இல்லை.

''பண்டங்களின் புழக்கம் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்கு ஏற்கனவே ஒரு தடையாக மாறிவிட்டது போல் தோன்றுகிறது. தொழில் மற்றும் விவசாயத்திற்கு இடையிலான நேரடிப் பரிவர்த்தனையை மேற்கொள்ளும் வகையில் படிப்படியான மாற்றத்தை உருவாக்குவதற்கான தேவை முழுமையாக உருப்பெற்றுவிட்டது'' என்று ஸ்டாலின் கருதினார் என்பது ஒரு குற்றச்சாட்டு.

இரண்டு விதமான உடமை முறைகள் உள்ள போது பண்ட உற்பத்தி உள்ளது என்றார் ஸ்டாலின். மேலும் அந்நூலில் அவர் கூறினார்: கூட்டுப்பண்ணை நிறுவனங்களில், உற்பத்தி சாதனங்கள் (நிலம்,கருவிகள் ஆகியன) அரசுக்குச் சொந்தமானவையாக இருந்தபோதிலும் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் யாவும் தனிப்பட்ட கூட்டுப் பண்ணைகளின் சொத்தாகும். காரணம், கூட்டுப்பண்ணைகளின் ஈடுபடுத்தப்படும் உழைப்பு (விதைகளைப் போலவே) கூட்டுப் பண்ணைகளுக்குச் சொந்தமானது; அதே சமயம். அரசு அவர்களுக்கு நிரந்தரமாகப் பயன்படுத்தக் கொடுத்திருக்கும் நிலம் தங்களுடைய சொந்த சொத்தைப் போல் கூட்டுப் பண்ணைகளால் நிர்வகிக்கப்படுகிறது. அது போன்ற நிலைமைகளில் ''தங்களுக்குத் தேவையான பண்டங்களை பரிவர்த்தனையாகப் பெறுவதை எதிர் பார்த்து கூட்டுப் பண்ணைகள், தாங்கள் உற்பத்தி செய்தவற்றைப் பண்டங்கள் என்ற வடிவில் மட்டுமே புழக்கத்திற்கு விட விரும்புகின்றன. தற்சமயம் கூட்டுப் பண்ணைகள் வாங்குவது விற்பதின் மூலமாக பரிமாறிக் கொள்வதைத் தவிர வேறு எந்த விதமான பொருளாதார உறவுகளிலும் ஈடுபடாது.''

பண்ட புழக்கத்தை அதிகரிப்பதற்கு எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று முப்பது ஆண்டுகளுக்கு முன் லெனின் பிரகடனம் செய்த போதை விட தற்போது எந்த விதத்திலும் அதன் முக்கியத்துவம் குறைந்து விடவில்லை என்று அதை உயர்த்திப் பிடித்து, இன்று ரசியாவில் உள்ள பண்ட உற்பத்தி முறையைக் கைவிடும் கண்ணோட்டத்தை ஸ்டாலின் விமர்சனம் செய்தார்.

பண்டங்களை உடனடியாக ஒழித்து விட வேண்டும் என்று ஸ்டாலின் வாதிடுவதாகத் தோன்றுகிறது என்று அந்நூல் கூறு

கிறது. இந்த குற்றச்சாட்டை நிரூபிப்பது கடினம். பண்டமாற்று பிரச்சினையை பொருத்தவரை, ஸ்டாலினுக்கு அது ஆய்வுக்குரிய அனுமான கோட்பாடே. ஏனெனில் அவர், ''இந்த முறையை அவசரமாக மாற்றுவது அவசியமில்லை; அதை நகரங்களில் தயாரிக்கப்பட்ட பண்டங்கள் எந்த அளவுக்கு குவிந்துள்ளது என்பதைப் பொருத்து தீர்மானிக்கலாம்'' என்று கூட கூறியுள்ளார்.

ஸ்டாலினைப் பற்றிய மற்றோர் குற்றச்சாட்டு, அவர் உற்பத்தி அரங்கில் குறிப்பாக உற்பத்திச் சாதனங்கள் விசயத்தில் மதிப்பு விதியின் செயல்பாடுகளைப் பற்றிக் குறைத்து மதிப்பிட்டார் என்பதாகும். ''சோசலிச உற்பத்தித் துறையில் மதிப்பு விதி ஒழுங்குபடுத்தும் பாத்திரமாற்றுவதில்லை. இப்பாத்திரத்தை திட்டமிட்ட விகிதாச்சார வளர்ச்சி விதிகளும், அரசின் திட்டமிட்ட பொருளாதாரமும் ஆற்றுகின்றன'' என்று அந்நூல் முன்வைக்கும் இந்த வாதம் உண்மையில் ஸ்டாலினுடைய வாதமாகும். உற்பத்தி சாதனங்களும் பண்டங்கள் தான் என்று அந்நூல் கூறுகிறது, இருந்த போதிலும் அவை அனைத்து மக்களின் உடமை என்ற வகையைச் சார்ந்தது என்று அது முதலில் கூற வேண்டும். உற்பத்தி சாதனங்களை வாங்குவதும் விற்பதும் உடமையை எந்த விதத்திலும் மாற்றிவிடுவதில்லை. இரண்டாவதாக, உற்பத்தித் துறையிலும் வினியோக நிகழ்முறை சுழற்சியிலும் (circulation process) மதிப்பு விதி வெவ்வேறு விதமாகச் செயல்படுகிறது என்பதை அந்நூல் அங்கீகரிக்க வேண்டும் இந்த வாதங்கள் யாவும் ஸ்டாலினுடைய வாதங்களுடன் ஒத்திசைவானவையே. ஸ்டாலினுக்கும் குருச்சேவுக்கும் இடையில் உள்ள ஒரு உண்மையான வித்தியாசம் என்னவெனில், டிராக்டர்கள் போன்ற உற்பத்தி சாதனங்களை கூட்டுப் பண்ணைகளுக்கு விற்பதை ஸ்டாலின் எதிர்த்தார், ஆனால் குருச்சேவ் அவற்றை விற்றார் என்பதே.

## 65. அந்நூலின் பொதுவான கண்ணோட்டம்

அந்நூலில் மார்க்சிய-லெனினியமே இல்லை என்று கருதிவிடலாகாது; ஏனெனில் அதில் நல்ல பல மார்க்சிய—லெனினிய கருத்துக்கள் அடங்கியுள்ளன. மறுபுறம் அது ஒரு முழுமையான மார்க்சிய-லெனினிய அடிப்படையில் அமைந்தது என்றும் கருத

வேண்டாம். ஏனெனில், அதில் பல கருத்துக்கள் மார்க்சிய-லெனினியத்தை விட்டு வழுவிச் செல்வதாக இருக்கின்றன. இருப்பினும் இந்நூல் அடிப்படையில் எதிர்மறையானது என்று முடிவு செய்ய நாம் தயாராயில்லை.

சோசலிச பொருளாதாரம் சிறுபான்மை சுரண்டும் கூட்டத்தின் இலாப நோக்கங்களுக்காக அல்ல, மாறாக அனைத்து மக்களுக்கும் சேவை செய்கிறது என்று அந்நூல் வலியுறுத்துகிறது. அந்நூலில் விவாதிக்கப்பட்டுள்ள சோசலிசத்தின் அடிப்படைப் பொருளாதார விதிகள் முற்றிலும் தவறானவை என்று கருத முடியாது. இவ்விதிகள்தான் அந்நூலின் அடிப்படை ஆய்வுப் பொருளாகும். அத்துடன் அந்நூல் திட்டமிடுதல், விகிதாசாரம், உயர் விகித வளர்ச்சி ஆகியவற்றைப் பற்றி விளக்குகிறது; இந்த அம்சங்களில் அது சோசலிச மற்றும் மார்க்சிய அடிப்படை கொண்டதாக உள்ளது. ஆனால், திட்டமிடுதலையும் விகிதாசாரத்தையும் அங்கீகரித்த பிறகு இவை எவ்வாறு நிறைவேற்றப் படுகின்றன என்பது வேறு விசயம். நம் ஒவ்வொருவருக்கும் ஒரு தனிப்பட்ட அணுகுமுறை உள்ளது.

அத்துடன், இந்நூலில் சில தவறான அடிப்படை வாதங்கள் உள்ளன. ''அரசியலை ஆணையில் வைப்பது'' மற்றும் ''மக்கள் திரள் பாதை'' ஆகியன வலியுறுத்தப்படவில்லை. ''இரு கால்களில் நடப்பது'' பற்றி விவாதிக்கப்படவில்லை என்பதுடன் தனி நபர்களின் பொருளாயத நலன்கள் ஒருதலைப்பட்சமாக வலியுறுத்தப்படுகிறது. பொருளாயத ஊக்கம் பிரகடனப் படுத்தப் பட்டு தனிநபர் வாதம் மிக அதிகமாக முன் வைக்கப்படுகிறது.

சோசலிச பொருளாதாரத்தைப் பற்றி ஆய்வு செய்யும் போது அந்நூல் முரண்பாடுகளில் இருந்து தொடங்குவதில்லை. உண்மையில் அது முரண்பாடுகளின் அனைத்தும் தழுவிய தன்மையையோ அல்லது சமுதாய வளர்ச்சியின் உந்துசக்தி சமுதாய முரண்பாடுகள் தான் என்பதையோ அங்கீகரிப்பதில்லை. உண்மை என்னவெனில், அவர்களுடைய சமுதாயத்தில்*1 வர்க்கங்கள் இன்னும் இருக்கின்றன, அதாவது சோசலிசத்திற்கும் முதலாளித்துவ மிச்ச சொச்சங்களுக்கும் இடையிலான போராட்டம் இருக்கின்றது. ஆனால், அவர்கள் இதை ஏற்றுக்கொள்வதில்லை. அவர்களுடைய சமுதாயத்தில்*2 அனைத்து மக்களுடையது, கூட்டு மற்றும் தனி

* 1-2, 1967-ம் ஆண்டு பதிப்பின்படி, சோசலிச சமுதாயத்தில்

நபர்களுடையது என்று மூன்று விதமான உடைமை முறைகள் உள்ளன. சந்தேகமின்றி, இத்தகைய தனிநபர் உடைமை முறை கூட்டு உடைமைமுறை ஆக்கப்பட்டதற்குமுன், விவசாயிகள் தங்களுடைய வாழ்க்கைக்கு தனிநபர் உடைமை முறையையே முழுவதுமாக சார்ந்திருந்தபொழுது இருந்த தனியுடைமையைப் போல் இல்லை. இப்போது அவர்கள் ஒரு காலை படகிலும் இன்னொரு காலை இன்னும் கரையிலும் ஊன்றி, கூட்டு உடைமை முறையை பிரதானமாகவும், அதே சமயம் தனிநபர் உடைமை முறையை சார்ந்தும் உள்ளனர். மூன்று விதமான உடைமை முறைகள் இருந்தால் முரண்பாடுகளும் போராட்டங்களும் இருக்கும். ஆனால் அந்நூல் இதைப் பற்றி விவாதிப்பதில்லை. பொதுமக்கள் இயக்கத்திற்கு ஊக்கம் அளிக்கப்படுவதில்லை. சோசலிசத்தின் கீழ் உள்ள கூட்டு உடைமை, சோசலிசத்தின் கீழ் பொதுவுடைமையாக மாறுவதையும், சமுதாயம் முழுவதும் அனைத்து மக்களின் பகுக்க முடியாத உடைமையாக மாறுவது தான் கம்யூனிசத்திற்கு செல்வதற்கான ஒரு முன் நிபந்தனை என்பதையும் அங்கீகரிப்பதில்லை.

ஒரு உடைமைமுறை இன்னொன்றாகவும், ஒரு உற்பத்தி உறவு இன்னொரு உற்பத்தி உறவாகவும் மாற்றமடையும் கருத்துக்கு பதிலாக, ''மீண்டும் நல்லிணக்கம் காண்பது'', ''இணக்கம்'' போன்ற தெளிவற்ற சொற்களை அந்நூல் பயன் படுத்துகிறது. இந்த வகையில், அந்நூலில் குறைபாடுகளும் தவறுகளும் உள்ளதோடு பெருமளவுக்கு மார்க்சிய-லெனினியத்திலிருந்தும் விலகிச் சென்றுள்ளது.

அந்நூல் அறிவுறுத்தி ஒப்புக்கொள்ளச் செய்யக் கூடியதாகவோ, படிப்பதற்கு ஆர்வத்தை தூண்டக் கூடியதாகவோ இல்லாமல் மிக மோசமாக எழுதப்பட்டுள்ளது. அது உற்பத்தி சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையிலான முரண்பாடுகள் அல்லது பொருளாதார அடித்தளத்திற்கும் மேல் கட்டுமானத்திற்கும் இடையிலான முரண்பாடுகள் பற்றிய பருண்மையான ஆய்வுகளில் இருந்து தொடங்குவதில்லை. கேள்விகளை முன் வைப்பதிலும், பிரச்சினைகளை ஆய்வு செய்வதிலும் அது எப்போதும் பொதுவான கருத்தாக்கங்களிலிருந்து அல்லது வரையறைகளிலிருந்து தொடங்குகிறது. தர்க்க ரீதியான விளக்கமளிக்காமல் அது வரையறைகளை அளிக்கிறது. உண்மையில்

வரையறை என்பது ஒரு ஆய்வின் விளைவாக இருக்க வேண்டுமே யொழிய தொடக்கமாக இருக்கக் கூடாது. அந்நூல், எவ்வித ஆதாரமும் இன்றி ஒன்றன் பின் ஒன்றாகப் பல விதிகளை முன் வைக்கிறது, இவ்விதிகள் கண்டுபிடிக்கப்பட்டு வரலாற்று வளர்ச்சியில் பருண்மையாக ஆய்வு செய்வதன் மூலம் உறுதி செய்யப் பட்டவை அல்ல. விதிகள் சுயவிளக்கம் கொண்டவையாக இருக்க முடியாது. ஒருவர் பருண்மையான நிகழ் முறைகள் மூலம், பருண்மையான வரலாற்று வளர்ச்சினூடே ஆய்வு செய்ய வில்லையெனில் விதிகளைத் தெளிவாக விளக்க முடியாது.

அந்நூல், தான் எடுத்துக் கொண்ட விசயத்தை ஒட்டுமொத்த கட்டுப்பாட்டுடனும், பிரச்சினைகளை தேர்ச்சியுடனும் கையாள வில்லை. பிரச்சினைகள் தெளிவாக முன்வைக்கப்படவில்லை. கட்டுரையாக்கம் கருத்தை ஏற்றுக் கொள்ளச் செய்யக் கூடியதாக இல்லை. மாறாக சலிப்பூட்டக் கூடியதாகவும் தர்க்கரீதியாக இல்லாததாகவும் சம்பிரதாய தர்க்க முறை கூட இல்லாததாகவும் உள்ளது. பல்வேறு நூலாசிரியர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு அத்தியாயத்தை எழுதியது போல் ஒருங்கிணைக்கப்படாத ஒரு வேலைப் பங்கீடு போல் தோன்றுகிறது. ஒரு பாட நூலில் இருக்க வேண்டிய முறையான ஒழுங்கு இதில் காணப்படவில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக வரையறைகளிலிருந்து தொடங்கு வது இதன் அணுகுமுறையாக உள்ளது; ஒரு பொருளாதார அகராதியை படிப்பது போல் உள்ளது. இதன் கட்டுரையாசிரியர் கள் உயிர்ப்பு அற்றவர்களாகவும், பல இடங்களில் ஒருவரோடு ஒருவர் முரண்படுவதாகவும், முந்தைய அத்தியாயங்கள் பிந்தைய வற்றுடன் வேறுபடுவதாகவும் உள்ளது. கூட்டுறவுடன் கூடிய வேலைப் பங்கீடு மற்றும் கூட்டு ஆசிரியர் தன்மை என்பது ஒரு முறை. ஆனால் மிகச் சிறந்த முறை ஒரு வழிகாட்டும் தலைவ ராய் உள்ள ஒரு ஆசிரியர் பல உதவியாளர்களுடன் எழுதுவ தாகும். இவ்வாறு தான் மார்க்சும் அவரைச் சேர்ந்தவர் களும் எழுதினர், அவர்களுடைய படைப்புக்கள் ஒருங்கிணைக்கப் பட்டதும், கறாரானதும், முறைப்படியான விஞ்ஞானப் பூர்வ மானதும் ஆகும்.

எழுதும் போது, விமர்சனத்திற்கான இலக்கு உள்ள போது தான் விளைவு ஆவலைத் தூண்டுவதாக இருக்கும். இந்நூலில், சில சரியான விஷயங்கள் உள்ள போதிலும், தவறு என்று

கருதப்படும் விமர்சனங்களை வெளிபடுத்தவில்லை. இது படிப் பதை சோர்வூட்டக் கூடியதாக மாற்றுகிறது.

பல இடங்களில் ஒரு புரட்சியாளன் பேசுவதுபோல் அல்லாமல், ஒரு பண்டிதர் பேசுவது போன்ற உணர்வு ஏற்படுகிறது. பொருளாதார நடைமுறையை புரிந்து கொள்ளாத ஒரு பொருளா தாரவாதி (Economist) ஒரு உண்மையான நிபுணனாக இருக்க முடியாது. அந்நூல் கீழ்க்காணும் வகைப்பட்ட நிலைமைகளைப் பிரதி பலிப்பதாகத் தோன்றுகிறது: நடைமுறைப் பணியாற்றுபவர்கள் பலருக்கு விதிகள் மற்றும் கருத்தாக்கம் பற்றித் தெரியாததால் அவற்றைப் பொதுமைப் படுத்தும் திறனற்றவர்களாக உள்ளனர்; மறுபுறத்தில் நடைமுறை அனுபவம் இல்லாது கருத்தியல் ரீதியாக ஆய்வு செய்து கொண்டு இருப்பவர்கள் இருக்கிறார்கள். இந்த இரு வகைகளும் ஒன்றிணைக்கப்படவில்லை; அதாவது தத்துவமும் நடைமுறையும் ஒன்றிணைக்கப்படவில்லை.

ஆசிரியர் இயக்க இயல் முறையைக் கையாளவில்லை என் பதை அந்நூல் காட்டுகிறது. ஒரு பொருளாதார நூலை எழுத ஒருவர் தத்துவார்த்த ரீதியாகச் சிந்திக்க வேண்டும். தத்துவ ஞானிகள் எழுதுவதில் பங்கேற்க வேண்டும், இல்லையெனில் திருப்திகரமான நூலைப் படைப்பது சாத்தியமில்லை.

இந்நூலின் முதல் பதிப்பு 1955-ல் வெளிவந்தது. ஆனால் அடிப்படை வரைவு முறை அதற்கு முன்பாகவே தயாரிக்கப்பட்டு இருக்கிறது. அந்த சமயத்தில் ஸ்டாலின் முன்வைத்த மாதிரி தெளிவானதாக இல்லை என்று தோன்றுகிறது.

இந்நூல் எழுதப்பட்ட முறை பற்றிக் கருத்து வேறுபாடு கொண்டவர்கள் தற்போது ரசியாவில் உள்ளனர். ''சோசலிச அரசியல் பொருளாதாரம் பற்றிய ஒரு விஞ்ஞான பூர்வமான ஆய்வு'' என்ற கட்டுரையில் ஜி. கோஸ்லோவ் இந்நூலை விமர் சிக்கிறார். அவருடைய கருத்துக்கள் விசயத்தின் வேரைத் தொடுகிறது. அவர் இந்நூலின் ஆய்வு முறையில் உள்ள தவறு களைச் சுட்டிக் காட்டுகிறார்; சோசலிச உற்பத்தியின் நிகழ் முறையை ஆய்வு செய்வதன் மூலம் விதிகளை விளக்க வேண்டும் என்று கோருகிறார். அவர் கட்டமைப்பு முறையைப் பற்றியும் ஆலோசனைகளை முன் வைக்கிறார்.

கோஸ்லோவும் மற்றவர்களும் விமர்சனம் செய்ததன் காரண மாக வேறு ஒரு பாடநூல் நேர் எதிரான அணுகு முறையுடன் ரசியாவில் படைக்கப்படலாம். எதிர்ப்பு எப்போதும் நல்லதற்குத் தான்.

ஒருவர் இந்நூலை முதல் முறையாகப் படித்தாலே அதன் முறையையும் கண்ணோட்டத்தையும் தெளிவாக உணரலாம். ஆனால் அது இன்னும் முழுமையாக படித்ததாகாது. அது முன் வைக்கும் பிரச்சினைகளையும் வாதங்களையும் மையமாக எடுத்துக் கொண்டு, விபரங்களை மிக உன்னிப்பாக கவனித்து ஆய்வு செய்வதும், சாரமான சில விஷயங்களை ஒன்று சேர்ப்பதும், கிடைக்கக் கூடிய கட்டுரைகள், புத்தகங்கள், அறிக்கைகள் ஆகிய வற்றில் நூலின் கண்ணோட்டத்துடன் மாறுபடுகின்றவற்றை கவனமுடன் படிப்பதும் எதிர்காலத்திற்கு நன்மை பயப்பதாகும். முரண்படுகின்ற பிரச்சினைகள் பற்றிய மாறுபட்ட கருத்துக்களைப் பற்றி ஒருவர் அறிந்திருக்க வேண்டும். பிரச்சினைகளைத் தெளிவு படுத்துவதற்கு குறைந்தது இரு பக்கக் கருத்துக்களையாவது புரிந்து கொள்வது அவசியமாகும்.

தவறான கருத்துக்களை நாம் விமர்சனம் செய்து எதிர்க்க வேண்டும், ஆனால் அதே சமயம் சரியானவற்றை பாதுகாக்க வேண்டும். தைரியம் எச்சரிக்கை ஆகிய இரண்டுமே தேவையாகும்.

எவ்வாறாயினும், ஒட்டு மொத்தத்தில் அவர்கள் சோசலிச அரசியல் பொருளாதாரம் பற்றி எழுதியது ஒரு பெரிய பணியே. எத்தனை பிரச்சினைகளை உட்கொண்டிருந்தாலும், இந்நூல் குறைந்தபட்சம் விவாதத்திற்கான விசயங்களை நமக்கு அளிக் கிறது; இது மேலும் ஆய்வு செய்வதற்கு வழிகோலியது என்பது ஒரு சாதகமான அம்சமாகும்.

## 66. அரசியல் பொருளாதாரம் பற்றிய ஒரு பாட நூலை எழுதுவது எப்படி?

கோட்பாட்டளவில் அந்நூல் உடைமை முறையிலிருந்து தொடங்குவது அனுமதிக்கத் தக்கதே. ஆனால் அதை விட ஒரு சிறந்த வழி இருக்கிறது. மார்க்ஸ் கூட முதலாளித்துவ பொருளா தாரத்தை ஆய்வு செய்யும் போது உற்பத்தி சாதனங்களின்

பங்கீடு எவ்வாறு பண்டங்களின் பங்கீட்டை நிர்ணயிக்கிறது என்பதைப் பற்றிக் கண்டறிய, முதலாளித்துவத்தின் கீழ் உற்பத்தி சாதனங்களின் உடைமை பற்றிப் பிரதானமாக ஆய்வு செய்தார். முதலாளித்துவ சமுதாயத்தில் உற்பத்தியின் சமூகத் தன்மையும் உடைமையின் தனியுடைமைத் தன்மையும் அடிப்படை முரண்பாடாகும். மார்க்ஸ் பண்டங்களில் தொடங்கி பண்டங்களின் பின்னே மறைந்திருக்கும் பொருட்களுக்கிடையிலான உறவுகளையும் மக்களுக்கிடையிலான உறவுகளையும் வெளிக்கொணர்ந்தார். சோசலிச சமுதாயத்தில் கூட பொருட்களின் இரட்டைத் தன்மை தொடர்ந்து நீடிக்கிறது, இருந்த போதிலும், உற்பத்தி சாதனங்களில் பொதுவுடைமை நிறுவப்பட்டதன் காரணமாகவும், உழைப்புச் சக்தி இப்போது ஒரு பண்டமாக இல்லை என்ற காரணத்தினாலும், சோசலிசத்தில் பண்டங்களின் இரட்டைத் தன்மை முதலாளித்துவத்தில் இருந்த அவற்றின் இரட்டைத் தன்மையைப் போன்று இல்லை. இப்போது மக்களிடையே நிலவும் உறவுகள், பண்ட உறவுகளுக்குப் பின்னால் மறைந்திருக்க வில்லை. எனவே மார்க்சின் முறையை அப்படியே பின்பற்றி பண்டங்களின் இரட்டைத் தன்மையிலிருந்து தொடங்கி சோசலிசப் பொருளாதாரத்தை ஆய்வு செய்ய முற்பட்டால் விசயங்களை குழப்பி மக்கள் புரிந்து கொள்வதை கடினமாக்கக் கூடிய எதிர் விளைவுகளை உருவாக்கக் கூடும்.

அரசியல் பொருளாதாரம், உற்பத்தி உறவுகளை ஆய்வு செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. ஸ்டாலின் கண்ணுற்றது போல், உற்பத்தி உறவுகள் மூன்று விசயங்களை உள்ளடக்கியவை. அதவாவது உடைமை முறை, உழைப்பின் போது மக்களிடையே உள்ள உறவுகள், பண்டங்களின் பங்கீடு ஆகியன. நமது சொந்த அரசியல் பொருளாதாரத்தை எழுத முற்படும் போது நாம் கூட உடைமை முறையிலிருந்து தொடங்கலாம். முதலில் உற்பத்தி சாதனங்களின் உடைமை முறை, தனியுடைமை முறையிலிந்து பொது உடைமை முறைக்கு மாற்றப்பட்டதை விவரிக்கிறோம். நாம் எவ்வாறு அதிகார வர்க்க மூலதனத்தின் தனியுடைமை முறையையும் முதலாளித்துவ உடமை முறையையும் அனைத்து மக்களின் சோசலிச உடைமை முறையாக மாற்றினோம் என்பதையும், நிலப்பிரபுக்களின் கையில் தனியுடைமையாக இருந்த நிலம் எவ்வாறு முதலில் தனிப்பட்ட விவசாயிகளின் தனியுடைமையாகவும் பிறகு சோசலிசத்தில் கூட்டு உடைமையாகவும் மாற்றப்

பட்டது என்பதையும் விவரிக்க வேண்டும்; இதன் பிறகு மட்டுமே நாம் சோசலிசத்தின் கீழ் இரண்டு வகையான பொதுவுடைமை முறைகளுக்கு இடையிலான முரண்பாட்டையும், சோசலிசத்தில் உள்ள கூட்டு உடைமைமுறை எவ்வாறு கம்யூனிசத்தின் கீழ் மக்களின் உடைமை முறையாக மாறும் என்பதையும் விவரிக்க இயலும். அதே சமயம், மக்களின் உடைமை முறையே எவ்வாறு மாற்றமடைகிறது என்பதைப் பற்றியும், ஊழியர்களை கீழ் மட்டத்திற்கு மாற்றும் முறை பற்றியும், பல்வேறு மட்டங்களில் நிர்வாகத்தை நடத்துவது பற்றியும், தொழில் நிறுவனங்களின் தன்னாட்சி உரிமை ஆகியன பற்றியும் நாம் விவரிக்க வேண்டும். அனைத்து மக்களின் உடைமைமுறை என்ற வகையில் ஒரேமாதிரியாக இருப்பினும், நமது தொழில் நிறுவனங்கள் பல்வேறு விதமாக நிர்வகிக்கப்படுகின்றன. மையத்துறைகள் மூலமாக சிலவும், மாநிலங்கள் நகராட்சிகள் அல்லது தன்னாட்சிப் பிரதேசங்கள் மூலமாக வேறு சிலவும்,உள்ளூர் விசேச மாவட்டங்கள் அல்லது பிரதேசங்கள் மூலமாக இன்னும் சிலவும் நிர்வகிக்கப்படுகின்றன. கம்யூன்களால் நிர்வகிக்கப்படும் சில தொழில் நிறுவனங்களில் பாதி அனைத்து மக்களின் உடைமையாகவும், பாதி கூட்டு உடைமையாகவும் உள்ளன. மையத்தினால் அல்லது பகுதிகளினால் நிர்வகிக்கப்படுவதாயினும், தொழில் நிறுவனங்கள் யாவும் ஒருங்கிணைக்கப்பட்ட தலைமையின் கீழ் குறிப்பான தன்னாட்சி உரிமைகளைக் கொண்டிருக்கின்றன.

உற்பத்திக்கான உழைப்பில் மக்களிடையிலான உறவுகள் என்ற பிரச்சினையைப் பற்றிக் கவனிக்கும் போது அந்நூல், ‘‘தோழமைப் பூர்வமான கூட்டுறவு மற்றும் பரஸ்பர உதவி என்ற உறவுகள்’’ என்று குறிப்பிடுவதைத் தவிர,ஆய்வையோ, பகுப்பாய்வையோ மேற்கொள்ளவில்லை. அது இக் காரணத்தால் பிரதான பிரச்சினைகளைப் புரிந்து கொள்ள முற்றிலும் தவறி விட்டது. உடைமை முறை பற்றிய பிரச்சினை தீர்க்கப்பட்ட பிறகு, நிர்வாகம் தான் மிக முக்கியமான பிரச்சினையாகும்—அனைத்து மக்கள் உடைமை அல்லது கூட்டு உடைமையாக உள்ள தொழில் நிறுவங்கள் எவ்வாறு நிர்வகிக்கப்பட வேண்டும் என்பது ஒரு குறிப்பிட்ட உடைமை முறையில் மக்களிடையே நிலவும் உறவுகள் பற்றிய பிரச்சினை போன்றதே; இப்பொருளை பல கட்டுரைகளில் விவரிக்கலாம். ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் உடைமை முறைகளில் ஏற்படும் மாற்றத்திற்கு எப்போதும் ஓர் எல்லை உண்டு; ஆனால்

இதற்கு மாறாக, உற்பத்திக்கான உழைப்பில் மக்களிடையே நிலவும் உறவுகள் முடிவற்ற மாற்றத்திற்கு உள்ளாகின்றன. அனைத்து மக்களின் உடைமையான தொழில் நிறுவனங்களின் நிர்வாகத்தைப் பொருத்த வரையில், நாம் சில அணுகுமுறைகளை மேற்கொண்டுள்ளோம். அவை ஒன்றுகுவிக்கப்பட்ட தலைமை மற்றும் மக்கள் திரள் இயக்கம் ஆகியவற்றின் செயற்கூட்டு; கட்சித் தலைவர்கள், உழைக்கும் மக்கள்,தொழில் நுட்ப வல்லுனர்கள் ஆகியோரின் செயற்கூட்டு; உற்பத்தியில் கட்சி அணியினர் பங்கேற்பு; நிர்வாகத்தில் தொழிலாளர்களின் பங்கேற்பு; தேவையற்ற ஒழுங்கு விதிகளையும் நிறுவன நடைமுறைகளையும் படிப்படியாக மாற்றுவது ஆகியனவாகும்.

பண்டங்களின் பங்கீட்டைப் பொருத்த வரையில்,தற்போதைய அணுகுமுறையை முழுமையாக மாற்றி அந்நூலைத் திருத்தி எழுத வேண்டியுள்ளது. கடுமையான கூர்மையான போராட்டம், விரிவடையும் மறு உற்பத்தி, கம்யூனிசத்திற்கான எதிர்கால வாய்ப்புகள் ஆகியவற்றை வலியுறுத்த வேண்டுமே தவிர "தனி நபர் பொருளாதார நலன்களை அல்ல. "ஒரு மனைவி,ஒரு நாட்டுப்புற வீடு, ஒரு கார், ஒரு பியானோ, ஒரு டெலிவிசன்" ஆகியன மக்களை வழி நடத்துவதற்கான இலக்குகள் அல்ல. இது தனக்குத் தானே சேவை செய்து கொள்வதற்கான வழியே அன்றி சமுதாயத்திற்குச் சேவை செய்யும் வழி அல்ல. "நீ நிற்குமிடத்திலிருந்து தான் ஒரு பத்தாயிரம் மைல் பயணம் தொடங்குகிறது". ஆனால் எதிர்காலத்தைப் பற்றிய எவ்வித சிந்தனையுமின்றி ஒருவன் தன் கால்களை மட்டுமே பார்த்துக் கொண்டிருந்தால், புரட்சிகர ஆர்வத்திலும் உத்வேகத்திலும் விடுபட்டது என்ன?* என்பது கேள்விக் குறியாகிறது.

## 67. சாராம்சத்தை அடைவதற்கு தோற்றத்தை எவ்வாறு ஆய்வு செய்வது

ஒரு பிரச்சினையை ஆய்வு செய்யும் ஒருவர் தோற்றங்களின் பின்னால் உள்ள சாராம்சத்தை ஆராய்ச்சி செய்யும் பொருட்டு மக்கள் கண்டு உணரக்கூடிய தோற்றங்களில் தொடங்கி அவற்றிலிருந்து புறநிலையில் உள்ள பொருட்களிலும் சம்பவங்களிலும்

* *1967-வது ஆண்டு பதிப்பில் "பயணத்திற்கான சக்தியில் விடுபட்டது என்ன?" என்றுள்ளது.*

பொதிந்துள்ள சாராம்சத்தையும் முரண்பாடுகளையும் வெளிப் படுத்த வேண்டும்.

ஜப்பானிய எதிர்ப்புப் போரின் போதும் உள்நாட்டு யுத்தத் தின் போதும் யுத்தத்தின் பிரச்சினைகள் பற்றிய நமது ஆய்வு வெளித்தோற்றங்களிலிருந்து தொடங்கியது. எதிரி பெரியவனாக வும் வலிமை மிக்கவனாகவும் இருந்தான். நாம் சிறியவர்களாக வும் பலவீனமானவர்களாகவும் இருந்தோம். அச்சமயத்தில், இது தான் அனைவராலும் காணப்படக்கூடிய மிகத் தெளிவான தோற்ற மாக இருந்தது. சிறியதும் பலவீனமானதுமான ஒரு பகுதி எவ்வாறு பெரிய பலம் வாய்ந்த எதிரியைத் தோற்கடிக்க முடியும் என்ற ஆய்வை நாம் தோற்றத்திலிருந்து தொடங்கி பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டோம். நாம் சிறுபான்மையினராகவும் பலவீனமானவர் களாகவும் இருந்தாலும் கூட நமக்கு பொதுமக்கள் ஆதரவு இருக் கிறது. ஆனால் எதிரி பெரியவனாகவும் பலம் பொருந்தியவனாக வும் இருந்த போதிலும் சில பகுதிகளில் அடிவாங்கும் நிலையில் இருக்கிறான் என்று நாம் சுட்டிக் காட்டினோம். உள்நாட்டு யுத்த காலகட்டத்தை எடுத்துக் கொள்ளுங்கள்; எதிரி பல லட்சக்கணக்கில் இருந்த போது, நாம் பல ஆயிரக்கணக்கில்தான் இருந்தோம். யுத்த தந்திர ரீதியில் எதிரி பலம் பொருந்தியவனாகவும் தாக்குதல் தொடுக்கும் நிலையிலும் இருந்தான். நாம் பலவீனமான வர்களாக தற்காப்பில் ஈடுபட்டிருந்தோம். ஆனால் நம்மைத் தாக்குவதற்கு அவர்களுடைய படைகளை பெரும் அணி களாகவும், பெரும் அணிகளை மீண்டும் சிறு குழுக்களாகவும் பிரிக்க வேண்டி இருந்தது. மாதிரிக் குறியீடாக ஒரு குழு ஒரு பலமான கேந்திரத்தைத் தாக்கும் போது மற்றவை இன்னும் ஏய்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும். அச்சமயத்தில் எதிரி யின் ஒரு படைப் பிரிவைத் தாக்குவதற்கு பல ஆயிரக்கணக்கான படைகளை ஒன்று குவிப்போம், தேவையெனில் நமது பெருவாரி யான படைகளை எதிரிப்படைப் பிரிவின் ஒரு பகுதியை முறியடிப் பதற்கு ஈடுபடுத்துவோம், அதே சமயம் வேறு ஒரு குழு இன்னும் ஏய்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு எதிரிப் படைகளை திசை திருப்பும். இவ்வாறு நாம் ஒரு குறிப்பிட்ட இடத்தில் மேலாண்மையைப் பெற்றோம். எதிரி குறைந்த எண்ணிக்கையும் பலவீனமும் உள்ளவ னாக மாறினான். நாம் பெரும் எண்ணிக்கை உள்ளவர்களாகவும் வலியவர்களாகவும் மாறினோம். இன்னொரு விசயம் என்ன வெனில், அவர்கள் ஒரு பகுதிக்கு வந்து சேரும்போது நிலைமைகள்

அவர்களுக்குப் பரிச்சயமில்லாததாக இருக்கும், மக்கள் அவர்களை ஆதரிக்க மாட்டார்கள், எனவே நாம் எதிரிகளின் ஒரு குழுவை முற்றாகத் துடைத்தெறிந்து விட முடியும்.

பொதுவாகப் பேசுமிடத்து, நிகழ்வின் (phenomena) இயக்கங்களின் போது சித்தாந்தம் முறைப்படுத்தப்படுகிறது. இதற்குக் காரணம் பொருட்களுடைய இயக்கத்தின் பிரதிபலிப்புத்தான் சிந்தனையும் புரிதலும் என்பதாகும். நிகழ்வின் இயக்கங்களில், தற்செயலாக அல்லாமல் மீண்டும் மீண்டும் வெளிப்படுபவைதான் விதிகள் என்பவை. ஏதோ ஒன்று மீண்டும் மீண்டும் தொடர்ந்து வெளிப்படுவதன் மூலமாக மட்டுமே அது விதியாக மாறுகிறது. அவ்வாறு புரிந்து கொள்ள வேண்டிய ஒரு விசயமாகிறது. உதாரணமாக, முதலாளித்துவத்தின் நெருக்கடி பத்து ஆண்டுகளுக்கு ஒரு முறை நேர்ந்தது. இது மீண்டும் மீண்டும் ஏற்பட்ட பிறகு தான் முதலாளித்துவ சமுதாயத்தின் நெருக்கடி பற்றிய விதிகளை நம்மால் புரிந்து கொள்ள முடிந்தது. நிலச் சீர்திருத்தத்தில் நாம் உழைப்புச் சக்திக்கு ஏற்ப அல்லாமல் மக்கட் தொகைக்கு ஏற்ப நிலத்தைப் பங்கீடு செய்தோம். ஆனால் திரும்பத் திரும்பப் பல முறை செய்த பிறகுதான் நாம் இதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடிந்தது. இரண்டாவது உள்நாட்டு யுத்தத்தின் இறுதி நாட்களில் ''இடது'' தீவிரவாதத் தோழர்கள் உழைப்புச் சக்திக்கு ஏற்ப நிலத்தைப் பங்கீடு செய்ய வேண்டும் என்றும், ஒரு நபருக்கு இவ்வளவு என்ற அடிப்படையில் பங்கீடு செய்யக் கூடாது என்றும் கூறினர். அவர்கள் கண்ணோட்டத்தின்படி, மக்கட் தொகைக்கு ஏற்ப நிலப்பங்கீடு செய்வது கூட கறாரான வர்க்கக் கண்ணோட்டத்தின் பாற்பட்டதல்ல, மக்கள் கண்ணோட்டத்தின் படியும் போதுமானதாக இல்லை. நிலப்பிரபுக்களுக்கு நிலம் இல்லை, பணக்கார விவசாயிகளுக்கு மோசமான நிலங்கள், பாக்கி உள்ள அனைவருக்கும் அவர்களுடைய உழைப்புச் சக்திக்கு ஏற்ப நிலம், என்பதே அவர்களுடைய முழக்கமாக இருந்தது. எதார்த்த உண்மைகள் இந்த அணுகுமுறை தவறானது என்று நிரூபித்துள்ளன நிலம் எப்படிப் பங்கீடு செய்யப்பட வேண்டும் என்பதில் திரும்பத் திரும்பப் பல முறை நாம் அனுபவங்களைப் பெற்ற பிறகுதான் தெளிவு பெற்றோம்.

தர்க்கமுறை வரலாற்றுடன் இணக்கம் கொண்டதாக இருக்க வேண்டும் என்று மார்க்சியம் கோருகிறது. சிந்தனை என்பது

புறநிலை இருத்தலின் பிரதிபலிப்பு. வரலாற்றிலிருந்து தர்க்க முறை தோன்றுகிறது. இப்பாட நூல் ஏராளமான விவரங்களைக் கொண்டிருந்தாலும், அதில் பகுப்பாய்வு இல்லை, தர்க்கமுறை இல்லை, விதிகள் தெளிவாகப் புலப்படுவதில்லை, அத்துடன் திருப்தியற்றதாக உள்ளது. விவரங்கள் இல்லாமல் இருப்பதும் திருப்திகரமானது அல்ல. விவரங்கள் இல்லாவிடில் அதில் உள்ள தர்க்கத்தை மட்டும் காணமுடியும். வரலாற்றைக் காணமுடியாது. மேலும், அது வெறும் அகநிலைத் தர்க்கமாகத்தான் இருக்கும். குறிப்பாக இங்குதான் அந்நூலின் குறைகள் இருக்கின்றன.

சீனாவில் முதலாளித்துவ வளர்ச்சியின் வரலாற்றை எழுதுவது மிக முக்கியமானதாகும். வரலாற்றை ஆய்வு செய்பவர்கள், வேறுபட்ட சமுதாயங்கள், வேறுபட்ட வரலாற்று சகாப்தங்கள் ஆகியவை பற்றி ஆய்வு செய்யவில்லையெனில் அவர்கள் நிச்சயமாக ஒரு நல்ல தொகுப்பான வரலாற்றை எழுத முடியாது. பல்வேறு சமுதாயங்களைப் பற்றி ஆய்வு செய்வது என்பதன் பொருள் அச்சமுதாயத்தை வழி நடத்திய குறிப்பான விதிகளை கண்டறிவது என்பதாகும். ஒரு முறை குறிப்பான விதிகள் ஆய்வு செய்யப்பட்டு தெளிவு படுத்தப்பட்டால், சமுதாயத்தின் பொது விதிகளைத் தெரிந்து கொள்வது எளிது. பல குறிப்பான தன்மைகளின் ஆய்விலிருந்து பொதுவானதைத் தெளிவாக உணர்வது அவசியமாகும். குறிப்பான விதிகளைத் தெளிவாகப் புரிந்து கொள்ளவில்லை எனில் பொதுவான விதிகளையும் புரிந்து கொள்ள முடியாது. உதாரணமாக, மிருகங்களை ஆளுமை செய்யும் பொதுவான விதிகளை ஆய்வு செய்ய வேண்டுமெனில், முதுகெலும்புள்ள மற்றும் முதுகெலும்பில்லாதவற்றை ஆளுமை புரியும் விதிகளைப் பற்றி தனித்தனியாக ஆய்வு செய்வது அவசியமாகும்.

## 68. தத்துவம் நம்மை எதிர்நோக்கியுள்ள அரசியல் பணிகளுக்கு உதவுவதாக இருக்கவேண்டும்

எந்த ஒரு தத்துவமும் சமகாலத்துப் பணிகளுக்கு சேவை செய்கிறது.

முதலாளித்துவ தத்துவத்திற்கும் இப்பணியே உள்ளது. ஒவ்வொரு தேசமும், ஒவ்வொரு சகாப்தமும் அன்றைய அரசியல்

கடமைகளை நிறைவேற்றுவதற்கு புதிய கோட்பாடுகளை உருவாக்கும் தத்துவ ஆசான்களைக் கொண்டுள்ளன. இங்கிலாந்தில் பேகன், ஹாப்ஸ் போன்ற முதலாளித்துவப் பொருள் முதல் வாதிகள் தோன்றினர்; பிரான்ஸில் 18ம் நூற்றாண்டில் பல் பொருள் அறிவுவாதிகள் போன்ற(Encyclopedists) முதலாளித்துவ பொருள் முதல் வாதிகள் தோன்றினர். ஜெர்மனியிலும், ரசியாவிலும் கூட முதலாளித்துவப் பொருள்முதல்வாதிகள் இருந்தனர். இவர்கள் யாவரும் முதலாளித்துவப் பொருள்முதல்வாதிகளாக இருந்ததோடு, முதலாளிய வர்க்கத்தின் அரசியல் பணிகளுக்கு சேவை செய்தனர். இவ்வாறு ஆங்கிலேய முதலாளித்துவ பொருள் முதல்வாதம் இருந்ததானது பிரெஞ்சு முதலாளித்துவப் பொருள் முதல் வாதத்தை நிச்சயமாக தேவையற்றதாக்கவில்லை. அதே போல் இங்கிலாந்து அல்லது பிரெஞ்சு முதலாளித்துவப் பொருள் முதல்வாதம் ஜெர்மனி அல்லது ரசியப் பொருள்முதல்வாதத்தை தேவையற்றதாகச் செய்யவில்லை.

பாட்டாளி வர்க்கத்தின் மார்க்சிய தத்துவம் இதைவிட மிக அதிக உயிர்த்துடிப்புடன் நிகழ்கால அரசியல் கடமைகளை நிறைவேற்றும் அக்கறை கொண்டுள்ளது. சீனாவிற்கு மார்க்ஸ், லெனின், ஸ்டாலின்* ஆகியோரின் படைப்புகளைப் படிப்பது அவசியம். அது முதன்மையானது. ஆனால் எந்த ஒரு நாட்டின் பட்டாளி வர்க்கத்தின் தத்துவார்த்த வட்டங்களும் தங்களை எதிர் நோக்கியுள்ள அரசியல் கடமைகளை நிறைவேற்றும் பொருட்டு, புதிய கோட்பாடுகளை உருவாக்க வேண்டும்; புதிய படைப்புகளை எழுதவேண்டும்; தங்களுடைய சொந்த கோட்பாட்டாளர்களை உருவாக்கம் செய்ய வேண்டும்.

எந்த ஒரு நாடும் எந்த காலத்திலும் பழையதை மட்டுமே நம்பியிருக்க முடியாது. லெனினுடைய இரண்டு போர்த் தந்திரங்கள் மற்றும் இதரபடைப்புகள் இல்லாமல் மார்க்ஸ் மற்றும் ஏங்கெல்சின் எழுத்துக்கள் மட்டுமே, 1905 மற்றும் அதற்கு பிந்தைய ஆண்டுகளில் எழுந்த புதிய பிரச்சினைகளைத் தீர்த்திருக்க முடியாது. 1907-ம் ஆண்டின் 'பொருள்முதல்வாதமும அனுபவ வாத விமர்சனமும் மட்டுமே அக்டோபர் புரட்சிக்கு முன்பும் பின்பும் தோன்றிய புதிய பிரச்சினைகளை சமாளிக்கப் போதுமானதாக இருந்திருக்காது. இக்கால கட்டத்தின் தேவைகளை நிறைவு

* 1967 பதிப்பில் இல்லை.

செய்ய ஏகாதிபத்தியம், அரசும் புரட்சியும் ஆகிய படைப்புகளை லெனின் உருவாக்கினார். லெனினுக்குப் பிறகு பிற்போக்கு வாதிகளை சமாளிக்கவும், லெனினியத்தைப் பாதுகாக்கவும் லெனினியத்தின் அடிப்படை அம்சங்கள் மற்றும் லெனினியத்தின் பிரச்சினைகள் போன்ற படைப்புகளை உருவாக்க வேண்டிய அவசியம் ஸ்டாலினுக்கு இருந்தது. ஜப்பானிய எதிர்ப்பு யுத்தத்தின் தொடக்கத்திலும், இரண்டாவது உள்நாட்டு யுத்தத்தின் இறுதியிலும் நாம் நடைமுறையைப் பற்றியும், முரண்பாடுகளைப் பற்றியும் எழுதினோம். அந்த காலகட்டத்தின் தேவைகளை நிறைவு செய்ய அவை எழுதப்பட வேண்டியது அவசியமாக இருந்தது.

இப்போது நாம் சோசலிச காலகட்டத்தில் நுழைந்திருக்கும் காரணத்தால், தொடர்ச்சியாக பல புதிய பிரச்சினைகள் நம் முன் தோன்றியுள்ளன. நாம் புதிய தேவைகளை நிறைவு செய்யவில்லையெனில், புதிய படைப்புகளை எழுதவில்லையெனில், புதிய கோட்பாடுகளை உருவாக்கவில்லையெனில் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது. ●

# இணைப்பு

## 1. சீனாவில் தொழில் மயமாக்குவதில் பிரச்சினைகள்

ரசியாவில் முதலாவது ஐந்தாண்டுத் திட்டம் நிறைவேற்றப் பட்ட பிறகு, அனைத்து பெருந் தொழில் நிறுவனங்களின் மொத்த உற்பத்தியானது, மற்ற எல்லா தொழில் நிறுவனங்கள், விவசாயம் ஆகியவற்றின் உற்பத்தியின் மொத்த மதிப்பில் 70 சதவீத மானவுடனே தொழில் மயமாக்கல் எதார்த்த உண்மையாகி விட்டது என்று அவர்கள் பிரகடனம் செய்தனர். நாமும் அத்தகைய நிலையை வெகு விரைவில் அடைய முடியும். அப்படி அடைந் தாலும் நாம் தொழில் மயமாக்கல் எதார்த்தமாகி விட்டது என்று பிரகடனம் செய்ய மாட்டோம். ஏனெனில் இங்கு 500 மில்லியன் விவசாயிகள் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள நிலைமை உள்ளது. தொழில் துறை உற்பத்தி 70 சதவீதமாக உள்ள போது தொழில் மயமாகி விட்டது என்று பிரகடனம் செய்தால், நமது தேசியப் பொருளாதாரத்தின் எதார்த்த நிலைமையைத் துல்லியமாக பிரதி பலிக்க நம்மால் முடியாமல் போவதோடு, நாம் கடமையில் தவறு கின்றவர்களாகவும் ஆவோம்.

எட்டாவது தேசிய மக்கள் காங்கிரசின் முதலாவது பிளீனத் தில் நாம் இரண்டாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் சோசலிச தொழில் மயமாக்கலுக்கான ஒரு உறுதியான அடித்தளம் அமைக்க வேண்டியதன் அவசியத்தைப் பற்றிப் பேசினோம். கிட்டத்தட்ட 15 ஆண்டுகளுக்குள் நாம் ஒரு ஒருங்கிணைந்த தொழில் துறையைக் கட்டியமைப்போம் என்று கூடக் கூறினோம். இந்த இரண்டு கூற்றுகளுமே ஓரளவு முரண்பட்டவை. ஏனெனில், முழுமையாகத் தயார்நிலையில் உள்ள ஒரு தொழில் அமைப்பு முறை இல்லா மல், நாம் எப்படி சோசலிச தொழில் மயமாக்கலுக்கான "உறுதி யான அடித்தளம்" பற்றிப் பேச முடியும்? இப்போது உள்ள நிலைமைகளின் படி இன்னும் மூன்று ஆண்டுகளில் அடிப்படைத்

தொழில் துறைப் பண்டங்களின் உற்பத்தியில் ஒருவேளை இங்கிலாந்தை மிஞ்சுவோம். இன்னும் ஐந்தாண்டுகளில் தொழில் துறை அமைப்பை நிறுவும் நமது பணியை நடைமுறை எதார்த்தமாக நிறைவு செய்ய முடியும்.

நீண்டகால அடிப்படையில் நாம் ஒரு தொழில்துறை—விவசாய நாடு* என்று குறிப்பிடப்படுவோம் என எதிர்பார்க்கிறோம். நாம் 100 மில்லியன் டன் எஃகை உற்பத்தி செய்த போதிலும் நிலைமை அதுதான். நமது தனிநபர் உற்பத்தி பிரிட்டனை விஞ்ச வேண்டுமெனில், நாம் குறைந்த பட்சம் 350 மில்லியன் டன் எஃகு உற்பத்தி செய்ய வேண்டும்!

ஒரு குறிப்பிட்ட நாட்டைத் தேர்ந்தெடுத்து அதனுடன் போட்டியிடுவது ஒரு சிறப்பான முக்கியத்துவம் வாய்ந்தது. நாம் எப்போதும் இங்கிலாந்து நாட்டை எட்டிப் பிடிப்பது என்றே பேசி வருகிறோம். நமது முதல் அடி, அடிப்படைப் பொருட்களின் உற்பத்தியை எட்டிப்பிடிப்பது, அடுத்து தனிநபர் உற்பத்தி விகிதம். கப்பல் கட்டுவது மற்றும் மோட்டார் வாகன உற்பத்தியில் அந்த நாட்டை விட இன்னும் நாம் மிகவும் பின்தங்கியுள்ளோம். எல்லாத் துறைகளிலும் அந்த நாட்டை விஞ்சுவதற்கு நாம் முயலவேண்டும். மிகச் சிறிய நாடான ஜப்பான் நாட்டுக்கு கூட 4 மில்லியன் டன் எடையைச் சமாளிக்கக் கூடிய வர்த்தகக் கப்பல் வசதி உள்ளது. நம்முடைய நாட்டைப் போன்ற ஒரு பெரிய நாடு நமது சொந்த சரக்குகளைக் கொண்டு செல்லுமளவுக்கு கப்பல் வசதி இல்லாதிருப்பது மன்னிக்க முடியாத ஒன்றாகும்.

1949-ல் நம்மிடம் 90,000க்கும் சற்று அதிகமான இயந்திரக் கருவிகளின் தொகுப்பு இருந்தது. 1959க்குள்ளாக அது 4,90,000 ஆக உயர்ந்தது. 1957-ல் ஜப்பானிடம் 6,00,000 இருந்தது. இயந்திரக் கருவிகளின் எண்ணிக்கை தொழில் வளர்ச்சி மட்டத்தைக் குறிப்பிடும் ஒருமுக்கிய அளவாகும்.

நமது இயந்திர மயமாக்கலின் மட்டம் இன்னும் மிகவும் தாழ்வாக இருக்கிறது என்பதை ஷாங்கையை ஒப்பிட்டே கூற முடியும். அங்கு மிகச் சமீபத்தில் எடுக்கப்பட்ட புள்ளிவிபரங்களின்

* *1967 பதிப்பில் "......நாம் ஒரு தொழில் துறை நாடு என்று கருதப்பட மாட்டோம்"*

படி இயந்திர மயமாக்கப்பட்ட உழைப்பு, பகுதி இயந்திர மயமாக்கப்பட்ட உழைப்பு, உடலுழைப்பு ஆகிய ஒவ்வொன்றும் மூன்றில் ஒரு பகுதியாக இருக்கிறது.

ரசிய தொழிற் துறையில் உழைப்பின் உற்பத்தித்திறன் அமெரிக்க உற்பத்தித் திறனை இன்னும் விஞ்சிவிடவில்லை நாம் அதைவிடப் பின் தங்கியுள்ளோம். நம்முடைய மக்கள் தொகை மிகப் பெரியதாக இருந்த போதிலும் நம்முடைய உழைப்பின் உற்பத்தித் திறன் மற்ற நாடுகளுடன் ஒப்பிடும் போது மிகக்குறைவாக உள்ளது. 1960-லிருந்து இன்னும் பதின்மூன்றாண்டுகளுக்கு நாம் கடுமையாக உழைக்க வேண்டும்.

## 2. சமுதாய அந்தஸ்தும் தனிநபர் செயல்திறனும்

பக்கம் 488-ல், சோசலிச சமுதாயத்தில் ஒரு நபரின் அந்தஸ்து அவருடைய உழைப்பு மற்றும் செயல்திறனால் நிர்ணயிக்கப்படுகிறது என்று கூறப்படுகிறது. இது அப்படியிருக்க வேண்டிய அவசியம் இல்லை. கீழ் மட்டத்திலிருந்துதான் புத்தி கூர்மை படைத்தவர்கள் எப்போதும் உருவாகி வந்துள்ளனர். அவர்கள் மற்றவர்களால் இழிவாகக் கருதப்பட்டனர், அவர்கள் அவமதிக்கப்பட்டனர், அவர்கள் இளைஞர்களாக உள்ளனர். சோசலிச சமுதாயம் இதற்கு விதிவிலக்கல்ல. பழைய சமுதாயத்தில் ஒடுக்கப்பட்டவர்கள் கலாச்சார ரீதியாக பின் தங்கியவர்களாகவும் ஆனால் ஓரளவு புத்தி கூர்மையுடையவர்களாகவும் இருந்தனர்; ஒடுக்குவோர் உயர்ந்த கலாச்சாரம் உடையவர்களாகவும் ஆனால் மந்தமானவர்களாகவும் இருந்தனர். இதனால் இன்று கொஞ்சம் அபாயம் உள்ளது. சோசலிச சமுதாயத்தில் அதிக சம்பளம் பெறும் பிரிவினரிடம் சற்று கூடுதலான கலாச்சார அறிவு உள்ளது; ஆனால் கீழ்த் தட்டு மக்களுடன் ஒப்பிடும்போது மிக மந்தமானவர்களாகக் காணப்படுகின்றனர். இவ்வாறு நமது ஊழியர்களின் குழந்தைகள் ஊழியர்களல்லாதவர்களின் குழந்தைகளுடன் ஒப்பிட முடியாத நிலையில் உள்ளனர்.

சிறுபட்டறைகளில் இருந்து பல உருவாக்கங்களும் கண்டுபிடிப்புகளும் தோன்றின. பெரிய தொழிற்சாலைகளுக்கு மிகச் சிறந்த வசதிகளும், புதிய தொழில் நுட்பங்களும் இருக்கலாம்,

அதன் காரணமாக அதன் ஊழியர்கள் பெரும்பாலும் தற்பெருமையும், இறுமாப்பும் கொண்டு முன்னேற்றத்தில் விருப்பமில்லாமலும் ஆர்வத்துடன் செயல்படாமலும் இருக்கின்றனர். இருக்கும் நிலைமைகளில் திருப்தியுற்றுவிடுகின்றனர். பெருவாரியான சந்தர்ப்பங்களில் அவர்களின் படைப்பாற்றல் சிறு தொழிற்சாலைகளின் ஊழியர்களுடன் சிறிதும் ஒப்பிடக்கூடியதாய் இல்லை. அண்மையில் சாங்செளவிலுள்ள ஒரு நெசவாலையின் தொழிலாளர்கள் ஒரு புதிய சாதனத்தை உருவாக்கினர்; அது தறிகளின் திறனை உயர்த்தியது. பருத்தி நூற்பு, துணி நெசவு, அச்சடித்தல், சாயம் இடுதல் ஆகியன சமச்சீரான திறனை எய்த அது உதவியது. இப்புதிய தொழில் நுட்பம் ஷாங்கையிலிருந்தோ, டியன்ட்ஷினில் இருந்தோ வரவில்லை, மாறாக சாங்செள என்ற ஒரு சிறிய இடத்திலிருந்துதான் தோன்றியது.

பாதகமான சூழ்நிலைகளின் மூலம்தான் அறிவு பெறப்படுகிறது. சூயுவான் பதவியில் நீடிந்திருந்தால் அவருடைய படைப்புகள் இருந்திருக்காது! அவர் பதவியை இழந்து ''உழைப்பில் ஈடுபடும்படி கீழிறக்கப்பட்டதன்'' காரணமாகத்தான் சமுதாய வாழ்க்கையுடன் நெருங்கி வந்து லீசாவோ போன்ற மிகச் சிறந்த இலக்கியத்தை அவரால் படைக்க முடிந்தது. பல அரசுகளால் அவமதிக்கப்பட்ட பிறகுதான் கன்ஃபூசியஸ் கூட தன்னை ஆய்வுகளில் ஈடுபடுத்திக் கொண்டார். தங்கள் உழைப்புச் சக்தியை விற்பதற்காக ஒவ்வொரு இடமாக அலைந்து கொண்டிருந்த வேலை இல்லாதோரின் ஒரு குழுவை ஒன்று திரட்டினார். ஆனால் யாரும் அவரை ஏற்றுக் கொள்ளவில்லை. ஒவ்வொரு புதிய முயற்சியிலும் ஏமாற்றம் அடைந்ததினால், வேறு வழி இன்றி கலிப்பாடல் என்ற நாடோடிப் பாடல் தொகுப்பைச் சேகரித்தார், வரலாற்று ரீதியான விஷயங்களை ஒழுங்கு சேர்த்து 'வசந்தமும் இலையுதிர் காலமும்' என்று அழைக்கப்படும் தொகுப்பை உருவாக்கினார்.

வரலாற்று ரீதியாக முற்போக்கான விஷயங்கள் முன்னேறிய நாடுகளிலிருந்து வரவில்லை, மாறாக ஒப்பீட்டளவில் பின் தங்கிய நாடுகளிலிருந்துதான் வந்தன. மார்க்சியம் அக்காலத்தில் ஒப்பீட்டளவில் வளர்ச்சியடைந்த நாடுகளான— இங்கிலாந்து, பிரான்சு — ஆகிய நாடுகளிலிருந்து வரவில்லை, மாறாக இவை இரண்டிற்கும் இடைப்பட்ட நிலையில் முதலாளித்துவ வளர்ச்சி பெற்றிருந்த ஜெர்மனியிலிருந்து வந்தது.

அதே போன்று அறிவியல் கண்டுபிடிப்புகளும் மிக உயர்ந்த கலாச்சாரமும் கல்வியும் உடையவர்களிடமிருந்து தான் வரவேண்டும் என்ற அவசியமில்லை. தற்போது எதையும் கண்டுபிடிக்காத பல பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் உள்ளனர். சந்தேகமின்றி, ஒரு பொறியியல் வல்லுனருக்கும் தொழிலாளிக்கும் இடையிலுள்ள வேறுபாட்டை மறுப்பது என்று இதற்குப் பொருளல்ல. நாம் பொறியியல் வல்லுனர்கள் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் இங்கு ஒரு முக்கியமான பிரச்சினை உள்ளது. வரலாற்று ரீதியாக, கலாச்சார ரீதியாகத் தாழ்ந்தவர்கள் கலாச்சார ரீதியாக உயர்ந்தவர்களை தோல்வியுறச் செய்வது வழக்கமான நிகழ்ச்சியாக இருந்து வருகிறது. நமது உள்நாட்டு யுத்தத்தில் பல்வேறு மட்டங்களில் இருந்த நமது தளபதிகள், உள்நாட்டு வெளிநாட்டு இராணுவ பள்ளிகளில் தேர்ச்சி பெற்ற கோமிங்டாங் அதிகாரிகளை விட கலாச்சார ரீதியாகத் தாழ்ந்தவர்களாக இருந்தனர். ஆனால் நாம் அவர்களைத் தோல்வியுறச் செய்தோம்.

மற்றவர்களை இழிவாக நோக்கும் தன்மை மனிதப் பிராணியிடம் உள்ள ஒரு குறைபாடாகும். ஒரு சிறிய சாதனையைப் புரிந்தவர்கள் கூட சாதனை புரியவேண்டியவர்களை இழிவாக நோக்குகின்றனர். வல்லரசுகளும், செல்வம் கொழிக்கும் நாடுகளும் சிறிய, ஏழை நாடுகளை செருக்குடன் நோக்குகின்றன. வரலாற்று ரீதியாக மேற்கத்திய நாடுகள் ரசியாவை செருக்குடன் நோக்கின. சீனா இன்னும் அது போன்ற நிலைமையில் தான் இருக்கிறது. இதற்கு ஒரு காரணம் உள்ளது. அதாவது நாம் இன்னும் ஒரு பொருட்டாக இல்லை; இவ்வளவு பெரிய நாடு, இவ்வளவு குறைவான எஃகு, இவ்வளவு அதிகமான எழுத்தறிவின்மை. மற்றவர்கள் நம்மை செருக்குடன் நோக்குவதும் நமக்கு நன்மை பயக்கும். நம்மை கடுமையாக உழைக்க வைக்கவும், முன்னுக்கு உந்தவும் அது உதவும்.

## 3. மக்கள் திரளைச் சார்ந்திருப்பது

''பெருந்திரளான மக்களின் சொந்த படைப்பான சோசலிசம் உயிரோட்டமானது, வீரிய மிக்கது, படைப்பாற்றல் மிக்கது'' என்று லெனின் மிகச் சரியாகவே கூறினார். நமது மக்கள் திரள் பாதை இது போன்றது. இது லெனினிசத்துடன் ஒத்துப்போக

வில்லையா ? இக் கூற்றை மேற்கோள் காட்டிய பிறகு அந்நூல் கூறுகிறது: ''அரசு அங்கங்களின் பணிகளிலும், உற்பத்தியை நிர்வகிப்பதிலும், நாட்டின் சமுதாய வாழ்க்கையின் அனைத்து துறைகளின் தலைமையிலும் பரந்துபட்ட உழைக்கும் மக்கள் திரள் அதிக எண்ணிக்கையில் நேரடியாக ஊக்கமுடன் பங்கேற்கின்றனர்'' (பக்கம் 332). இதுவும் மிகச் சரியாகவே கூறப்பட்டுள்ளது. ஆனால் சொல்வது ஒரு விசயம், செய்வது வேறு ஒரு விசயம். இதைச் செய்வது என்பது எந்த விதத்திலும் எளிதானதல்ல.

1928-ல் ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது, அது கூறியது : ''கட்சி, தொழிலாளர் மற்றும் விவசாயிகளின் பெருந்திரளான மக்கள் அதிகபட்சமாகத் திரட்டப்படும் போது மட்டுமே நாம் முதலாளித் துவ நாடுகளை தொழில் நுட்ப ரீதியாகவும் பொருளாதார ரீதி யாகவும் விஞ்சவும், மீறிச் செல்லவுமான பணிகளை நிறைவேற்ற முடியும்'' (337). இது மிகவும் நன்றாகவே கூறப்பட்டுள்ளது. இதைத்தான் நாம் தற்போது சரியாக செய்து வருகிறோம். அன்றைய நாட்களில் ஸ்டாலினுக்கு மக்கள் திரளைத் தவிர, சார்ந்து நிற்பதற்கு வேறு ஒன்றும் இருக்கவில்லை, எனவே மக்களையும் கட்சியையும் முழு அளவில் திரட்டக் கோரினார். அதன் பிறகு, இப்பாதையின் மூலம் ஓரளவுக்கு வெற்றிகளை ஈட்டிய பிறகு, அவர்கள் மக்கள் திரளைச் சார்ந்திருப்பதைக் குறைத்துக் கொண்டனர்.

லெனின் கூறினார் : ''பல்வேறு பாதைகள், வடிவங்கள், முறைகள் மூலம் பொது இலக்கை எட்டவேண்டும் என்கிற நோக்கில் உள்ளூர் படைப்பாற்றலும், முன் முயற்சிக்கான ஆர்வமும் போதுமான அளவு தங்குதடையின்றி வளர்ச்சியடைய வேண்டும் என்று உண்மையான ஜனநாயக மத்தியத்துவம் கோருகிறது (பக்கம் 454). சரியான கூற்று. மக்களால் பாதைகளை உருவாக்க முடியும். மக்கள் ரசியாவின் சோவியத்துக்களை உருவாக்கினார் கள். அவர்களே நமது மக்கள் கம்யூன்களையும் உருவாக்கினார்கள்.

## 4. ரசியாவும் சீனாவும்: வளர்ச்சி நிகழ்முறை யில் ஒப்பு நோக்குவதற்கான சில அம்சங்கள்

பக்கம் 422-ல் அந்நூல் லெனினை மேற்கோள் காட்டுகிறது: ''அரசு அதிகாரம் தொழிலாளி வர்க்கத்தின் கையில் இருந்தால்

அரசு முதலாளித்துவத்தின் மூலம் கம்யூனிசத்திற்கு மாற்றமடைவது சாத்தியம்'' இது போன்ற இன்னபிற. இது சரியாக முன் வைக்கப்பட்டுள்ளது. லெனின் ஒரு உறுதிவாய்ந்த உழைப்பாளர். அக்டோபர் புரட்சிக்குப் பிறகு பாட்டாளி வர்க்கத்திற்கு பொருளாதாரத்தை நிர்வகிப்பதற்கான அனுபவம் இல்லை என்று அவர் உணர்ந்திருந்த காரணத்தினால், அரசு முதலாளித்துவ வழிவகைகளைப் பயன்படுத்துவதன் மூலம் பாட்டாளி வர்க்கத்தின் திறமையை இந்தத் துறையில் வளர்க்க முற்பட்டார். அந்த சமயத்தில் பாட்டாளி வர்க்கத்தின் பலத்தை ரசிய முதலாளி வர்க்கம் குறைத்து மதிப்பிட்டது. எனவே, லெனின் முன்வைத்த நிபந்தனைகளை ஏற்க மறுத்து மந்தப் போக்கையும், நாச வேலைகளையும் மேற்கொண்டனர். இதனால் அவர்களுடைய சொத்துக்களை தொழிலாளர்கள் பறிமுதல் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இது அங்கு அரசு முதலாளித்துவம் வளர்ச்சியடைய முடியாததற்குக் காரணமாகும்.

உள்நாட்டு யுத்தத்தின் போது ரசியாவின் பிரச்சினைகள் உண்மையிலேயே மிகப் பெருமளவில் இருந்தன. விவசாயம் சீர்குலைந்து இருந்தது. வர்த்தகத் தொடர்புகள் தகர்க்கப்பட்டிருந்தன. தகவல் தொடர்பும், போக்கு வரத்தும் மிகுந்த சிரமத்துடன் செயல்பட்டு வந்தன. கச்சாப் பொருட்களைப் பெற முடியவில்லை; பறிமுதல் செய்யப்பட்ட பல தொழிற்சாலைகளை செயல்பாட்டிற்கு கொண்டுவர முடியவில்லை. இவற்றிற்கு அவர்களிடம் உண்மையில் எந்தவித தீர்வும் இல்லாத காரணத்தால், விவசாயிகளின் உபரி தானியங்களை கொள்முதல் செய்வதைத் தவிர அவர்களுக்கு வேறு வழி இல்லாதிருந்தது. உண்மையில் இது, விவசாயிகளின் உழைப்பின் பலனை எவ்வித நஷ்டஈடும் இன்றி எடுத்துக் கொள்வது என்று தான் பொருள், விவசாயிகளின் பெட்டிகளையும், பானைகளையும் கொள்ளையடிக்கும் ஒரு முறை என்றுதான் பொருள் — இது ஒரு சரியான நடைமுறையல்ல. உள்நாட்டு யுத்தம் முடிவு பெற்ற பிறகுதான் இந்த முறைக்குப் பதில் தானிய வரி புகுத்தப்பட்டது.

நமது உள்நாட்டு யுத்தம் அவர்களுடையதை விட மிகவும் நீண்ட நாட்கள் நீடித்தது. இருபத்தியிரண்டு ஆண்டுகள் தளப் பிரதேசங்களில் பொதுமக்களுக்கான தானியங்களை வசூல்

செய்வதும், உபரி தானியத்தை விலைக்கு வாங்குவதும் நமது நடைமுறையாக இருந்தது. விவசாயிகளைப் பற்றி நாம் மிகச் சரியான போர்த்தந்திரத்தைக் கொண்டிருந்தோம், யுத்தத்தின் போது நாம் அவர்களை மிக அதிக அளவில் சார்ந்திருந்தோம்.

இருபத்திரெண்டு ஆண்டுகள் நாம் தளப்பிரதேசங்களில் நமது அரசியல் அதிகாரத்தை வளர்த்து வந்தோம். தளப்பிரதேசங்களில் பொருளாதாரத்தை நிர்வகிப்பதில் அனுபவங்களைச் சேகரித்தோம். நாடு முழுவதும் விடுவிக்கப்பட்ட பிறகு பொருளாதார மீட்சிப் பணிகளை மேற்கொண்டு துரிதமாக நிறைவேற்றும் பொருட்டு, விவசாயிகளுடன் நேச அணியைக் கட்டவும், பொருளாதாரத்தை நிர்வகிக்கவும், ஊழியர்களைப் பயிற்றுவித்தோம். அதன் பிறகு உடனடியாக, மாற்றத்திற்கான காலகட்டத்தின் பொது வழியை முன் வைத்தோம். அதாவது முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் கட்டுமானப் பணிகளைத் தொடங்கும் போதே, சோசலிசப் புரட்சிக்கான பிரதான முயற்சிகளில் ஈடுபட்டோம். நாம் சோசலிசக் கட்டுமானப் பணிகளை மேற்கொண்டிருக்கும் போது, விவசாயிகளுடன் இணைந்து செயல்பட்டு முதலாளிகளின் மீது நடவடிக்கை எடுத்தோம். குட்டி முதலாளிகளின் தன்னெழுச்சியான போக்கை சமாளிப்பதற்கான ஒரு வழியாக, முதலாளித்துவத்தை அரசு முதலாளித்துவமாக மாற்ற முதலாளிகளுடன் பேச்சு வார்த்தைகள் நடத்துவதைக் கூட நான் சகித்துக் கொள்வேன் என்று லெனின் ஒருசமயம் கூறினார். வேறுபட்ட வரலாற்று நிலைமைகளில் வேறுபட்ட கொள்கைகள் தோன்றுகின்றன.

புதிய பொருளாதாரக் கொள்கை (NEP) கால கட்டத்தில் பணக்கார விவசாயிகளை ஒரு தளர்த்தப்பட்ட கொள்கையுடன் ரசியா அணுகியது; ஏனெனில் அவர்களுக்கு தானியம் தேவையாக இருந்தது. விடுதலைக்குப் பிந்திய தொடக்கக் காலத்தில் நாமும் அதுபோன்ற ஒரு கொள்கையுடன் தேசிய முதலாளிகளை அணுகினோம். கூட்டுப் பண்ணைகளும் அரசுப் பண்ணைகளும் 400 மில்லியன் பூட் (Pood) தானியங்களை உற்பத்தி செய்யும் வரை அவர்கள் பணக்கார விவசாயிகளை ஒழிக்கும் முழக்கத்தை முன் வைக்கவில்லை; ஒட்டுமொத்த கூட்டுடைமையாக்கத்தை எதார்த்தமாக்கும் முயற்சியில் பணக்கார விவசாயிகளுக்கு எதிராக

நடவடிக்கை எடுக்கவில்லை.* நம்முடைய நிலை என்ன? நாம் காரியத்தை வேறு விதமாக செய்தோம். எவ்வளவு சீக்கிரமாக நிலச் சீர்திருத்தம் செய்தோமோ அவ்வளவு சீக்கிரமாக பணக்கார விவசாயி பொருளாதாரத்தை உண்மையில் ஒழித்துக் கட்டினோம்.

ரசியாவின் கூட்டுறவு இயக்கத்தின் ''தொடக்கத்தில் விவசாயம் பெரும் இழப்புகளைச் சந்திக்க நேர்ந்தது''(பக்கம் 397). இதுதான் பல கிழக்கு ஐரோப்பிய நாடுகளை கூட்டுறவு மயமாக்கல் பிரச்சினை பற்றிக் கவலை கொள்ள வைத்தது, பெரிய அளவில் அமைக்க பீதி கொள்ளச் செய்தது. அவர்கள் அதைத் தொடங்கிய போதும் மெதுவாகவே செயல்பட்டனர். கூட்டுறவுகளினால் நமது உற்பத்தி பாதிக்கப்படவில்லை.அதற்கு மாறாக,அது பெருமளவில் அதிகரித்தது. ஆரம்பத்தில் பலரும் சந்தேகப்பட்டனர். இப்போது மனமாற்றம் அடைந்தவர்களின் எண்ணிக்கை மெதுவாக அதிகரித்து வருகிறது.

---

* *''ரசிய நிலக் கொள்கை பற்றிய பல்வேறு கேள்விகள்'' என்ற கட்டுரையில் (டிசம்பர் 1929) ஸ்டாலின் கூறினார்: ''1927-ல் பணக்கார விவசாயிகள் 600 மில்லியன் பூட் தானியம் உற்பத்தி செய்தனர்; அவற்றில் 130 மில்லியன் பூட் கிராமப்புற பரிவர்த்தனை மூலம் விற்பனை செய்யப் பட்டது. இது நம்மால் குறைத்து மதிப்பிட முடியாத பெரு மளவு சக்தியாகும்.அச்சமயத்தில் நம்முடைய கூட்டுடைமை மற்றும் அரசு பண்ணைகள் எவ்வளவு உற்பத்தி செய்தன? என்று கணக்குக் கூறுங்கள். 80 மில்லியன் பூட் உற்பத்தி செய்தன, அதில் 30 மில்லியன் பூட் பண்ட தானியங் களாகும்.'' எனவே ''அத்தகைய சூழ்நிலைமைகளில், நாம் பணக்கார விவசாயிகளைத் தீர்மானகரமாகத் தாக்க முடியாது'' என்று ஸ்டாலின் முடிவு செய்தார். ஸ்டாலின் தொடர்ந்து கூறினார், ''நாம் இப்போது அவர்களைத் தாக்குவதற்குப் போதுமான பொருளாயத அடிப்படைகள் உள்ளன.'' ஏனெனில், 1929-ல் கூட்டுடைமை மற்றும் அரசுப் பண்ணைகள் 400 மில்லியன் பூட் தானியத்திற்கும் குறைவின்றி உற்பத்தி செய்தன. அதில் 130 மில்லியனுக்கு மேல் பண்ட தானியங்களாகும் (ஜோசப் ஸ்டாலின்,முழுத் தொகுப்பு நூல் தொகுதி 12, பக்கம் 142.)*

## 5. ஒரு பொதுவழியின் உருவாக்க நிகழ்முறையும் உறுதிப்படுத்தலும்

கடந்த இரண்டு ஆண்டு காலமாக நாம் ஒரு மாபெரும் சாதனையை நடத்தி வருகிறோம்.

விடுதலைக்கு பிந்திய தொடக்க கட்டங்களில் நாடு முழுவதன் பொருளாதாரத்தை நிர்வகிப்பதில் அனுபவமற்று இருந்தோம். எனவே முதல் ஐந்தாண்டு திட்ட காலத்தில் ரசிய முறைகளை, அவை என்றுமே நமக்கு முழுமையான திருப்தியை அளிக்கவில்லை எனினும், அதைப் பின்பற்றுவதைத் தவிர வேறு எதையும் நம்மால் செய்ய முடியவில்லை. 1955-ல் நாம் அடிப்படையில் ''மூன்று மாற்றங்களை''[2] நிறைவு செய்தபிறகு (அந்த வருட இறுதியிலும் அடுத்த ஆண்டு வசந்தத்திலும்), சுமார் 30 ஊழியர்களுடன் ஆலோசனைகளை மேற்கொண்டோம். இந்த ஆலோசனைகளின் விளைவாக நாம் ''பத்து பெரும் உறவுகள்'' மற்றும் ''அதிகமாக! விரைவாக! சிறப்பாக! அதிக சிக்கனமாக!'' என்ற முழக்கங்களை முன் வைத்தோம். அச்சமயத்தில் ஸ்டாலினுடைய 1949 ஆம் ஆண்டு தேர்தல் சொற்பொழிவை வாசித்தோம்; அது ஜார் ரசியா ஆண்டுதோறும் 4 மில்லியன் டன் எஃகு உற்பத்தி செய்தது; 1940-க்குள் இந்த எண்ணிக்கை 18 மில்லியன் டன்னாக உயர்ந்தது என்று கூறியது. 1921-ம் ஆண்டிலிருந்து ஒருவர் கணக்கிட்டால் 20 ஆண்டுகளில் 14 மில்லியன் டன் மட்டுமே அதிகரித்துள்ளது. இந்த காலம் முழுவதும் அவர்கள் சோசலிஸ்டுகளாக இருந்துள்ளனர் என்று சிந்திக்கும் போது நாம் இதைவிட சற்று சிறப்பாகவும், விரைவாகவும் செய்ய முடியாதா? அதன்பிறகு நாம் ''இரண்டு முறைகள்'' என்ற பிரச்சினையை முன் வைத்தோம், அதே சமயம் விவசாய வளர்ச்சிக்காக[3] ஒரு நாற்பது அம்சத் திட்டத்தை உருவாக்கினோம். வேறு எந்த ஆலோசனையும் அந்த சமயத்தில் முன் மொழியப்படவில்லை.

1956 ஆம் ஆண்டின் முன்நோக்கிய பாய்ச்சலுக்குப் பிறகு சாகசவாத முன்னேற்றங்களுக்கு எதிர்ப்பு* தோன்றியது. முதலாளித்துவ வலதுசாரியினர் சோசலிசக் கட்டுமானத்தின் சாதனைகளை எதிர்க்கும் முயற்சியில் நமது தலைமுடியைப் பிடித்து இழுத்து காட்டுமிராண்டித் தனமாக தாக்கினர். 1957 ஜூனில்,

* *1967 பதிப்பில் மட்டும்.*

தேசிய மக்கள் காங்கிரசில் பிரதமர் சூ-என்-லாய் இன் அறிக்கை வலதுசாரியினரைத் திருப்பித் தாக்கியது. அதே ஆண்டு செப்டம்பரில் கட்சியின் மத்தியக் கமிட்டியின் மூன்றாவது பிளீனக் கூட்டம் ''அதிகமாக! வேகமாக! சிறப்பாக! மேலும் சிக்கனமாக!'', 40 அம்ச பொது திட்டம், வளர்ச்சியை* ஊக்குவிக்கும் குழு, ஆகிய முழக்கங்களை மீண்டும் உயிர்ப்பித்தது. நவம்பர் மாதம் மாஸ்கோவில் மக்கள் தினசரி பத்திரிகை எழுதிய, ''அதிக மாக! வேகமாக! சிறப்பாக! அதிக சிக்கனமாக!'' என்பது பற்றிய தலையங்கத்தை திருத்தி எழுதினோம். குளிர்காலத்தில் பெரிய அளவிலான நீர் சேமிப்பு இயக்கத்தை நாடு தழுவிய அளவில் துவக்கினோம்.

1958-ல் முதலில் நானிங்கிலும் அதன் பிறகு சென்டுவிலும் கூட்டங்கள் நடந்தன. நாம் நமது பிரச்சினைகளில் ஆழ்ந்தோம். துணிச்சலான முன்னேற்றத்தை எதிர்த்தவர்களை விமர்சனம் செய்தோம். துணிச்சலான முன்னேற்றத்திற்கு இனி மேற்கொண்டு எதிர்ப்பை அனுமதிப்பதில்லை என்று நாம் முடிவு செய்தோம். சோசலிச கட்டுமானத்திற்கு ஒரு பொது வழியை முன்மொழிந்தோம். நானிங் கூட்டம் நடைபெறாமல் இருந்திருந்தால் நாம் ஒரு பொதுவழியை உருவாக்கியிருக்க முடியாது. மே மாதத்தில் மத்தியக் கமிட்டியின் ஒரு பிரதிநிதி** எட்டாவது தேசிய மக்கள் காங்கிரசின் இரண்டாவது கூட்டத் தொடரில் அறிக்கை சமர்ப்பித்தார். சபை பொதுவழியை அதிகாரப் பூர்வமாக நிறைவேற்றியது. ஆனால், இவ்வழி உறுதிப்படுத்தப்படவில்லையாதலால், நாம் பிரதானமாக மையத்திற்கும் உள்ளூர் பிரதேசங்களுக்கும் இடையிலான அதிகாரப் பங்கீடு பற்றி திட்டவட்டமான நடவடிக்கைகளைப் பின்பற்றினோம். பெய்டாய் ஹோவில் எஃகு உற்பத்தியை இரட்டிப்பாக்க ஆலோசனைகளை முன்வைத்து இரும்பு எஃகு உற்பத்திக்கு ஒரு பொது மக்கள் இயக்கத்தைத் தொடங்கினோம் — இதை மேற்கத்திய பத்திரிக்கைகள் கொல்லைப்புற எஃகு என்று குறிப்பிட்டன. அதே சமயத்தில் நாம் மக்கள் கம்யூன்களை துவக்கினோம். அதைத் தொடர்ந்து வலதுகள் கயூமாய் தாக்குதல் நடத்தினர். இவை ஒரு சிலரை குழப்பமடையச் செய்தன. வேறு சிலரை

* *1967 பதிப்பில் ''மாபெரும் முன்னோக்கிய பாய்ச்சல்''*

** *1967 பதிப்பில் லியூசோசி*

நிலைகுலையச் செய்தன. நமது பணிகளில் தவறுகள் தோன்றின. தானியங்களுக்கு விலை கொடுக்காததினால் தானியங்களிலும் இதர வகை உணவுப் பண்டங்களிலும் ஒரு நெருக்கடிக்குள்ளானோம். அதிதீவிர கம்யூனிச காற்று வீசிக் கொண்டிருந்தது. அன்றாட அத்தியாவசியப் பண்டங்களின் ஒரு குறிப்பிட்ட சதவிதத்தைக் கூட* விநியோகிக்க முடியவில்லை. பெய்டாய் ஹோவில் எஃகு உற்பத்திக்கு 30 மில்லியன் டன் குறியீடு நிர்ணயிக்கப்பட்டது. ஊசாங் கூட்டத்தில் இது 20 மில்லியன் டன்னாக குறைக்கப்பட்டது. ஷாங்கை கூட்டம் அதை 16.5 மில்லியன் டன்களாக குறைத்தது. 1959 ஜுன் மாத வாக்கில் அது மீண்டும் 13 மில்லியன்களாகக் குறைக்கப்பட்டது. நம்மோடு கருத்து மாறுபாடு கொண்டவர்கள் இவையாவற்றையும் பயன்படுத்திக் கொண்டனர். ஆனால் மத்தியக் கமிட்டி 'இடது' போக்கை எதிர்த்த போது அவர்கள் எவ்வித ஆட்சேபணைகளையும் எழுப்பவில்லை. அதே போல் அவர்கள் செங்சௌ மாநாட்டிலும், ஊசாங் மாநாட்டிலும், பீக்கிங் மாநாட்டிலும் அல்லது ஷாங்கை மாநாட்டிலும் கூட எழுப்பவில்லை. 'இடது' போக்கு முழுமையாக ஒழிக்கப்பட்டு இலக்குகள் நிச்சயிக்கப்படும் வரை அவர்கள் காத்திருந்தனர். மேற்கொண்டு 'இடது'களை எதிர்ப்பதற்கு வலதுகளை எதிர்ப்பதும் அவசியமாகியது. லூஷான் மாநாட்டில் வலதுகளை எதிர்ப்பது நமக்கு அவசிமயமான போது அவர்கள் 'இடது'களுக்கு எதிராக வெளிப்பட்டனர்.[4]

இவையாவும் நமது உலகில் அமைதி என்பது வெகுதூரத்தில் உள்ளது என்பதையும், பொதுவழி இன்னும் நிச்சயமாக உறுதிப்படுத்தப்படவில்லை என்பதையும் காட்டுகின்றன. இப்பொழுது நாம் லூஷான் மாநாடு மற்றும் பல கடினமான திடீர் திருப்பங்கள் நிறைந்த காலகட்டத்தைக் கடந்து வந்துள்ளோம். பொதுவழி ஒப்பீட்டளவில் உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. ஆனால் ''விஷயங்கள் மும்மூன்றாக வருகின்றன''. எனவே நாம் திடீர் திருப்பங்கள் நிறைந்த மூன்றாவது காலகட்டத்திற்கு நம்மைத் தயார் படுத்திக் கொள்ள வேண்டும். அவ்வாறாயின், நமது வழி மேலும் உறுதிப்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கலாம். செகியாங் மாநிலக் கமிட்டியின் தகவல்கள்படி ''சமன்படுத்தலும்'' ''தாறுமாறான முறையில் சொத்துக்களை மாற்றுவதும்'' சில

---

* *1967 பதிப்பில் 12 சதவீதம்*

கம்யூன்களில் சமீப காலத்தில் மீண்டும் தலை தூக்கியுள்ளன. அதி தீவிர கம்யூனிஸ்டு காற்று மீண்டும் வீசக் கூடும்!

''துணிச்சலான முன்னேற்றங்களுக்கு'' எதிரான இயக்கங் களின் திடீர் திருப்பங்கள் நிறைந்த காலகட்டத்தில், 1956-ம் ஆண்டு போலந்து மற்றும் ஹங்கேரி சம்பவங்கள் நடைபெற்றன. அப்போது உலகம் ரசியாவுக்கு எதிராக திரும்பியது. 1958ம் ஆண்டு திடீர் திருப்பங்களின்போது உலகம் நமக்கு எதிராகத் திரும்பியது.

1957-ல் ஒன்றும், லூஷானில் ஒன்றுமாக இரண்டு சீர் செய் இயக்கங்களும் வலதுசாரி போக்குக்கு எதிரான இயக்கமும், முதலாளித்துவ சித்தாந்தத்தின் பாதிப்புகள் மற்றும் முதலாளித்துவ செல்வாக்குகளின் மிச்ச சொச்சங்களை ஒப்பீட்டளவில் முழுமை யான விமர்சனத்திற்கு உட்படுத்தி, மக்களை ஆபத்திலிருந்து விடு விக்க உதவின. அச்சமயத்தில் மா-அன்-ஷான் இரும்பு மற்றும் எஃகு ஆலை அமைப்புமுறை* என்று சொல்லப்படுகின்றவை[5] உட் பட பல மூட நம்பிக்கைகளை அடித்து வீழ்த்தினோம்.

சென்ற காலத்தில் ஒரு சோசலிசப் புரட்சியை எவ்வாறு நடத்திச் செல்வது என்பது பற்றி நமக்குத் தெரியாது. கூட்டுறவு களும், பொது-தனியார் கூட்டு நிர்வாகங்களும் ஏற்படுத்தப்பட்ட பிறகு பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு விடும் என்று நாம் கருதினோம். முதலாளித்துவ வலது சாரிகளின் காட்டுமிராண்டித் தனமான தாக்குதல்கள் காரணமாக நாம் சோசலிசப் புரட்சியை அரசியல் மற்றும் சித்தாந்த வழியில் முன்வைத்தோம். உண்மையில், லூஷான் மாநாடு இந்த புரட்சியை முன்னெடுத்துச் சென்றது; அது ஒரு கூர்மையான புரட்சியாக இருந்தது. லூஷானில் வலது சந்தர்ப்பவாத வழியை நாம் முறியடிக்காமல் இருந்திருந்தால் அது மிகவும் மோசமானதாக இருந்திருக்கும்.

## 6. ஏகாதிபத்திய நாடுகளுக்கிடையிலான முரண்பாடுகளும் இதர விசயங்களும்

ஏகாதிபத்தியங்களுக்கிடையிலான போராட்டங்களை ஒரு முக்கிய விசயமாகக் காணவேண்டும். அவற்றை லெனினும்

* *''ஒரு பிரதான ரசிய ஆலையில் இருந்த சர்வாதிகாரச் சிரமைப்பு முறை''—1967 பதிப்பில் உள்ள குறிப்பு*

ஸ்டாலினும் இவ்வாறுதான் கண்டனர்; அவற்றை புரட்சியின் மறைமுகமான சேமிப்பு (Reserve) சக்தி என்று அழைத்தனர். இந்த சாதகமான சூழ்நிலைமைகள் சீனாவில் புரட்சிகர தளப் பிரதேசங்கள் நீடிப்பதற்கு உதவின. சென்ற காலத்தில் நிலப்பிரபு மற்றும் தரகு வர்க்கத்தின் பல்வேறு குழுக்களிடையே முரண்பாடுகள் நிலவின. இந்த உள்நாட்டு முரண்பாடுகளின் பின்னணியில் ஏகாதிபத்திய நாடுகளுக்கிடையிலான முரண்பாடுகள் இருந்தன. இந்த முரண்பாடுகளின் காரணமாக, இந்த முரண்பாடுகளை நாம் சரியாகப் பயன்படுத்திக் கொண்டிருந்தவரை, ஒரு குறிப்பிட்ட சமயத்தில் அனைத்து எதிரிகளுக்குப் பதிலாக ஒரு சில எதிரிகள் மட்டுமே நம்முடன் நேரடியாக யுத்தத்தில் ஈடுபட்டு வந்தனர். அத்துடன், வழக்கமாக நமக்கு ஓய்வு எடுத்துக்கொள்ளவும் மறு ஒழுங்கமைப்பு செய்து கொள்ளவும் நேரம் கிடைத்தது.

அக்டோபர் புரட்சி உறுதிப்படுத்தப்படுவதற்கு ஒரு முக்கியக் காரணம் ஏகாதிபத்தியங்களுக்கு இடையிலான முரண்பாடுகளே ஆகும். அந்த சமயத்தில் 14 நாடுகள் ஆக்கிரமிப்புப் படைகளை அனுப்பின. ஆனால் தனிப்பட்ட முறையில் எந்த நாடும் பெருமளவில் அனுப்பவில்லை. மேலும் அவர்களுடைய நோக்கங்கள் ஒருங்கிணைக்கப்படவில்லை. அவர்கள் சூழ்ச்சிகளில் ஈடுபட்டிருந்தனர். கொரிய யுத்தத்தின் போது அமெரிக்காவின் நோக்கங்கள் அதன் நேச நாடுகளின் நோக்கங்களுடன் ஒருங்கிணைக்கப் பட்டிருக்கவில்லை. யுத்தம் மிகப் பெரிய அளவில் நடத்தப்படவில்லை. அமெரிக்கா அதன் போக்கை நிர்ணயிக்க முடியவில்லை என்பது மட்டுமின்றி பிரான்சும், பிரிட்டனும் அதில் அதிக ஆர்வம் காட்டவில்லை.

சர்வதேச ரீதியாக இப்போது முதலாளி வர்க்கத்தினர் மிகவும் கலக்கமடைந்துள்ளனர், புல்லை அசைக்கும் காற்றைக் கண்டு கூடப் பயப்படுகின்றனர். அவர்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் உள்ளனர்; ஆனால் அவர்கள் ஒன்றுபட்டிருக்கவில்லை.

இரண்டாம் உலகப் போரிலிருந்து முதலாளித்துவ சமுதாயத்தில் நிலவி வரும் பொருளாதார நெருக்கடி மார்க்ஸ் காலத்தில் நிலவியதிலிருந்து வேறுபட்டதாகும். பொதுவாகக் கூறுமிடத்து, அவை சாதாரணமாக ஏழு, எட்டு, அல்லது பத்து வருடங்களுக்கு ஒரு முறை வந்து கொண்டிருந்தன. இரண்டாம் உலக யுத்தத்திற்கும் 1959 ஆம் வருடத்திற்கும் இடைப்பட்ட பதினான்கு ஆண்டுகளில் அவை மூன்று முறை ஏற்பட்டன.

முதல் உலக் யுத்தத்திற்கு பிறகு முதலாளித்துவம் ஒப்பீட்டள வில் இன்னும் உறுதியாக இருந்த கால கட்டத்தைவிட, ரசியா வைத் தவிர மற்ற இடங்களில் புரட்சி தோல்வியுற்றிருந்த கால கட்டத்தை விட, தற்போது சர்வதேச நிலைமை மிக அதிகப் பதட்டமாக இருக்கிறது. முதல் உலக யுத்தத்திற்குப் பின் இங்கிலாந்தும், பிரான்சும் உயர்ந்த மனவெழுச்சி பெற்றிருந்தன. ரசியாவைக் கண்டு பல்வேறு நாடுகளின் தேசிய முதலாளி வர்க்கத் தினரும் அச்சப்படவில்லை. ஜெர்மனியின் காலனிகள் பறிக்கப் பட்டது தவிர ஏகாதிபத்திய காலனிய முறை இன்னும் அப்படியே இருந்தது. இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிறகு தோற்கடிக் கப்பட்ட மூன்று ஏகாதிபத்தியங்களும் வீழ்ச்சியுற்றன. இங்கிலாந்தும் பிரான்சும் பலவீனமடைந்து சரிவடைந்து வந்தன. சோசலிசப் புரட்சி பத்துக்கும் மேற்பட்ட நாடுகளில் வெற்றி பெற்றது. காலனிய முறை நொறுங்கிக் கொண்டிருந்தது. முதலாளித்துவ உலகம் முதல் உலக யுத்தத்திற்கு பிறகு பெற்றிருந்த ஒப்பீட்டள விலான ஸ்திரத்தன்மையை மீண்டும் எப்போதுமே பெற முடியாது.

## 7. சீனாவின் தொழிற் புரட்சி மிகத் துரிதமானதாக இருக்க முடியும்

''சீனா மிக துரிதமான தொழில் வளர்ச்சியுள்ள நாடுகளில் ஒன்று'' என்று அங்கீகரிப்பவர்களும் மேற்கத்திய முதலாளித்துவ நாடுகளில் உண்டு. (அமெரிக்காவின் ராஜ தந்திரக் கொள்கை பற்றிய அமெரிக்க கான்லோன் அறிக்கை இதைக் குறிப்பிடுகிறது)

தொழிற் புரட்சியை நிறைவேற்றிய பல நாடுகள் உள்ளன. இதற்கு முந்தைய தேசிய தொழிற் புரட்சிகள் அனைத்துடனும் ஒப்பிடும்போது சீனாவின் தொழிற்புரட்சி மிகத் துரிதமான ஒன்றாக இருக்கும் என்று கூறலாம்.

ஏன்? என்பதுதான் கேள்வி. பிரதான காரணங்களில் ஒன்று நமது சோசலிசப் புரட்சி ஓரளவு முழுமையாக நிறைவேற்றப்பட் டிருக்கிறது என்பதாகும். நாம் முதலாளிகளுக்கு எதிரான புரட்சியை முழுமையாக செய்து முடித்தோம், முதலாளித்துவ செல்வாக்குகளை ஒழிக்க நம்மால் அதிகபட்சம் முடிந்ததை செய் துள்ளோம். மூட நம்பிக்கைகளை அடித்து வீழ்த்தினோம்; மக்கள்

அனைத்துத் துறைகளிலும் முழுமையான விடுதலை அடைவதற்கு அவர்களுக்கு விடாமுயற்சியுடன் உதவி ஊக்குவித்தோம்.

## 8. மக்கட் தொகை*

அதிக மக்கட் தொகைப் பிரச்சினையைத் தீர்ப்பதில் கிராமப் புறத்து மக்கட் தொகைதான் பெரிய பிரச்சினையாக உள்ளது; இதன் தீர்வு பரந்து விரிந்த உற்பத்தி வளர்ச்சியைக் கோருகிறது. சீனாவில் 500 மில்லியனுக்கு மேற்பட்ட மக்கள் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர். ஆனால், அவர்கள் ஆண்டு முழுவதும் கடுமையாக உழைத்தாலும் வயிறு நிறைய உண்பதில்லை. இது மிகவும் அநியாயமானது. அமெரிக்காவில் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள மக்கட் தொகை 13 சதவீதமாகும்; ஒவ்வொரு நபரும் சராசரி 2000 கேட்டீஸ்[6] (சுமார் 2200 பவுண்டு) தானியம் பெறுகின்றனர். நம்மிடம் அந்த அளவுக்கு இல்லை. கிராமப்புற மக்கட் தொகையைக் குறைக்க நாம் என்ன செய்ய வேண்டும்? அவர்கள் நகரங்களுக்கு வந்து நெரிசல் ஏற்படுத்தக் கூடாது என்று நாம் கருதினால், நாம் கிராமப்புறங்களில் பெருமளவில் தொழிற்சாலைகளை உருவாக்கி விவசாயிகளை அவர்கள் இருக்கும் இடத்திலேயே தொழிலாளர்களாக மாற்றவேண்டும். இவை எல்லாம் நாம் கிராமப் புறங்களில் உள்ள வாழ்க்கை நிலைமைகள் நகர்ப்புறங்களில் உள்ளதைவிட கீழே சரிவதை விரும்புகிறோமா, இரண்டையும் கிட்டத்தட்ட சமநிலையில் பாதுகாக்க விரும்புகிறோமா அல்லது கிராமப்புற நிலைமையை நகர்ப்புற நிலைமையைவிடச் சற்று மேம்பட்ட நிலையில் வைக்க விரும்புகிறோமா என்ற ஒரு பிரதான கொள்கைப் பிரச்சினைக்கு இட்டுச் செல்கின்றன. ஒவ்வொரு கம்யூனுக்கும் அதற்கு சொந்தமான பொருளாதார மையமும், சொந்த அறிவாளிகளைப் பயிற்றுவிப்பதற்கு அதற்கே சொந்தமான உயர்நிலைப் பள்ளிகளும் இருக்க வேண்டும். கிராமப்புற மக்கட் தொகைப் பிரச்சினையை எதார்த்தமாகவும் உண்மையாகவும் தீர்க்க இதைத் தவிர வேறு எந்த வழியும் இல்லை. ●

---

* *இப்பகுதி 1969 பதிப்பில் மட்டுமே உள்ளது.*

# “ரசியாவில் சோசலிசத்தின் பொருளாதாரப் பிரச்சினைகள்” என்ற நூலைப் பற்றிய விமர்சன உரை (நவம்பர் 1958)[1]

மாநிலக் கமிட்டிகளும், பிராந்தியக் கமிட்டிகளும் இந்நூலை ஆழ்ந்து படிக்க வேண்டும். கடந்த காலத்தில் எவ்வித ஆழ்ந்த கருத்துப் பதிவும் பெறாமல் இதனை அனைவரும் படித்தனர். இதை சீனத்தின் யதார்த்தமான சூழ்நிலைமைகளோடு பொருத்திப் பார்த்துப் படிக்க வேண்டும். ஸ்டாலினே போதுமான அளவு தெளிவு படுத்தாத சில பகுதிகள் இதில் இருந்த போதிலும், முதல் மூன்று அத்தியாயங்களும் கவனத்தில் கொள்ளத் தக்க, சரியான பல விஷயங்களைக் கொண்டிருக்கின்றன. எடுத்துக் காட்டாக, முதல் அத்தியாயத்தில் புறநிலை விதிகளைப் பற்றியும், பொருளாதாரத்தை எவ்வாறு திட்டமிடுவது என்பது பற்றியும் ஒரு சில விசயங்களை மட்டுமே குறிப்பிடுகிறார்; தனது கருத்துக்கள் முழுவதையும் விளக்கமாகக் கூறவில்லை. ஒரு வேளை சோவியத் பொருளாதாரத் திட்டமிடல் புறநிலை விதிகளை ஏற்கெனவே பிரதிபலிக்கிறது என்று அவர் கருதியிருக்கலாம். கனரகத் தொழில், மென்ரகத் தொழில், விவசாயம்,

ஆகியவை பற்றிய பிரச்சினைகளில், ரசியா பிந்திய இரண்டிற்கும் போதுமான அழுத்தம் கொடுக்கவில்லை; இதன் விளைவாகப் பல இழப்புகள் நேர்ந்தன. அத்துடன், மக்களின் உடனடி மற்றும் நீண்டகால நலன்களை இணைக்கும் பணியை அவர்கள் சிறப்பாகச் செய்யவில்லை. அவர்கள் பிரதானமாக ஒற்றைக் காலில் நடந்தனர். திட்டமிடுதலை ஒப்பிடும் போது, நம்மில் யார் சிறப்பாகத் தகவமைக்கப்பட்ட ''திட்டமிட்ட விகிதாச் சார வளர்ச்சியை'' பெற்றிருந்தனர்? இன்னொரு விசயம்: ஸ்டாலின் தொழில் நுட்பத்தையும், தொழில் நுட்ப பணியாளர் களையும் மட்டுமே வலியுறுத்தினார். அவருக்கு தொழில் நுட்ப மும், தொழில் நுட்பப்பணியாளர்களும் மட்டுமே தேவைப்பட்டனர். அரசியலோ மக்கள் திரளோ அல்ல. இதுவும் கூட ஒற்றைக் காலில் நடப்பது தான். கனரகத் தொழிலுக்கு கவனம் செலுத்தி மென்ரகத் தொழிலுக்கு கவனம் செலுத்தாததனால், அவர்கள் தொழில் துறையில் ஒற்றைக் காலில் நடக்கின்றனர். மேலும், அவர்கள் கனரகத் தொழிலின் துறைகளுக்கிடையிலான உறவு களில் உள்ள முரண்பாடுகளின் பிரதான அம்சங்களை சுட்டிக் காட்டவில்லை. எஃகு தான் அடித்தளம் என்றும் இயந்திரங்கள் தான் இதயமும் ஆன்மாவும் என்றும் வலியுறுத்தி கனரகத் தொழிலின் முக்கியத்துவத்தை அவர்கள் மிகைப்படுத்தி விட்டார் கள். நமது நிலைப்பாடு விவசாயத்திற்கு தானியமும், தொழிலுக்கு எஃகும் ஆதாரமாகும் என்பதாகும்; அவ்வாறு எஃகு ஆதாரமானது என்று எடுத்துக் கொண்டால் கச்சாப் பொருட்கள் நம்மிடம் உள்ள போது இயந்திரத் தொழிலும் உருவாகிவிடும் என்று பொருள். முதல் அத்தியாயத்தில் ஸ்டாலின் கேள்விகளை எழுப்பினார்: அவர் புறநிலை விதிகளைப் பற்றிய ஆலோசனைகளைச் சொன்னார். ஆனால் திருப்திகரமான விடை அளிக்க தவறிவிட்டார்.

அவர் இரண்டாம் அத்தியாயத்தில் பண்டங்களைப் பற்றியும், மூன்றாம் அத்தியாயத்தில் மதிப்பு விதி பற்றியும் விவாதிக்கிறார். ஒப்பீட்டளவில் கூறுவதெனில், அவர் வெளிப்படுத்தியிருக்கும் பல கண்ணோட்டங்களை நான் ஆதரிக்கிறேன். உற்பத்தியை இரண்டு பிரதான துறைகளாகப் பிரிப்பது, உற்பத்தி சாதனங்கள் பண்டங் கள் அல்ல என்று கூறுவது— இவ் விசயங்கள் ஆய்வு செய்யப்பட வேண்டியவை. சீன விவசாயத்தில் இன்றும் பல உற்பத்தி சாதனங்கள் பண்டங்களாக இருக்கின்றன. எனது நோக்கில்,

பின்னிணைப்பாக வைக்கப்பட்டுள்ள மூன்று கடிதங்களில்* கடைசி கடிதம் முற்றிலும் தவறானது. அக்கடிதம் ஒரு ஆழ்ந்த மன அமைதியின்மையை வெளிப்படுத்துகிறது; அது விவசாயிகள் விவசாய இயந்திரங்களை விட்டொழிப்பார்கள் என்று நம்பமுடியாது, மாறாக அவர்கள் அதை விடாது பற்றிக் கொள்வார்கள் என்ற எண்ணத்தை வெளிப்படுத்துகிறது. ஸ்டாலின், ஒருபுறம் உற்பத்தி சாதனங்கள் அரசின் உடமை என்று கூறுகிறார். மறுபுறம், விவசாயிகளுக்கு அவற்றை வாங்கும் சக்தி இல்லை என்று கூறுகிறார். உண்மை என்னவெனில், அவர் தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்கிறார். அரசு விவசாயிகளை நெகிழ்வற்ற முறையில் மிக மிக இறுக்கமாகக் கட்டுப்படுத்தியது. இரண்டு மாற்றங்களுக்கும் (transition) சரியான வழிமுறைகளைக் கண்டறிய ஸ்டாலின் தவறிவிட்டார்; அது அவருக்கு எரிச்சலூட்டும் பணியாக இருந்தது.

முதலாளித்துவம் தனக்குப் பின்னே பண்ட வடிவத்தை விட்டுச் செல்கிறது, அதை நாம் தற்போதைக்கு இன்னும் கைவிடாது வைத்திருக்க வேண்டியுள்ளது. மதிப்பின் அடிப்படையிலான பண்டப் பரிவர்த்தனை விதிகள் நமது உற்பத்தியை ஒழுங்கு படுத்தும் பாத்திரமாற்றவில்லை. இப் பாத்திரத்தை திட்டமிடுதல், திட்டமிடுதலின்கீழ் மாபெரும் பாய்ச்சல், அரசியலை ஆணையில் வைப்பது ஆகியவை ஆற்றுகின்றன. ஸ்டாலின் உற்பத்தி உறவுகளைப் பற்றி மட்டுமே குறிப்பிடுகிறார்; மேல் கட்டுமானத்தைப் பற்றியோ அல்லது மேல் கட்டுமானத்திற்கும் பொருளாதார அடித்தளத்திற்கும் இடையிலான உறவு பற்றியோ குறிப்பிடவில்லை. சீனக் கட்சி ஊழியர்கள் உற்பத்தியில் பங்கு பெறுகிறார்கள்; தொழிலாளர்கள் நிர்வாகத்தில் பங்கு பெறுகிறார்கள். கட்சி ஊழியர்களை பக்குவப்படுத்தும் பொருட்டு கீழ் மட்டத்திற்கு அனுப்புவது, பழைய விதி முறைகளைக் கைவிடுவது—இவையாவும் மேல் கட்டுமானத்துடனும், சித்தாந்தத்துடனும் சம்பந்தப்பட்டவை. ஸ்டாலின் பொருளாதாரத்தை மட்டுமே குறிப்பிடுகிறார், அரசியலைக் குறிப்பிடவில்லை. அவர் தன்னலம் கருதா உழைப்பைப் பற்றி பேசலாம்; ஆனால் உண்மையில் ஒரு

---

* *தோழர்கள் ஏ. வி. சனினா, வி. ஜி. வெண்செர் ஆகியோருக்கு எழுதிய கடிதங்கள் நூலில் பின் இணைப்பாக சேர்க்கப்பட்டுள்ளன.*

மணி நேர கூடுதல் உழைப்பும் கூட வலிந்து பெறப்பட்டதாகும். தன்னல மின்மை என்பதே இங்கு இல்லை. மக்களின் பாத்திரம், உழைப்பாளர்களின் பாத்திரம் — இவற்றைப் பற்றிக் குறிப்பிடப் படவில்லை. கம்யூனிச இயக்கம் இல்லாதிருந்தால் கம்யூனிசத்தை நோக்கி மாறிச் செல்வதைப் பற்றி கற்பனை செய்து பார்ப்பது கூடக் கடினம். ''அனைத்து மக்களும் எனக்காக நான் அனைத்து மக்களுக்காக'' என்பது எதையும் அர்த்தப் படுத்துவதில்லை. இது ஒவ்வொன்றையும் தனது என்பதுடன் இணைப்பதில் போய் முடிகிறது. சிலர் இதை மார்க்ஸ் கூறியதாகக் கூறுகின்றனர். அவர் அவ்வாறு கூறியிருந்தால் அதை நாம் பிரச்சாரம் செய்யாமல் இருப்போமாக. ''அனைத்து மக்களும் எனக்காக'' என்பதன் பொருள் எல்லோரும் எனக்காக, தனிமனிதனுக்காக என்பதே. ''நான் எல்லோருக்கும்''. சரி தான், நீ எத்தனை பேருக்காக இருக்க முடியும்?

முதலாளிய உரிமைகள் முதலாளிய சட்டமாகவும் கல்வியாகவும் வெளிப்படுகின்றன. நாம் முதலாளித்துவ உரிமைகள் பற்றிய கோட்பாட்டின் ஒரு பகுதியாகிய, பிரபுத்துவ தோரணை, மூன்று பண்புகள் (அதிகாரத்துவம், குறுங்குழு வாதம், அகநிலைப் பார்வை), ஐந்து பண்புகள் (அதிகார மனோபாவம், செருக்கு, அக்கறையின்மை, ஆடம்பரம், ஊதாரித்தனம்) ஆகியவற்றை ஒழிக்க விரும்புகிறோம். ஆனால் அதே சமயம், இன்னொருபுறம் பண்ட சுழற்சி, பண்ட வடிவம், மதிப்பு விதி ஆகியவை முதலாளிய வகையினமாகும் அவற்றைத் திடீர் என்று ஒட்டுமொத்தமாக ஒழித்து விட முடியாது. இப்போது நாம் முதலாளித்துவ உரிமைகளைப் பற்றிய கோட்பாடுகளை ஒட்டுமொத்தமாக ஒழிக்க பிரச்சாரம் செய்வது பொருத்தமானதாக இருக்காது என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

சோசலிச சமுதாயத்தில் நிலப்பிரபுக்கள், பணக்கார விவசாயிகள், வலதுசாரிகள் ஆகிய ஒரு சிலர்தான் முதலாளித்துவத்திற்கு ஆதரவாகவும் அதற்கு பரிந்து பேசக்கூடியவர்களாகவும் உள்ளனர். ஆனால் மிகப் பெரும்பான்மையானோர் கம்யூனிசத்திற்கு செல்ல வேண்டும் என்று சிந்திக்கிறார்கள். இருப்பினும், இதை படிப்படியாகத்தான் செய்ய வேண்டும். நீங்கள் ஒரே அடியில் சொர்க்கத்தை அடைந்து விட முடியாது. மக்கள் கம்யூன்களை எடுத்துக் கொள்ளுங்கள்: ஒரு புறம் அவை தன்னிறைவு பெற்ற உற்பத்தியையும், மறுபுறம் பண்ட மாற்றையும் வளர்க்க

வேண்டியுள்ளது. நாம் பண்ட மாற்றையும் மதிப்பு விதியையும், உற்பத்தியை அதிகரிப்பதற்கும் மாற்றத்தை எளிதாக்குவதற்கு மான கருவிகளாகப் பயன்படுத்துகிறோம். நமது நாடு பண்ட உற்பத்தியில் மிகவும் பின்தங்கியுள்ளது. கடந்த ஆண்டு நாம் 3.7 டிரில்லியன் கேட்டி உணவு தானியங்களை உற்பத்தி செய்தோம். அதில் சுமார் 800 அல்லது 900 பில்லியன் கேட்டி பண்டதானியமாகும். தானியங்களைத் தவிர பருத்தி,சணல் போன்ற தொழிற்துறை பயிர்களின் உற்பத்தியிலும் பின் தங்கி உள்ளோம். எனவே, நமக்கு இந்தக் கட்ட வளர்ச்சி (பண்ட உற்பத்தி) தேவையாக உள்ளது. தற்போது பல மாவட்டங்களில் உணவு இலவசமாக கொடுக்கப்படுகிறது, ஆனால் அவர்களால் கூலியைக் கொடுக்க முடிவதில்லை. ஹோப்பேயில் இப்படிப்பட்ட மூன்று மாவட்டங்கள் உள்ளன. மற்றொரு மாவட்டத்தில் கூலி கொடுக்க முடிகிறது, ஆனால் அது அதிகமாக இல்லை; மூன்று அல்லது ஐந்து யுவான்கள்தான் தரப்படுகின்றன. எனவே, நாம் இன்னும் உற்பத்தியை அதிகரிக்க வேண்டியுள்ளது; உணவு தானியங்களைத் தவிர விற்பனை செய்யத் தக்க இதர பொருட்களையும் உற்பத்தி செய்ய வேண்டியுள்ளது. சியான் விவசாய மாநாட்டில் இவ்விசயம் போதுமான அளவுக்கு பரிசீலிக்கப்பட வில்லை. ஒட்டு மொத்தத்தில், நமது தேசம் வர்த்தகத்தில் வளர்ச்சி குறைவானதாக உள்ளது, இருப்பினும் பல விசயங்களில் நாம் சோசலிச கட்டத்தில் நுழைந்து விட்டோம். முதலாளிய உரிமைகளில் ஒரு பகுதியை அழித்து அகற்ற வேண்டும், ஆனால் பண்ட உற்பத்தி பரிவர்த்தனை ஆகியவற்றை தொடர்ந்து நீடிக்க வேண்டும். இப்போது கம்யூனிசம் எவ்வளவு சீக்கிரம் வருகிறதோ அவ்வளவு நல்லது என்று கருதும் மனப்போக்கு உள்ளது. வெறும் மூன்று அல்லது ஐந்து ஆண்டுகளில் இம்மாற்றத்தைச் சாதிக்க முடியும் என்று எண்ணுகின்றனர். ஷான்டுங்கிலுள்ள ஃபான் மாவட்டத்தில் நான்கு ஆண்டுகள் என்பதும் கூட கொஞ்சம் மெல்லச் செல்வதே என்று தெரிவிக்கப்பட்டது.

தற்போது பொருளியலை (Economics) விரும்பாத சில பொருளியலாளர்கள் உள்ளனர் — யாரோஷென்கோ* அவர்களில் ஒருவர் தற்போதும், எதிர்காலத்தில் கொஞ்ச காலம் வரையிலும்

---

* *ஸ்டாலினுடைய இரண்டாவது கடிதத்தைப் பெற்றவர்.* **பொருளாதாரப் பிரச்சினைகள்** *நூலில் இவர் கடிதம் சேர்க்கப்பட்டுள்ளது.*

நாம் கம்யூன்களுக்கான ஒதுக்கீட்டையும், வழங்கீட்டையும் அதிகப் படுத்தியாக வேண்டும். பண்ட உற்பத்தியை விரிவுபடுத்த வேண்டும். இல்லையெனில், நம்மால் கூலியைக் கொடுக்கவோ, அல்லது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவோ இயலாது. நமது தோழர் களில் ஒரு சிலர், பண்டங்கள் மற்றும் பண்ட உற்பத்தி ஆகிய வற்றைத் தவறாகப் புரிந்து கொள்வது என்ற தவறிழைக்கின்ற னர்; முதலாளிய ஆட்சியை அவர்கள் ஒவ்வொரு நாளும் அழிக்க விரும்புகின்றனர்; எடுத்துக்காட்டாக, கூலி, படித்தரம் (grades) ஆகியவை இலவச விநியோக முறைக்கு தடையாக உள்ளன என்று அவர்கள் கூறுகின்றனர். 1953-ல் நாம் இலவச விநியோக முறையை கூலி முறையாக மாற்றினோம்.[2] இந்த அணுகுமுறை அடிப்படையில் சரியானதே. நாம் ஓரடி பின்னோக்கிச் செல்ல வேண்டியிருந்தது. காரணம் அங்கே ஒரு பிரச்சினை இருந்தது; படித்தரம் விசயத்திலும் கூட நாம் ஓரடி பின்னோக்கிச் செல்ல வேண்டியிருந்தது. இதன் விளைவாக, இவ்விசயத்தைப் பற்றிப் பெரும் சர்ச்சை எழுந்தது. சீர்செய் காலகட்டத்திற்குப் பிறகு படித்தரங்கள் குறைக்கப்பட்டன. படித்தர முறை தந்தை-மகன் உறவு முறையாகும், பூனை-எலி உறவு முறையாகும். அதை ஒவ்வொரு நாளும் தாக்க வேண்டும். கட்சி ஊழியர்களை கீழ் மட்டங்களுக்கு அனுப்புவது, மாதிரி வயல்களை நடத்துவது[3] —இவைதான் படித்தர முறையை (grade system) மாற்றுவதற் கான வழிகள்; இல்லையெனில், மாபெரும் பாய்ச்சல் இல்லை!

நகர்ப்புற மக்கள் கம்யூன்களில் முதலாளிகளும் சேர்ந்து ஊழியர்களாகப் பணியாற்றலாம். ஆனால் அவர்கள் மீது முதலாளிய முத்திரை இருக்க வேண்டும். சோசலிசத்தையும் கம்யூனிசத்தையும் பொருத்த வரையில் சோசலிசக் கட்டுமானம் என்றால் என்ன? நாம் இரண்டு விசயங்களை எழுப்புகிறோம்.

1. சோசலிசக் கட்டுமானத்தின் ஒருமுகப் படுத்தப்பட்ட வெளிப் பாடு என்பது, சோசலிச உடைமையை, அனைத்தும் தழுவிய பொது மக்கள் உடைமையை* ஒரு யதார்த்த மாக்குவதாகும்.

2. சோசலிசத்தைக் கட்டியமைப்பது என்பதன் பொருள், கம்யூன் களின் கூட்டு உடைமையை பொது உடைமையாக மாற்றுவது

---

* *சீனத்தில், இது எல்லா மக்களினதுமான உடைமையை ஒத்தது.*

என்பதாகும். கம்யூன்களை முற்றிலும் பொது உடைமையாகக் கருதும் சில தோழர்கள் இரண்டு வகையான உடைமை முறைகளுக்கிடையிலான வேறுபாட்டை அங்கீகரிக்க மறுக்கின்றனர். யதார்த்தத்தில் இரண்டு விதமான அமைப்புகள் இருக்கின்றன, அன்ஷான் இரும்பு மற்றும் எஃகு தொழிற் சாலையைப் போன்ற பொது உடைமை ஒரு வகை; பெரிய கூட்டுடைமைக் கம்யூன்கள் மற்றொரு வகையாகும். இதை நாம் தோற்றுவிக்காவிடில், சோசலிசக் கட்டுமானத்தினால் என்ன பயன்? மூன்று நிபந்தனைகளைப் பற்றி ஸ்டாலின் குறிப்பிடும் போது இந்த வேறுபாடுகளைப் பற்றிக் குறிப்பிட்டார். பொருள் பொதிந்த இந்த மூன்று அடிப்படை நிபந்தனைகளைக் கீழ்க் கண்டவாறு தொகுத்துரைக்கலாம்: சமுதாய உற்பத்தியை அதிகரித்தல்; கூட்டு உடைமையை பொது உடைமையாக உயர்த்துதல்; பண்டப் பரிவர்த்தனையை உற்பத்தி பொருள் பரிவர்த்தனையாக மாற்றுதல், அதாவது பரிவர்த்தனை மதிப்பிலிருந்து பயன் மதிப்பிற்கு மாற்றுதல்.

சீனர்களாகிய நாம் மேற்குறிப்பிட்ட இரண்டு விசயங்களில் 1. கனரகத் தொழிலை வளர்ப்பதற்கு முன்னுரிமை அளிக்கும் அதே சமயம் தொழிலையும், விவசாயத்தையும் ஒரு சேர வளர்ப்பதன் மூலம் உற்பத்தியை அதிகரிக்கவும் முயன்று வருகிறோம். 2. சிறிய கூட்டு உடைமைகளை பொது உடைமையாகவும் பின்னர் அவற்றை அனைத்தும்தழுவிய பொது உடைமையாகவும் உயர்த்துவது. இந்த வேறுபாடுகளை (பல்வேறு வகை உடைமைகளை) காணத் தவறுபவர்கள், நாம் ஏற்கனவே பொது உடைமையை அடைந்து விட்டதாகக் கருதுகின்றனர் என்றே தோன்றுகிறது. இது தவறானது. ஸ்டாலின் மூன்று நிபந்தனைகளை முன்வைத்தபோது அனைத்து மக்களுக்குமான கல்வி, உடல் ஆரோக்கிய வளர்ச்சி, கலாச்சாரம் ஆகியவை பற்றி குறிப்பிட்டார். இதற்கு அவர் நான்கு நிலைமைகளை முன்வைத்தார்: (அ) நாள் ஒன்றுக்கு ஆறுமணி நேர வேலை. (ஆ) வேலையோடு தொழில் நுட்பக் கல்வியை இணைப்பது (இ) குடியிருப்பு நிலைமைகளை மேம்படுத்துவது (ஈ) ஊதியத்தை உயர்த்துவது. குறிப்பாக ஊதியத்தை உயர்த்துவதும் விலைவாசியை குறைப்பதும் இங்கு உதவிகரமானதே, ஆனால் இதில் அரசியல் காணப்படவில்லை.

இந்த நிபந்தனைகள் யாவும், அடிப்படையில் உற்பத்தியை அதிகரிப்பதற்கானவை. உற்பத்தி அபரிமிதமாக இருக்கும்போது

கூட்டு உடைமையை பொது உடைமையாக உயர்த்தும் பிரச்சினையை எளிதாகத் தீர்க்க முடியும். உற்பத்தியை அதிகரிக்க ''அதிகமாக! வேகமாக! சிறப்பாக! மேலும் சிக்கனமாக!'' ஆகியன நமக்குத் தேவை. இதற்கு, அரசியலை ஆணையில் வைப்பது, அக்கம் பக்கமாக நான்கு முன்னேற்றங்கள், சீர் செய் இயக்கங்கள், முதலாளித்துவ உரிமைகள் பற்றிய சித்தாந்தத்தைத் தகர்ப்பது ஆகியன நமக்குத் தேவைப் படுகின்றன. இவற்றுடன் மக்கள் கம்யூன்கள் இணைக்கப்படும் போது, ''அதிகமாக! வேகமாக! சிறப்பாக! மேலும் சிக்கனமாக!'' ஆகியவற்றைச் சாதிப்பது எளிதாகி விடுகிறது.

அனைத்தும் தழுவிய பொது உடைமை என்பதில் பொதிந்திருப்பது என்ன? அவை இரண்டு: 1. சமுதாயத்தின் உற்பத்திச் சாதனங்கள் யாவும் அனைத்து மக்களின் உடைமையாக இருப்பது. 2. சமுதாய உற்பத்தி முழுவதும் அனைத்து மக்களின் உடைமையாக இருப்பது.

மக்கள் கம்யூன்களின் குணாம்சம் என்னவெனில், தொழில் துறை, விவசாயம், ராணுவம், கல்வி, வாணிபம் ஆகியவற்றை நமது சமுதாயக் கட்டமைப்பின் அடிமட்டத்தில் ஒருங்கிணைப்பதாகும். தற்போது அதுவே அடிமட்ட நிர்வாக அமைப்பாக உள்ளது. மக்கள் படை அயல் நாட்டு அச்சுறுத்தல்களை, குறிப்பாக ஏகாதிபத்தியத்திடமிருந்து வரும் அச்சுறுத்தல்களை சமாளிக்கிறது. கம்யூன்கள் சோசலிச (தற்போதைய) உடைமையிலிருந்து அனைத்தும் தழுவிய பொது உடைமைக்கும், அனைத்தும் தழுவிய பொதுவுடைமையிலிருந்து கம்யூனிச உடைமைக்கும் ஆகிய இரண்டு மாற்றங்களையும் செயல்படுத்துவதற்கு மிகச் சிறப்பான அமைப்பு வடிவமாகும். எதிர்காலத்தில் மாற்றங்கள் நிறைவு பெற்ற பிறகு கம்யூனிச சமுதாயத்தை இயக்கும் அடிப்படை அமைப்பாக கம்யூன்கள் விளங்கும். ●

# ரசியாவில் சோசலிசத்தின் பொருளாதாரப் பிரச்சினைகள் என்ற ஸ்டாலினுடைய நூல் மீதான விமர்சனக் குறிப்புகள்

ஸ்டாலினுடைய நூல் தொடக்கம் முதல் இறுதி வரை மேல் கட்டுமானத்தைப் பற்றி எதுவுமே கூறவில்லை. அது மக்களுடன் சம்பந்தப்படவில்லை; அது பரிசீலிப்பது பொருட்களைப் பற்றியே—மக்களைப் பற்றி அல்ல. நுகர்வுப் பொருட்களை வழங்குவதற்காக உள்ள அமைப்பு பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்தக் கூடியதாக உள்ளதா, இல்லையா? அவர் குறைந்த பட்சம் இந்த விசயத்தையாவது பரிசீலித்திருக்கலாம். பண்ட உற்பத்தி முறையை மேற்கொள்வது சிறந்ததா அல்லது மேற்கொள்ளாமல் இருப்பது சிறந்ததா? ஒவ்வொருவரும் இதை ஆழ்ந்து ஆய்வு செய்ய வேண்டும். ஸ்டாலினுடைய கடைசிக் கடிதத்தில்* காணப் படும் கருத்துக்கள் கிட்டத்தட்ட முற்றிலும் தவறானதாகும். விவசாயிகள் மீது நம்பிக்கையின்மை அடிப்படைத் தவறாகும்.

---

* *தோழர்கள் ஏ. வி. சானினா மற்றும் வி. ஜி. வென்செர் ஆகியோருக்கு எழுதிய பதில் கடிதம்.*

முதலாவது, இரண்டாவது, மூன்றாவது அத்தியாயங்களின் சில பகுதிகள் சரியானவை; மற்ற பகுதிகள் மேலும் தெளிவு படுத்தப்பட்டிருக்க வேண்டும். எடுத்துக் காட்டாக, திட்டமிட்ட பொருளாதாரத்தைப் பற்றிய விவாதம் முழுமை பெறவில்லை. ரசியப் பொருளாதாரத்தின் வளர்ச்சி வீதம், முதலாளித்துவ பொருளாதார வளர்ச்சி வீதத்தைவிட வேகமானதாக இருந்த போதிலும் போதிய அளவு அதிகமானதாக இல்லை. விவசாயத்திற்கும் தொழில் துறைக்கும் இடையிலான உறவும், மென்ரக, கனரகத் தொழில்களுக்கு இடையிலான உறவும் தெளிவாக விளக்கப்படவில்லை.

அவர்களுக்குப் பல கடுமையான இழப்புகள் நேர்ந்திருப்பது போல் தோன்றுகிறது. நீண்டகால மற்றும் குறுகிய கால நலன் களுக்கிடையிலான உறவுகளில் கவனத்தை ஈர்க்கும் முன்னேற்றம் ஏதும் நிகழவில்லை. அவர்கள் ஒற்றைக் காலில் நடக்கின்றனர், நாம் இரண்டு கால்களில் நடக்கின்றோம். ''கம்யூனிஸ்டாய்'' இருப்பதைப் பற்றி பேசாமல் எப்போதும் ''நிபுணர்களைப்'' பற்றி மட்டுமே பேசுகிறார்கள். மக்களைப் பற்றி பேசாமல் எப்போதும் கட்சி ஊழியர்களைப் பற்றி மட்டுமே பேசுகிறார்கள். தொழில் நுட்பமும், கட்சி ஊழியர்களும் மட்டுமே எல்லாவற்றையும் தீர்மானித்து விடுவார்கள் என்று நம்புகின்றனர். இது ஒற்றைக் காலில் நடப்பதாகும். கனரகத் தொழிலைப் பொருத்தமட்டில் அவர்கள் பிரதான முரண்பாட்டைக் கண்டறியத் தவறி, எஃகை அடித்தளம் என்றும், இயந்திரங்களை இதயமும் ஆன்மாவும் என்றும் நிலக்கரியை உணவு என்றும்................. கூறி வருகின்றனர். நமக்கோ எஃகு தான் முக்கிய ஆதாரமும் தொழில் துறையின் பிரதான முரண்பாடும் ஆகும்; அதே சமயம் விவசாயத்தில் உணவு தானியங்கள்தான் ஆதாரம். மற்ற விசயங்கள் விகிதாச்சார ரீதியாக வளர்ச்சியடைகின்றன.

முதல் அத்தியாயத்தில் ஸ்டாலின் ஒரு நிகழ்வு முறையை முன்வைக்காமல், விதிகளைப் புரிந்து கொள்வது பற்றி விவாதிக்கிறார். பண்ட உற்பத்தியைப் பற்றியும், மதிப்பு விதிகளைப் பற்றியும் அவர் கொண்டிருக்கும் பல கண்ணோட்டங்களை நாமும் அங்கீகரிக்கிறோம்; ஆனால், அவற்றில் பல பிரச்சினைகளும் உள்ளன. பண்ட உற்பத்தியை உயிர்வாழ்வதற்கு அத்தியாவசிய மானவற்றை உற்பத்தி செய்வது என்ற அளவுக்கு கட்டுப்படுத்து வது என்பது உண்மையில் சந்தேகத்திற்கிடமானது. விவசாயிகள்

மீது நம்பிக்கையின்மை என்பது மூன்றாவது கடிதத்தின் அடிப் படைக் கண்ணோட்டமாகும். சாராம்சத்தில் ஸ்டாலின் கூட்டு உடைமையிலிருந்து பொதுவுடைமைக்கு மாறுவதற்கான ஒரு வழியைக் கண்டறியவில்லை. நாம் பண்ட உற்பத்தியையும், பரிவர்த்தனையையும் கைவிடாத வடிவங்களாக வைத்திருக்கும் அதே சமயம், மதிப்பு விதியைப் பொருத்தவரையில் திட்ட மிடுதலைப் பற்றியும், அரசியலை ஆணையில் வைப்பது பற்றியும் ஒரே நேரத்தில் பேசி ஆகவேண்டும். அவர்கள் உற்பத்தி உறவு களைப் பற்றி மட்டுமே பேசுகின்றனர்; மேல் கட்டுமானத்தைப் பற்றியோ, அரசியலைப் பற்றியோ மக்களின் பாத்திரம் பற்றியோ பேசுவதில்லை. ஒரு கம்யூனிச இயக்கம் இல்லாமல் கம்யூனிசத்தை அடைய முடியாது.*

1. மூலவாசகம்: இந்த தோழர்கள் .................. இது தெளிவாகத் தெரிகிறது .................., மனித சித்தத்திற்கு அப் பாற்பட்டு நடைபெறும் நிகழ்முறைகளை, அதாவது இயற்கையி லும் சமுதாயத்திலும் நடைபெறும் நிகழ்முறைகளைப் பிரதிபலிக் கும் விஞ்ஞான விதிகளை, மனித சித்தத்தினால் உருவாக்கப்படும், வெறும் நீதிமன்ற நடவடிக்கைகளில் மட்டுமே செல்லுபடியாகக் கூடிய அரசாங்கத்தால் பிறப்பிக்கப்படும் சட்டங்களோடு போட்டுக் குழப்பிக் கொள்கிறார்கள். ஆனால் அவற்றை குழப்பக்கூடாது.

1. விமர்சனக் குறிப்பு: இக் கோட்பாடு அடிப்படையில் சரி யானது தான், ஆனால் இரண்டு விசயங்கள் தவறாக இருக் கின்றன: முதலாவதாக, கட்சி மற்றும் மக்கள் திரளின் உணர்வுப்

---

* இந்த முதல் நான்கு பத்திகளும் மொத்த நூலைப் பற்றி விமர்சனம் செய்கின்றன. அதைத் தொடர்ந்து குறிப்பான பகுதிகள் பற்றிப் பல விமர்சன குறிப்புகள் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு விமர்சனத்திற் கும் முன்பாக ஸ்டாலின் நூலின் மூலவாசகங்கள் கொடுக் கப்பட்டுள்ளன. (விமர்சனக் குறிப்புகள் வி. கு. என்றும், மூல வாசகம் மூ. வா. என்றும் குறிப்பிடப் பட்டுள்ளது.

— தமிழ்ப் பதிப்பாளர்) இவை ஜென்-மின்-சு-பான்-ஷேயின் மூன்றாவது பதிப்பிற்காக 1938 ஜனவரியில் மொழி பெயர்க்கப் பட்டுள்ளபடி கொடுக்கப் பட்டுள்ளது. நாம் அயல் மொழிப் பதிப்பு அச்சகம் 1972-ல் பீக்கிங்கில் வெளியிட்ட ஆங்கிலப் பதிப்பைப் பயன்படுத்துகிறோம்.

பூர்வமான செயல்பாடுகளைப் பற்றிப் போதுமான அளவுக்கு விளக்கவில்லை. இரண்டாவதாக, அரசாங்கத்தின் ஆணைகளைச் சரியானவை ஆக்குவது, அவை உழைக்கும் வர்க்கத்தின் சித்தத்தி லிருந்து தோன்றுகின்றன என்பதினால் மட்டுமல்ல, அவை புற நிலைப் பொருளாதார விதிகளின் தவிர்க்கவியலாத தன்மைகளை அப்படியே பிரதிபலிக்கின்றன என்பதினாலும்தான் என்ற கருத்தை விளக்கத் தவறுகிறது. இதனால் இது போதுமான அளவு முழுமை யானதாக இல்லை.

2. மூ.வா : வானியல், புவியியல் மற்றும் இது போன்ற நிகழ்முறைகளை, அவற்றின் வளர்ச்சி விதிகளைப் பற்றி அறிந் திருந்த போதிலும், அவற்றின் மீது செல்வாக்கு செலுத்த மனிதன் உண்மையிலேயே சக்தியற்றவனாக இருக்கிறான் என்பதை விட்டுவிட்டு....

2. வி.கு. : இந்த வாதம் தவறானது. மனித அறிவுக்கும் இயற்கையை உருமாற்றுவதற்கான அவனுடைய திறனுக்கும் வரம்புகள் கிடையாது. ஸ்டாலின் இவற்றை வளர்ச்சி பூர்வமாகப் பரிசீலிக்கவில்லை. இப்போது செய்ய முடியாதவை ஒரு வேளை எதிர்காலத்தில் செய்யக் கூடியவையாகலாம்.

3. மூ.வா. : முதலாளித்துவ கால கட்டத்திலாயினும் சரி, சோசலிச கால கட்டத்திலாயினும் சரி — இதே விசயம் பொருளாதார வளர்ச்சி விதிகளுக்கும், அரசியல் பொருளாதார விதிகளுக்கும் பொருந்தும். இங்கும் கூட, இயற்கை விஞ்ஞானத் தைப் போலவே, பொருளாதார வளர்ச்சி விதிகளும், மனித சித்தத்திற்கு அப்பாற்பட்ட பொருளாதார வளர்ச்சி நிகழ்முறை களைப் பிரதிபலிக்கும் புறநிலை விதிகளாகும்.

3. வி.கு. : பொருளாதாரத் திட்டமிடுதலை நாம் எவ்வாறு செய்கிறோம்? மென்ரகத் தொழிலுக்கும் விவசாயத்திற்கும் போதுமான கவனம் செலுத்தவில்லை.

4. மூ.வா. : அதனால்தான், அதே நூலில் ஏங்கெல்ஸ் கூறுகிறார்: ''இதுகாறும் மனிதனுக்கு நேர் எதிராக நின்று இயற்கையின் விதிகளைப் போல, அவனுக்கு அந்நியப்பட்டவை யாக அவன் மீது ஆதிக்கம் செலுத்தி வந்த அவனுடைய சொந்த சமுதாய நடவடிக்கையின் விதிகள், இனி அவனால் முழுப் புரிதலோடு பயன்படுத்தப்படும், எனவே அவற்றின் மீது தன் ஆளுமையை நிறுவுவான் (டூரிங்குக்கு மறுப்பு).

4. வி.கு. : 'சுதந்திரம்' என்பது மக்கள் புரிந்து கொள்ளும் அவசியமான புறநிலை விதியாகும். அது போன்ற விதிகள் மக்களை எதிர்கொள்வது அவர்களைச் சாராமலேயே நடப்பதாகும் ஆனால், அதை மக்கள் ஒருமுறை புரிந்து கொண்டால், அவர்கள் அதைக் கட்டுப்படுத்த முடியும்.

5. மூ.வா. : சோவியத் அரசாங்கத்தின் குறிப்பான பாத்திரம் இரண்டு சூழ்நிலைமைகளால் உருவானது: முதலாவதாக, முந்தைய புரட்சிகளில் நடந்தது போல் ஒருவகைச் சுரண்டலுக்குப் பதிலாக இன்னொரு வகைச் சுரண்டலை அது ஏற்படுத்தவில்லை. மாறாக சுரண்டலையே அடியோடு ஒழித்துக் கட்டுவது இதன் பணியாக இருந்தது. இரண்டாவதாக, இந் நாட்டில் சோசலிசப் பொருளாதாரத்தின் முளைகள் கூட தயாராய் இல்லாத நிலையில், இது புதிய சோசலிசப் பொருளாதார வடிவங்களை உருவாக்க வேண்டியிருந்தது, சொல்லப் போனால் "வெற்றிடத்திலிருந்து தொடங்க" வேண்டி இருந்தது.

5. வி.கு. : சோசலிசப் பொருளாதார விதிகளின் தவிர்க்க முடியாத தன்மை — இது ஆய்வு செய்யப்பட வேண்டிய ஒன்று. செங் டூ மாநாட்டில் நமது பொது வேலைத் திட்டம் ("அதிகமாக! சிறப்பாக! மேலும் சிக்கனமாக!" அக்கம் பக்கமான மூன்று மேம்படுத்தல்கள் மற்றும் மக்கள் திரள் வழி) தோல்வியுறுமா[1] அல்லது வெற்றி பெறுமா என்று நாம் பார்க்கவேண்டும் என்று நான் கூறினேன். இன்னும் பல ஆண்டுகளுக்கு, ஏன் பல பத்தாண்டுகளில் கூட இதை நிரூபிக்க முடியாது. முன்பு சிலரால் சந்தேகிக்கப்பட்ட புரட்சியின் விதிகள், இன்று பகைவர்கள் தூக்கி எறியப்பட்டு விட்டதால் இப்போது சரியானவை என்று நிரூபிக்கப் பட்டுள்ளன. சோசலிசக் கட்டுமானம் வெற்றி பெறுமா? இதில் மக்களுக்கு இன்னும் சந்தேகம் இருக்கிறது. நமது சீன நடைமுறைகள் சீனத்தின் பொருளாதார விதிகளோடு ஒத்திசைந்ததா? இது ஆய்வு செய்யப்பட வேண்டியது. எனது கருத்து என்னவெனில், பொதுவாக நடைமுறை ஒத்திசைவாக இருந்தால் எல்லாம் சரியாக நடக்கும்.

6. மூ.வா. : இது (புதியவற்றைப் படைப்பது, "வெற்றிடத்திலிருந்து" சோசலிசப் பொருளாதார வடிவங்களை உருவாக்குவது) சந்தேகத்திற்கு இடமற்ற விதத்தில் ஒரு கடினமான, சிக்கலான, முன் எப்போதும் கண்டிராத பணியாகும்.

6. வி.கு.: சோசலிசப் பொருளாதார வடிவங்களை உருவாக்குவதைப் பொருத்தவரையில் நமக்கு ரசிய முன் மாதிரி இருப்பதால் நாம் அவர்களை விடச் சற்று சிறப்பாகச் செய்ய வேண்டும். நாம் காரியங்களைக் கெடுத்துவிட்டால், அது சீன மார்க்சியம் தோற்றுவிட்டது என்பதைக் காட்டும். பணிகளின் சிரமங்களையும் சிக்கல்களையும் பொருத்தவரையில் விசயங்கள் ரசியா எதிர்கொண்டவற்றிலிருந்து சிறிதும் மாறுபடவில்லை.

7. மூ.வா.: நமது நாட்டின் தேசிய பொருளா தாரத்தை சமச்சீராக (விகிதாச்சார ரீதியாக) வளர்க்க வேண்டிய தன் தேவையானது, சோவியத் அரசாங்கம் ஏற்கனவே நிலவும் பொருளாதார விதிகளை ஒழித்து விட்டு புதியவற்றை உருவாக்கு வதைச் சாத்தியமாக்குகிறது என்று கூறப்படுகிறது. இது முற்றிலும் உண்மைக்கு மாறானது. நமது ஆண்டு மற்றும் ஐந்தாண்டு திட்டங்களை, தேசியப் பொருளாதாரத்தின் சமச் சீரான, விகிதாச்சார வளர்ச்சிக்கான புறநிலை பொருளாதார விதிகளோடு குழப்பிக் கொள்ளக் கூடாது.

7. வி.கு.: இதுவே இந்தப் பிரச்சினையின் தீர்மான கரமான விசயமாகும்.

8. மூ.வா.: இதன் பொருள், நமது திட்டமிடும் அமைப்புகள் சமுதாய உற்பத்தியை சரியாகத் திட்டமிடுவதை தேசியப் பொருளாதாரத்தின் சமச்சீரான வளர்ச்சி பற்றிய விதிகள், சாத்தியமாக்குகின்றன என்பதாகும். ஆனால் சாத்தியப்பாடு களை யதார்த்தத்தோடு குழப்பிக் கொள்ளக் கூடாது. அவை இரண்டும் வெவ்வேறான விசயங்கள். இந்த சாத்தியப்பாட்டை யதார்த்தமாக மாற்றுவதற்கு இப் பொருளாதார விதிகளை ஊன்றிக் கற்று, அதில் தேர்ச்சி பெற்று, அதை முழுமையான புரிதலுடன் பிரயோகிக்கக் கற்று, இந்த விதிகளின் தேவைகளை முழுமையாகப் பிரதிபலிக்கக் கூடிய திட்டங்களை வகுப்பது அவசிய மாகும். இப் பொருளாதார விதியின் தேவைகளை நமது ஆண்டுத் திட்டங்களும் ஐந்தாண்டுத் திட்டங்களும் முழுமையாகப் பிரதி பலிக்கின்றன என்று கூற முடியாது.

8. வி.கு.: அந்நூலின் இப்பகுதியின் மையக்கருத்து நாம் திட்டமிட்ட விகிதாச்சார வளர்ச்சியின் புறநிலை விதிகளை திட்டமிடுதலுடன் குழப்பிக் கொள்ளக் கூடாது என்பதாகும். சென்ற காலத்தில் நாம் கூட திட்டங்களை வகுத்தோம்,

ஆனால், அவை அடிக்கடி பெரும் ஆரவாரத்தை உண்டாக்கின. மிகவும் அதிகம்! மிகவும் குறைவு! ஆகச் சிறந்த வழி எதுவென்று நிச்சயமாக ஒரு போதும் தெரியாததால், நாம் கண்மூடித்தனமாக பலவற்றின் மீது முட்டிக் கொண்டோம். நெளிவு சுழிவான துன்ப மிக்க படிப்பினைகளை அனுபவித்து, கோணல்-மாணலான பாதைகளில் பயணம் மேற்கொண்டு, விடைகளைச் சிந்திப்பதற்கு மூளையைக் குழப்பிக் கொண்ட பிறகே நாம் தற்போது செயல் படுத்திக் கொண்டிருக்கிற 40 அம்ச விவசாயத் திட்டத்தை கண்டு பிடித்தோம். இப்போது நாம் புதிய 40 அம்சத் திட்டத்தை உருவாக்கும் கட்டத்தில் இருக்கிறோம். இன்னும் மூன்றாண்டு கள் கடுமையான போராட்டத்திற்கு பிறகு நாம் மேலும் வளர்ச்சி அடைவோம்; போதுமான அளவு முழுமையான விவாதங்கள் நடத்திய பிறகு நாம் மீண்டும் முன்னேறுவோம். நாம் இதை நடைமுறை சாத்தியமானதாக்க முடியுமா? புறநிலை நடைமுறை யில்தான் இது நிரூபிக்கப்பட வேண்டியுள்ளது. தொழில்துறையில் நாம் எட்டு ஆண்டுகள் செயல்பட்டு வந்தபோதிலும், எஃகை ஆதாரமானதாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதை நாம் உணரவில்லை. இதுதான் தொழில் துறையில் உள்ள முரண் பாட்டின் பிரதான அம்சமாகும். அது ஒருமைவாதமாக இருந்தது. பெரியது, நடுத்தரம், சிறியது ஆகியவற்றில் நாம் பெரியதை ஆதாரமாக எடுத்துக் கொள்கிறோம்; மையம், பிராந்தியம் ஆகியவற்றில் மையத்தை எடுத்துக் கொள்கிறோம். எந்தவொரு முரண்பாட்டிலும் உள்ள இரண்டு பக்கங்களில் ஒன்று முதன்மை யான பக்கமாகும். இருந்த போதிலும், எட்டாண்டு கால சாதனை கள் எவ்வளவுதான் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பினும், நாம் இன்னும் சரியான வழியைக் காணும் தேடலில்தான் உள்ளோம். நம்முடைய உற்பத்தித் திட்டமிடல் முழுக்க முழுக்க சரியானதாக இருந்தது என்றோ, அது முழுக்க முழுக்க புறநிலை விதிகளைப் பிரதிபலித்தது என்றோ கூற முடியாது. திட்டமிடுதலை வெறுமனே திட்டக் குழுவோ அல்லது பொருளாதாரக் குழுவோ செய்வதில்லை; மாறாக கட்சி முழுவதும், அனைத்து மட்டங் களும், ஒவ்வொருவரும் இதில் ஈடுபடுகின்றனர். நூலின் இந்தப் பகுதியில் ஸ்டாலின் கூறுவது கோட்பாட்டு ரீதியில் சரியானதே. ஆனால் இன்னமும் ஒரு நுணுக்கமான, விபரமான பகுப்பாய்வோ அல்லது ஒரு தெளிவான விளக்கத்திற்கான தொடக்கமோ கூட செய்யப்படவில்லை. ரசியர்கள், பெரியது, நடுத்தரம், சிறியது ஆகியவற்றுக்கிடையிலும், பிராந்தியம் மற்றும் மையத்திற்கிடை

திலும் வேறுபாடுகளைக் காணவில்லை என்பதோடு, அவர்கள் தொழிலையும், விவசாயத்தையும் கூட ஒரு சேர வளர்க்கவில்லை. அவர்கள் இரண்டு கால்களில் நடக்கவே இல்லை. அவர்களுடைய விதிமுறைகளும் ஒழுங்குமுறைகளும் மக்களை முடமாக்கின. ஆனால் நாம் நமது நிலைமைகளை போதுமான அளவு ஆய்வு செய்து புரிந்து கொள்ளவில்லை; இதன் விளைவாக நமது திட்டங்களும் கூட புறநிலை விதிகளை முழுமையாகப் பிரதிபலிக்கவில்லை.

9. மூ.வா. : ஏங்கெல்சின் சூத்திரத்தை நாம் பரிசீலிப்போம். ஏங்கெல்சின் சூத்திரம் முற்றிலும் தெளிவானதும், சரி நுட்பமானதும் என்று கருத முடியாது. ஏனெனில், இது சமுதாயம், உற்பத்தி சாதனங்கள் முழுவதையும் கைப்பற்றுவதைக் குறிக்கிறதா அல்லது ஒரு பகுதியை மட்டுமா என்பதைச் சுட்டிக் காட்டவில்லை. அதாவது பொதுச் சொத்தாக மாற்றப்படுவது உற்பத்தி சாதனங்கள் முழுவதுமா அல்லது ஒரு பகுதி மட்டும்தானா என்று சுட்டிக் காட்டவில்லை. எனவே, ஏங்கெல்சின் இந்தச் சூத்திரம் இரண்டு விதமாகவும் புரிந்து கொள்ளப் படலாம்.

9. வி.கு. : இந்த பகுப்பாய்வு சாராம்சத்தைத் தொடுகிறது! உற்பத்தி சாதனங்களை இரண்டு பகுதிகளாகப் பிரிப்பதுதான் இங்கு உள்ள பிரச்சினையாகும். உற்பத்தி சாதனங்கள் பண்டங்கள் அல்ல என்று கூறுவது ஆய்வுக்குரியதாகும்.

10. வி.கு. : 'சோசலிசத்தின் கீழ் பண்ட உற்பத்தி' என்னும் இப் பிரிவில் பண்டங்கள் நிலவுவதற்கான நிலைமைகளைப் பற்றி ஸ்டாலின் முழுமையாகத் தெளிவுபடுத்தவில்லை. இரண்டு விதமான உடைமைகள் நிலவுவதுதான் பண்ட உற்பத்திக்கான பிரதான களமாகும். ஆனால் இறுதியில் பண்ட உற்பத்தியும் கூட உற்பத்தி சக்திகளோடு தொடர்புடையதுதான். இக் காரணத்தினால் முழுமையான சமூக மயமாக்கப்பட்ட பொது உடைமையின் கீழும்கூட, பண்டமாற்று சில இடங்களில் தொடர்ந்து நடைமுறையில் இருந்து வரும்.

11. மூ.வா. : நாட்டில் உள்ள அனைத்து உற்பத்தி சாதனங்களையும் பறிமுதல் செய்து அவற்றை பொதுச் சொத்தாக மாற்றுவதை சாத்தியமாக்கும் அளவுக்கு தொழில் துறை, விவசாயம் ஆகிய இரண்டிலுமே, முதலாளித்துவமும் உற்பத்தியின் ஒன்று

குவிப்பும் போதுமான அளவு முன்னேறியுள்ள நாடுகளை ஏங் கெல்ஸ் மனதில் கொண்டிருக்கிறார் என்பது இதிலிருந்து புலப் படுகிறது. இதன் விளைவாக ஏங்கெல்ஸ், இத்தகைய நாடுகளில் அனைத்து உற்பத்திச் சாதனங்களையும் சமூகமயமாக்குவதுடன் கூடவே பண்ட உற்பத்திக்கும் முடிவுகட்ட வேண்டும் என்று கருதுகிறார். அது உண்மையிலேயே சரியானதுதான்.

11. வி.கு.: ஏங்கெல்சின் சூத்திரம் குறித்த ஸ்டாலின் பகுப்பாய்வு சரியானதே;தற்சமயம் பண்ட உற்பத்தியைக் கைவிட்டு விட வேண்டும் என்ற ஒரு பலமான போக்கு நிலவுகிறது. பண்ட உற்பத்தியைப் பார்த்தவுடனேயே, அதை முதலாளித்துவம் என்று கருதி மக்கள் நிலைகுலைகின்றனர். ஆனால், பல நூறு மில்லியன் விவசாயிகளின் ஒருமைப்பாட்டிற்காக பண்ட உற்பத்தியை பெருமளவில் வளர்த்து பணப் புழக்கத்தை அதிகரிக்க வேண்டும் என்று தோன்றுகிறது. இது பலநூறு ஆயிரம் கட்சி ஊழியர்களின் சித்தாந்தத்திற்கும், பலநூறு மில்லியன் விவசாயிகளின் ஒருமைப் பாட்டிற்கும் ஒரு பிரச்சினையை முன்னிறுத்துகிறது. உற்பத்தி சாதனங்களின் ஒரு பகுதிமட்டும்தான் தற்போது நம்மிடம் உள்ளது. ஆனால் சிறிய மற்றும் நடுத்தர உற்பத்தியாளர்களையும் நீக்கிவிட்டு அனைத்து மக்களுடைய உடைமை முறையை அறிவித்து விடவேண் டும் என்று விரும்புகிறவர்களும் இருப்பது போல் தோன்றுகிறது. அவர்கள் உடைமை வகைகளை அறிவிக்கத் தவறி விடுகிறார்கள்! அது கம்யூன் உடைமையாக இருப்பதா அல்லது மாவட்டத்தின் உடைமையாக இருப்பதா? இவ்வாறு வெறுமனே பொது உடைமையை அறிவிப்பதன் மூலமே பண்டங்களையும், பண்ட உற்பத்தியையும் ஒழிப்பது, விவசாயிகளைத் துகிலுரிப்பதாகும். 1955-ன் இறுதியில் கட்டாயக் கொள்முதல் (procurement) செய்த தன் மூலமும், வாங்குவதன் (purchase) மூலமும், எவ்வித சிரமமும் இன்றி 90 பில்லியன் கேட்டி (catty) தானியங்களைப் பெற்றோம். ஒவ்வொருவரும் உணவைப் பற்றி பேசிக் கொண் டிருந்தனர். வீட்டுக்கு வீடு ஒன்றிணைக்கப்பட்ட வாங்குதலைப் பற்றிப் பேசினர். ஆனாலும் அது வாங்குதல் தானேயன்றி ஒதுக்கீடு அல்ல. நாம் 83 பில்லியன் கேட்டி தானியங்கள் வாங்குவது என்று முடிவு செய்த பிறகுதான் அந்த நெருக்கடி தீர்ந்தது. இந்த விசயங்களை மக்கள் ஏன் இவ்வளவு சீக்கிரம் மறந்துவிடுகிறார்கள் என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

12. மூ.வா. : இச்சமயத்தில், பிரிட்டனுக்கு அதன் அயல் நாட்டு வணிகத்தின் முக்கியத்துவம், அதன் தேசியப் பொருளா தாரத்தில் அவ்வணிகம் வகிக்கும் பெரும் பங்கு ஆகியவை பற்றிய பிரச்சினையை விட்டு விடுகிறேன். இப்பிரச்சினை பற்றி ஆய்வு செய்த பிறகுதான், பாட்டாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தைக் கையிலெடுத்து அனைத்து உற்பத்தி சாதனங்களை யும் தேசியமயமாக்கிய பின், பிரிட்டனில் பண்ட உற்பத்தியின் எதிர்காலம் (தலைவிதி) என்னவாயிருக்கும் என்பது பற்றி இறுதி யாக முடிவு செய்ய இயலும் என்று நான் நினைக்கிறேன்.

12. வி.கு. : தலைவிதியானது பண்ட உற்பத்தி ஒழிக்கப் படுகிறதா இல்லையா என்பதைச் சார்ந்துதான் இருக்கிறது.

13. மூ.வா. : ஆனால், இங்கு ஒரு கேள்வி உள்ளது: உதாரணத்திற்கு, நமது நாட்டைப் போன்று பாட்டாளி வர்க்கம் அதிகாரத்தைக் கையிலெடுத்து முதலாளித்துவத்தைத் தூக்கியெறிய நிலைமைகள் சாதகமாக இருக்கும் ஒரு நாட்டில், பாட்டாளி வர்க்கமும் அதன் கட்சியும் என்ன செய்ய வேண்டும்? (எங்கு முதலாளித்துவம் தொழில் துறையில் பெருமளவுக்கு உற்பத்திச் சாதனங்களை ஒன்றுகுவித்துள்ளதோ அங்கு அவற்றைப் பறி முதல் செய்து சமுதாயத்தின் உடைமையாகச் செய்து விடலாம். ஆனால், எங்கு முதலாளித்துவம் வளர்ந்திருந்த போதிலும் விவ சாயம், எண்ணற்ற சிறிய, நடுத்தர உடைமை கொண்ட உற்பத்தி யாளர்களிடையே சிதறிக் கிடக்கிறதோ அங்கு இந்த உற்பத்தி யாளர்களின் உடைமைகளைப் பறிமுதல் செய்வதைப் பற்றிச் சிந்திப்பதே சாத்தியமற்றதாக உள்ளது?)*.................... (இது) விவசாயிகளை பாட்டாளிவர்க்கத்தின் எதிரி முகாமுக்குள் நீண்ட காலத்திற்குத் தள்ளி விடும்.

13. வி.கு. : மொத்தத்தில் பண்ட உற்பத்தியின் கோட் பாடுகள் சரியான முறையில் கிரகித்துக் கொள்ளப்படவில்லை. புத்தகப் படிப்பைப் பொருத்தவரையில் சீனப் பொருளியலாளர்கள் மார்க்சிய-லெனினியவாதிகள் தான். ஆனால், பொருளாதார நடைமுறையை எதிர்கொள்ளும்போது அவர்களுடைய மார்க்சியம்-லெனினியம் அரை குறையானதாக மாறிவிடுகிறது. அவர்களுடைய

* அடைப்புக் குறிக்குள் இருப்பது விசயத்தை தெளிவு படுத்து வதற்காக ஸ்டாலினுடைய மூல நூலிருந்து எடுக்கப்பட்டது.

சிந்தனை குழம்பி விடுகிறது. நாம் தவறு இழைத்தால் விவசாயி களை எதிரிகளின் பக்கத்திற்கு இட்டுச் சென்று விடுவோம்.

14. மூ.வா.: லெனினின் விடையைக் கீழ்க் கண்டவாறு சுருக்கமாகத் தொகுத்துரைக்கலாம்: (அ) அதிகாரத்தைக் கைப் பற்றிக் கொள்வதற்கு சாதகமான நிலைமைகளைத் தவறவிடக் கூடாது— கோடிக் கணக்கான சிறிய மற்றும் நடுத்தர தனி நபர் உற்பத்தியாளர்களை அழிப்பதில் முதலாளித்துவம் வெற்றி பெறும் வரை காத்திராமல், பாட்டாளி வர்க்கம் அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும்; 15 (ஆ) தொழில் துறையில் உள்ள உற்பத்தி சாதனங்களைப் பறிமுதல் செய்து பொதுச் சொத்தாக மாற்ற வேண்டும், 16 (இ) சிறிய மற்றும் நடுத்தர தனிநபர் உற்பத்தி யாளர்களைப் பொருத்தவரையில் அவர்களைப் படிப்படியாக உற்பத்தியாளர் கூட்டுறவுகளுக்குள் அதாவது பெரிய விவசாய தொழில் நிறுவனங்களிலும், கூட்டுப் பண்ணைகளிலும் ஐக்கியப் படுத்த வேண்டும். 17 (ஈ) தொழில் துறையை எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்கு வளர்க்க வேண்டும்; நவீன தொழில் நுட்ப அடிப்படையிலான பெருவீத உற்பத்தியின் அடிப்படையில் கூட்டுப் பண்ணைகளை அமைக்க வேண்டும்; பறிமுதல் செய்யக் கூடாது; ஆனால் அதற்கு மாறாக முதல்தரமான டிராக்டர்கள், இதர இயந்திரங்கள் ஆகியவற்றை தாராளமாக வழங்கவேண்டும். 18 (உ) நகர்ப்புறத்துக்கும் கிராமப்புறத்துக்கும் இடையிலும் தொழிலுக்கும் விவசாயத்திற்கும் இடையிலும் உள்ள பொருளா தாரப் பிணைப்பை உறுதி செய்வதற்கு, பண்ட உற்பத்தி சிறிது காலம் பாதுகாக்கப்பட வேண்டும். ஏனெனில், இது மட்டும்தான் விவசாயிகளுக்கு ஏற்புடைய நகரங்களுடனான பொருளாதாரப் பிணைப்பாகும். சோவியத் வணிகம்—அரசு, கூட்டுறவு மற்றும் கூட்டுப் பண்ணை— முழுமையாக வளர்க்கப்பட வேண்டும்; எல்லா தரப்பிலும் உள்ள அனைத்து வகைப்பட்ட முதலாளிகளும் வணிக நடவடிக்கைகளிலிருந்து அகற்றப்பட வேண்டும்.

நமது நாட்டின் சோசலிசக் கட்டுமானத்தின் வரலாறு, லெனினால் உருவாக்கப்பட்ட இந்த வளர்ச்சிப் பாதை சரியானது என்பதைக் காட்டுகிறது.

19. கிட்டத்தட்ட எண்ணற்ற சிறிய மற்றும் நடுத்தர உற்பத்தி யாளர்களைக் கொண்ட எல்லா முதலாளித்துவ நாடுகளின் விசயத் திலும் சோசலிசத்தின் வெற்றிக்கு இந்த வளர்ச்சிப் பாதை ஒன்று

தான் உகந்ததும் சாத்தியமானதும் என்பதைப் பற்றிச் சந்தேகத் திற்கே இடமில்லை.

14. வி.கு.: இப்பகுதி சரியானதொரு பகுப்பாய்வைக் கொண்டிருக்கிறது. சீன நிலைமைகளை எடுத்துக்கொள்ளுங்கள், இங்கு வளர்ச்சி உள்ளது. இந்த ஐந்து விசயங்களும் சரியானவையே.

15. வி.கு.: தேசிய முதலாளிகளைப் பொருத்தவரையில் நமது கொள்கையானது, அவர்களுடைய சொத்துக்களை நஷ்டஈடு கொடுத்து மீட்பதாகவே இருந்தது.

16. வி.கு.: மக்கள் கம்யூன்களை நாம் மேலும் மேலும் பெரிய அளவில் வளர்த்து வருகிறோம்.

17. வி.கு.: எந்தவித வேறுபாடும் இன்றி இதைத் தான் இப்போது நாம் செய்து வருகிறோம்.

18. வி.கு.: பண்ட உற்பத்தியை விரும்பாதவர்களும் உண்டு. ஆனால் அவர்கள் தவறு செய்கின்றனர். பண்ட உற்பத்தியைப் பற்றி நாம் இன்னும் ஸ்டாலினிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டியது உள்ளது; அவர் அதை லெனினிடமிருந்து கற்றுக்கொண்டார். வர்த்தகத்தை வளர்க்க முழு ஆற்றலையும் ஈடு படுத்தவேண்டும் என்று கூறினார் லெனின். மாறாக தொழில் துறை, விவசாயம், வர்த்தகம் ஆகியவற்றை வளர்க்க முழு ஆற்றலையும் செலவிட வேண்டும் என்று நாம் சொல்கிறோம். விவசாயப் பிரச்சினை தான், பிரச்சினையின் சாராம்சமாகும். தொழிலாளர்களை விட விவசாயிகள் மிக அதிக உணர்வு பெற்ற வர்கள் என்று கருதுபவர்களும் உண்டு. இந்த ஐந்து விசயங் களையும் நாம் நிறைவேற்றியுள்ளோம் அல்லது நிறைவேற்றும் போக்கில் உள்ளோம். சில பகுதிகள் வளர்க்கப்படவேண்டியுள்ளன குறிப்பாக கம்யூனால் நடத்தப்படும் தொழில் அல்லது ஒருசேர தொழிலையும்—விவசாயத்தையும் ஊக்குவிப்பது ஆகியவை.

19. வி.கு.: லெனின் இதே விசயத்தைத்தான் கூறினார்.

20. மூ.வா.: பண்ட உற்பத்தியை தன்னிறைவு பெற்ற ஒன்றாகக் கருதுவதோ, சுற்றியுள்ள பொருளாதார நிலைமைகளி லிருந்து சுதந்திரமான ஒன்றாகக் கருதுவதோ கூடாது. பண்ட உற்பத்தியானது முதலாளித்துவ உற்பத்தியை விடப் பழைமை யானது. அது அடிமை சமுதாயம் நிலவியபோது அதற்குச் சேவை

செய்தது. ஆனால் அது முதலாளித்துவ சமுதாயத்திற்கு இட்டுச் செல்லவில்லை. அது நிலப்பிரபுத்துவ சமுதாயத்தில் இருந்து அதற்குத் தொண்டாற்றியபோதும் முதலாளிய உற்பத்திக்கான சில நிலைமைகளை மட்டுமே உருவாக்கியது; அது முதலாளித் துவத்திற்கு இட்டுச் செல்லவில்லை.

20. வி.கு.: இக் கூற்று சற்று மிகைப்படுத்தப்பட்ட தாக இருக்கிறது. ஆனால், பண்ட உற்பத்தியானது முழுக்க முழுக்க ஒரு முதலாளித்துவ நிறுவனம் அல்ல என்பது உண்மையே.

21. மூ.வா.: நமது நாட்டில் பண்ட உற்பத்தி, முதலாளித்துவத்தின் கீழ் உள்ளது போல் அந்த அளவுக்கு எல்லையற்றதாகவும், அனைத்தும் தழுவியதாகவும் இல்லை.

21. வி.கு.: மத்தியக் கமிட்டியின் இரண்டாவது பிளீனக் கூட்டம் (பண்ட உற்பத்தியை) பயன்படுத்துவது, கட்டுப் படுத்துவது, மாறிச் செல்வது (Transforming) என்ற கொள்கை களை ஆலோசனைகளாக முன்வைத்தது.

22. மூ.வா.: மாறாக, உற்பத்தி சாதனங்களின் சமூக உடைமை, கூலி உழைப்பு முறை ஒழிக்கப்பட்டிருப்பது, சுரண்டல் அமைப்பு முறை ஒழிக்கப்பட்டிருப்பது போன்ற தீர்மானகரமான பொருளாதார நிலைமைகளின் காரணமாக கடுமையான வரம்பு களுக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை கருத்தில் கொண்டு...

22. வி.கு.: இந்த நிலைமை சீனத்தில் முழுமையாக நடைமுறையிலிருக்கிறது.

23. மூ.வா.: பின் ஏன், பண்ட உற்பத்தி அதே போன்று ஒரு குறிப்பிட்ட காலம் வரை முதலாளித்துவத்திற்கு இட்டுச் செல்லாமல் நமது சோசலிச சமுதாயத்திற்கு சேவை செய்யக் கூடாது? என்று ஒருவர் கேட்கக்கூடும்.

23. வி.கு.: இவ்விசயம் முழுக்க முழுக்க சரியானது. நமது நாட்டில் இத்தகைய நிலைமைகளும் சூழ்நிலைமைகளும் இப்போது இல்லை. பண்டங்களைக் கண்டு அஞ்சுபவர்களும் இருக்கின்றனர். முதலாளிகளை அகற்றிய பிறகு, பண்ட உற்பத்தி யைப் பெருமளவில் விரிவாக்குவது அனுமதிக்கத்தக்கது என்பதை உணராமல், அவர்கள் விதிவிலக்கின்றி முதலாளித்துவத்தைக் கண்டு அஞ்சுகின்றனர். நாம் இன்னும் பண்ட உற்பத்தியில் பிரேசிலையும் இந்தியாவையும் விட மிகவும் பின்தங்கியிருக்கிறோம்.

பண்ட உற்பத்தி ஒரு தொடர்பற்ற தனியான விசயமல்ல. அதனுடைய பின்னணியில் முதலாளித்துவம் அல்லது சோசலிசம் இருப்பதைப் பாருங்கள். ஒரு முதலாளித்துவ சூழலில் அது முதலாளித்துவ பண்ட உற்பத்தி. ஒரு சோசலிச சூழலில் அது சோசலிச பண்ட உற்பத்தி. பண்ட உற்பத்தி பண்டைய காலம் முதல் நிலவி வந்திருக்கிறது. வாங்குவதும் விற்பதும் 'ஷாங்' (''வணிக'') வம்சம் என்று வரலாறு கூறும் காலத்தில் தொடங்கியது. ஷாங் வம்சத்தின் கடைசி அரசனாகிய சௌ, சிவில் மற்றும் இராணுவ விவகாரங்களில் திறமை மிக்கவனாக இருந்தான். ஆனால் அவன் சின்[2] மற்றும் சாவோ சாவோ[3] முதல் சக்ரவர்த்தியுடன் சேர்த்தே கொடியவனாக மாற்றப்பட்டான். இது தவறு. ''புத்தகங்களை முழுக்க முழுக்க நம்புவதை விடப் புத்தகங்களே இல்லாமல் இருப்பது நல்லது''* முதலாளித்துவச் சமுதாயத்தில் சமூக நிறுவனங்களாக கருதப்படும் சோசலிச நிறுவனங்கள் இல்லை; ஆனால், உழைக்கும் வர்க்கமும் சோசலிச சித்தாந்தமும் முதலாளித்துவச் சமுதாயத்தில் நிலவுகின்றன. பண்ட உற்பத்தியை நிர்ணயிக்கும் விசயம் சுற்றியுள்ள பொருளாதார நிலைமைகளாகும். கேள்வி என்னவெனில், சோசலிச உற்பத்தியை முன்னெடுத்துச் செல்ல பண்ட உற்பத்தியை ஒரு பயனுள்ள கருவியாக கருதலாமா? என்பதேயாகும். பண்ட உற்பத்தி சோசலிசத்திற்கு மிகவும் பணிவுடன் சேவை செய்யும் என்றே நான் கருதுகிறேன். இதை ஊழியர்களிடையே விவாதிக்கலாம்.

24. மூ.வா.: நமது நாட்டில் உற்பத்தி சாதனங்கள் மீது சமூக உடைமையின் ஆதிக்கம் நிலைநாட்டப்பட்டு விட்டதாலும், கூலி உழைப்பு மற்றும் சுரண்டல் அமைப்பு முறைகள் ஒழிக்கப்பட்டு விட்டதாலும், பண்ட உற்பத்தி முற்றிலும் அர்த்தமற்றதாகி விட்டது எனவும், எனவே அதை முற்றிலும் கைவிட்டு விடலாம் என்றும் கூறப்படுகிறது.

24. வி.கு.: ''நமது நாடு'' என்பதை ''சீனா'' என்று மாற்றினால் விசயம் மிகவும் தவறானதாகி விடுகிறது.

---

* *மென்ஷியஸ். ''வெறும் ஏட்டறிவைக் கொண்டு பண்ட உற்பத்தியை கொடுமையானதாக சித்தரிக்கக் கூடாது'' என்று மாவோ கூறுவதாகத் தோன்றுகிறது.*

25. மூ.வா.: இன்று நமது நாட்டில் இரண்டு அடிப் படையான சோசலிச உற்பத்தி வடிவங்கள் இருக்கின்றன. அரசு அல்லது பொதுமக்களுக்குச் சொந்தமான உற்பத்தி மற்றும் பொது மக்களுக்குச் சொந்தமானது என்று கூறமுடியாத கூட்டுப் பண்ணை உற்பத்தி.

25. வி.கு.: ''இன்று'' என்பது 1952 ஆம் ஆண்டைக் குறிக்கிறது. அதாவது அவர்களுடைய புரட்சிக்குப் பிறகு 35 ஆண்டுகள். நமது புரட்சி முடிந்து ஒன்பது ஆண்டுகள் தான் கழிந்திருக்கின்றன.

அவர் இரண்டு அடிப்படை வடிவங்களைக் குறிப்பிடுகிறார். கம்யூன்களில் நிலம், இயந்திரங்கள் மட்டுமல்லாது உழைப்பு, விதைகள், இதர உற்பத்தி சாதனங்களும் கூட கம்யூன்களுக்குச் சொந்தமானவை. இவ்வாறு, உற்பத்தியும் அது போன்றே சொந்தமாக்கப்படுகிறது. ஆனால், சீன விவசாயிகள் மிகவும் அதிசயிக்கத்தக்க வகையில் முன்னேறி விட்டார்கள் என்று எண்ணி விடவேண்டாம். ஹுனானைச் சேர்ந்த சியாவு (Hsiuwu) மாவட்டத்தில், பொதுவுடைமை அறிவிக்கப்பட்டு இலவச வழங்கீடு அமைப்பு முறை நிறுவப்பட்ட பிறகு, வெள்ளம் அல்லது பஞ்சம் ஏற்படும் காலங்களில் அரசு கூலி கொடுக்குமோ இல்லையோ என்று அம் மாவட்ட கட்சிச் செயலாளர் கவலைப்பட்டுக் கொண்டிருந்தார். அமோக விளைச்சல் ஏற்படும் சமயத்திலும் அரசு பொது மக்களுக்கு சொந்தமான தானியம் முழுவதையும் எடுத்துக் கொண்டு கூலியையும் கொடுக்காது; எனவே, விளைச்சல் நன்றாக இருந்தாலும், இல்லை என்றாலும் விவசாயிகள் துன்பப்படுவார்கள் என்று அவர் கவலைப்பட்டார். இது விவசாயிகளின் கவலையைக் குறிக்கிறது. மார்க்சியவாதிகள் இப் பிரச்சினைகளில் கவனம் செலுத்தவேண்டும். நமது பண்ட உற்பத்தியை அதிக பட்சம் அதிகரிக்க வேண்டும். ஆனால் அதற்கு குறைந்த பட்சம் பதினைந்து ஆண்டுகளோ அல்லது அதற்கும் அதிகமான காலமோ தேவைப்படும்; அத்துடன் பொறுமையும் தேவைப்படும். நாம் பல பத்தாண்டுக் காலம் யுத்தம் நடத்தி இருக்கிறோம். இப்போது, தய்வானின் விடுதலைக்காக காத்திருக்கவும், சோசலிச கட்டுமானம் சிறப்பாக முன்னேற்றம் அடைவதற்காக காத்திருக்கவும், நமக்கு மேலும் பொறுமை தேவையாக இருக்கிறது. வெற்றியை வெகு சீக்கிரமாக எதிர்பார்க்காதீர்கள்!

26. மூ. வா. : (இரு வேறுபட்ட அடிப்படை உடைமை வடிவங்களும் எவ்வாறு இறுதியில் ஒன்றாகும்) என்பது ஒரு விசேச கேள்வியாகும்; இதற்கு ஒரு தனியான விவாதம் தேவைப் படுகிறது.

26. வி.கு : ஒரு முறையையோ அல்லது ஒரு பொருத்த மான சூத்திரத்தையோ கண்டு பிடிக்காமல் (கூட்டு உடைமை யிலிருந்து பொது உடைமைக்கு மாறுவது பற்றி) ஸ்டாலின் இப்பிரச்சினையைத் தவிர்க்கிறார்.

27. மூ.வா. : இதன் விளைவாக, நமது பண்ட உற்பத்தி சாதாரண வகைப்பட்டதல்ல, ஒரு விசேச வகைப்பட்ட பண்ட உற்பத்தியாக — முதலாளிகள் இல்லாத பண்ட உற்பத்தியாக இருக்கிறது. இது பிரதானமாக ஒன்றிணைந்த சோசலிச உற்பத்தி யாளர்கள் (அரசு, கூட்டுப் பண்ணைகள், கூட்டுறவுகள்) சம்பந்தப் பட்ட பொருட்களை மட்டுமே கருத்தில் கொள்கிறது. இதன் செயல் பாட்டு அரங்கம் தனிநபர் நுகர்வுக்கான பொருட்களின் எல்லைக்குள் குறுக்கப்பட்டுள்ளது. எனவே, இது முதலாளித்துவ உற்பத்தி யாக வளர்ச்சியடைவது சாத்தியமில்லை என்பது தெளிவாகிறது. இது ''பணப் பொருளாதாரத்துடன்'' இணைந்து சோசலிச உற்பத்தியை வளர்க்கவும் உறுதிபடுத்தவும் உதவும் விதத்தில் வடிவமைக்கப் பட்டுள்ளது.

27. வி.கு. : ''செயல்பாட்டு அரங்கம்'' தனிப்பட்ட நபர்களின் நுகர்வுக்கான பொருட்களின் வரம்புக்கு உட்பட்டதல்ல. சில உற்பத்தி சாதனங்கள் பண்டங்கள் என்று வகைப்படுத்தப் படவேண்டும். விவசாய உற்பத்திப் பொருட்கள், பண்டங்களாக இருக்கும் போது, தொழில் துறை உற்பத்திப் பொருட்கள் பண் டங்கள் அல்ல என்றால் பரிவர்த்தனை (exchange) எவ்வாறு நிகழும்? ''நமது நாடு'' என்பதை ''சீனம்'' என்று மாற்றி விட்டால் அந்தப் பகுதி படிப்பதற்குச் சுவாரசியமானதாகி விடுகி றது. சீனாவில் நுகர்வுப் பொருட்கள் மட்டுமல்லாது விவசாய உற்பத்தி சாதனங்களும் வழங்கப்பட வேண்டும். ஸ்டாலின் உற்பத்தி சாதனங்களை விவசாயிகளுக்கு ஒரு போதும் விற்க வில்லை. குருசேவ் அதை மாற்றி விட்டார்.

28. வி.கு. : (தலைவர் மாவோ மூல நூலின் 13-ஆம் பக்கத்தில் இவ்வாறு விமர்சனக் குறிப்பு தந்துள்ளார்) : சோச லிசத்தையும் கம்யூனிசத்தையும் பிரிக்கும் எல்லைக் கோட்டைப்

பற்றிய பிரச்சினையை கூட்டு உடமை மற்றும் பொது உடமை ஆகியவற்றுக்கு இடையிலான எல்லைக் கோட்டைப் பற்றிய பிரச்சினையுடன் போட்டுக் குழப்பிக் கொள்ளக் கூடாது. கூட்டு உடமை முறை பண்ட உற்பத்தி பற்றிய பிரச்சினையை நம்மிடம் விட்டுச் செல்கிறது; இதன் நோக்கம் தொழிலாளர் — விவசாயிகள் நேச உறவை உறுதிப்படுத்துவதும், உற்பத்தியை வளர்ச்சி பெறச் செய்வதும் ஆகும். இன்று, விவசாயிகளின் கம்யூனிசம் அற்புதமானது என்று கூறக் கூடியவர்கள் இருக்கின்றனர். கிராமப் புறங்களுக்கு ஒரு முறை பயணம் சென்று வந்தவுடனே விவசாயிகள் மிகவும் அற்புதமானவர்கள் என்றும், அவர்கள் சொர்க்கத்தில் நுழையும் தறுவாயில் இருக்கின்றனர் என்றும், அவர்கள் தொழிலாளர்களை விட நல்ல நிலைமையில் இருக்கின்றனர் என்றும் அவர்கள் எண்ணி விடுகின்றனர். இது மேலெழுந்த வாரியான தோற்றம். விவசாயிகள் உண்மையிலேயே கம்யூனிச உணர்வு கொண்டவர்களாக இருக்கிறார்களா என்பதை நாம் பார்க்க வேண்டும். அதை விட அதிகமாக, எந்த அளவுக்கு உற்பத்திக்கும் வாழ்க்கைக்குமான சாதனங்கள் சமுதாய கூட்டு உடமையைச் சார்ந்திருக்கிறது என்பது உட்பட கம்யூன் உடமை முறையை நாம் பரிசீலிக்க வேண்டும். ஹீனானைச் சேர்ந்த சியாவு மாவட்டக் கட்சி செயலாளர் சொன்னது போல், நாம் இன்னமும் பண்ட உற்பத்தியை வளர்க்க வேண்டும், கண்மூடித் தனமாக முன்னோக்கித் தாவக்கூடாது.

29. மூ.வா.: மேலும், மார்க்சின் மூலதனத்திலிருந்து எடுக்கப்பட்டு— மார்க்ஸ் அதில் முதலாளித்துவத்தைப் பகுப்பாய்வு செய்வதில் ஈடுபட்டிருந்தார் — செயற்கையான விதத்தில் நமது சோசலிச உறவுகளுக்கு பிரயோகப்படுத்தும் கருத்தாக்கங்களை நாம் கை விட வேண்டும் என்று நான் கருதுகிறேன் ...... மார்க்ஸ் முதலாளிய உறவுகளுக்கு முற்றிலும் பொருத்தமான கருத்தாக்கங்களை (வகையினங்களை) பயன்படுத்தியது இயல்பானதே. ஆனால் அவை இங்கு பொருந்தாது.

29. வி.கு.: குறிப்பாக, தொழில் துறையில் உள்ள உற்பத்திச் சாதனங்கள்.

30. மூ.வா.: ஆனால், உழைக்கும் வர்க்கம் அதிகாரத்தையும் உற்பத்தி சாதனங்களையும் இழந்து நிற்கும் நிலையில் இல்லை என்பது மட்டுமல்லாது அதற்கு மாறாக, அதிகாரத்தை கையில் வைத்துக் கொண்டு உற்பத்தி சாதனங்களை

கட்டுப்படுத்தும் இன்றைய நிலையில் இந்த கருத்தாக்கங்களைப் பயன்படுத்துவது மிகவும் விசித்திரமானது என்றுதான் கூற வேண்டும்.

30. வி.கு. : பண்ட உற்பத்தியானது, லாபத்துக்காக அல்லாமல் விவசாயிகளுக்காகவும், விவசாய — தொழில் துறை நேச உறவுக்காகவும், உற்பத்தியின் வளர்ச்சிக்காகவும் பரந்த அளவில் வளர்க்கப்பட வேண்டும்.

31. மூ.வா. : உழைப்புச் சக்தி ஒரு பண்டமாக இருப்பதாகவும், தொழிலாளர்களை ''வாடகைக்கு'' அமர்த்திக் கொள்வது என்று பேசுவதும் இன்று நமது அமைப்பு முறையில் அபத்தமானதாக தொனிக்கிறது. இது ஏதோ உற்பத்தி சாதனங்களை உடமையாகக் கொண்ட தொழிலாளி வர்க்கம் தன்னைத் தானே வாடகைக்கு அமர்த்திக் கொள்வது, தனது உழைப்புச் சக்தியைத் தானே விலைக்கு வாங்குவது என்பது போல் தோன்றுகிறது.

31. வி.கு : சீர்செய் இயக்கம் மற்றும் வலது சாரி எதிர்ப்பு இயக்கங்களுக்கு பிறகு குறிப்பாக சீர்செய் இயக்கத்திற்குப் பிறகு, உழைப்புச் சக்தி ஒரு பண்டமாக இல்லை. அது மக்களுக்குச் சேவை செய்தது, பணத்துக்காக (டாலர்) அல்ல. உழைப்புச் சக்தி ஒரு பண்டமாக இருக்கும் நிலை மாறாத வரை உழைப்புச் சக்தி பற்றிய பிரச்சினையை தீர்க்க முடியாது.

32. மூ.வா. : சோசலிச அமைப்பு முறையின் கீழ் உள்ள நமது நாட்டில் மதிப்பு விதி நிலவுகிறதா செயல்படுகிறதா என்று சில சமயம் கேட்கப்படுகிறது.

32. வி.கு. : மதிப்பு விதிக்கு ஒழுங்குபடுத்தும் பணி கிடையாது. திட்டமிடுதலும், அரசியலை ஆணையில் வைப்பதும் அந்த பாத்திரத்தை ஆற்றுகின்றன.

33. மூ.வா. : உண்மைதான். நமது சோசலிச உற்பத்தியில் மதிப்பு விதிக்கு ஒழுங்குபடுத்தும் பணி இல்லை.

33. வி.கு. : நமது சமுதாயத்தில் மதிப்பு விதிக்கு ஒழுங்குபடுத்தும் பணி இல்லை, அதாவது, நிர்ணயிக்கும் பணி இல்லை. திட்டமிடுதல் உற்பத்தியை நிர்ணயிக்கிறது ; எடுத்துக் காட்டாக, பன்றிக்காகவோ அல்லது எஃகுக்காகவோ நாம் மதிப்பு விதியைப் பயன்படுத்துவதில்லை ; நாம் திட்டமிடுதலை நம்பி இருக்கிறோம்.

## குறிப்புகள்

### நூல் அறிமுகம்

1. மா-சே-துங், ''செங் டு மாநாட்டு உரைகள் 1958 மார்ச் 10-ல் நிகழ்த்திய உரை'', மக்களுக்கு தலைவர் மாவோ நிகழ்த்திய உரைகளிலிருந்து, உரைகளும் கடிதங்களும், 1956-71 பதிப்பு, ஸ்ருவர்ட் ஸ்கராம் (நியூயார்க்: பாந்தியன் 1974) பக்கம் 102.

2. மா-சே-துங் தேர்வு நூல்கள், பாகம் 4 (பீக்கிங்: அயல் மொழிப் பதிப்பகம், 1965) பக்கங்கள் 422 மற்றும் 374.

3. மா-சே-துங், ரசிய பொருளாதாரம் பற்றிய ஒரு விமர்சனம், பக்கம் 155.

4. ''புராதன சோசலிச திரட்சி'' இச் சொல் எவ்ஜனி பிரிபே ஜன்ஸ்கி என்பவரால் பயன்படுத்தப்பட்டது. ஆனால் இது ஸ்டாலினுடைய கொள்கைகளை பொருத்தமாக விளக்குகிறது. ''மாவோவின் காலத்தில் தத்துவமும் நடைமுறையும்'' என்ற கட்டுரையில் பால் ஸ்வீசி இச்சொல்லைக் கையாள்வதையும் பகுப்பாய்வு செய்வதையும் பார்க்க, மன்த்லி ரிவ்யூ 28, நவம்பர் 9 (பிப்ரவரி 1977) 1-12 வரை. இந்த முன்னுரையில், ரசியாவில் உற்பத்தி சக்திகளைப் பற்றிய கோட்பாட்டைப் பற்றிய ஸ்வீசியினுடைய விளக்கத்திலிருந்து விரிவாக எடுத்துக் கையாளப்பட்டுள்ளது.

5. மா-சே-துங், ''விவசாய கூட்டுறவு பிரச்சினை பற்றி'' மாவோவின் படைப்புகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவற்றின் தொகுப்பு (அயல் மொழிப் பதிப்பகம் 1971) பக்கம் 406.

6. மா-சே-துங், ''பத்து பெரும் உறவுகள் பற்றி,'' பீகிங் ரிவ்யூ 20, எண் 1 (ஜனவரி 1, 1977): 11. இந்த உரையின் பல்வேறு மொழிபெயர்ப்பு பதிப்புகள் வெளிவந்திருப்பினும், இந்த மொழி பெயர்ப்பு முதன்முதலாக அதிகாரப் பூர்வமாக வெளியிடப்பட்டது.

7. மேற்குறிப்பிட்ட நூல், பக்கம் 16

8. மேற்குறிப்பிட்ட நூல், பக்கம் 15

9. மா-சே-துங், ''செங் டு மாநாட்டு உரைகள்'' பக்கம் 101

10. ஜான் ஜி.குர்லே, ''சீனாவின் பொருளாதாரமும் மாவோயிஸ்டு களின் யுத்த தந்திரமும்'' (நியூயார்க்; மன்த்லி ரிவ்யூ அச்சகம் 1976) மாவோவின் பொருளாதார யுத்த தந்திரம் 1927 முதல் 1949 காலகட்டத்தில் வளர்ச்சியுற்றதைப் பற்றிய மிகவும் முக்கியத்துவமுள்ள பகுப்பாய்வை அளிக்கிறது.

11. மா-சே-துங், ''விவசாய கூட்டுறவு பிரச்சினை பற்றி'' பக்கம் 407.

12. மா-சே-துங், ''பொது வழியிலிருந்து விலகிச் செல்லும் வலது விலகலை நிராகரியுங்கள்,'' மா-சே-துங் தேர்வு நூல், பாகம் 5 (பீக்கிங்: சீன மொழிப் பிரசுரம் 1977) சீன மொழியிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டது.

13. மா-சே-துங், ''விவசாய கூட்டுறவு பிரச்சினை பற்றி,'' பக்கம் 389.

14. லியூ-சோ-சி, ''சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் எட்டாவது தேசிய பேராயத்தில் சமர்ப்பிக்கப்பட்ட மத்தியக் கமிட்டியின் அரசியல் அறிக்கை'', சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் எட்டாவது தேசிய பேராய ஆவணங்கள், பாகம் 1, (பீக்கிங்; அயல் மொழிப் பதிப்பகம், 1956) பக்கம் 82.

15. மேலே குறிப்பிட்ட நூல்

16. ''சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் எட்டாவது தேசிய பேராயத்தின் தீர்மானங்கள், ''சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் எட்டாவது தேசிய பேராய ஆவணங்கள், பக்கம் 116.

17. மா-சே-துங், ''மக்களிடையே முரண்பாடுகளை சரியாக கையாள்வது பற்றி,'' மாவோவின் படைப்புகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவற்றின் தொகுப்பு, பக்கம் 463.

18. மேற்குறிப்பிட்ட நூல், பக்கங்கள் 443-44.

19. மா-சே-துங், 'ரசிய பொருளாதாரம் பற்றிய ஒரு விமர்சனம்', பக்கம் 125.

20. சீனக் கம்யூனிஸ்ட் கட்சி, ''பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் வரலாற்றுப் படிப்பினைகள்'', (பீக்கிங்: அயல் மொழிப் பதிப்பகம் 1959)

21. மா-சே-துங், ''மக்களிடையே முரண்பாடுகளை சரியாக கையாள்வது பற்றி'', பக்கம் 434.

22. மா-சே-துங், ''கட்சி ஒற்றுமைக்கு ஒரு இயக்க இயல் அணுகுமுறை'' மா-சே-துங் தேர்வு நூல்கள், பாகம் 5, (பீக்கிங்: அயல் மொழிப் பதிப்பகம் 1977) பக்கம் 515.

23. மா-சே-துங், ''ரசிய பொருளாதாரம் பற்றிய ஒரு விமர்சனம்'' பக்கம் 86.

24. மேற்குறிப்பிட்ட நூல், பக்கம் 85.

25. மா-சே-துங், ''விவசாய கூட்டுறவு பிரச்சினை பற்றி'', பக்கம் 390.

26. மா-சே-துங், ''சீனாவின் கிராமப் புறங்களில் சோசலிச எழுச்சி'' (பீக்கிங் : அயல் மொழிப் பதிப்பகம், 1957), பக்கம் 159.

27. ஒரு தொடர்ச்சியான புரட்சி என்பது பற்றிய கருத்துக்களின் வளர்ச்சி, பார்க்கவும் விக்டர் நீ மற்றும் ஜேம்ஸ் பெக், ''சீனாவின் தொடர்ச்சியான புரட்சி'', (நியூயார்க் : பாந்தியன் 1975).

28. மா-சே-துங், ரசிய பொருளாதாரம் பற்றிய ஒரு விமர்சனம், பக்கங்கள் 87.

29. மேற்குறிப்பிட்ட நூல், பக்கம் 134.

30. மா-சே-துங், ''லூஷான் மாநாட்டு உரை'', ஸ்கராம், தலைவர் மாவோ உரைகள், பக்கங்கள் 135-36.

31. மா-சே-துங், ரசிய பொருளாதாரம் பற்றிய ஒரு விமர்சனம், பக்கம் 178.

32. ''குருச்சேவின் போலி கம்யூனிசமும் உலகத்திற்கு அதன் வரலாற்றுப் படிப்பினைகளும். ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டியின் பகிரங்கக் கடிதத்தின் மீதான 9வது விமர்சனம், பீகிங் ரிவ்யூ 7, எண் 29. (ஜூலை, 17, 1964).

33. மா-சே-துங், ''செங்டு உரைகள்: ஸ்டாலின் பற்றிய பிரச்சினை மீது'', ஸ்கராம், தலைவர் மாவோ உரைகள், பக்கம் 101.

## அரசியல் பொருளாதாரம் என்ற ரசியப் பாடநூல் பற்றிய விமர்சனக் குறிப்புகள்

1. சீன கிராமப்புறங்களில் மூன்றுமட்ட கூட்டு உடைமை உள்ளது. மிகச் சிறிய அலகான, உற்பத்திக் குழு (production-team) சாதாரணமாக பதினைந்து முதல் முப்பத்தைந்து குடும்பங்களைக் கொண்டதாக உள்ளது. இந்த குழு அடிப்படை உடைமை மற்றும் உற்பத்தி அலகு ஆகும். இக் குழுவிற்கு தான் உழைப்பைச் செலுத்தும் நிலம், பல சுமை இழுக்கும் பிராணிகள், சூட்டடிக்கும் மற்றும் நசுக்கிப் பிழியும் சிறு விவசாயக் கருவிகள் சொந்தமாக உள்ளன. அடுத்த அலகான உற்பத்தி பிரிகேட் (brigade) ஐந்து முதல் பதினைந்து குழுக்களைக் கொண்டது. குழுக்கள் சொந்தமாக வாங்க முடியாத அளவு விலையுயர்ந்ததாகவும், பயனுள்ள வகையில் பயன்படுத்த முடியாத அளவு பெரியதாகவும் உள்ள டிராக்டர்கள், நீர்ப்பாசனக் கருவிகள் போன்ற பெரிய உற்பத்தி சாதனங்கள் பிரிகேட்டிற்குச் சொந்தமாக உள்ளன. குழுக்களால் செய்ய முடியாத பெரும் பணிகளான மலைச் சரிவுகளை அடுக்கடுக்கான விவசாய நிலங்களாக மாற்றும் பொறுப்பைக் கூட பிரிகேட்டுகள் ஏற்றுக் கொள்கின்றன. பல ஆயிரங்களிலிருந்து சுமார் ஐம்பது ஆயிரம் வரை மக்கட் தொகையுள்ள கம்யூன்கள் பத்து முதல் முப்பது பிரிகேட்டு களைக் கொண்டவை. பிரிகேட்டுகளை ஒட்டு மொத்தமாக ஒருங்கிணைக்கும் பணிகளை கம்யூன்கள் செய்வதுடன், பிரிகேட்டுகளால் கையாள முடியாத அளவு பெரிய தொழில் நிறுவனங்களையும், திட்டங்களையும், எடுத்துக்காட்டாக, பெரிய நீர் சேமிப்புத் திட்டங்களையும் சொந்தமாக்கி நிர்வகிக்கின்றன.

2. ஒட்டு மொத்தமாகப் பார்க்கும் போது, பல்வேறு கூட்டு உடைமை முறைகள். அனைத்து மக்களின் உடைமைமுறை யிலிருந்து மாறுபட்டவையாகும். கூட்டு உடைமை என்பது உற்பத்தி சாதனங்கள் மொத்த மக்கட் தொகையில் ஒரு

பகுதியின் உடைமையாக இருப்பதைக் குறிக்கிறது. இப் பகுதி குழு, பிரிகேட் அல்லது கம்யூன் ஆகிய எதுவாக இருந்த போதிலும் உற்பத்தியை ஒழுங்கமைத்து நடத்து கிறது. கூட்டு உடைமையாக உள்ள அலகு உற்பத்தி செய்யும் பொருட்களில், வரி நீங்கலாக பாக்கி உள்ள அனைத்தும் அதை உற்பத்தி செய்த அலகிற்குச் சொந்தமானது. அந்த அலகு உற்பத்தியின் ஒரு பகுதியை மறு உற்பத்திக்கும் மறு முதலீட்டுக்கும் பயன்படுத்தியது போக பாக்கியை தொழிலாளர்களின் வருமானமாகப் பயன் படுத்துகிறது.

அதற்கு மாறாக அனைத்து மக்களின் உடைமையானது சமுதாயம் முழுவதின் உடைமை என்பதை குறிக்கிறது, அதன் ஒரு பகுதியை மட்டுமல்ல. அது போன்ற நிறுவனங் கள் மையப்படுத்தப்பட்ட திட்டமிடுதலுக்கும் ஒழுங்கமைவுக் கும் உட்பட்டவை. அவற்றில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் சமுதாயம் முழுவதற்கும் சொந்தமானவை; அவை அனைத்து மக்களுக்குமான உடைமை முறையின் கீழ் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள அலகுகளுக்கிடையில் தேவைக்கு ஏற்ப விநியோகிக்கப்படும். பல்வேறு உற்பத்தி அலகுகள் ஒன்றிணைக்கப்பட்ட கணக்கீட்டு அலகுகளாகக் கருதப்படுவ தால், ஒரு தனிப்பட்ட உற்பத்தி அலகின் லாபம் அல்லது நட்டம் அந்த அலகின் முதலீட்டையோ அல்லது அதன் தொழிலாளர்களின் வருமானத்தையோ பாதிப்பதில்லை.

1973-ல், அனைத்து மக்களின் உடைமையின் கீழ் இருந்த தொழிற்சாலைகளின் பங்கு, நாட்டின் மொத்த அசையாச் சொத்துக்களில் (fixed assets) 97 சதவீதமாகவும், தொழில் துறையில் ஈடுபட்டிருந்த மக்களில் 63 சதவீதத்தினராகவும், மொத்த தொழில் துறை உற்பத்தியில் 86 சதவீதமாகவும் இருந்தது. கூட்டு உடைமையின் கீழ் இருந்த தொழில்களில் 3 சதவீதம் அசையா சொத்துக்களும், 36.2 சதவீதம் தொழி லாளர்களும், 14 சதவீதம் மொத்த உற்பத்தியும் இருந்தது. தனிப்பட்ட கைத்தொழில்கள் எஞ்சியிருந்த 8 சதவீதமாக இருந்தன. வர்த்தகத்தில் 92.5 சதவீத சில்லரை வியாபாரம் அனைத்து மக்களின் உடைமையின் கீழும், மொத்த சில்லரை விற்பனையில் 7.3 சதவீதம் கூட்டு உடைமையின் கீழும் இருந்தன. அதற்கு மாறாக, விவசாயத்தில் 80 அல்லது 90

சதவீத உற்பத்தி சாதனங்கள் இன்னும் கூட்டு உடைமையின் கீழ் இருந்தன.

3. நிலச் சீர்த்திருத்த இயக்கம் என்பது, குறிப்பாக 1949-1952 ஆம் ஆண்டுகளில் விடுதலைக்குப் பிறகு நடந்த நிலச் சீர்த் திருத்த இயக்கத்தை குறிக்கிறது. விவசாய உற்பத்தியாளர் களின் கூட்டுறவுகள் பெரும்பாலும் கூட்டுறவு இயக்கத்தின் உச்சகட்டமான 1955 ஆம் ஆண்டிலும் 1956 ஆம் ஆண்டு தொடக்கத்திலும் நிறுவப்பட்டன. மக்கள் கம்யூன்கள் 1958 ஆம் ஆண்டு இறுதியிலும், மாபெரும் பாய்ச்சலின் தொடக்க காலத்திலும் சீனா முழுவதும் ஒழுங்கமைக்கப்பட்டன.

4. தரகு முதலாளித்துவம் என்பது சீனாவில், சீனர்களால் நிர் வகிக்கப்பட்டு அந்நியருக்கு சேவை செய்து வந்த, அந்நியருக்கு சொந்தமான வியாபார நிறுவனங்களை குறிப்பிடுகிறது.

5. அதிகாரவர்க்க மூலதனத்தின் முக்கியத்துவம் பற்றியும் அச் சமயத்தில் அதன்பால் மேற்கொள்ளப்பட வேண்டிய கொள்கையைப் பற்றியும், மாவோவின் கருத்துக்களை அறிய 1947ஆம் ஆண்டு டிசம்பர் 25-ல் மாவோ எழுதிய ''இன்றைய நிலைமையும் நமது கடமைகளும்'' என்ற கட்டுரையையும், 1945 ஆம் ஆண்டு மார்ச் 5-ல் எழுதிய ''ஏழாவது மத்தியக் கமிட்டியின் இரண்டாவது கூட்டத் தொடரில் சமர்ப்பிக்கப் பட்ட அறிக்கையையும்'' மாவோவின் தேர்வு நூல் பாகம் 4-ல் காண்க. (பீக்கிங் : அயல் மொழிப் பதிப்பகம் 1961) பக்கம் 167-68 மற்றும் 362-75.

6. இங்கு மாவோ, சாங்-போ-சுன் (Chang-po-Chun) மற்றும் லோ-லுங்-சீ (Lo-lung-chi) யின் நடவடிக்கைகளைக் குறிப் பிடுகிறார். 1957 ஆம் ஆண்டு கோடைக் காலத்தில் பல்வேறு ஜனநாயகக் கட்சிகளின் உறுப்பினர்களைப் பெரும்பான்மை யாகக் கொண்டிருந்த மக்கள் அரசியல் ஆலோசனை சபைக்கு (people's political consultative conference) அதிக அதிகாரங்கள் அளிக்க வேண்டும் என்ற ஆலோசனையை சாங் முன்வைத்தார். இந்த அமைப்பு சீனக் கம்யூனிஸ்ட் கட்சி ஆதிக்கம் வகிக்கும் தேசிய மக்கள் காங்கிரஸ் மீது

ரத்து அதிகாரம் (veto) கொண்ட ''மேல் சபையாக'' செயல் படும். 1950 ஆம் ஆண்டுகளின் தொடக்கத்தில் எதிர்ப்புரட்சி யாளர்களுக்கு எதிரான இயக்கங்களில் மோசமாக நடத்தப் பட்டதாக அவர் வாதிடும் ஜனநாயகவாதிகளைப் பற்றி விசாரிக்க ''மறுவாழ்வளிக்கும் கமிட்டிகளை'' நியமிக்கும்படி லோ ஆலோசனை கூறினார்.

7. நிலையான வட்டியானது கைக்கூலி கொடுத்து தேசிய முதலாளிகளை தங்கள் பக்கம் ஈர்த்துக் கொள்வதற்கான சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் யுத்த தந்திரத்தின் ஒரு குறிப் பிட்ட பகுதியாகும். விடுதலைக்குப் பிறகு அவர்களைப் பற்றிய கொள்கைகள் பல கட்டங்களைக் கடந்தது. முதல் கட்டம், உற்பத்தி செய்யப்பட்ட மற்றும் பதம் (processing) செய்யப்பட்ட பொருட்களின் கொள்முதலுக்கான அரசு ஆணைகளை தனியார் தொழில் நிறுவனங்களுக்கு அளிப்பது மற்றும் இந்த தொழில் நிறுவனங்களில் உற்பத்தி செய்யப் பட்ட பொருட்களை ஒருமுகப்படுத்தப்பட்ட முறையில் கொள் முதல் செய்வதும் விநியோகம் செய்வதும். 1952 ஆம் ஆண்டில் தனியார் தொழில்களில் சீர்செய் இயக்கத்தை மேற்கொண்ட பிறகு, இரண்டாவது கட்டமான ''லாபத்தை நான்கு பாகங் களாக பிரிப்பது'' நடைமுறை படுத்தப்பட்டது. ஒப்பீட்டள வில் சமமான நான்கு பாகங்களாவன: (1) அரசுக்கு செலுத்தப்படும் வரிகள். (2) தொழிலாளர்களின் சேம நல நிதிக்கு வழங்கப்படுவது. (3) தொழில் நிறுவனத்தின் வளர்ச்சி நிதி. (4) முதலாளிகளுக்கான லாபம்.

மூன்றாவது கட்டமாக, முதலில் தனிப்பட்ட தொழில் நிறுவனங்களிலும் பின்னர் அனைத்து வணிகத்திலும் அரசு - தனியார் கூட்டு உடைமை முறை நடைமுறைப்படுத்தப் பட்டது. இந்த ''உயர்ந்த கட்ட அரசு முதலாளித்துவத்தில்'' முதலாளிகளின் வருமானம் அவர்கள் அந்த அலகில் செய்த வேலைக்கான ஊதியமும் ''நிலையான வட்டியில்'' இருந்து பெறப்பட்ட வருமானமும் ஆகும். இருபது ஆண்டுகளுக்கு தொழில் நிறுவனங்களின் மொத்த அசையா சொத்துக்களின் மீது ஆண்டுக்கு 5 சதவீதம் என்ற நிலையான வட்டி தனிப்பட்ட நிறுவனங்களின் வருடாந்திர லாபம் அல்லது நட்டத்தைப் பற்றி கணக்கில் கொள்ளாமல் கொடுக்கப்படும்.

நிலையான வட்டியை வழங்குவது கலாச்சாரப் புரட்சியின் போது முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

8. ஒருமுகப்படுத்தப்பட்ட கொள்முதல் மற்றும் விநியோகக் கொள்கை என்பதன் பொருள், குறிப்பிட்ட பொருட்களை அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட விலையில் வாங்குவதன் மூலம் இந்த பொருட்களின் தனியார் சந்தையையும், ஊக வணிகத்திற்கான நிலைமைகளையும் ஒழிக்கும் என்பதாகும். ஒருமுகப்படுத்தப்பட்ட கொள்முதலும், விநியோகமும் 1954 மார்ச்சில் உணவு தானியங்கள், சமையல் எண்ணெய்கள், எண்ணெய் வித்துக்கள் ஆகியவற்றுக்கு அமல் செய்யப்பட்டது; செப்டம்பர் 1954-ல் இந்த கொள்கை பருத்திக்கும், பருத்தி துணிகளுக்கும் அமல்படுத்தப்பட்டது.

ஒருமுகப்படுத்தப்பட்ட கொள்முதல் மற்றும் விநியோகக் கொள்கையின் கீழ் மூன்று வகையான பண்டங்கள் உள்ளன. முதல் வகையில் உள்ள பண்டங்கள் (1959 ஏப்ரலில் இதில் 38 பொருட்கள் அடங்கும்) நிர்ணயிக்கப்பட்ட விலையில் அரசு கம்பெனிகளுக்கு விற்கப்பட்டன. இரண்டாவது வகைப்பட்ட பண்டங்கள் (1959 ஆம் ஆண்டில் இதில் 293 பொருட்கள் அடங்கும்) ஒப்பந்தப்படி ஒதுக்கப்பட்ட அளவுகளின் படி அரசுக்கு விற்கப்பட்டன. ஒப்பந்தத்திற்கு அதிகமாக உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை அரசுக்கு விற்கலாம்; ஆனால், கட்டாயம் இல்லை. மூன்றாவது வகைப்பட்ட பண்டங்கள் (முதலாவது அல்லது இரண்டாவது வகையில் சேர்க்கப்படாதவை) இன்னும் சந்தையில் விற்கப் படலாம்.

9. ''சிவப்பும் நிபுணத்துவமும்'' என்பது ஒரு சோசலிச சமுதாயத்தைக் கட்டமைப்பதில் எதிர்மறை அம்சங்களின் ஒற்றுமையைக் குறிப்பிடுகிறது. சிவப்பு, பணியின் அரசியல் மற்றும் சித்தாந்த அம்சத்தையும், நிபுணத்துவம், தொழில் நுணுக்க அம்சத்தையும் குறிப்பிடுகின்றன. இரண்டும், எல்லாப் பணிகளிலும் தேவையான அம்சங்களாகும். ஆனால் ஒவ்வொரு முரண்பாட்டிலும் ஒரு பிரதான அம்சம் இருக்க வேண்டும் என்ற அவருடைய சிந்தனைக்கேற்ப, மாவோ, பொருளாதார மற்றும் தொழில்நுட்பப் பணிகளுக்கு

இயக்கமாக மாறியது; இது அரசாங்க ஊழியர்களிடையே காணப்பட்ட ஊழல், வீண்விரயம், அதிகார வர்க்கப் போக்கு ஆகியவற்றுக்கு எதிராகத் தொடங்கப்பட்டது. இவர்களில் பெரும்பாலோர் தேசியவாதக் கட்சியின் அரசின் கீழ் ஊழியம் புரிந்தவர்கள். ஐந்து எதிர்ப்புகள் (ஊபான்) இயக்கம் தேசிய முதலாளிகளுக்கு எதிராகத் தொடங்கப்பட்டது. அதன் குறிப்பான இலக்குகள் ஊழல், அரசு சொத்துக்களை திருடுவது, வரி ஏய்ப்பு, அரசின் பொருளாதார ரகசியங்களைத் திருடுவது, அரசின் ஒப்பந்தங்களை நிறைவேற்றுவதில் கையாடல் செய்வது ஆகியவற்றை ஒழிப்பதாகும்.

17. இங்கு மாவோ 1957 ஆம் ஆண்டு இளவேனிற் காலத்தில் ''மகிழ்ச்சியும் மோதலும்'' கால கட்டத்தில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு எதிரான வலது சாரிகளின் விமர்சனத்தைக் குறிப்பிடுகிறார். இது 1957 ஆம் ஆண்டு பிப்ரவரியில் அவர் ''மக்களிடையே உள்ள முரண்பாடுகளை சரியாகக் கையாளுவது'' என்ற உரையை நிகழ்த்திய கொஞ்ச காலத்திற்குப் பிறகு நடந்தது.

18. 1959 ஆம் ஆண்டு ஜுலை லூஷான் மாநாட்டில், பாதுகாப்பு அமைச்சர் (P'eng-Teh-huai) பெங்-டெ-ஹை தலைமையிலான கட்சித் தலைவர்களின் ஒரு குழு, மாபெரும் பாய்ச்சலையும் அதன் தலைமையையும் ''குட்டி முதலாளிய உணர்ச்சி வயப்படல்'' என்று விமர்சனம் செய்தது. அது நன்மையைக் காட்டிலும் மிக அதிக அளவு சேதங்களை விளைவித்தது என்று அவர்கள் வாதாடினர். பிளீனக் கூட்டத்தில் ஒரு பெரும் போராட்டத்திற்கு பிறகு பெங்கும் இதர வலது சாரிகளும் கட்சி மற்றும் அரசாங்கத்தின் முக்கியப் பொறுப்புகளிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

19. சித்தாந்தம் மற்றும் அரசியல் தளங்களில் சோசலிசப் புரட்சி 1957 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்டு விட்டது என்று பாடநூலில் முன்வைக்கப்பட்டுள்ள வாதம், 1956 ஆம் ஆண்டு எட்டாவது கட்சிக் காங்கிரசில் முன் வைக்கப்பட்ட தீர்மானத்தை ஒத்து இருக்கிறது. இன்னும் சரியாகக் கூறுவதெனில், சீனாவில் இருந்த பிரதான முரண்பாடு தற்போது

முதலாளிகளுக்கும் பாட்டாளி வர்க்கத்திற்கும் இடையிலானது அல்ல; மாறாக முன்னேறிய உற்பத்தி உறவுகளுக்கும் (புரட்சி''நிறைவு''பெற்று விட்ட சித்தாந்த மற்றும் அரசியல் அரங்கங்கள்) பின் தங்கிய உற்பத்தி சக்திகளுக்கும் இடையிலானதுதான் என்பதாகும்.

20. மாவோ இங்கு குறிப்பிடும் 45 சதவீத சேமிப்பு என்பது விதி விலக்கான மிக அதிகமான ஒன்று; மிக உயர்ந்த நிலைமையை விளக்கும் பொருட்டு ஒரு உதாரணத்திற்காகக் கூறப்பட்டது. மாபெரும் முன்னோக்கிய பாய்ச்சல் கால கட்டத்தில் மிக அதிகமான சேமிப்பு வீதத்திற்கு எதிராக— அது அதிக உற்பத்தி செய்ய வேண்டும் என்ற விவசாயிகளின் ஆர்வத்தை குன்றச் செய்யும் என்று — மாவோ தொடர்ந்து வாதாடி வந்துள்ளார். ஒரு பொது விதியாக, விவசாய உற்பத்தி இனங்களை கீழ்க்கண்ட வகையில் பிரித்தார்: வரிகள் (7%); உற்பத்திச் செலவுகள் (20%); சேமிப்பு (18%); மக்களுக்கு விநியோகம் செய்வது (55%).

21. மாபெரும் முன்னோக்கிய பாய்ச்சல் சமயத்தில் பிரச்சாரம் செய்யப்பட்ட விவசாயத்திற்கான எட்டு வாசகக் கட்டுரை: நீர், உரம், மண் (பாதுகாப்பு), விதைகள் (தேர்வு), நெருக்கம் (நடவு செய்தல்), பாதுகாப்பு (பயிர்களுக்கு), கருவிகள், நிர்வாகம் (வயல்) ஆகியவற்றுக்கு கவனம் செலுத்தக் கோரியது.

22. இங்கு மாவோ சீனாவின் தற்போதைய எட்டு படித்தர (grade) கூலி முறையில் ஐந்தாவது படித்தரத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறார்.

23. விடுதலைப் போரின் போது, கட்சி ஊழியர்கள் பொருட்களை தங்களுடைய தேவைக்கு ஏற்ப பெற்றனர், அவர்கள் செய்த வேலைக்கேற்ப அல்ல. இந்த பொருட்கள் நேரடியாக பயன்பாட்டிற்காக விநியோகிக்கப்பட்டன. எந்தவித பரிவர்த்தனை மதிப்பின் அடிப்படையிலான சந்தைக் கட்டமைப்பு மூலமாக அல்ல. இருப்பினும், இந்த நிலைமைகளின் கீழ் தேவைகள் மிகவும் குறுகலானவை.

24. மக்கள் திரள் பாதை மூலம் தலைமை அளிப்பது என்ற முறையை நடைமுறைப்படுத்த சீனக் கம்யூனிஸ்ட் கட்சி தொடர்ந்து முயற்சி செய்கிறது. அது பற்றிய மாவோவின் சிறப்பு வாய்ந்த கருத்தாக்கம் கீழ்க் கண்டவாறு:

நமது கட்சியின் எல்லா நடைமுறைப் பணிகளிலும் ''மக்களிடமிருந்து மக்களுக்கு'' என்பதில்தான் தவிர்க்க முடியாத வகையில் அனைத்து சரியான தலைமையும் அடங்கியுள்ளது. இதன் பொருள்: மக்களிடமிருந்து கருத்துக் களைப் (சிதறியும், ஒழுங்கற்ற முறையிலும் உள்ள கருத்துக் களை) பெற்று அவற்றை ஒரு முகப்படுத்தி (ஆய்வின் மூலம் அவற்றை ஒன்று குவிக்கப்பட்ட, முறைப்படுத்தப்பட்ட கருத்துக்களாக மாற்றி), அதன் பிறகு அக்கருத்துக்களை மக்களிடம் எடுத்துச் சென்று பிரச்சாரம் செய்து விளக்க வேண்டும். அவர்கள் இக் கருத்துக்களைத் தங்களுடைய கருத் துக்களாக ஏற்று, அவற்றை உறுதியாகப் பற்றி, அவற்றை நடைமுறையாக மாற்றி, அக்கருத்துக்களின் சரியான தன்மையை அந்த நடைமுறையிலிருந்து சரி பார்க்க வேண்டும். பிறகு மீண்டும் மக்களிடமிருந்து கருத்துக்களை ஒன்றுகுவித்து மீண்டும் மக்களிடம் எடுத்துச்செல்ல வேண்டும். இவ்வாறு செய்யும்போது கருத்துக்கள் பாதுகாக்கப்பட்டு முன்னெடுத்துச் செல்லப்படும். இவ்வாறு மீண்டும் மீண்டும் ஒரு முடிவில்லா விசைச் சுருள் போல் (Coil Spring) மேல் நோக்கிச் செல்ல வேண்டும். இதன் மூலம் கருத்துக்கள் மேலும் சரியானதாகவும், முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் ஒவ்வொருமுறையும் மேலும் மேலும் செழுமைப்படுத்தப்படும்.

''தலைமை தாங்கும் முறையைப் பற்றிய சில பிரச்சினை கள்'' என்ற கட்டுரையிலிருந்து. 1943 ஜுன் 1, தேர்வு நூல் பாகம் 3, பக்கம் 119.

25. பெங்-டே-ஹை (P'eng Teh-huai)க்கு எதிரான போராட்டம் முன்னணிக்கு வந்த 1959 ஆம் ஆண்டு ஜுலை-ஆகஸ்ட் லூஷான் மாநாட்டை மாவோ மீண்டும் குறிப்பிடுகிறார்.

## இணைப்பு

1. கி.மு. 3-வது நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆண்ட 'சௌ' பரம்பரையினர் காலத்தில் ஒரு பிரபு வம்சத்தைச் சேர்ந்தவர் சூ-யுவான். இவர் மன்னர் சபையிலிருந்து வெளியேற்றப் பட்ட பிறகு தன்னைப் பற்றி புரிந்து கொள்ளக் கூடிய ஒரு அரசனை தேடும் முயற்சியில் லீ-சா-வோ என்னும் உருவகக் கதையை எழுதினார். இறுதியில் அவர் மனமுறிவுற்று நீரில் மூழ்கி இறந்தார்.

2. ''மூன்று மாற்றங்கள்'' விவசாயம், தனியார் தொழில், கைவினைப் பொருட்களின் உற்பத்தி ஆகியவற்றில் மாற் றங்களைக் குறிக்கிறது.

3. நாற்பது அம்சத் திட்டம் என்பது மாவோவினால் ஆதரிக் கப்பட்ட விவசாய வளர்ச்சிக்கான செயல் திட்டத்தைக் குறிக்கிறது. நாற்பது அம்ச திட்டம் சீனாவின் தொழில் மயமாக்கும் திட்டத்திற்கான ஆரம்பக் குவிப்பிற்கு வெளிநாட்டுச் சந்தையைச் சார்ந்திருப்பதை விட, விவசாய உற்பத்தியையும் உள்நாட்டு விவசாயப் பொருட்களின் சந்தையையும் சார்ந்திருக்க வேண்டும் என்று வற்புறுத்தியது. உற்பத்தி சக்திகளை வளர்ப்பதற்கும், கூட்டுறவு மயமாக் கலை அதிகரிப்பதற்கும் ஒரு நிபந்தனையாக உற்பத்தி உறவுகளை மாற்ற வேண்டும் என்று வற்புறுத்தியது. இந்த நடைமுறையின் மூலமாக பரந்துபட்ட விவசாயிகள் தங்கள் வருமானத்தை அதிகரித்துக் கொள்வார்கள். நாற்பது அம்சத் திட்டம் 1956 ஆம் ஆண்டிலும் 1957 ஆம் ஆண்டு பெரும் பகுதியும் கிடப்பில் போடப்பட்டிருந்தது என்றாலும் அவை மாபெரும் பாய்ச்சலின் ஒரு பிரிக்க முடியாத பகுதியாக இருந்தன.

4. மாவோ இங்கு குறிப்பிடுவது போல், 1958 ஆம் ஆண்டு நவம்பர் முதல் 1959 ஆம் ஆண்டு தொடக்கம் வரை

தொடர்ச்சியாக பல கூட்டங்கள் நடந்தன. இக்கூட்டங்களில் மாபெரும் பாய்ச்சலின் தவறுகள் விமர்சனம் செய்யப்பட்டு, அவற்றைச் சரி செய்ய முயற்சிகள் செய்யப்பட்டன. இருப்பினும், இவ்விமர்சனங்கள் செய்யப்பட்டு தவறுகள் சரி செய்யப்பட்ட பிறகுதான், 1959 ஆம் ஆண்டு ஜுலையில், மாவோ குறிப்பிடும் சந்தர்ப்பவாதத் தாக்குதலை மாபெரும் பாய்ச்சல் மீதும், அதனை ஆதரித்த தலைமையின் மீதும் வலது சாரிகள் தொடுத்தனர். வலது சாரிகளின் விமர்சனத்தைப் பற்றிய இந்த முன் அனுமானம் லூஷான் மாநாட்டில் மாவோ நிகழ்த்திய ''வலது சாரிகள் ஏன் இப்போது தாக்குதலைத் தொடுக்கின்றனர்?'', ''இயந்திரத்துப்பாக்கிகள், சிறு பீரங்கிகள் மற்றும் இதர பொருட்கள்'' (தாக்குதலின் பகைமைத் தன்மையைப் பிரதிபலிக்கிறது) என்ற இரண்டு சொற்பொழிவுகளின் தலைப்புகளிலும் பிரதிபலிக்கிறது.

5. மா அன்ஷான் இரும்பு மற்றும் எஃகு ஆலையின் அமைப்பு விதிகள் என்பது, சீனாவின் மிகவும் முன்னேறிய இரும்பு மற்றும் எஃகு தொழிற்சாலையான மா அன்ஷான் ஆலை, 1950 ஆம் ஆண்டு அப்படியே ஏற்றுக் கொண்ட ரசியாவின் மேக்னிடோ கோர்ஸ்க் இரும்பு மற்றும் எஃகு ஆலையின் எதேச்சதிகாரமான அமைப்பு முறைகளைக் குறிக்கிறது. இந்த அமைப்பு முறை 1958 வரையிலும் கேள்விக்கு உள்ளாக்கப்படாமல் இருந்தது. மாபெரும் பாய்ச்சல் கால கட்டத்தில் 'மா அன்ஷான்' கொள்கைகளான தனிநபர் தலைமை மற்றும் தொழில் நுட்பத்தை ஆணையில் வைப்பது ஆகியவை, மையத் தலைமைக்கு அனுப்பப்பட்ட ஒரு அறிக்கையில் கேள்விக்குள்ளாக்கப்பட்டன.

1960 ஆம் ஆண்டு மார்ச்சுக்குள்ளாக, மாவோவின் பங்கேற்புடன் புதிய மா அன்ஷான் அமைப்பு முறை வகுக்கப்பட்டது. அது ஐந்து கொள்கைகளை உள்ளடக்கியிருந்தது: 1. அரசியலை ஆணையில் வைப்பது 2. கட்சித் தலைமையைப் பலப்படுத்துவது 3. தீவிரமான மக்கள் திரள் இயக்கங்களைக் கட்டவிழ்த்து விடுவது 4. ''இரு பங்கேற்புகள்,

ஒரு சீர்திருத்தம், மூன்று சேர்க்கைகள்'' ஆகியவற்றை ஏற்படுத்துவது; கட்சி ஊழியர்கள் உற்பத்திப் பணிகளில் பங்கேற்பது மற்றும் தொழிலாளர்கள் நிர்வாகத்தில் பங்கேற்பது; பகுத்தறிவுக்கு ஒவ்வாத காலாவதியாகிப் போன விதிமுறைகளை சீர்திருத்துவது; தொழிலாளர்கள், கட்சி ஊழியர்கள் மற்றும் தொழில் நிபுணர்களுக்கிடையிலான ஒத்துழைப்பு; 5. தொழில் நுணுக்க கண்டுபிடிப்புகள் மற்றும் தொழில் நுணுக்கப் புரட்சி ஆகியவற்றுடன் வேகமாக முன்னேறிச் செல்லுதல். புதிய மா அன்ஷான் அமைப்பு முறையை 1960 ஆம் ஆண்டு மார்ச்சில் வெளியிடவும், பிரசுரிக்கவும், நடைமுறைப்படுத்தவும் மாவோ அனுமதித்திருந்த போதிலும் அதை கலாச்சாரப் புரட்சி வரையிலும் பெரிய அளவில் விளம்பரப்படுத்தவில்லை.

6. 1 கேட்டி என்பது 1.1 பவுண்ட் ஆகும்.

**ரசியாவில் சோசலிசத்தின் பொருளாதாரப் பிரச்சினைகள் என்ற நூலைப் பற்றிய விமர்சன உரை**

1. 1967 ஆம் ஆண்டு பதிப்பில் இந்த ஆவணத்தின் தேதி 1959 ஆம் ஆண்டு என்றும், 1969 ஆம் ஆண்டு பதிப்பில் இது 1958 ஆம் ஆண்டு எனவும் குறிப்பிடப்படுகிறது. 1959 ஆம் ஆண்டு நவம்பரில் செங்சௌவில் எந்த மாநாடும் நடைபெறவில்லை, ஆனால் 1958 ஆம் ஆண்டு நவம்பரில் அங்கு ஒரு மாநாடு நடைபெற்றுள்ளது. எனவே இந்த ஆவணம் நிச்சயமாக 1958-ல் தான் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

2. 1953 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட கூலி முறை குறுகிய கால தனிநபர் பொருளாயத ஊக்குவிப்புகளுக்கு பிரதான அழுத்தம் கொடுத்தது. அது மாதம் 139 முதல் 390 வேலைப் புள்ளிகளுடைய (Work Points) 8 படித்தர (Grade) வேலைப் புள்ளி சம்பள முறையை உருவாக்கியது. பல்வேறு பகுதிகளில் ஒரே மாதிரியான வேலைக்கு ஒரே மாதிரியான வேலைப் புள்ளிகள் அளிக்கப்பட்டன; ஆனால் வேலைப் புள்ளிகளின் மதிப்பு பகுதியின் விலைவாசி அடிப்படையில் மாறுபட்டது. 1956 ஆம் ஆண்டுக்குள்ளாக வேலைப் புள்ளி முறையை நீக்கி விட்டு சம்பள முறை நடைமுறைப்படுத்தப் பட்டது. ஆனால் 8படித்தர சம்பளக் கட்டமைப்பு தொடர்ந்தது.

3. சோதனைப் பண்ணைகள் நெருக்கமான நடவு, முன்னதாக நடவு, ஆழமாக உழுதல் போன்ற புதிய முன்னேறிய தொழில் நுணுக்கங்களை வளர்க்க முனைந்தன. அந்த தொழில் நுட்பம் உற்பத்தியை வெற்றிகரமாக அதிகரிப்பின், அது சீனா முழுவதும் பிரபலப்படுத்தப்படும். சோதனைப் பண்ணை என்ற கருத்தானது உற்பத்தியை அதிகரித்து சம்பளத்திற்கான நிதியை அதிகரிப்பதன் மூலம், விவசாயிகளிடமிருந்து நிபுணர்கள் கற்றுக் கொள்ள முடியும் என்பதை நிரூபித்து அதன் மூலம் படித்தர சம்பள முறையின் தத்துவார்த்த அடிப்படையைத் தகர்தெறிய முடியும்.

**ரசியாவில் சோசலிசத்தின் பொருளாதாரப் பிரச்சினைகள் என்ற ஸ்டாலினுடைய நூல் மீதான விமர்சனக் குறிப்புகள்**

1. இங்கு மாவோ 1954 ஆம் ஆண்டின் இறுதியில் மிக அதிக மான தானியக் கொள்முதலைப் பற்றியும், அதன் விளைவாக 1955-ல் இளவேனிற் காலத்தில் கிராமப் புறங்களில் ஏற்பட்ட தானியப் பற்றாக் குறையையும் குறிப்பிடுகிறார். இதைத் தொடர்ந்து தானியக் கொள்முதல் இலக்கு 7 பில்லியன் கேட்டி குறைக்கப்பட்டு, கிராமப் புறங்களில் ஏற்பட்ட பதட்ட நிலை தணிக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சிகள், 1955 ஆம் ஆண்டு இளவேனிற் காலத்தில் நடந்தன; சீனாவின் கிராமப் புறங்களில் கூட்டு உடைமை இயக்கம் உச்ச கட்டத்தில் இருந்த அந்த ஆண்டின் இறுதியில் அல்ல.

2. சின்-ஷி-ஹுவாஸ்டி கி.மு. 230க்கும் 231க்கும் இடைப்பட்ட காலத்தில் சீனாவின் முதல் சக்கரவர்த்தியாகவும் சின் மாநிலத்தின் அரசராகவும் இருந்தார். அண்டை மாநிலங்களை வென்று சீனாவை அய்க்கியப்படுத்தினார். இவர் ஆட்சியின் கீழ் நிலப்பிரபுத்துவ முறை நிறுவப்பட்டது. எடை அளவுகளுக்கும் நாணயங்களுக்கும் தர அளவு நிர்ணயம் செய்யப்பட்டது. சின் வம்சத்தினரின் தத்துவார்த்த அடிப்படையானது சட்டத்தை கடுமையாக பின்பற்றும் தத்துவமாகும். கி.மு. 213-ல் உபயோகமற்ற, 'சீர்கேட்டை' உருவாக்கும் இலக்கியங்கள் அனைத்தையும் தீயிட்டுக் கொளுத்தியதற்காக இந்த முதல் சக்கரவர்த்தி நினைவு கூறப்படுகிறார்.

3. ட்சாவோ ட்சாவோ (காவோ காவோ) என்பவர் ஹான் வம்சத்தின் (கி.பி. 25-220) பிரசித்தி பெற்ற படைத் தளபதியாகவும், முக்கிய அமைச்சராகவும் இருந்தவர். இவர் இறுதியில் ஹான் வம்சத்தைக் கவிழ்த்து, மூன்று பேரரசுகள் என்று அழைக்கப்படும் சாம்ராஜ்ய சகாப்தத்தைத் தோற்றுவித்த போர்களில் முக்கியப் பங்காற்றினார்.

## ரசியப் பொருளாதாரம் பற்றிய ஒரு விமர்சனம்
## — மா சே துங்

'ரசியப் பொருளாதாரம் பற்றிய ஒரு விமர்சனம்' என்ற மாவோவின் இந்நூல் சீனத்தில் 'மாபெரும் முன்னோக்கிய பாய்ச்சல்' நடைபெற்ற கால கட்டத்தையடுத்து வெளிவந்ததாகும். இக்கால கட்டம் சீனப் புரட்சி, ரசிய வகைப்பட்ட சோசலிச வளர்ச்சிப் பாதையிலிருந்து தீர்மானகரமாக முறித்துக்கொண்ட காலகட்டமாகும். இக்கால கட்டத்தில் மாவோ ரசிய அனுபவத்தின் சாதக, பாதக அம்சங்களை ஆய்வுக்குட்படுத்தினார். ரசியாவிலிருந்து வெளிவந்த 'அரசியல் பொருளாதாரம்' என்ற நூலையும், 'ரசியாவின் சோசலிசப் பொருளாதாரத்தின் பிரச்சனைகள்' என்ற ஸ்டாலின் நூலையும் விமர்சனத்திற்குள்ளாக்கினார். இதனால் மாவோவின் இந்நூலை ரசிய - சீன பொருளாதார வளர்ச்சி முறைகள் குறித்த ஆய்வு என்பதாக மட்டும் சுருக்கிவிட முடியாது. அதற்கும் மேலாக இது தத்துவம், வரலாறு, புரட்சிகர அரசியல் ஆகியவற்றில் மிகப் பெரிய ஆய்வுகளைக் கொண்டிருக்கிறது. இயக்க இயல், யுத்தம் - சமாதானம், மேற்கத்திய நாடுகளில் புரட்சி நடக்காததற்கான காரணம், உற்பத்திச் சக்திகள் - உற்பத்தி உறவுகள் மற்றும் மேல் கட்டுமானத்திற்கு இடையிலான உட்தொடர்பு போன்ற பல்வேறு தலைப்புகள் பற்றி மாவோ எளிமையாகவும், நேரிடையாகவும் கற்றுக் கொள்வது, கற்றுக்கொடுப்பது என்ற முறையில் இந்நூலில் விவாதிக்கிறார். மார்க்சியத்தை வளர்க்கும் உன்னதமானவராக, மார்க்சின் உன்னத மாணவராக இந்நூலில் மாவோ மிளிர்கிறார்.